கருநாடக அரசு

சமூக அறிவியல்
SOCIAL SCIENCE

பாகம் - 2

(PART - 2)

தமிழ் வழி

(TAMIL MEDIUM)

© KTBS
NOT TO BE REPUBLISHED

6

ஆறாம் வகுப்பு

KARNATAKA TEXTBOOK SOCIETY (R.)
6th Cross, Malleshwaram,
Bengaluru - 560 003.

பொருளடக்கம்

வ.எண்	வரலாறு	பக்கம் எண்
12	வட இந்தியாவின் பண்டைய அரச வம்சங்கள்	1 – 35
13	தில்லி சுல்தான்கள்	36–45
14	விஜயநகரப் ரேரசு மற்றும் பாமினி இராஜ்ஜியம்	46–64
15	முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள்	65–80
16	இந்திய அறிவுசார் மற்றும் பக்தி இயக்கம்	81–94
	குடிமையியல்	
17	ஜனநாயகம்	95–100
18	மாநில இயக்கத்தின் கொள்கைகள்	101–106
19	மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள்	107–118
20	தேசிய ஒருமைப்பாடு	119–124
21	தேசிய சின்னங்கள் மற்றும் தேசிய விழாக்கள்	125–134
	புவியியல்	
22	ஆசியா கண்டம்	135–158
23	ஐரோப்பா கண்டம்	159–179
24	ஆப்பிரிக்கா கண்டம்	180–205

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 12

வட இந்தியாவின் பண்டைய அரச வம்சங்கள்

X1EZA6

பாட அறிமுகம்

மௌரியப் பேரரசு இந்தியாவின் முதல் வரலாற்றுப் பேரரசு. பல வகையான துறைகளுக்கு அது அளித்த கொடை அரிதான ஒன்று. சந்திரகுப்த மௌரியர் மற்றும் அசோகர் இவ்வம்சத்தின் பெயர் பெற்ற பேரரசர்கள். இவர்களின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை இப்பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இத்துடன் குப்தர்களின் சிறந்த அரசனான சமுத்திர குப்தனின் அற்புதமான வெற்றி மற்றும் இரண்டாம் சந்திர குப்தனின் காலத்தில் பல துறைகளின் அற்புதமான முன்னேற்றங்கள் விவரிக்கப்பட்டுள்ளது. ஹர்ஷவர்தனரின் இக்கட்டான காலத்தில் பேரரசை காப்பாற்றியவகை மற்றும் புத்த மதத்தின் எழுச்சிக்கு அளித்த காணிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பொ.ச.620 முதல் பொ.ச. 1200 வரையிலான இந்திய வரலாற்றில் ராஜபுத்திரர்கள், கார்கோடா மற்றும் அஹோம் வம்சங்கள் பாரத வரலாற்றில் முக்கிய பங்கு வகித்தன. இந்த அத்தியாயம் கலை, கட்டிடக்கலை மற்றும் இலக்கியத்திற்கு இந்த வம்சங்களின் பங்களிப்பை விவரிக்கிறது. இது சகாப்தத்தின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை தவிர குர்ஜாரா பிரதிஹரா, பாலா, சௌஹான் போன்ற சில முக்கிய ராஜபுத்திர வம்சங்களின் வரலாற்றையும் சுருக்கமாக விவரிக்கிறது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

திறன்கள் :

1. மௌரிய பேரரசின் நிறுவனரான சந்திரகுப்த மௌரியர் மற்றும் அவரின் வழிகாட்டி சாணக்கியனைப் பற்றி அறிதல்.
2. அசோகரின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை அறிதல்.
3. மௌரியர்களின் ஆட்சி முறையைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
4. குஷாண வம்சத்தின் புகழ் பெற்ற அரசன் கனிஷ்கரின் சாதனைகளை அறிதல்.

5. குப்தவம்சத்தின் சிறந்த பேரரசான சமுத்திர குப்தன் மற்றும் இரண்டாம் சந்திர குப்தரின் சாதனையை அறிதல்.
6. குப்தர்களின் காலத்தை பொற்காலம் என்று அழைக்கக் காரணமான காரணிகளை அறிதல்.
7. ஃபாஹியான் மற்றும் ஹுவான் - சுவாங் கண்ட இந்தியாவின் படத்தொகுப்பை நினைவு கூர்தல்.
8. ஹர்ஷவர்தனின் சாதனை மற்றும் பங்களிப்பை அறிதல்.
9. கார்கோட்டா வம்சத்தின் சாதனைகளை புரிந்து கொள்வது.
10. முக்கிய ராஜபுத்திர வம்சங்களின் சாதனைகளைப் புரிந்துக் கொள்வது.
11. மௌரியர், குஷாணர், குப்தர்கள் மற்றும் வர்தனரின் காலத்தில் கலை, இலக்கியம், அறிவியல், கட்டிடக்கலை முதலான துறைகளுக்கு அளித்த பங்களிப்பை அறிதல்.
12. அஹோம் ஆட்சியாளர்களின் சாதனைகள் மற்றும் கலையில் அவர்களின் பங்களிப்பை பாராட்டுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

மௌரியர்

தேசியக் கொடி

குழந்தைகளே, நமது தேசியக் கொடியின் நடுவே ஒரு சக்கரம் உள்ளது.

அதன் பெயர் என்ன தெரியுமா? அதுவே அசோக சக்கரம். முன்னேற்றத்தின் சின்னமாக நமது தேசியக் கொடியில் அது இடம் பெற்றுள்ளது.

அப்படியானால் இந்த அசோகன் யார்? எந்த வம்சத்தைச் சேர்ந்தவன்? அந்த வம்சத்தின் வரலாறு என்ன? என்பதை அறியலாம்.

இந்தியாவின் முதல் முதலான பேரரசு மௌரியப் பேரரசு. இப்பேரரசை தோற்றுவித்தவர் சந்திர குப்த மௌரியர்.



NOT TO BE REPUBLISHED ©KTBS

சந்திர குப்த மௌரியர்

சந்திர குப்த மௌரியர் ஒரு சாதனை மிக்க இளைஞன். தட்சசீலத்தின் விஷ்ணு குப்தன் நந்தவம்சத்தின் அரசனான தனநந்தனால் அவமானப்படுத்தப்படுகிறான். சாணக்கியன், அரச தந்திரங்களில் நிபுணன் ஆன விஷ்ணு குப்தனுக்கு சாணக்கியன், கௌடில்யர் எனும் பெயர்களும் இருந்தன. இவன் சந்திர குப்த மௌரியனுக்கு இராணுவ மற்றும் போர்க்கலைகளில் பயிற்சி அளித்து படையை ஆயத்தப்படுத்த உதவினான். இச் சமயத்தில் தனநந்தன் மக்களின் நம்பிக்கையை இழந்திருந்ததால் சுலபமாக அவனை சிம்மாசனத்தில் இருந்து கீழே இறக்குவதற்கு சந்திர குப்த மௌரியனுக்கு சாத்தியமானது. இவ்வாறு

சந்திர குப்த மௌரியன் 2300 வருடங்களுக்கு முன்பு மௌரியப் பேரரசை நிறுவி பாடலிபுத்திரத்தை (இன்றைய பீகாரின் தலைநகரம் பாட்னா) தனது தலைநகரமாக அமைத்துக் கொண்டான்.

பின்னர் பெரும்படையையும் நிறுவி வடமேற்கு இந்தியப் பகுதியில் நுழைந்தான். மாசிடோனியாவின் அரசன் அலெக்சாண்டர் இதற்கு முன் கையகப்படுத்தியிருந்த இப்பிரதேசங்களை அவனின் பிரதிநிதி செல்யூகஸ் கவனித்து நிர்வகித்துக் கொண்டிருந்தான். சந்திர குப்தனின் படையை எதிர்த்து தோற்ற செல்யூகஸ் அவனுடன் ஒப்பந்தத்திற்கு உடன்பட்டான். ஆப்கானிஸ்தான், பலுசிஸ்தான் மற்றும் சிந்து நதியின் மேற்கு பகுதிகளை சந்திரகுப்த மௌரியனுக்கு அளித்தது மட்டுமன்றி தனது மகளையும் கொடுத்து திருமணம் செய்து வைத்தான். இதற்கு பதிலாக சந்திர குப்த மௌரியன் 500 யானைகளை செல்யூகஸிற்கு அளித்தான். செல்யூகஸ் சந்திர குப்த மௌரியனின் அரசவைக்கு மெகஸ்தனிஸ் என்னும் புனிதப் பயணியை தூதுவராக அனுப்பி வைத்தான். மெகஸ்தனீஸ் 'இண்டிகா' எனும் நூலில் இந்தியாவில் தனது அனுபவங்களை வெளியிட்டுள்ளான்.

> விஷ்ணுகுப்தன் அல்லது கௌடில்யன் சந்திர குப்த மௌரியனின் பிரதம மந்திரியாக இருந்தார். இவன் எழுதிய 'அர்த்தசாஸ்திரம்' எனும் நூல் இராஜதந்திரங்களுக்கு உரிய பல செய்திகளை தெரிவிக்கின்றன. உலகப் புகழ்பெற்ற இந்நூல் மைசூரின் ஓரியண்டல் நூலகத்தின் கைப்பிரதி - மூலப்பிரதிகளின் சேகரிப்பில் முதன் முதலில் கிடைத்தது. இதனை ஆர். ஷாமாசாஸ்திரி எனும் கல்வியாளர் ஆராய்ந்துள்ளார்.

சந்திர குப்த மௌரியன் சமண மதத்தை பின்பற்றினான். தனது இறுதி நாட்களில் அரியணையை, மகனான பிந்துசாரனுக்கு ஒப்படைத்து சமண துறவிகளுடன் கருநாடகத்திற்கு வந்தான். இன்றைய ஹாசன் மாவட்ட சிரவணபெளகொளாவில் (சல்லேகன) இறக்கும்வரை உண்ணாவிரதம் எனும் கடினமான விரதத்தை மேற்கொண்டு உடல் தியாகம் செய்தான். பிந்துசாரன் சுமார் 25 வருடங்கள் காலம் ஆட்சி நடத்தினான்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பேரரசன் அசோகர்

பிந்துசாரனுக்கு அடுத்து அவரின் மகன் அசோகன் அதிகாரத்திற்கு வந்தான். உலக வரலாற்றில் அவனுக்கு சிறப்பான இடம் உள்ளது. மக்கள் அனைவரும் எனது குழந்தைகளைப் போல் '' என்பதன் மூலம் மக்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்த முதல் அரசன்.

அசோகரின் சாசனங்கள் : இந்திய துணைகண்டத்தின் நீள அகலத்திற்கும் நூறுக்கும் மேற்பட்ட சாசனங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இந்த சாசனங்கள் பெரும்பாலும் பிராமி எழுத்து மற்றும் பிராகிருதம் மொழிகளில் காணப்படுகின்றது. கருநாடகத்தின் ஒன்பது இடங்களில் அசோகனின் 17 சாசனங்கள் கிடைத்துள்ளன. இவைகளில் இராய்ச்சூர் மாவட்டத்தின் மஸ்கி சாசனம் முக்கியமானது. ஏனெனில் இந்த சாசனத்தில் முதன் முறையாக அசோகனின் பெயர் உள்ளதை காண முடிகின்றது. அதுவரை சாசனங்களில் 'தேவனாம்பிரியா, ப்ரியதர்ஷி' என்பது மட்டுமே இருந்தது. மஸ்கியின் சாசனத்தில் 'தேவனாம்பிரியா, ப்ரியதர்ஷி அசோகர்' என்று எழுதப்பட்டுள்ளது. அசோகரின் சாசனங்களிலிருந்து அவனின் வாழ்க்கை, சாதனை, பேரரசின் விரிவுப்படுத்துதல் முதலான அம்சங்களை அறிந்துக் கொள்ளலாம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

அசோகனின் படைப்புச் சிற்பங்கள் கனகனஹள்ளி

அசோகனின் சாசனம்

நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்:

இன்றைக்கு 180 வருடங்களுக்கு முன்பு ஜேம்ஸ் பிரின்ஸெப் எனும் பிரிட்டிஷ் அதிகாரி முதல் முதலாக அசோகரின் சாசனங்களை படித்தார். அதன் பின்பு ஒருவராலும் படிக்க இயலாமல் போனது. ஆறு நூற்றாண்டுகளுக்குப் பிறகு தில்லி சுல்தான் பிரோஜ் ஷா துக்ளக் அசோகனின் சாசனங்களை படிக்கும் முயற்சியை நடத்தி தோல்வியடைந்தான்.

கலிங்கப் போர் : அசோகன் அதிகாரத்திற்கு வந்த எட்டாவது வருடம் கலிங்கப் போர் நடத்தினான். இது அவனின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சியானது. கலிங்க இராஜ்ஜியம் இன்றைய ஒடிஸ்ஸா இராஜ்ஜியத்தின் பாகமாகியிருந்து. இதன்மீது அசோகன் போர் நடத்தினான். போரில் ஒரு இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். ஒரு இலட்சம் மக்கள் காயமடைந்தனர். ஒன்றரை இலட்சம் எதிரி வீரர்கள் கைதானார்கள். போர்க்களத்தில் சாவு நோவின் கொடூர நிகழ்ச்சிகள் அசோகனின் மனதை கலக்கமடையச் செய்தது. இதனால் மனம் வேதனையடைந்த அசோகன் அந்த வினாடியிலிருந்து போர் செய்யக்கூடாது என்று தீர்மானித்தான். இந்த வகையான மனமாற்றத்தினை பெற்ற மற்றொரு பேரரசன் (சாம்ராட்) உலக வரலாற்றிலேயே இல்லை. போர் வழிக்குப் பதிலாக தர்ம வழியைப் பின்பற்றிய அமைதியை நிலைநிறுத்திய சாம்ராட் அசோகன் மகாமனித நேயமிக்கவன் என அழைப்பதன் மூலம் கௌரவிக்கப்படுகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

புடைப்புச் சிற்பங்களில் போர்க்கால நிகழ்ச்சிகள் (கனகனஹள்ளி)

செயல்பாடுகள் : கருநாடகத்தில் அசோகனின் சாசனங்கள் கிடைத்துள்ள இடங்களைப் பற்றி பட்டியல் தயாரிக்கவும்.

மதப்பிரசாரம் : அசோகன் புத்தமதத்தின் மீது ஈர்க்கப்பட்டு அம் மதத்தைப் பின்பற்றினான். மதத்தின் செய்திகளை மக்களுக்கு அறிவிக்கப் புறப்பட்டான். குரு- பெரியவர்கள், மற்றும் தந்தை - தாய்களுக்கு கீழ்ப்படிந்து கடமையுணர்வுடன் உண்மையாக இருக்க வேண்டும். கருணை, பரந்த மனப்பான்மை , உண்மை தன்மைகளால் நிறைந்திருக்க வேண்டும். இம்சை, கோபம், பொறாமை முதலானவைகளை விட்டுவிட வேண்டும் என்றான். மூன்றாவது பௌத்த மாநாட்டை பாடலிப்புத்திரத்தில் அசோகர் நடத்தினார். புத்த ஸ்தூபிகளையும் நிறுவினான். புத்தரின் அறிவுரைகளை - போதனைகளைப் பரப்ப அரசப் பிரதிநிதிகளை அனைத்து தேசங்களுக்கும் அனுப்பி வைத்தான்.

மௌரியரின் ஆட்சிமுறை: அரசனே ஆட்சி முறையின் தலைவனாவான். அனைத்து அதிகாரங்களும் அவனின் கையில் இருந்தன. அரசனுக்கு அறிவுரைக் கூற மந்திரிகளின் அமைப்பு இருந்தது. ஆட்சியின் பல பிரிவுகளையும் பார்த்துக் கொள்ள சிறந்த அதிகாரிகள் இருந்தனர். அவர்களின் 'தர்மமகா மாத்திரர்கள்' எனும் சிறப்பு அதிகாரிகள் மக்களிடையே சிறந்த நீதி போதனையை பிரசாரம் செய்தனர். அனாதைகள், விதவைகள் மற்றும் வயதானவர்களின் நலனைப் பார்த்து கொள்ளும் பொறுப்புகள் அவர்களுக்கு இருந்தன அரசாட்சியின் நலனுக்காக பரந்தப் பேரரசு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. கிராமங்களில் 'கிராமஸ்தன்' அங்குள்ள பெரியோர்களின் அறிவுரைகளின்படி ஆட்சி புரிந்தான். கிராமங்களுக்கு போதுமான அதிகாரம் வழங்கப்பட்டது. கிராமத்தின் விவாதங்களை கிராம சபையே தீர்மானித்தது. மௌரியரின் ஆட்சிமுறை வருங்கால பல அரசப்பரம்பரைகளின் மீது தனது தாக்கத்தினை உண்டாக்கியது.

கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை: அசோகனின் காலத்தின் சில கட்டிடம் மற்றும் உருவச் சிலைகளை இன்றும் காணலாம். அவைகளில் ஸ்தூபிகள் மற்றும் தூண்கள் முக்கியமானவையாகும். அவைகளில் மத்தியப்பிரதேசத்தின் சாஞ்சி (ஸ்தூபம்) மற்றும் சாரநாத் தூண்கள் புகழ்பெற்றவையாகும். சாரநாத் ஸ்தூபியின் மீதுள்ள நான்கு தலை சிங்க உருவங்கள் நமது தேசிய சின்னமாக உள்ளன.

NOT TO BE REPUBLISHED ©KTBS



அசோகனின் கல் சாசனம்

சாஞ்சி ஸ்தூபம் (மத்திய பிரதேசம்)



அசோகனின் ஒரே கல்லினால் ஆன தூண்

நமது தேசிய சின்னம்

@KTBS TO BE REPUBLISHED

குஷாணர்கள்

சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு காந்தாரா (இன்றைய ஆப்கானிஸ்தான்) எனும் பகுதியில் குஷாணர் எனும் அரச வம்சம் ஆட்சி நடத்தியது. படிப்படியாக இந்தியாவின் சில பாகங்கள் குஷாணரின்

வசமானது. குஷாணரில் கனிஷ்கர் புகழ்பெற்ற அரசன். அவன் நீண்ட காலம் போர்களை நடத்தி தனது பேரரசை பெரிதுப்படுத்தினான். வடஇந்தியாவில் அவனின் பேரரசு ஆப்கானிஸ்தானத்திலிருந்து பீகார் வரைக்கும் பரவின.



கனிஷ்கர் : புத்த மதத்தின் ஆதரவாளராக இருந்த கனிஷ்கர் கூட அசோகனைப் போன்றே பல ஸ்தூபிகளைக் கட்டினான். புத்தமத பரப்பாளர்களை உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் அனுப்பி வைத்தான். அது மட்டுமின்றி காஷ்மீரில் நான்காம் புத்த மாநாட்டை நடத்தினான். கனிஷ்கர் தான் ஆட்சிக்கு வந்ததன் நினைவாக ஷக (ஷாலிவாஹன ஷக) வருடத்தை ஆரம்பித்தான். இதுவே இன்று இந்திய அரசின் அதிகாரபூர்வமான காலண்டர் வருடமாகும்.

கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை (உருவச் சிற்பக்கலை) :

கனிஷ்கர் பல ஸ்தூபங்களை நிர்மாணித்தான். புருஷபுரத்தில் (இன்றைய பேஷாவர்) அவர் கட்டிய ஸ்தூபிகளில் பதிமூன்று நிலைகளுள்ள கோபுரம் இருந்தது. கோபுரம் 400 அடி உயரமிருந்து, அக்காலத்தின் ஒரு அதிசயமாக அது விளங்கியது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

காந்தார பாணியில் புத்தர் உருவச்சிலை பெஷாவர்



கனிஷ்கரின் உருவக் கல் தலைப்பகுதி சிதிலமடைந்துள்ளது

@KTBS NOT TO BE REPUBLISHED

கனிஷ்கர் கலையை ஆதரிப்பவனாக இருந்தான். அவன் வெவ்வேறு நாடுகளின் கலைஞர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டான். இதன் விளைவாக (விதவிதமான) பல்வேறு கலைப் பாணிகளை கலந்து காந்தாரம் மற்றும் மதுரா எனும் புதிய பாணி தோன்றின.

மதுராவில் கனிஷ்கரின் கல்லினால் ஆன சிலை கிடைத்துள்ளது. இதன் தலைபாகம் நாசமடைந்து கீழ்பாகத்தில் கனிஷ்கரின் பெயர் செதுக்கப்பட்டுள்ளது. குஷாணரின் பல நாணயங்கள் கிடைத்துள்ளன. இவர் தான் இந்தியாவின் முதன்முதலில் தங்க நாணயங்களை நடைமுறைக்கு தந்தவர் ஆவார்.

இலக்கியம் : கனிஷ்கர் கல்வியாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு ஆதரவு அளித்தான். அவர்களில் அஸ்வகோஷா முதன்மையானவன். இவன் 'புத்த சரிதா' எனும் நூலை சமஸ்கிருதத்தில் இயற்றியுள்ளார்.

நாகார்ஜுனன் கனிஷ்கரின் அரசவையில் சிறந்த தத்துவஞானி மற்றும் விஞ்ஞானி. வசுமித்ரா ஒரு கல்வியாளன். மற்றும் காஷ்மீரில் நடந்த நான்காம் புத்த மாநாட்டின் தலைவனாக விளங்கினான். சரகா என்பவன் கனிஷ்கரின் சமகாலத்து மருத்துவனாக இருந்தான் என்று கூறப்படுகிறது. சரகா சம்ஹிதெ என்ற நூலை எழுதினான்.

புதிய சொற்கள் :

1. **தூதுவர் :** ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அனுப்பப்பட்ட தூதுவர் அல்லது பிரதிநிதி.

2. **சாம்ராஜ்ஜியம் :** பரந்து விரிந்த நாடு.

3. **உளவாளி :** இரகசியமாக தேடுபவர்.

4. **கற்சாசனம் :** கல்லின்மீது செதுக்கப்பட்ட எழுத்து.

5. **ஸ்தூபம் :** புத்தரின் தேகத்தின் எச்சங்கள். (பற்கள், எலும்புகள், முதலானவை) கலசத்தில் சேகரித்து, அக்கலசத்தினைச் சுற்றியும் கட்டிய அரைக்கோள வடிவ உருவம்.

நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்

1. அசோகன் புத்தமதத் தூதுவர்களை வெவ்வேறு இராஜ்ஜியங்களுக்கு மட்டுமின்றி பர்மா (மியான்மர்), ஸ்ரீ லங்கா, எகிப்து, மேற்கு ஆசியா மற்றும் கிழக்கு ஐரோப்பா நாடுகளுக்கும் அனுப்பி வைத்தான். அசோகரின் மூத்த மகன் மகேந்திரன் மற்றும் மூத்த மகள் சங்கமித்ரா ஸ்ரீ லங்காவிற்கு சென்றனர். கர்நாடகத்தின் மைசூருக்கு (அப்போதைய மகிஷ மண்டலம்) மகாதேவா மற்றும் வட கன்னட மாவட்டத்தின் பனவாசிக்கு ரக்ஷிதா எனும் மதபோதகர் வந்திருந்தனர்.

2. கட்டிடக்கலை என்றால் கட்டிட கட்டுமானக் கலை, உருவச்சிலை என்றால் விக்கிரங்களை (உருவங்களை) உருவாக்கும் கலை. அசோகரின் காலத்தில் கட்டிடக்கலை கட்டுவதற்காக கற்கள் மற்றும் செங்கற்கள் இவற்றிற்கு பதிலாக கருங்கற்களின் பயன்பாடு ஆரம்பமானது. இதனாலேயே மௌரியரின் கட்டிடக்கலை மற்றும் உருவச்சிலைகள் இன்றும் காணப்படுகின்றன.

3. அசோகனின் சாசனங்கள் ராய்ச்சூரு, கொப்பள, சித்ரதுர்கா, பள்ளாரி மற்றும் குல்பர்கா மாவட்டங்களில் உள்ளது. மஸ்கியில் (ராய்ச்சூரு மாவட்டம்) உள்ள சிற்பங்களில் அசோகரை 'தேவாநாம்பிரியா' மற்றும் பிரியதர்ஷி என்று அழைக்கப்பட்டுள்ளது.

4. 2300 ஆண்டுகளுக்கு முன்பே மௌரிய நிர்வாக முறையின் தொன்மை வடிவத்தை இந்தியாவின் தற்போதைய நிர்வாகத்தில் காணலாம். தற்போதைய நிர்வாக நிலைகள் : மத்திய, மாநிலங்கள்,

© KTBS NOT TO BE REPUBLISHED

பிரிவுகள், மாவட்டங்கள், தாலுக்காகள், ஹோப்லி மற்றும் கிராமங்கள்.

5. இந்தியாவில் தோன்றிய ஆயுர்வேதம் இன்றும் மிகவும் பிரபலமாக உள்ளது. ஐக்கிய நாடுகள் இதனை அங்கீகரித்துள்ளது. மற்ற நாடுகளிலும் இதன் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களை பயன்படுத்தி கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. செல்யூகஸ் சந்திரகுப்த மௌரியரின் அரசவைக்கு அனுப்பி வைத்த அரச தூதுவன் ____________ .
2. மக்கள் அனைவரும் தனது குழந்தைகள் போன்று என்று கூறிய பேரரசன் ____________ .
3. நமது தேசிய சின்னம் ____________ .
4. கனிஷ்கர் ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததன் நினைவாக ____________ வருடத்தை ஆரம்பித்தான்.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஓரிரு வாக்கியத்தில் விடையளி:

5. மௌரியப் பேரரசினைத் தோற்றுவித்தவன் யார்?
6. மௌரியரின் தலைநகரைக் கூறுக?
7. கௌடில்யன் எழுதிய நூல் எது?
8. மெகஸ்தனிஸ் எழுதிய நூலின் பெயர் என்ன?
9. ‘‘தர்மமகா மாத்திரர்கள்’’ செய்த செயல்கள் யாவை?
10. கனிஷ்கர் புத்த மாநாட்டை எங்கு நடத்தினான்?

III. குழுவில் விவாதித்து விடையளி :

11. கலிங்கப் போரின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

IV. **கீழ்க்கண்ட ‘எ’ அட்டவணை மற்றும் ‘பி’ அட்டவணை தகவல்களைப் பொருத்தி எழுதுக :**

‘எ’	‘பி’
1. அசோகர்	அ. கனிஷ்கபுரம்
2. கனிஷ்கர்	ஆ. புத்தசரித்திரம்
3. அஷ்வகோஷார்	இ. கலை மையம்
4. காந்தாரா	ஈ. தேவனாம்பிரியா

செயல்பாடுகள்:

1. மௌரியரின் கட்டிடக்கலை மற்றும் உருவச்சிலை சிற்பங்களின் படங்களை விவரங்களுடன் சேகரிக்கவும். ஒரு ஆல்பம் தயாரிக்கவும்.
2. கருநாடகத்தில் அசோகனின் சாசனங்கள் கிடைத்துள்ள இடங்களை பட்டியல் செய்யவும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

குப்தர்கள்

மௌரியர்களுக்குப் பிறகு பேரரசை நிறுவியவர்கள் குப்தர்கள். குப்தர்கள் இந்தியாவின் முக்கியமான அரச வம்சமாகும். குப்தர்களின் தலைநகரம் பாடலிபுத்திரம் ஆகும். இவ்வம்சத்தில் சமுத்திரகுப்தர் மற்றும் இரண்டாம் சந்திரகுப்தர் புகழ்பெற்ற அரசர்கள்.

சமுத்திரகுப்தர்

சமுத்திர குப்தர் மகாபராக்கிரமசாலி. அவரின் அற்புதவெற்றி குறித்து அலகாபாத்தின் தூணின் மீதுள்ள சாசனம் ஒன்று விவரம் அளிக்கின்றது. இந்த சாசனத்தை சமுத்திரகுப்தரின் அரசவைக் கவிஞர் ஹரிசேனா இயற்றியுள்ளார். அதைப்போன்று சமுத்திரகுப்தன் வட இந்தியாவின் ஒன்பது அரசர்களைத் தோற்கடித்தான். அவனின் வலிமையான படையின் சக்தியை அறிந்த அங்கு உள்ள பிற அரசர்கள் தாங்களாகவே சரணடைந்தார்கள். தூர தேசமான ஆப்கானிஸ்தானின் குஷாணர் வம்ச அரசர்களும்,குஜராத்தின் சத்ரபர்களும் (சகரர்கள்) சமுத்திரகுப்தரின் உயர்வதிகார திறமையை ஏற்றுக்கொண்டனர்.

பின்னர் தென் இந்தியாவைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவர (தண்டயாத்திரை) மேற்கொண்டனர் சமுத்திரகுப்தன் தென்னிந்தியாவின் பன்னிரெண்டு அரசர்களைத் தோற்கடித்தான். அவர்களில் காஞ்சிபுரத்தின் அரசனும் ஒருவன். இந்த தண்டயாத்திரையின் நினைவாக அஸ்வமேதயாகத்தை செய்தான்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

சமுத்திரகுப்தனின் கால நாணயங்கள்

சமுத்திரகுப்தன் கல்வி பாதுகாவலனாக இருந்தான். அதுமட்டுமின்றி கவிஞனாகவும் மற்றும் இசையமைப்பாளருமான அவன் ('கவிராஜா') 'கவியரசன்' எனும் விருதினைப் பெற்றான். அவனுடைய வீணை மீட்டும் ஓவியம் இருக்கும் நாணயங்கள் கிடைத்துள்ளன. வசுபந்து எனும் பெரும் புத்த அறிஞன் அவனின் அமைச்சனாக இருந்தான். சமுத்திரகுப்தனின் தங்க நாணயங்கள் குப்தப் பேரரசின் சக்தி, செல்வவளம் மற்றும் பெருமையை (வளமையை) பிரதிபலிக்கின்றன.

இரண்டாம் சந்திரகுப்தன்

சமுத்திரகுப்தனின் மகனும் வாரிசுமான இரண்டாம் சந்திரகுப்தன் போர்க்கலையில் திறமையுள்ளவனாக விளங்கினான். குஜராத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலான காலம் ஆட்சியை நடத்திய ச த்பரர்களை சந்திரகுப்தன் தோற்கடித்தான். இது அவனின் முக்கிய இராணுவ படை சாதனையாக இருந்தது. அவனுக்கு ‘விக்ரமாதித்தன்’ எனும் பட்டம் இருந்தது. சந்திரகுப்தன் புதிய வகை நாணயங்களை வெளியிட்டான். அவனின் அரசவையில் மகாகவி காளிதாஸ் மற்றும் பல முக்கிய அறிஞர்கள் இருந்தனர்.

இரண்டாம் சந்திரகுப்தனின் காலநாணயங்கள்

@KTBS NOT TO BE REPUBLISHED

இப்பேரரசு நிதித்துறையில் பெரும்செழிப்பு அடைந்தது. இலக்கியம், சிற்பக்கலை, கட்டிடக்கலை, ஓவியம், அறிவியல் மற்றும் கணித துறைகளில் என்றென்றும் காண இயலாத சாதனைகளை படைத்தது.

ஃபாஹியான் : ஃபாஹியான் சீன தேசத்தின் புத்தத்துறவி. புத்த மதத்தின் தோற்றமான இந்திய நாட்டினை பார்க்க வேண்டும் எனும் ஆர்வத்தினால் இந்தியாவிற்கு வந்தார். அது இரண்டாம் சந்திரகுப்தனின் ஆட்சிக்காலமாக இருந்தது. இந்தியாவின் அனுபவங்களை ஃபாஹியான் தனது நூலான ‘கோ - கோ- கி’-யில் வெளியிட்டுள்ளார். அவன் கூற்றுப்படி குப்தப் பேரரசில் குற்றங்கள் அரிதாக இருந்தன. ஆட்சிமுறை பொது மக்களின் நலனுக்காக இருந்தது. நாட்டில் சுற்றுலாப்பயணம் சீராக இருந்தது.

ஃபாஹியான் இந்தியாவில் பல வருடங்கள் பயணம் செய்து புத்தமதத்தின் புனித இடங்களை நேரில் கண்டார். பல புத்தமத இலக்கியங்களுடன் தனது நாட்டிற்குத் திரும்பினார். அவைகளை சீன மொழியில் மொழிபெயர்த்தார்.

குப்தர்களின் கொடைகள்

சமஸ்கிருத இலக்கியம் : குப்தர்கள் காலத்தில் அரசு ஆதரவுடன் சமஸ்கிருத இலக்கியம் வளர்ந்தது. காளிதாசன் குப்தர்கள் கால மகாகவிஞன். இவன் உலகின் சிறந்த நாடகக்காரர்களில் ஒருவனாக

விளங்கினான். இரண்டாம் சந்திரகுப்தனின் அரசவையை அலங்கரித்த ஒன்பதுபேர் 'நவரத்தினங்களில்' இவனும் ஒருவனாக இருந்தான். காளிதாசன் நான்கு காவியங்கள் மற்றும் மூன்று நாடகங்களை இயற்றி உள்ளான். 'அபிஞ்ஞான சாகுந்தலம்' அவனின் சிறந்த நாடகம். அவன் 'கவிகுலகுரு' என பாராட்டப்படுகிறார்.

'ம்ருச்சகடிகம்' எழுதிய சூத்ரகா மற்றும் 'முத்ரா ராக்ஷஸா' எழுதிய விஷாகதத்தம் அக்காலத்தின் பிற புகழ்பெற்ற நாடகக்காரர்கள் ஆவர். விஷ்ணுசர்மாவின் 'பஞ்ச தந்திரம்' எனும் கதைத் தொகுப்பு இக்காலத்தையே சேர்ந்தது. அமர சிம்மனின் 'அமரகோஷா' எனும் அகராதி ஒரு அரிதான நூலாகும். அது இன்றைக்கும் பயன்பாட்டில் உள்ளது.

ஆலய (கோவில்) கட்டிடக்கலை : நமது நாட்டில் (கோவில்) நிர்மாண கட்டிடக்கலை ஆரம்பமானது குப்தர்களின் காலத்தில். மத்திய பிரதேசத்தின் சாஞ்சிக் கோயில் இந்தியாவின் தொன்மையான ஆலயமாகும். குப்தர்களின் மற்ற கோவில்கள் மத்தியப்பிரதேசத்தின் பிதர்காவ் மற்றும் தேவகடத்தில் உள்ளன. தேவகடத்தின் தசாவதாரம் ஆலயத்தில் உள்ள விஷ்ணுவின் உருவச்சிலை அழகாக உள்ளது.

ஸ்தூபம் மற்றும் சைத்யாலயம் : சாரநாத்தில் உள்ள *128* அடி உயரமான தமேக் ஸ்தூபம் குப்தர்கள் காலத்தின் கட்டிடக்கலை நிர்மாணத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டகும்.

ஓவியக்கலை : குப்தர்கள் காலத்தில் கற்பாறைகளைக் குடைந்து செய்த புத்தவிகாரம் மற்றும் குகை ஆலயங்கள் அஜந்தா மற்றும் எல்லோரா என்னும் இடத்தில் உள்ளன. அஜந்தாவின் குகைக் கோயில்களில் சுவர் மற்றும் மேற்கூரைகள் மீதான ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவையாக உள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED



சாஞ்சிக் கோயில்



தமேக் ஸ்தூபம்

அஜந்தா குகைக் கோயில்

அறிவியல்-கணிதம், வானியல் : குப்தர்கள் காலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் அபாரமான வளர்ச்சி நிலையை அடைந்தது. பாடலிபுத்திரத்தின் ஆர்யபட்டன் குப்தகாலத்தின் சிறந்த கணிதம் மற்றும் வானவியல் அறிஞன். இவன் எழுதிய நூல் 'ஆர்யபட்டீயா' ஆகும். ஆர்யபட்டன் கிரகணங்களின் காரணத்தைக் கண்டு பிடித்தது மட்டுமின்றி இயற்கணிதம் மற்றும் முக்கோணவியல் ஆகியவற்றில் பெரும் பங்களிப்பை அளித்தான். அவன் இருபத்து மூன்றாம் வயதில், பிரம்மகுப்தன் அக்காலத்தின் மற்றொரு கணித விஞ்ஞானி. சிறந்த வானவியல் அறிஞனான வராகமிகிரன் இதே காலத்தைச் சேர்ந்தவன்.

ஆர்யபட்டா

உலோகவியல் : குப்தர்களின் காலத்தில் உலோகவியல் அபாரமான முன்னேற்றத்தை சாதித்தது. தில்லியின் குதுப்மினாரின் அருகில் இருக்கும் மெஹரௌளி இரும்புதூண் இதற்கு ஒரு உதாரணமாகும். இத்தூண் 1500 வருடங்கள் பழமையானது. ஆயினும், இது துரு பிடிக்கவில்லை மற்றும் சிறிதும் தேய்ந்து போகவில்லை. இதே காலத்தின் புத்தரின் 8 அடி சிலை நலந்தாவில் உள்ளது.

மெஹரௌளி இரும்புத்தூண்

ஆயுர்வேதம் : குப்தர்கள் கால வாக்பட்டர் 'சரக சம்ஹிதெ'யின் தொகுப்பினை தயார்படுத்தினான். அதுவே 'அஷ்டாங்க ஹ்ருதயா சம்மிதே' இது ஆயுர்வேதத்தின் முக்கியமான வேதநூலாகும். பழமையான இந்தியாவில் அறுவை சிகிச்சை முறையும் போதுமான அளவு வளர்ச்சியைப் பெற்றிருந்தது. அறுவை சிகிச்சையாளர் 127 வகையான அறுவை சிகிச்சை உபகரணங்களை பயன்படுத்தினர். உடலின் உள்ளே சேர்ந்து கொண்ட இரும்பு, கற்களை வெளியே எடுத்தனர். பாதரசத்தை மருந்தாக முதல்முறையாக வழக்கத்தில் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த பெரும்புகழ் இந்திய மருத்துவர்களுக்கே உரியதாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

புதிய சொற்கள் :

வானவியல்-(கிரகம்) கோள்கள், நட்சத்திரங்கள் முதலான ஆகாயத்தில் உள்ளவைகள் குறித்து ஆராய்ந்து கற்கும் அறிவியல்.

நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்

1. குப்த வம்சம் சுமார் 1600 வருடங்களுக்கு முன்பு தோன்றி இரு நூற்றாண்டுகளுக்கும் மேலான காலங்கள் ஆட்சி செய்தது.
2. காளிதாசனின் நாடகங்கள் - அபிஞ்ஞான சகுந்தலா, மூலவிக்னாமித்ரா மற்றும் விக்ரமோர்வஷீயா, காவியங்கள் - இரகுவம்சம், குமாரசம்பவம், ருதுசம்ஹாரம் மற்றும் மேகதூதம்.
3. குப்தர்கள் கால கோயில்களை முதலில் சதுரவடிவிலான அஸ்திவாரத்தின் மேல் கட்டினர். கருவறை மற்றும் தாழ்வாரங்கள் மட்டுமே இருந்தன.
4. பித்தி என்றால் சுவர். சுவர்களின் மீது வரைந்த ஓவியங்களே பித்தி ஓவியங்கள். சுவர் ஓவியங்கள் எனும் பித்தி ஓவியங்கள் அஜந்தாவின் புத்த குகைக் கோயில்களில் உள்ளன. சாதாரண தூரிகைகளினால் இயற்கையாக கிடைக்கும் வண்ணங்களினால் ஓவியங்கள் வரையப்பட்டு உள்ளன. பல நூற்றாண்டுகள் வரை இக்குகைகள் கண்களுக்கு புலப்படாமல் மறைந்து இருந்தன. 1819-ல் அவைகள் கண்டுபிடிக்கப் பட்டன.
5. மெஹரௌலியின் இரும்புத்தூணின் எடை ஆறு டன்கள் ஆகும். உயரம் 23 அடியாகும். 19-ம் நூற்றாண்டின் துவக்கம் வரை. ஐரோப்பாவின் எந்த ஒரு நிபுணத்துவம் நிறைந்த தச்சனுக்கும் அத்தகைய தூணை வார்ப்பதற்கு சாத்தியமான ஒன்றாக இல்லை.

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I கோடிட்ட இடங்களை உரிய சொற்களால் நிரப்புக :

1. குப்தர்களின் தலைநகரம் ....
2. 'கவிராஜா' விருது பெற்ற குப்த அரசன் ....
3. முத்திர ராக்சசன் எனும் நூலினை எழுதியவர் ....
4. 'கவிகுலகுரு' எனும் விருதினைப் பெற்ற மகாகவி ....

II கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி :

5. அலகாபாத் கல்தூணில் எந்த சக்ரவர்த்தியின் விவரங்கள் உள்ளன?
6. குப்தர்களின் காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீனப்பயணி (யாத்ரிகர்) யார்?
7. காளிதாசன் எழுதிய ஏதாவது ஒரு நாடகத்தைக் குறிப்பிடுக.
8. ‘மிருச்சகடகம்’ என்னும் நூலினை எழுதியவர் யார்?
9. அமரசிம்மன் எழுதிய அகராதி எது?
10. குப்தர்களின் காலப் புகழ்பெற்ற கணித விஞ்ஞானியின் பெயரைக் கூறுக.

III குழுவில் விவாதித்து விடையளி

11. சமுத்திர குப்தனின் சாதனையை விவரி.
12. சமஸ்கிருத இலக்கியத்திற்கு குப்தர்களின் பங்களிப்பை விவரி.

@KTBS NOT TO BE REPUBLISHED

IV கீழ்க்கண்ட ‘எ’ அட்டவணை மற்றும் ‘பி’ அட்டவணையில் உள்ள தகவல்களைப் பொருத்துக.

எ	பி
1. கவிராஜா	அ. கோ-கோ-கி
2. விக்கிரமாதித்தன்	ஆ. வானவியல் அறிஞன்
3. பாஹியான்	இ. சமுத்திரகுப்தன்
4. மெஹரெளலி	ஈ. இரண்டாம் சந்திரகுப்தன்
5. வராகமிஹிரா	உ. இரும்புத்தூண்

செயல்பாடுகள் :

1. இந்தியாவின் பழமையான கட்டிடக்கலை மற்றும் உருவச்சிலைகளின் ஓவியங்களை செய்திகளுடன் சேகரிக்கவும்.
2. சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்யன், காளிதாசன், ஆர்யபட்டா, வராகமிஹிரா மற்றும் வாக்பட்டா இவர்களின் வாழ்க்கை வரலாற்றினை படிக்கவும்.

வர்தனர்கள்

குப்தப் பேரரசின் அழிவிற்குப் பிறகு வட இந்தியாவில் பல சின்னஞ்சிறு அரச பரம்பரைகள் தலை தூக்கின. அவைகளில் புஷ்யபூதி வம்சமும் ஒன்று. இந்த வம்சத்தில் ஆட்சி செய்த அரசர்களில் பிரபாகர வர்தனன், ராஜ்ய வர்தனன் மற்றும் ஹர்ஷவர்தனன் ஆகியோர் புகழ் பெற்றவர்கள் ஆவர். ஹர்ஷவர்தனனைப் பற்றி அறிவோம்.

ஹர்ஷவர்தனர்

ஹர்ஷவர்தனன் அரியணை ஏறியபோது பதினாறு வருஷ இளைஞனாக இருந்தான். இச்சமயத்திற்கு அவன் வாழ்வில் பல துன்ப நிகழ்வுகள் நடந்தேறியன. ஹர்ஷவர்தனின் தந்தை பிரபாகரவர்தனன் இறந்த பிறகு, அண்ணன் இராஜ்யவர்தனன் ஆட்சிக்கு வந்தான். தங்கை இராஜ்யஸ்ரீயை மௌகரி வம்சத்தின் கிரகவர்மனனுக்கு திருமணம் செய்து வைத்தான். மாளவத்தின் கெட்ட அரசன் (கொடுங்கோலன்) கிரகவர்மனனைக் கொன்று இராஜ்யஸ்ரீயை கனௌஜில் சிறைப்பிடித்து வைத்தான். அப்போது இராஜ்யவர்தனன் படையெடுத்து சென்று மாளவத்தின் படையை தோற்கடித்தாலும், கௌட தேசத்தின் ஷஷாங்கனால் கொல்லப்பட்டான். இத்தகைய துன்பமான காலத்தில் ஹர்ஷவர்தனன் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தான்.

NOT TO BE REPUBLISHED @KTBS



ஹர்ஷவர்தனரின் பேரரசு நிலவரைப்படம்

இச்சமயத்தில் சிறையிலிருந்து விடுதலை அடைந்து விந்தியமலையின் காடுகளில் அலைந்து கொண்டிருந்த விதவைத் தங்கை இராஜ்யஸ்ரீயை கண்டுபிடித்தான். பிறகு மாமனான கிரகவர்மனின் மௌகரி மாநிலம் கூட ஹர்ஷவர்தனின் ஆளுகைக்கு உட்பட்டான். மௌகரிகளின் கனௌஜ் நகரத்தை தனது தலைநகராக தேர்ந்தெடுத்துக் கொண்டான். பிறகு அண்ணன் இராஜவர்தனின் சாவிற்கு காரணமான ஷஷாங்கனின் மீது போர் தொடுத்தான். பின்னர் போதுமானப் படையை தயார் செய்துக் கொண்டு காஷ்மீர், சிந்துப் பகுதிகளை வென்றான். தென் இந்தியாவின் மீது தாக்குதல் நடத்தினான். தெற்கில் நர்மதா நதிக்கரை வரை வந்த ஹர்ஷவர்தனனைக் கர்நாடக அரசன் சாளுக்கிய வம்சத்தின் இம்மடி புலிகேசி பின் வாங்க செய்தான். மொத்தத்தில், வட இந்தியாவின் மீது ஆளுகை செய்து தனது தலைமையை நிருபித்த ஹர்ஷவர்தனன் சுமார் 40 வருடங்கள் வரை ஆண்டான். சீனாவின் பயணி யுவான் - சுவாங் ஹர்ஷவர்தனின் நண்பராக இருந்தார்.

இலக்கியம் : ஹர்ஷவர்தனன் கலைஞன் மட்டுமின்றி கவிஞனாகவும் விளங்கினான். அதுமட்டுமின்றி ஹர்ஷவர்தனன் சமஸ்கிருதத்தில் பிரியதர்ஷிகா, இரத்னாவளி மற்றும் நாகானந்தா எனும் மூன்று நாடகங்களை இயற்றினான். பாணபட்டன் ஹர்ஷவர்தனனைக் குறித்து 'ஹர்ஷசரிதம்' எனும் நூலை இயற்றியுள்ளான். கல்வி ஆர்வம் உடையவனாகவும் இருந்த ஹர்ஷவர்தனன் பழமையான நளந்தா பல்கலைக்கழகத்திற்கு தாராளமாக மானியங்களை அளித்தான்.

மதம் : ஹர்ஷவர்தனன் அனைத்து மதங்களையும் ஆதரித்தான். அப்படியென்றால் அனைத்து மதங்களையும் கௌரவித்தான். அடிப்படையில் சைவ மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் புத்த மதத்திற்கு அதிகமான ஆதரவினை அளித்தான். கனௌஜ் மற்றும் பிரயாகைகளில் மத மகா சபைகளைக் கூட்டினான்.

© KTBS NOT TO BE REPUBLISHED

யுவான் - சுவாங்

யுவான் சுவாங்

யுவான் சுவாங் (Hiuen Tsang) சீனாவின் புகழ் பெற்ற பயணி. இவன் சுமார் 1400 வருடங்களுக்கு முன்பு இந்தியாவிற்கு வந்தான். பதினைந்து வருடங்கள் வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து புத்தமத இலக்கியத்தில் ஆராய்ச்சி மேற்கொண்டான். நளந்தா பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றான். ஹர்ஷவர்தனின் அரசவையில் பல வருடங்களுக்கு இடம் பெற்றிருந்தான். இந்தியாவின் அனுபவங்களை 'சி-யு-கி' மேற்கு அரசின் பதிவேடு (Record of western kingdom) எனும் பயணக் கட்டுரையில் வெளிப்படுத்தி உள்ளான்.

நளந்தா பல்கலைக்கழகம் : இன்றைய பீகார் மாநிலத்தில் உள்ள நளந்தா பல்கலைக்கழகம் குப்தர்களின் காலத்திலிருந்து ஆறு நூற்றாண்டுகளுக்கும் மேலாக உலகப் புகழ்பெற்று விளங்கியது. இது பழம்பெரும் இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகம் ஆகும். இங்கு கல்வி கற்பதற்காக ஜப்பான், சீனா முதலான வெளிநாடுகளில் இருந்தும் ஆயிரமாயிரம் மாணவர்கள் இங்கு வருகைப் புரிந்தனர்.

நளந்தா பல்கலைக்கழகம்

இங்கு எட்டு மிகப்பெரிய பாடசாலைகளும், மூன்று பிரம்மாண்டமான நூலகங்களும் இருந்தன. புத்தமதம் இங்குள்ள முக்கிய பாடப்பொருளாக இருப்பினும் வேதம், யோகம், மருத்துவம் மற்றும் பிற பாடப்பொருள்களையும் கற்பித்தனர். பின்னாளில் பல தாக்குதல்களினால்பண்டிதர்கள் இறந்தனர் பல்கலை கழகத்தில் உள்ள பல நூல்கள் நெருப்பில் சூரையாடப்பட்டன, பண்டிதர்கள் இறந்தனர். இந்த அனைத்து காரணங்களினால் பல்கலைகழகத்தின் புகழ் அழிந்தது. யுவான்-சுவாங் இப்பெரிய பல்கலைக்கழகத்தில் பல வருடங்களைக் கழித்தான்.

நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்

நளந்தா பல்கலைக்கழகத்தில் கல்விக்கு மட்டுமின்றி, உணவு, தங்குமிடத்திற்கும் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இந்த அனைத்து செலவினையும் நிர்வகிக்க நூறு கிராமங்களின் வருமானம் ஒதுக்கி அளிக்கப்பட்டது. பேரரசன் ஹர்ஷவர்தனன் இப்பெரிய பல்கலைக்கழகத்தின் பராமரிப்புகாரர்களில் ஒருவன். மாணவர்களின் வாழ்க்கை அமைப்பு மிகவும் கட்டுப்பாடாக திகழ்ந்தது. சிறந்த பண்டிதர்கள் ஆசிரியர்களாக சேவை புரிந்தனர்.

NOT TO BE REPUBLISHED @KTBS

I. கோடிட்ட இடங்களை தகுந்த சொற்களால் நிரப்புக :

1. ஹர்ஷவர்தனின் நண்பனாக இருந்த சீனாவின் புனிதப் பயணி ....
2. யுவான்-சுவாங் பயணக்கட்டுரையின் பெயர் ....
3. நளந்தா பல்கலைக்கழகம் இன்றைய .... மாநிலத்தில் உள்ளது.
4. ஹர்ஷவர்தனனை நர்மதா நதிக்கரையில் தோற்கடித்த கர்நாடக அரசன் ....

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி :

5. ஹர்ஷவர்தனின் அண்ணன் மற்றும் தங்கையின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. ஹர்ஷவர்தனின் தலைநகரம் எது?
7. 'ஹர்ஷசரிதம்' எனும் நூலை எழுதியது யார்?
8. ஹர்ஷவர்தனன் எழுதிய நாடகங்களைக் குறிப்பிடுக.
9. பழம்பெரும் இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகம் எது? அது எங்குள்ளது?

*****

காஷ்மீரின் கார்கோட்டா பேரரசு

லலிதாத்தியா

காஷ்மீரின் கார்கோட்டா வம்சத்தினர் ஒரு முன்மாதிரியான மாநிலத்தை உருவாக்கி திறமையான நிர்வாகத்தை வழங்கினர். அதன் மூலம் உலக வரலாற்றில் தங்களுக்கு ஒரு அற்புதமான பிம்பத்தை உருவாக்கினர். பொ.ச.625 இல் ராஜா துர்லபவர்தனால் நிறுவப்பட்ட கார்கோட்டா இந்தியாவின் பலமான பேரரசுகளில் ஒன்றாகும். 230 ஆண்டுகள் இருந்த பேரரசு (625 லிருந்து 855) இமயமலைத் தொடரால் சூழப்பட்டு மத்திய ஆசியா வரை அதன் அதிகாரத்திற்கு உட்படுத்தியிருந்தது. பரஸ்பூர் அல்லது பரிஹாஸ்புரா அவர்களின் தலைநகரம் மற்றும் அவர்கள் சூரிய கடவுளை வணங்குபவர்கள். காஷ்மீரில் உள்ள புகழ்பெற்ற மார்த்தாண்ட சூரியன் கோயில் இந்த பன்முகத்தன்மை மற்றும் ஆட்சியாளர்களின் மகிமையை எடுத்துக்காட்டுகிறது.

கார்கோடா வம்சத்தின் முக்கிய மற்றும் செல்வாக்கு மிக்க ஆட்சியாளர் பொ.ச.724 இல் ஆட்சிக்கு வந்த லலிதாதித்யா ஆவார். அவரது 36 ஆண்டுகால ஆட்சியில் இன்றைய உத்திரகண்ட மற்றும் பீகார் மாநிலங்கள் அடங்கும். அவரது காலத்தினை. கர்கோடா வம்ச வரலாற்றில் பொற்காலமாக கருதப்படுகிறது. ஏனெனில் லலிதாதித்தியா கலை மற்றும் கலாச்சாரத்திற்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கினார்.

கார்கோடாவின் காலம் சைவ சித்தாந்தத்தின் மிகவும் பெருமைவாய்ந்த காலமாக கருதப்படுகிறது. இக்காலத்தில் சைவசூத்திரம் வாசு குப்தாவால் எழுதப்பட்டது. சிறந்த தத்துவஞானியும் கவிஞருமான அபினவ குப்தா இந்த காலத்தை சேர்ந்தவர். இக்காலத்தில் திரிகா மற்றும் கோலா மரபுகள் உச்ச நிலையை அடைந்தன புகழ்பெற்ற கல்ஹானா லலிதாதித்தயரின் அரசவை புலவராக இருந்தார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

ராஜபுத்திரர்கள்

இராஜபுத்திரர்கள் சாகசம், வீரத்திற்கு பெயர் பெற்றவர்கள். அவர்கள் தங்களை க்ஷத்ரியர்கள், சூரிய மற்றும் சந்திர வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டனர். இராஜபுத்திரவம்சங்கள் வட இந்தியாவில் சுமார் 500 ஆண்டுகள் காலம் ஆட்சி நடத்தி வந்தனர் அது ஒரு அழகிய காலமாக இருந்தது. இந்தியாவின் மீது படையெடுத்து வந்த அரேபியர், துருக்கியர், ஆப்கானிஸ்தினர் மற்றும் மொகலாயர்களை எதிர்த்து அவர்களுடன் வீராவேசத்துடன் போராடியவர்களும் இவர்களே ஆவர்.

ராஜபுத்தரர்களின் சிறப்புகள்:

இந்தியாவின் வரலாற்றில் ராஜபுத்திரர்களுக்கு தனிச்சிறப்பு வாய்ந்த இடமுள்ளது. அனாதைகள், எளியவர்கள், பெண் மற்றும் பசுக்களைப் பாதுகாக்கும் பாரம்பரிய விழுமியங்கள் அவர்களுக்கு மிகவும் பிடித்தமானவைகள் ஆகும். பாதுகாப்பைக் நாடுபவர்களுக்குப் பாதுகாப்பளித்தனர். அவர்கள் தங்கள் மூதாதையர்களின் வீரச்செயல்களை குறித்து இயற்றப்பட்ட பாடல்களை பாடி உற்சாகம் அடைந்தனர்.

ராஜபுத்திர பெண்கள் தங்கள் வீரத்திற்கும், சுய மரியாதைக்கும் பெயர் பெற்றவர்கள். போரில் ஆண்கள் இறந்தபோது அவர்களின் விதவைகள் எதிரிகளால் அவமானப்படுவதைத் தவிர்ப்பதற்காக மரணமே சரி என்று கூட்டாக தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வர். இந்த நடைமுறையை ''ஜௌஹர்'' என்று அழைப்பார்கள்.

கலை மற்றும் கட்டிடக்கலை:

கலை மற்றும் கட்டிடக்கலைக்கு ராஜபுத்திரர் காலத்தின் பங்களிப்பு மிகவும் சிறப்பானது. அவர்களின் அழகான கோவில்கள் அற்புதமான அரண்மனைகள் மற்றும் வலிமையான கோட்டைகளை இப்பொழுதும் நாம் காணலாம். அவர்களால் கட்டப்பட்ட சில குறிப்பிடத்தக்க கட்டமைப்புகள் பின்வருமாறு.

- **கஜிராஹோ :-**

கஜிராஹோவில் (மத்திய பிரதேசம்) உள்ள கந்தாரியா மகாதேவ் கோவில்: உலகப் புகழ் பெற்ற அமைப்பாகும் கஜீராஹோவில் உள்ள 85 கோயில்களில் இன்று 22 மட்டுமே உள்ளது.

- **தில்வாரா கோயில்கள் மவுண்ட் அபுவில் பளிங்கு மண்டபம் (ராஜஸ்தான்):** இங்கு நுட்பமாக செதுக்கப்பட்ட பளிங்கு கோயில் கவர்ச்சிகரமான படைப்புகள் உலக புகழ் பெற்றவைகள் ஆகும்.

கந்தாரியா மகாதேவ கோவில், கஜிராஹோ

தில்வாரா கோவில் மவுண்ட் அபி

@KTBS NOT TO BE REPUBLISHED

• **கோணார்க் (ஒடிஷா):** இந்த கோவில் சூரிய தேவனின் ரதம் போல் பல அம்சங்களில் தனித்துவமானது. இது ஒரு அற்புதமான மற்றும் பெரிய கோவில்களில் ஒன்றாகும். 24 சக்கரங்களை கொண்டதாகும்.

• **புவனேஷ்வர் (ஒடிஷா):** இக்கோயில் 1000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. இந்த அற்புதமான கோபுரம் 180 அடி உயரமானது.



சூரியன் கோயில் கோணார்க்

லிங்கராஜா கோயில் புவனேஷ்வர்

@KTBS NOT TO BE REPUBLISHED

குவாலியர் (மத்திய பிரதேசம்) : இந்த பிரம்மாண்டமான கோட்டை 'இந்திய கோட்டைகளின் கழுத்தணி முத்து' என்று வர்ணிக்கப்படுகிறது. இந்த கோட்டைக்குள் ராஜா மான்சிங் தனது அன்பிற்குரிய ராணி மிருகநயனுக்காக கட்டப்பட்ட இரண்டு அடுக்கு மாடி அரண்மனை உள்ளது. குவாலியருக்கு வெளியே பாறைகளின் சுவரில் பல சிலைகள் செதுக்கப் பட்டுள்ளன. இவற்றில் முதல் ஜெயின் தீர்த்தங்கரரான விருஷபநாதின் (ஆதிநாதர்) ஒரு பெரிய சிலை உள்ளது.

ஹவா மஹால் ஜெய்ப்பூர்

குவாலியர் கோட்டை

ஜெய்ப்பூர் (ராஜஸ்தான்) :

ஜெய்ப்பூர் நகரம் இளஞ்சிவப்பு நகரம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் நகரத்தின் அனைத்து கட்டிடங்களும் இளஞ்சிவப்பு வண்ணம் பூசப்பட்டுள்ளன. இது உலகின் அழகான நகரங்களில் ஒன்றாகும். ஜெய்ப்பூரில் உள்ள ஐந்து மாடி ஹவாமஹால் ஒரு கவர்ச்சிகரமான கட்டமைப்பாகும்.

உதய்பூர் அரண்மனை (ராஜஸ்தான்): உதய்பூர் ஒரு அழகான நகரம், உதய்பூரில் உள்ள அரண்மனை ராஜஸ்தானில் மிகப்பெரியதாகும்.

நுண்ணோவியங்கள் (மினியேச்சர் ஓவியங்கள்): ராஜபுத்திர ஆட்சியாளர்கள் ஓவியக்கலையை ஆதரித்தனர். கலைஞர்கள்,

கோயில்கள், அரண்மனை சுவர்கள் மற்றும் புத்தகங்களில் அலங்கார ஓவியங்களை வரைந்தனர்.

உதய்பூர் அரண்மனை

ராஜபுத்திர மினியேச்சர் ஓவியங்கள்

NOT TO BE REPUBLISHED

இலக்கியம்: ராஜபுத்திரர் காலத்தில் சமஸ்கிருத இலக்கியம் சிறந்து விளங்கியது. குஜராத்தி, ஹிந்தி மற்றும் ராஜஸ்தானி மொழிகள் வளர்ந்தன. சந்த் பர்தாயியின் ''பிருத்திவிராஜ் ராசோ'' அந்த காலத்தின் புகழ்பெற்ற இந்தி படைப்பாகும், இராஜபுத்திர ஆட்சியாளர்களில் பலர் அறிஞர்களாக இருந்தனர். அவர்கள் கவிஞர் ஜெயதேவை ஆதரித்தனர். மேலும் கீதாகோவிந்தா என்ற புத்தகத்தை எழுதிய சேனா ஆட்சியாளர்களின் அரசவையில் கவிஞராக இருந்தார். ராஜபுத்திர வம்சத்தினர் நளந்தா, காஷி, விக்ரமஷீலா, உஜ்ஜயினி மற்றும் பண்டைய உயர் கல்வி மையங்களை ஆதரித்து வந்தனர்.



@KTRS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு: இந்தியாவின் பழமையான பல்கலைக்கழகங்களைப் பற்றிய கூடுதல் விவரங்களை இணையத்தில் இருந்து சேகரித்து ஒரு அறிக்கையைத் தயாரிக்கவும்.

ராஜபுத்திர வம்சங்கள் :

பல ராஜபுத்திர வம்சங்கள் இந்திய வரலாற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்களில்

1. குர்ஜரா பிரதிஹாரா,

2. பாலர்,

3. சௌஹான்,

4. குஹிலா ஆகிய நான்கு நிரந்தர ராஜபுத்திர வம்சங்களின் சாதனைகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

குர்ஜரா பிரதிஹார்கள் : மத்திய பிரதேசத்தில் உள்ள அவந்தியில் (உஜ்ஜைனி) இருந்து ஆட்சி செய்து வந்தனர். அவர் வம்சத்தின் புகழ்பெற்ற ஆட்சியாளரான **'நாகபட்டா'**, ஒரு பரந்த பேரரசை உருவாக்கினார். அரேபிய படையெடுப்பில் இருந்து இந்தியாவை பாதுகாத்த புகழ் இவரைச் சாரும்.

மன்னர் போஜா வம்சத்தின் சிறந்த ஆட்சியாளராகவும், எழுத்தாற்றல் மிக்கவராகவும் இருந்தார். அவர் வங்காள பாலர்களை தோற்கடித்து புகழ்பெற்ற கன்னோஜ் நகரத்தை கைபற்றினார். அவர்காலத்தில் இந்தியாவிற்கு பயணம் செய்த சுலைமான் என்ற அரபு பயணி, அவரை திறமையான ஒரு சிறந்த மன்னர் ''அரேபியர்களின் எதிரி குதிரை படை கொண்டவர் என்றும் வர்ணித்தார்.

பாலர்கள்

பாலர்கள் சுமார் நான்கு நூற்றாண்டுகள் ஆட்சி செய்தார்கள். தர்மபாலா சிறப்பான ஆட்சியாளராக இருந்தார். அவரது இராஜ்ஜியம் வட இந்தியாவில் இருந்த மிகப்பெரிய ராஜ்ஜியங்களில் ஒன்றாகும். புகழ்பெற்ற நகரமான கன்னோஜைக் கைப்பற்றியது, இவரின் மறக்க இயலாத சாதனையாகும். கர்நாடக வம்சாவளியை சேர்ந்த விஜயசேனா ஆட்சியாளர்களால் பாலர்கள் வம்சம் தூக்கியெறியப்பட்டன. அவர் நிறுவிய சேனா வம்சம் ஆட்சியை தொடங்கியது.

பாலர்கள் பௌத்த மதத்தை பின்பற்றினார்கள், அவர்கள் இந்து தர்மத்தை ஆதரித்தனர். கல்வியை பரப்புவதில் அவர்கள் சிறந்த ஆர்வம் காட்டினர். உத்தண்டபுரா மற்றும் விக்ரமஷிலா பல்கலைக் கழகங்கள் அவர்களால் நிறுவப்பட்டன.

சௌஹானர்கள்:

மூன்றாவது பிருத்விராஜ் சௌஹானர்களில் சிறப்பு வாய்ந்த ஆட்சியாளர் ஆவார். டெல்லி அவரது தலைநகரமாக இருந்தது.

©KTBS NOT TO BE REPUBLISHED

கன்னோஜ் மன்னன் ஜெயசந்திரனின் அழகான மகள் சம்யுக்தாவை, பிருத்விராஜ் சவுகான் மணந்ததைப் பற்றின கண்கவர் கதைகள், அக்காலத்தில் பல இலக்கியப் படைப்புகளில் விவரிக்கப்பட்டுள்ளன

ஜெயசந்திரா மற்றும் பிரத்விராஜின் இடையே பகைமை இருந்தது. ஆனாலும் சம்யுக்தா மற்றும் பிரத்விராஜ் இருவரும் ஒருவரை யொருவர் நேசித்தனர் ஜெயசந்திரா, சம்யுக்தாவின் சுயம்வரத்திற்கு, பிருத்விராஜை அழைக்கவில்லை. பிரத்விராஜை அவமதிப்பதற்காக ஜெயசந்திரா அவனின் சிலையை, அரண்மனை வாசலில் அரண்மனை காவலாளியை போல் தோன்றுவதற்காக வாசலில் வைத்து சுயம்வரத்தை நடத்தினான்.

சுயம்வரத்திற்காக கூடியிருந்த இளவரசர்களை ஒதுக்கி விட்டு இளவரசி அரண்மனை வாசலுக்கு சென்று பிரத்விராஜன் சிலைக்கு மாலை அணிவித்தாள், அதுவரைக்கும் சிலைக்கு பின்னால் மறைந்திருந்த பிருத்விராஜன், சம்யுக்தாவை தன் குதிரையில் ஏற்றிக் கொண்டு சென்று அவளை திருமணம் செய்து கொண்டார். இந்நிகழ்வு இரண்டு அரச குடும்பங்களுக்கிடையிலான உறவை மென்மேலும் குலைத்தது.

©KTBS
NOT TO BE REPUBLISHED

முகமது கோரி இந்தியா மீது படையெடுத்தபோது, பிருதவிராஜ் அவரை எதிர்த்தார். இதனால் பல ராஜபுத்திர ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெற்றார், எனினும் கன்னோஜின் ஜெயசந்திரா அவருடன் இணைய மறுத்துவிட்டார். நடந்தபோரில் பிருத்விராஜ் முகமது கோரியை தோற்கடித்தார். அவருக்கு கருணை பாராட்டி அவரை விடுவித்தார். ஆனால் முகமது கோரி அடுத்த ஆண்டு பிருத்விராஜிடம் சவால் விடுத்தார். இரண்டாம் போரில் பிருத்விராஜ் தோற்கடிக்கப்பட்டார். இந்த நெருக்கடியான நேரத்தில் பிருத்விராஜ் குதிரையில் ஏறி தப்பிக்க முயன்றார். இருப்பினும் அவர் எதிரியின் வீரர்களால் கைப் பற்றப்பட்டார். முகமது கோரி அவரை உடனே கொல்லும்படி உத்தரவிட்டார். டெல்லி முகமது கோரியின் கீழ் வந்தது. இது டெல்லி சுல்தான்களின் ஆட்சியை நிறுவ வழி வகுத்தது.

பிருத்விராஜைப்பற்றின பல புராணக்கதைகள் உள்ளன மற்றும் ‘‘பிருத்விராஜ் ராசோ’’ என்ற இந்தி கவிதையில் அவரது வீர சாகசங்களைப் பற்றி சாந்த் பர்தாயி என்ற கவி விவரித்துள்ளார்.

கோஹிலர்கள்:

வெற்றியின் சித்தூர்கர்

கோஹிலர்கள் பெரும் போர்வீரர்கள். அவர்கள் வம்சத்தின் ஆட்சியாளரான கொம்மனா, அரபு இராணுவ இயக்கத்தினிடமிருந்து தனது ராஜ்ஜியத்தை பாதுகாத்து பப்பா ராவல் என்ற பட்டத்தை பெற்றார். இவ்வம்சத்தில் மற்றொரு குறிப்பிடத்தக்க ஆட்சியாளர் ராணாகும்பன் ஆவார். அவர் டெல்லி சுல்தான்களுக்கு எதிராக போராடினார். அவர் தனது இராஜ்ஜியத்தை பாதுகாக்க 32 கோட்டைகளைக் கட்டினார். சித்தோர்கரில் உள்ள அற்புதமான வெற்றிக் கோபுரம் (விஜய ஸ்தம்பம்) அவரால் அமைக்கப் பட்டது.

கோஹிலர்களில் சிறப்பான ஆட்சியாளர் ராணா சங்கா அல்லது ராணா சங்கிராம சிம்ஹா ஆவார். 100 போர்களில் நாயகனாக இருந்த அவர் தம் உடம்பில் 80 போரின் தழும்புகளை கொண்டிருந்த அவர் டெல்லி சுல்தான்களுக்கு எதிராக தொடர்ந்து போராடினார்.

பொருளாதார நிலை :

- குப்தர்களின் காலத்திலிருந்து அரசர்களின் சேவைகளில் இருந்தவர்களுக்கு நிலம் வழங்கும் முறை பழக்கத்தில் இருந்தது இந்த முறை ராஜபுத்திர காலத்திலும் தொடர்ந்தது மற்றும் ஜமீன்தாரி முறைக்கு வழிவகுத்தது. நிலத்தை உழுபவர்களின் சிரமங்களை ஜமீன்தாரி முறை அதிகரித்தது.
- நகரங்களில் கைவினை கலைஞர்கள் மற்றும் வணிகர்கள் இருந்தனர். வைஷ்யர்கள் (வணிகர்கள்) வணிகம் மற்றும் வங்கியில் ஈடுபட்டிருந்தனர்.
- வெளிநாட்டு வர்த்தகம் வளர்ந்தது. இந்தியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள துறைமுகத்தில் அரேபியர்கள் வர்த்தகம் செய்தனர். பருத்தி, மசாலா வாசனை திரவியங்கள் மற்றும் வைரங்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. மத்திய ஆசியா மற்றும் அரேபியாவில் இருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்படடன.

TICTO BE REPUBLIS

- ராஜ்ஜியத்தின் வருமானம் வரி பெரும்பாலும் கோட்டைகள் மற்றும் கோவில்கள் கட்டுவதற்கு செலவழிக்கப்பட்டன. இதன் மூலம் வேலை வாயப்புக்கள் வழங்கப்பட்ட்து.

சமூக நிலை :

- ராஜபுத்திர காலத்தில் பல சமூக வகுப்புகள் இருந்தன. அவை பரம்பரை தொழில்களை அடிப்படையாகக் கொண்டவைகள்.
- பெண்கள் உயர்வாக கருதப்பட்டார்கள். அவர்கள் கலாச்சாரம் மிக்கவர்கள் மற்றும் அவர்கள் இலக்கியம், சமஸ்கிருத மொழி, நடனம், இசை, ஓவியம் மற்றும் கைவினை வேலைகளை கற்றவர்கள்.
- ராஜபுத்திரர்கள் புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டனர் மற்றும் புனித நதிகளில் நீராடினர். அஜ்மீருக்கு அருகில் உள்ள பிரம்மா வழிபாட்டு மையமான புஷ்கர் ஒரு முக்கியமான யாத்திரை ஸ்தலமாக இருந்தது. புஷ்கரில் ஒரு பெரிய வருடாந்திர திருவிழாவும் நடைபெற்று வருகிறது. இது இன்னும் பிரபலமானதாக திகழ்கின்றன.

ஒட்டகத் திருவிழா புஷ்கர்

அஹோம் வம்சம்



அஹோம் வம்சத்தின் சின்னம்

அஹோம் ஆட்சியாளர்கள் நவீன அஸ்ஸாமின் பகுதியை 598 ஆண்டுகளாக ஆட்சி செய்தனர் (பொ.ச.1228-1826) இந்த வம்சம் ஷான் இளவரசர் சுகபாவால் தொடங்கப்பட்டது. அவருடை முன்னோர்கள் (Patcoy) பாட்காய் மலைகளை கடந்து அசாமில் குடியேறினர். மன்னரை அசாம் ராஜா என்றும் குடிமக்களை கவோபா (Kavopa) என்றும் அழைத்தனர். பத்ரமந்திரி (மந்திரி மண்டலத்தில் இருந்து வெவ்வேறு வேலைகள் புர்ஹகோஹென், போர்கோஹென், போர்பருவா, போர்புகான், மற்றும் போர்பாட்ரோ கோஹென்) மந்திரி மண்டலத்தின் ஒப்புதலுடன் மன்னரை நியமனம் செய்தனர். ஒரு மன்னரை அகற்றும் அதிகாரம் அவர்களுக்கு இருந்தது.

அஹோம் ஆட்சியின் 600 ஆண்டுகால ஆட்சியில், மூன்று முக்கியமான ஆட்சியாளர்கள் குறிப்பிடப்பட்டவர்கள். சுகபா - அஹோம் வம்சத்தினை நிறுவியவர் ஆவார், சுஹுங்முங் - சாமராஜ்யத்தை விரிவுபடுத்தியவர் மற்றும் சுபாத்பா-ராஜ்ஜியத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பாடுபட்டவர். தளபதியான லாசிட் போர்புகான் இராணுவத்தின் வலிமைமிக்கவர் என்று பெயர் பெற்றவர்.

அஹோமின் ராணிகள் :

அரசர்களைப் போல அரசிகளும் நிர்வாகத்தில் பங்கு கொண்டனர். மகாராணி போர்குவரி என்றும் மற்ற அரசிகளை பார்வதிய குவரி, ராஜ்தங்கியகுவரி, தமுளிகுவரி என்றும் அழைக்கப்பட்டனர். பொதுவாக அரசிகள் அஹோம் வம்சத்தை சார்ந்தவர்களாக இருந்தனர். மன்னரின் மரணத்திற்கு பிறகு அரசியர் ஆட்சி பொறுப்பை தாமே ஏற்றனர் நாணயத்தின் இரு புறத்திலும் மன்னர் மற்றும் அரசியின் பெயர்கள் அச்சிடப்பட்டிருந்தன.

முகலாயர்களுடன் போர்:

முகலாயர்கள் வட கிழக்கில் தங்கள் மேலாதிகாரத்தை நிலைநிறுத்த இயலவில்லை. ஏனெனில் வல்லமைமிக்க அஹோம் வம்சத்தினர் அங்கு ஆட்சி புரிந்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

முகலாயர்கள் பொ.ச.1615-பொ.ச.1682 வரை பலமுறை அஹோம் வம்சத்தின் மீது படையெடுத்து சில பகுதிகளை வசப்படுத்திக் கொண்டனர். பின்னர், மன்னர் சக்ரத்வஜ சிங்கன் தன்னுடைய அமைச்சரான போர்புகான் உடன் சேர்ந்து முகலாயர்களை எதிர்த்து அனைத்து பகுதிகளையும் தன் வசப்படுத்திக் கொண்டான். இந்த போராட்டத்தின் பலனாக குவாஹத்தி அஹோம் வம்சத்தின் வசமானது.

அஹோமின் கடற்படை:

அஹோம்கள் தங்கள் கடற்படையை பிரம்மபுத்திரா ஆற்றின் மேற்கு கடற்கரையில் நிறுத்தி எதிரிகளை விரட்டியடித்தனர். அவர்கள் கடற்படை போரில் வல்லுநர்கள். அவர்கள் கடற்படைக் கப்பல்களை உருவாக்கினார்கள். அவர்களுக்கு கொரில்லா போர் தெரியும். எனவே இஸ்லாமிய ஆட்சியாளர்கள் அவர்களை எளிதில் தோற்கடிக்க இயலவில்லை.

காலவரிசை :

- கார்கோட்டா வம்சத்தின் காலம்- பொ.ச.625 - 855
- ராஜபுத்திரர்களின் காலம் - பொ.ச.650 - 1200
- அஹோம் வம்சத்தின் காலம் - பொ.ச.1228 - 1826

NOT TO BE REPUBLISHED @KTBS

பயிற்சிகள்

I. தகுந்த சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. கார் கோட்டா வம்சத்தின் புகழ்பெற்ற அரசன்__________ .
2. கீத கோவிந்தா படைப்பை எழுதிய கவிஞர் __________ .
3. அஹோம் பேரரசு __________ இடங்களில் ஆட்சி செய்தது.
4. குர்ஜர பிரதிஹார அரசனான போஜனின் அரசவைக்கு வருகை தந்த அரேபிய பயணி __________.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்:

5. ராஜபுத்திரர்களின் குணநலன்களை எழுதுக.
6. ராஜபுத்திர காலத்தின் புகழ்பெற்ற மூன்று கட்டிடங்கள் யாவை? அவை எங்கு அமைந்துள்ளன?

7. பிருதிவிராஜ் சௌஹானைப் பற்றின ஒரு குறிப்பு எழுதுக.

8. பப்பா ராவல் என்பவர் யார்?

9. ''ராணா சம்கிரம சிம்ஹா'' பற்றி சிறு குறிப்பு எழுதுக.

10. ராஜபுத்திர காலத்தில் இருந்த சமூகநிலை குறித்த ஒரு சிறு குறிப்பு எழுதவும்.

செயல்பாடுகள்:

1. ராஜபுத்திர கோவில்கள், அரண்மனைகள் மற்றும் கோட்டைகளின் புகைப்படங்களை சேகரித்து ஒவ்வொன்றைப் பற்றியும் சிறு குறிப்பு எழுதவும்.
2. வரைபடத்தில் ராஜபுத்திர கட்டிடக்கலை மையங்களை குறிப்பிடவும்.
3. பண்டைய காஷ்மீரின் எழுத்தாளர்கள், கவிஞர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் படைப்புகளை பட்டியலிடவும்.
4. லசித் போர்புகானின் வாழ்க்கை வரலாற்றை படிக்கவும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஜஜ

பாடம்
13

தில்லி சுல்தான்கள்

D6Q6AZ

பாட அறிமுகம்:

11-12 ஆம் நூற்றாண்டுகளில் துருக்கியர்கள் இந்திய எல்லைப் பகுதிகளில் மீண்டும் மீண்டும் படையெடுத்தனர். இந்த படையெடுப்புகள் இறுதியாக (பொ.ச.1206-1526) டெல்லி சுல்தான்களின் ஆட்சியை நிறுவுவதில் உச்சத்தை அடைந்தன. இந்த பாடத்தில் சுல்தான்களின் கொள்கைகள், அவர்களின் நிர்வாகம், அக்காலத்தின் சமூக பொருளாதார நிலைமைகள் கட்டிடக்கலை மற்றும் இலக்கியத்திற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பை குறித்து விவரமாக கூறப்பட்டுள்ளது.

திறன்கள் :

1. 11-12 ஆம் நூற்றாண்டுகளில் துருக்கிய படையெடுப்புகள் இறுதியாக டெல்லி சுல்தான்களின் ஆட்சியை எவ்வாறு நிறுவ வழிவகுத்தது என்பதை புரிந்துக்கொள்வர்.
2. மக்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வாழ்வில் சுல்தான்கள் ஆட்சியின் தாக்கத்தை பற்றி புரிந்து கொள்வர்.
3. தில்லியின் சுல்தான் காலத்துடன் தொடர்புடைய இடங்களை வரைபடத்தில் குறிப்பிடுவர்.

NOT TO BE REPUBLISHED @KTBS

எட்டாம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவின் வடமேற்கு எல்லையில் வெளிநாட்டு படையெடுப்புகள் இருந்தன. படையெடுப்பாளர்கள் வட மேற்கு எல்லைப் பகுதியை சேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் செல்வங்களை கொள்ளையடிப்பதும், எல்லைப் பிரதேசங்களை கைப்பற்றுவதும், மேலும் இஸ்லாம் மதத்தை பரப்புவதை நோக்கமாக கொண்டிருந்தனர்.

அரபு படையெடுப்பு: பாரதத்தின் மேல் படையெடுத்தவர்களில் முதன்மையானவர்கள் அரேபியர்கள். பொ.ச. 712 இல் இந்திய பகுதிகளில் சிந்துவை முதலில் ஆக்கிரமித்தவர்கள், அரேபியர்கள் அவர்களின் வெற்றியின் விளைவாக சிந்து மற்றும் முல்தான் மாகாணங்கள் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இதனால்

புதிதாக கைப்பற்றப்பட்ட நிலங்களில் இஸ்லாமிய மதம் வேருன்ற ஆரம்பமானது, இருப்பினும் அரேபியர்களின் அத்துமீறல் குறுகிய காலத்தில் குறைந்து விட்டது.

துருக்கிய படையெடுப்பு : முகமது கஜினி

முகமது கஜினி

அரபு படையெடுப்பிற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு பிறகு முகமது கஜினி இந்தியாவை தாக்கினார். துருக்கிய வம்சாவளியைச் சேர்ந்த முகமது கஜினி, ஆப்கானிஸ்தானின் ஒரு சிறிய ராஜ்ஜியத்தின் சுல்தான் ஆவார். அவர் 17 முறை இந்தியா மீது படையெடுத்து, செழிப்பான நகரங்கள் மற்றும் புகழ்வாய்ந்த கோயில்களைப் கொள்ளையடித்து அழித்தார். அத்தகைய கோயில்களில் மதுராவில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர் கோயில் (உத்தர பிரதேசம்) மற்றும் சோமநாத்தின் (குஜராத்) செல்வச்சிறப்பு வாய்ந்த கோவில்கள் ஆகும்.

NOT TO BE REPUBLISHED
©KTBS

> சுதந்திரத்திற்கு பிறகு, சோமநாத் கோயில் மிகப்பெரிய அளவில் புதுப்பிக்கப்பட்டது. (பொ.ச.1951) சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சோமநாத் கோயில் குஜராத்

முகமது கோரி:

முகமது கோரி

12 ஆம் நூற்றாண்டின் கடைசி காலாண்டில் ஆப்கானிஸ்தானில் ஒரு இராஜ்ஜியத்தை ஆண்ட முகமது கோரி இந்தியா மீது படையெடுத்து சிந்து மற்றும் பஞ்சாப் எல்லைப் பகுதிகளை கைப்பற்றினார். மேலும் அவர் இந்தியாவின் எல்லை பகுதிகளில் படையெடுத்த பொழுது. டெல்லி மற்றும் அஜ்மீரின் மன்னர் பிருத்விராஜ் சௌஹன் அவரை தரேன் போரில் வீழ்த்தினார். இருப்பினும், முகமது மரண தண்டனையிலிருந்து தப்பினார். அடுத்த ஆண்டிலேயே முகமது இந்தியாவிற்கு வந்து பிருத்விராஜிடன் இரண்டாவது தரேன் போரில் அவரை தோற்கடித்தார். முகம்மது அவரை கொல்ல உத்தரவிட்டார். பிறகு டெல்லி, முகமதியரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது, ஆப்கானிஸ்தானுக்குத் திரும்புவதற்கு முன்பு அவர் கைப்பற்றின பகுதிகளை குதுபுதீன் ஐபக் என்பவரிடம் ஒப்படைத்தார். குதுபுதீன் டெல்லியின் சுல்தானாக ஆட்சியை தொடங்கினார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

அடிமை வம்சம்

குதுபுதீன் ஐபக்

குதுபுதீன் ஐபக்

குதுபுதீன் முதலில் ஒரு அடிமையாக இருந்தார். எனவே அவரால் நிறுவப்பட்ட வம்சம் அடிமை வம்சம் என்று அழைக்கப்படுகிறது. அவர் தனது வெற்றியைக் குறிக்கும் வகையில் தனது எதிரிகளை தோற்கடித்து இந்தியாவில் துருக்கிய ஆட்சியை வலுப்படுத்தினார். அவர் வெற்றியின் சின்னமாக டெல்லிக்கு அருகிலுள்ள மெஹ்ராலியில் குதுப்மினார் கட்டத் தொடங்கினார். பின்னர் அது சுல்தான் இல்துமிஷ் என்பவரால் நிறைவடைந்தது.

தில்லியை 5 வம்சத்தினர் ஆட்சி செய்தனர். அவர்களில் முக்கியமான வம்சத்தினர்கள் என்றால்,

- அடிமை வம்சம்
- கில்ஜி வம்சம்
- துக்ளக் வம்சம்
- சய்யத் வம்சம்
- லூதி வம்சம்

சுல்தானா ரசியா

சுல்தான் ஆட்சியின் போது ஒரே பெண் ஆட்சியாளர் ரசியா ஆவார். துணிச்சலான சுல்தானா அரச நீதிமன்றத்தில் நீதி வழங்கினார். அவர் ஆண்வேடம் பூண்டு போர்களத்தில் தன் இராணுவத்தை வழிநடத்தினார். பெண்கள் ஆட்சியை சகித்துக் கொள்ள முடியாத பிரபுக்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் கலகம் செய்து அவளை கொன்றனர்.

குதுப்மினார், டெல்லி

© KTBS NOT TO BE REPUBLISHED

கில்ஜி வம்சம்

அலாவுதின் கில்ஜி

அடிமை வம்சத்திற்கு பிறகு கில்ஜிவம்சம் ஆட்சிக்கு வந்தது. டெல்லியின் அனைத்து சுல்தான்களிலும் அலாவுதின் கில்ஜி மிகவும் வலிமையானவர். அவரின் ஆட்சி இராணுவ பலத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது.

கொள்கைகள் : அலாவுதின் நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். இராணுவ மற்றும் பொருளாதார முறைகளில் சீர்திருத்தங்களை

செய்தார். அவர் பொதுவாக நுகரப்படும் பொருட்களின் விலைகளை ஒழுங்குபடுத்தினார். அவர் டெல்லியில் மதுபானம் அருந்துதல் மற்றும் சூதாட்டத்திற்கு தடைவிதித்தார். குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர்.

இராணுவப் பிரச்சாரங்கள்: அலாவுதீன் இந்தியா முழுவதையும் கைப்பற்ற விரும்பினார் அலாவுதின் தனது இராணுவ பலத்தால் வட-இந்தியாவை முதன்முதலில் கைப்பற்றினார். தென் இந்தியாவிற்கு அவருடைய நெருங்கிய அடிமையான மாலிக் கபூரை ஒரு பெரிய இராணுவப் படையுடன் அனுப்பினார். மாலிக்கபூர் தென் இந்தியாவின் நான்கு பெரிய ராஜ்ஜியங்களையும் அதன் தலைநகரங்களையும் கொள்ளையடித்தார்.

மாலிக்கபூர் கைப்பற்றிய ராஜ்ஜியங்களாவன: மகாராஷ்டிரத்தின் யாதவர் (தலைகநரம்-தேவகிரி), தெலுங்கான காகதீயா (வாரங்கல்), ஹொய்சளா (தோரசமுத்திரா) மற்றும் தமிழகத்தின் பாண்டியர் (மதுரை)

மாலிக்கப்பூர் தனது இராணுவ அணிவகுப்பை ராமேஸ்வரம் வரை தொடர்ந்தான். வழியில் அவரது இராணுவம் பல வழிபாட்டுத் தலங்களை அழித்தது மற்றும் செல்வங்களைக் கொள்ளையடித்தன. தென் இந்தியாவின் மிகப்பெரிய அளவிலான செல்வங்கள் இதற்கு முன் டெல்லியில் வந்து குவியவில்லை.

அலாவுதீன், அமீர் குஸ்ரு, அமிர்ஹாசன் மற்றும் பிற பாரசீகக் கவிஞர்களை ஆதரித்தார். அவர் டெல்லியில் ஒரு புதிய கோட்டையை கட்டினார். அது 'சிரி' என்று அழைக்கப்பட்டது. அலை தார்வாச டெல்லியில் பெரிய கட்டமைப்பாகும்.

அலைதர்வாசா டெல்லி

NOT TO BE REPUBLISHED
©KTBS

அலாவுதீனின் கடைசி நாட்கள் மிக சோகமானது. அரண்மனையில் பல கிளர்ச்சிகள் நடந்தன. அவரை கவிழ்க்க மாலிக் கஃபூர் அதிகார பேராசையால் தன் தலைவனை கொன்று, தன்னை சுல்தானாக அறிவித்தான். ஆனால் அவனும் எதிரிகளால் கொல்லப்பட்டான், கில்ஜி ஆட்சி முடிந்து துக்ளக் ஆட்சி வந்தது.

துக்ளக் வம்சம்

முகமது பின் துக்ளக்

முகமது பின் துக்ளக் சுல்தான் வம்சத்தின் குறிப்பிடதக்க சுல்தான் ஆவார்.அவர் ஒரு அறிஞர், நடைமுறை ஞானம் இல்லாததால் அவரசமாக முடிவெடுக்கும் குணம் படைத்தவன். எளிதில் கோபப்படும் குணம் படைத்தவன்.

நிர்வாக சோதனைகள் : நிர்வாகத்தின் செயல்பாட்டை மேம்படுத்த முகம்மது பல சோதனைகளை மேற்கொண்டார். டெல்லியில் இருந்து தேவகிரிக்கு (மகாராஷ்டிரா) தலைநகரை மாற்றியது அத்தகைய பரிசோதனைகளில் ஒன்றாகும். (டெல்லியில்) தலைநகரம் மையமாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினார். 700 மைல் தொலைவில் உள்ள தேவகிரி, தௌலதாபாத் என்று பெயர் மாற்றப்பட்டது. டெல்லியில் வசிப்பவர் அனைவரும் புதிய இடத்திற்கு செல்ல வேண்டும் என்ற கடுமையான உத்தரவை பிறப்பித்தார். இதனால் டெல்லியில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தனர் மேலும் தெற்கில் உள்ள தொலைதூர பயணத்தின் போது சொல்ல முடியாத துயரங்களை எதிர்கொண்டார்கள். தலைநகரை மாற்றியதனால் ஏராளமானோர் வழியில் இறந்தனர். எனவே அவர் தலைநகரை மாற்றிய பிறகு, தான் ஒரு பெரிய தவறு செய்து விட்டதாக உணர்ந்து தலைநகரையும், மக்களையும் டெல்லி திரும்புமாறு உத்தரவிட்டார். டெல்லிக்கு மிகச் சிலரே உயிரோடு திரும்பினர்.

முகமதுவின் மற்றொரு சீர்திருத்தம் என்னவெனில் வெள்ளி நாணயங்களுக்கு பதிலாக அதே முகப்பு கொண்ட செம்பு நாணயங்களை வெளியிட்டார். ஆனால் அரசாங்கதிற்கு மட்டுமே செம்பு நாணயங்களை அச்சிடுவதற்கு அதிகாரம் உண்டு என்ற உத்தரவை அவர் பிறப்பிக்கவில்லை, இதன் விளைவாக மக்கள் சுயமாக செம்பு நாணயங்களை அச்சிடத் தொடங்கினர். செம்பு நாணயங்களுக்கான தேவையை அரசாங்கத்தால் பூர்த்தி செய்ய முடியவில்லை.

முகமது விரைவில் தன் முட்டாள்தனத்தை உணர்ந்து பழைய நாணயத்தை பயன்படுத்தும்படி உத்தரவிட்டார். இச்சோதனையால்

NOT TO BE REPUBLISHED

மாநிலத்தின் நிதி நிலைமை பெரும் பாதிக்கப்பட்டு, தோல்வி அடைந்தது.

முகமது ஆட்சியினால் அதிருப்தியடைந்த மக்கள் கிளர்ச்சி செய்தனர். சிந்து மாகாணத்தில் ஒரு கிளர்ச்சியை அடக்கும் முயற்சியின் போது, அவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தர்.

அடிமை வம்சம், கில்ஜி வம்சம், துக்ளக் ஆட்சிக்குப்பிறகு சயீத் மற்றும் லோடி வம்சங்கள் டெல்லியில் குறுகிய காலத்திற்கு ஆட்சி செய்தனர். கடைசி லோடி அரசர் இப்பராஹிம், பானிபட் போரில் முகலாய ஆட்சிக்கு அடித்தளமிட்ட பாபரால் தோற்கடிக்கப்பட்டார்.

டெல்லி சுல்தானின் கொடைகள்:

நிர்வாகம்: சுல்தான் ஆதிக்கத்தின் கீழ் இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த போதிலும், நிர்வாகம் துருக்கிய வழியில் செயல்பட்டது. ராணுவம் மாநிலத்தின் முதுகெலும்பாக அமைந்தது. அனைத்து சுல்தான்களும் சிறந்தவர்கள் என்றும், அதிலும் பல்பன் என்ற சுல்தான் தான் அல்லாவின் பிரதிநிதி என்றும் அதனால் அல்லாவுக்கு மட்டுமே தான் பொறுப்பு ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவித்தார். இருப்பினும் சுல்தான்கள் உள்ளூர் ஆட்சியிளார்களின் கிளர்ச்சிகளை அடிக்கடி எதிர்கொள்ள வேண்டியிருந்தது மற்றும் அவர்களுக்கு தங்கள் அதிகாரத்தை இழந்துவிட நேரிடும் என்ற அச்சம் இருந்தது.

பொருளாதாரம்: நிலவருவாய் சுமை பெருமளவு விவசாயிகள் மீது விழுந்தது. முகமது பின் துக்ளக் இரக்கமின்றி வரியை அதிகபடுத்தினார். இதனால் விவசாயிகள் எங்கும் கிளர்ச்சிகள் செய்தனர்.

நெசவு, மக்களின் முக்கிய தொழிலாக இருந்தது, நகரங்கள் எங்கும் கட்டுமானப்பணி தீவிரமாக நடைபெற்றதால் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது.

சுல்தான்கள் முக்கியமாக இராணுவத்திற்காக குதிரைகளை இறக்குமதி செய்தனர். அதே நேரத்தில் சுல்தானின் அடிமைகளாக இருந்த ஏராளமான இந்தியர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டனர்.

அலாவுதின் கில்ஜி சந்தையில் விற்கப்பட்ட அடிமைகளின் விலையை நிர்ணயித்தார் அடிமைகளை சந்தையில் வெளிப்படையாக விற்றனர். சுல்தானின் கீழ் இருந்த அடிமைகளின் எண்ணிக்கை உண்மையிலேயே அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தன. அலாவுதின் கில்ஜி 50,000 அடிமைகளை கொண்டிருந்தார். ஃபிருஸ் ஷா துக்ளக் 1,80,000 அடிமைகளை கொண்டிருந்தார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

கட்டிடக்கலை மற்றும் இலக்கியம் : டெல்லி சுல்தான்களால் கட்டப்பட்ட முக்கிய கட்டமைப்புகளில் புகழ்பெற்றது குதுப்மினார் (71மீ உயரம்) ஆகும். அலை தர்வாசா மற்றும் குவாத் - உல் - இஸ்லாம் மசூதி மற்றும் சிரி கோட்டை இவை அனைத்தும் டெல்லியில் உள்ளன.

அமீர் குஸ்ரு

சுல்தான் காலத்தில் உருது மொழி உருவானது. அமிர் குஸ்ரு மற்றும் அமீர் ஹசன் அந்த காலத்தின் சிறந்த பாரசீக கவிஞர்கள். அமீர் குஸ்ரூ ஒரு சிறந்த இசைக்கலைஞர் மற்றும் சிதார் மற்றும் பிற இசைக்கருவிகளை உருவாக்கினார். கவிஞர் ஜெய்சி உருதுவில் பத்மாவத் என்ற சூஃபி காவியத்தை எழுதினார்.


கபீர் தாஸ்

மீராபாய்

NOT TO BE REPUBLISHED

ராமானந்தா, கபீர்தாஸ், ராய்தாஸ் மற்றும் மீராபாய் ஆகியவர்கள் இக்காலத்தை சார்ந்தவர்கள் ஆவர்.

காலவரிசை (பொ.ச.) :

சிந்து மீதான அரபு படையெடுப்பு	-	பொ.ச.712
முகமது கஜினி படையெடுப்பு	-	பொ.ச. 1000 - 1026
தாரெய்ன் போர் (முகமது கோரி மற்றும் பிருதிவிராஜ் இடையில் நடந்தது	-	பொ.ச. 1191 - 1192
டெல்லி சுல்தான் ஆட்சி	-	பொ.ச. 1206 - 1526
குதுப்புதின் ஐபெக்	-	பொ.ச. 1206 - 1210
ரஜியா சுல்தான்	-	பொ.ச. 1236 - 1240
அலாவுதின் கில்ஜி	-	பொ.ச. 1296 - 1316
முகமது பின் துக்ளக்	-	பொ.ச. 1325 - 1351
முகலாயர்களின் பானிபட் போர் துவக்கம்	-	பொ.ச. 1526

புதிய சொல்

மினார் - உயரமான தூண் கோபுரம்

பயிற்சிகள்

I. பொருத்தமான சொற்களை பயன்படுத்தி காலி இடங்களை பூர்த்தி செய்க :

1. முதல் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் சௌஹானிடம் ____________ தோற்றான்.
2. அலாவுதின் கில்ஜி தில்லியில் ____________ என்ற தலைநகரை உருவாக்கினான்.
3. இப்ராஹீம் லூதியை முதல் பானிபட் போரில் தோற்கடித்தவன் ____________.
4. அடிமை வம்சத்தை நிருவியவர் ____________.

NOT TO BE REPUBLISHED @KTBS

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி :

5. முகமது கோரி இரண்டாம் தரெய்ன் போரில் யாரை எதிர்த்து வெற்றி அடைந்தான்?
6. குதுப்மினாரை கட்டியவன் யார்?
7. தில்லி சுல்தான் காலத்தில் ஆட்சி செய்த பெண் யார்?
8. தென்னிந்தியாவின் மேல் படையெடுத்த அலாவுதின் கில்ஜியின் படைத்தலைவன் யார்?
9. முகமது பின் துக்ளக் தலைநகரை எங்கு மாற்றினான்?
10. ''தான் அல்லாவின் பிரதிநிதி'' என்று கூறிய தில்லி சுல்தான் யார்?

III. குழுவில் கலந்துரையாடி பதிலளி :

11. முகமது கஜினியின் படையெடுப்பின் விளைவுகள் யாவை?
12. குதுப்தின் ஐபக்கின் சாதனைகளை கூறு.
13. அலாவுதின் கில்ஜியின் அணுகுமுறைகள் மற்றும் விளைவுகளை கூறு.
14. முகமது துக்ளக்கின் கொள்கைகள் ஏன் தோல்வியடைந்தன?
15. தில்லி சுல்தான்களின் காலத்தில் நாட்டின் சமூகம் மற்றும் பொருளாதார நிலை எப்படியிருந்தது?
16. கட்டிடக்கலை மற்றும் இலக்கியத் துறைகளுக்கு தில்லி சுல்தான்கள் அளித்த கொடைகள் யாவை?

IV. **கீழ்க்கண்ட 'எ' அட்டவணை மற்றும் 'பி' அட்டவணையின் விவரங்களுடன் பொருத்தி எழுதுக.**

எ	பி
1. ஜைசி	அ. அலை தர்வாஜா
2. தௌலதாபாத்	ஆ. சிதார்
3. அலாவுதின் கில்ஜி	இ. பத்மாவத்
4. அமீர் குஸ்ரு	ஈ. தேவகிரி

செயல்பாடுகள் :

- தில்லி சுல்தான்களின் காலத்தில் உள்ள கட்டிட கலைகளின் படங்களை விவரங்களுடன் சேகரிக்கவும்.
- வரைபடத்தில் தில்லி சுல்தான் காலத்தின் வரலாற்று புகழ்பெற்ற இடங்களை குறிப்பிடு.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பாடம்
14

விஜயநகரப் பேரரசு மற்றும் பாமினி இராஜ்ஜியம்

E3L2P8

விஜயநகரப் பேரரசு

பாட அறிமுகம்

தில்லி சுல்தான்களின் இராணுவ பொதுப்பரப்புரைகளினால் தென் இந்தியாவின் பேரரசுகளான சேவுனா (மகாராஷ்ட்ரம்) ஹொய்சளா (கருநாடகம்), காகதியா (தெலுங்கானா) மற்றும் பாண்டியா (தமிழ்நாடு) வீழ்ச்சியடைந்தன. ஒரு வலிமையான அரசியல் அதிகாரம் இல்லாததால் கலாச்சாரம் மற்றும் சமூக வாழ்க்கை ஏற்ற இறக்கம் கண்டது. இத்தகைய இக்கட்டான காலக்கட்டத்தில் தான் விஜயநகரப் பேரரசு மேலெழுந்தது. இது தென்னிந்தியாவில் இந்து சமயத்தையும் கலாச்சாரத்தையும் பாதுகாத்து, ஊக்குவித்தது மற்றும் மூன்று நூற்றாண்டுகள் (பொ.ச.1336- பொ.ச. 1646) வரை மிகுந்த புகழுடன் செழிப்படைந்தது.

இவ்வத்தியாயத்தில் புகழ் பெற்ற பேரரசர்களின் பெரும் சாதனைகளும், ரக்கஸா - தங்கடி போர் (பொ.ச.1565) இப்பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளது. இதோடு கூட இலக்கியம் மற்றும் கலைக்கு இப்பேரரசின் கொடைகளும் விளக்கப்பட்டுள்ளன.

விஜயநகரப் பேரரசு (பொ.ச.1336) நிறுவப்பட்ட பிறகு பாமினி பேரரசு நிறுவப்பட்டது. (பொ.ச.1337) கிருஷ்ணா நதி இவ்விரு பேரரசுகளின் எல்லையாக இருந்தது. பாமினி பேரரசு வடக்கிலும், விஜயநகரப் பேரரசு தெற்கிலும் இருந்தது. வடக்கிலுள்ள கிருஷ்ணா நதி மற்றும் தெற்கிலுள்ள துங்கபத்ரா நதிகளுக்கிடையே இருக்கும். செழுமையான ஆற்றிடைப்பகுதி ராய்ச்சூர் ஆகும். இரு பேரரசுகளும். இந்த பகுதிகளை தன்வசப்படுத்திக் கொள்ள போராடின. இக்காலக்கட்டத்தில், பாமினி பேரரசின் சுல்தான்கள் தங்களுக்குள்ளேயே அதிகாரத்திற்காகப் போராடினர். இதன் விளைவாக, பேரரசு ஐந்து ஷாஹி பேரரசுகளாக (பொ.ச.1489) பிரிந்தன. இவர்களில் விஜயபூரின் அதில்ஷா புகழ் பெற்றவராவார்.

பாமினி சுல்தானாகிய ஃபிருஜ் ஷா மற்றும் அவருடைய புகழ்பெற்ற மந்திரியான முகமது கவான் இவர்களுடைய சாதனைகள் விளக்கப்பட்டுள்ளன. பாமினி பேரரசர் மற்றும் ஆதில் ஷாஹீக்களின் குறிப்பிடத்தக்க கொடைகளும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

© KTBS NOT TO BE REPUBLISHED

திறன்கள் :

1. விஜயநகரப் பேரரசர்களின் சாதனைகளைப் புரிந்துக் கொள்ளுதல்.
2. அக்காலத்திய இலக்கியப் படைப்புகள், இசை, கட்டிடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் சிறப்பை அறிந்து பெருமிதம் கொள்ளுதல் மற்றும் அதைப் பாதுகாப்பதில் உதவுதல்.
3. சமயத்தையும், கலாச்சாரத்தையும் பாதுகாப்பதில் விஜயநகரப் பேரரசர்களின் குறிப்பிடத்தக்க பணிகளை அறிந்து பெருமிதம் கொள்ளுதல்.
4. இந்தப் பேரரசுகளுக்குத் தொடர்பான இடங்களை நிலவரைப் படத்தில் குறித்தல்.
5. ஃபிரூஜ் ஷா மற்றும் முகமது கவானின் கொடைகளைப் புரிந்துக் கொள்ளுதல்.
6. இலக்கியம், கலை மற்றும் கட்டடக் கலைக்கு பாமினி மற்றும் விஜயபூர் சுல்தான்களின் சிறந்த கொடைகளைப் பாராட்டுதல்.
7. பாமினி பேரரசுகளின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களை நிலவரைப் படத்தில் குறிப்பிடுதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS



விஜயநகரப் பேரரசின் அடையாளச் சின்னம் வராஹா (பன்றி)

விஜயநகரப் பேரரசின் வரைப்படத்தைப் பார்க்க. அது மிகப் பரந்த பேரரசு, அல்லவா? உலகத்தின் அக்காலத்து மிகச் சிறப்பான பேரரசுகளில் இதுவும் ஒன்று.

தில்லி சுல்தான்களின் இராணுவ படையெடுப்பின் விளைவாக தென்னிந்திய நாடுகள் அழிந்தன. இங்குள்ள சமயம், பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கை வீழ்ச்சியடைந்தது. இத்தகைய இக்கட்டான காலகட்டத்தில் விஜயநகரப் பேரரசு உருவாகி இந்து சமயம் மற்றும் பண்பாடுகளை ஊக்குவித்தது. சமய சமத்துவத்தால் சுமார் மூன்று நூற்றாண்டுகள் காலம் ஆட்சி செய்தது. விஜய நகர மாவாட்டத்தின் ஹம்பி விஜயநகரப் பேரரசின் தலைநகரமானது. இது துங்கபத்ரா ஆற்றின் தென்கரையில் பொ.ச.1336ம் ஆண்டு நிறுவப்பட்டது.

NOT TO BE REPUBLISHED @KTBS

ஹரிஹரா, புக்கா

சங்கமா அவர்களின் மகன்களான ஹரிஹராவும் புக்காவும் துங்கபத்ராவின் தென் நதிக்கரைப் பகுதியில் பேரரசை நிறுவினர்.

ஹரிஹரா, புக்கா, கம்பனா, மாரப்பா மற்றும் முத்தப்பா சங்கமாவின் சகோதரர்கள் சங்கமா, சலுவா, துளுவா மற்றும் அரவீடு இராஜ்ஜியங்களின் அரசர்களால் இப்பேரரசு ஆளப்பட்டது. காட்டுப் பன்றி (வரஹா) விஜயநகரப் பேரரசின் அடையாளச் சின்னமாக இருந்தது. அவர்களுடைய குல தெய்வம் விருபாக்ஷா கடவுள் ஆகும். ஹிந்துராயா சூரத்ரானா பேரரசர்களுக்கு வழங்கப்பட்ட பட்டப்பெயர்களாகும்.

ஹரிஹராவும் புக்காவும் விஜயநகரப் பேரரசின் முதல் இரு அரசர் களாவர். ஹரிஹரா, ஹம்பியில் புதிய தலைநகரத்தை அமைக்கத் தொடங்கினார்.

ஹரிஹராவின் ஆட்சிக்காலத்தில் பாமினி பேரரசு நிறுவப்பட்டது. அன்றிலிருந்து, விஜயநகர அரசர்கள் மற்றும் பாமினி சுல்தான்களுக்கு இடையே அவ்வப்பொழுது போர்கள் நடந்தன.

பிரௌடதேவராயா (இரண்டாம் தேவராயா பொ.ச.1424-1446)

சங்கம பேரரசின் நன்கறியப்பட்ட அரசரான பிரௌட தேவராயரின் ஆட்சி குறிப்பிடதக்க காலக்கட்டமாகத் திகழ்ந்தது. பேரரசின் புகழ் எவ்விடத்திலும் பரவியது. உள்ளூர் அமைதியும், செல்வாக்கும் நிலைத்தோங்கியது. தொழிலும் வணிகமும் தழைத்தன.

பிரௌட தேவராயா, எல்லைப் பகுதி தலைவர்களின் கிளர்ச்சி களை முடக்கினார். அவர் சுல்தான்களை எதிர்த்து போராடினார் மற்றும் பேரரசை விரிவாக்கினார். தமது குதிரைப்படைக்கு இஸ்லாமியர்களை நியமித்தார். பாரசீக தூதுவரான அப்துல் ரஜாக் ‘‘தேவராயாவைப் போல ஒரு அரசர் இந்தியா முழுவதிலும் இல்லை’’ என்று குறிப்பிட்டுள்ளார். இவரின் படையில் பல இலட்சக்கணக்கான படை வீரர்கள் இருந்தனர் என்று மேலும் கூறியுள்ளார்.

2ஆம் தேவராயா ஒரு திறமையான நிர்வாகி, துணிச்சலான போர்வீரர் மற்றும் அறிஞராவார். அவர் ஹம்பியில் ஹஜாரா இராமசாமியின் எழில்மிகு கோயிலைக் கட்டுவித்தார். தேவராயரின் சமயக் கொள்கை சர்வ-தர்ம-சம்பவா ஆகும். தலைநகரத்தில் ஒரு மசூதியை அமைத்தார். அவருடைய ஆட்சிக்காலத்தில் சமண மற்றும் வைஷ்ணவ கோயில்களும் அமைக்கப்பட்டன. வீரசைவ சமயப் பிரிவு புகழ்பெற்றது. கன்னடத்திலும் சமஸ்கிருதத்திலும் ஏராளமாக இலக்கியம் உருவானது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

சால்வ வம்சம் (பொ.ச.1485-1505)

பொ.ச.1485 ம் ஆண்டு அதிகாரத்திற்கு வந்த சால்வ நரசிம்மன் 3ம் விருப்பாக்ஷனிடமிருந்து தலைநகரை கைப்பற்றி 6 ஆண்டு காலம் ஆட்சி செய்தான்.

துளுவ வம்சம் (பொ.ச.1505-1567)

சால்வ நரசிம்மனின் மகன்கள் அனாதை என்ற காரணத்தினால் போர்வீரனான துளுவ நரசிம்ம நாயக்கனால் சிறைபிடிக்கப்பட்டனர் இவன் பொ.ச.1509ம் ஆண்டு இறந்த பிறகு அவனுடைய சகோதரன் கிருஷ்ண தேவராயன் ஆட்சிக்கு வந்தான்.

கிருஷ்ணதேவராயர் (பொ.ச. 1509 - 1529)

துளுவப் பேரரசின் அரசரான கிருஷ்ண தேவராயார் ஒரு மேன்மையான அரசரும் வல்லமையான வீரருமாவார். அவருடைய ஆட்சிக்காலத்தில் பேரரசின் எல்லைகள் வடக்கே கிருஷ்ணா நதி வரையிலும், மற்ற அணைத்த கடற்கரைப் பகுதி வரையிலும் பரந்திருந்தது.

கிருஷ்ண தேவராயர் மனைவிகளுடன் இருக்கும் வெண்கல சிற்பம்

சாதனைகள் : கிருஷ்ண தேவராயர் திறமையான நிர்வாகியாவார். பேரரசின் வருவாயில் நான்கில் ஒரு பங்கை அறச் செயல்களுக்கும் சமுதாய நலனுக்காகவும் செலவு செய்தார். வேளாண்மையும், வணிகமும் அவருடைய ஆட்சியின் கீழ் தழைத்தது. பண்டங்கள் மலிவாக இருந்தன.

கிருஷ்ண தேவராயர் சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் தேர்ந்த அறிஞராக இருந்தார். அவர் 'அமுக்த மல்யதா' என்ற நூலைத் தெலுங்கிலும் 'ஜாம்பவதி கல்யாணா' என்ற நாடகத்தை சமஸ்கிருதத்திலும் இயற்றினார். அவருடைய பட்டப்பெயர் 'கன்னட - ராஜ்ய - ரமாரமணா'.

NOT TO BE REPUBLISHED @KTBS

இராமராயா

கிருஷ்ணதேவராயரின் மறைவிற்குப் பிறகு விஜயநகரப் பேரரசின் மேன்மையான ஆட்சி நலிவடைந்தது. ஆயினும் பேரரசு தனது பெருமையை படைப் பெருந்தலைவர் மற்றும் திறைமையான நிர்வாகியுமான இராமராயர் என்பவரால் மீளப்பெற்றது. இவன் திறமையான வீரனும் நல்ல நிர்வாகியும் ஆவான்.

ரக்கஸ - தங்கடி போர்

காரணங்கள் : ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு, பாமினி பேரரசு நலிவடைந்தது மற்றும் ஐந்து இராஜ்ஜியங்களாகப் பிரிந்தன. இப்பேரரசுகளின் சுல்தான்கள் தமது சண்டைகளில் இராமராயரின் தலையீட்டை நாடினர். இராமராயர், இப்பேரரசுகளின் சுல்தான்களிடையே இருந்த ஒற்றுமையின்மைப் பயன்படுத்திக் கொண்டார் மற்றும் கிருஷ்ணா நதியின் வடப்பகுதி வரை தனது இராஜ்ஜியத்தை விரிவாக்கினார். இது சுல்தான்களை இராமராயரோடு போர் புரியத் தூண்டியது. விஜயநகரத்தின் வளமையைக் கண்டு சுல்தான்கள் பொறாமையடைந்தனர். அது வரையில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த சுல்தான்கள் தம்முடைய அரசியல் வேற்றுமைகளை விடுத்து இணைந்தனர். விஜயநகரித்தின் மீது போர் தொடுத்தனர். இதுவே 'ராக்கஸ தங்கடி' போர் ஆகும். தென் இந்தியாவின் வரலாற்றில் இது மிகுந்த சக்தி வாய்ந்த போராகும். கிருஷ்ணா நதிக்கரையில் இரக்கசகி மற்றும் தங்கடகி கிராமங்களுக்கிடையே போர்க்களம் இருந்தது.

எண்பது வயதானவராக இருந்தாலும், இராமராயர் படையை வழிநடத்தி தனது எதிரிகளை தைரியமாக எதிர்கொண்டார். முதல் கட்டப் போரில் விஜயநகரம் வென்றது. பிறகு, திடீரென எதிர் திசையில் இருந்த பீரங்கிப் படை சரமாரியாக தாக்கி விஜயநகரப் படையை சிதறடித்தது. அதுமட்டுமல்லாமல், இராமராயரின் இஸ்லாமிய படைத்தலைவர்கள் அவரை ஏமாற்றி படைவீரர்களுடன் எதிரிகளோடு இணைந்தனர். இராமராயர் கொல்லப்பட்டார். அவருடைய படை வீரர்கள் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடினர்.

இராமராயரின் இளைய சகோதரரான திருமலா, தலைநகரத்திற்கு விரைந்து சென்று, அங்கிருந்த திரளான அரச செல்வத்தை யானைகளின் மீது சுமத்தி ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பெனுகொண்டாவிற்கு தப்பிச் சென்றார். தலைநகரத்தைப் பாதுகாக்க யாருமில்லாததால் அது எதிரிகளின் கை வசமானது. சுல்தான்களின் படைகள் விஜயநகரத்தின் செல்வத்தை கொள்ளையடித்தனர். பிறகு பொ.ச.1646 வரை, பெனுகொண்டா. சந்திரகிரி மற்றும் வேலூர் வரை அரவீடு பேரரசு ஆண்டது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

விளைவுகள் : விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு தென் இந்தியாவில் பல முக்கியமான அரசியல் மாற்றங்கள் நடைபெற்றன. பேரரசின் வடப்பகுதிகளான விஜயபூர் மற்றும் கொல்கோத்தா இராஜ்ஜியங்களின் பாகங்களாயின. கருநாடகத்தில், கௌதி, மைசூர் மற்றும் சித்ரதுர்காவின் குடிமரபுத் தலைவர்கள் சுதந்திரமடைந்தனர்.

வெளிநாட்டுப் பயணிகள் கண்ட தலைநகரத்தின் பெருமை.

தலைநகர் ஹம்பிக்கு வருகை தந்த பல வெளிநாட்டுப் பயணிகள், அதன் மகத்துவத்தையும் செல்வச் செழிப்பையும் கண்டு வியப்படைந்து அதை மனதார பாராட்டினர்.

* போர்ச்சுகீசியப் பயணியான டொமிங்கோ பாயஸ், தலைநகரத்தைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்; ''இத்தகைய திரளான செல்வ வளங்களைப் பெற்றுள்ள இந்நகரத்தைப் போல பூமியில் வேறொரு நகரம் இல்லை''. பலவகையான முத்துக்கள், வைரங்கள், மரகதம், மாணிக்கங்கள், நீலக்கற்கள், விலையுயர்ந்த துணி வகைகள் போன்றவை இங்கு எளிதாக கிடைக்கப் பெற்றது என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

* தலைநகரத்திற்கு வருகை தந்த அப்துல் ரஜாக் என்ற பாரசீக (ஈரான்) தூதர் தேவராயரின் மேன்மையான இயல்பினைக் கண்டு பாராட்டியுள்ளார். விஜயநகரத்தைக் குறித்து அவர் வியந்து கூறியதாவது. ''விஜய நகரத்தைத் தவிர இன்னொரு மேன்மையான நகரத்தை எந்த கண்களும் காணவில்லை, காதுகளும் கேட்கவில்லை''. என்று கூறியுள்ளார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

சமுதாயம், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம்

சமுதாயம் : கிராம சபையில் அனைத்து சாதியினருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. நகரங்களில், ஹஞ்சமான் என்ற இஸ்லாமிய அமைப்பு இருந்தது. அதனுடைய பிரதிநிதிகளுக்கு நகர சபையில் உயர்ந்த இடம் கொடுக்கப் பட்டது.

அரண்மனையின் பெண்கள் குடியிருப்பு இல்லங்களின் கணக்குகளை எழுத, காவல் காக்க, அரசனுக்கும் அரசிக்கும் பணிவிடை செய்ய முதலியவற்றிற்கு பெண்கள் நியமிக்கப்பட்டனர். பொது நிகழ்ச்சி களை வழங்கி பெண் மல்யுத்த வீரர்கள்/வீராங்கனைகள் செயல்திறத்தை வெளிப்படுத்தினர். தலைநகரத்தின் மஹாநவமி மேட்டின் மீது புகழ் பெற்ற நவராத்திரி பண்டிகை ஆடம்பரத்துடன் கொண்டாடப்பட்டது.

பொருளாதாரம் : வேளாண்மை மக்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. அயல்நாட்டு வணிகத்திற்கு விஜயநகரம் மையமாக இருந்தது. உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வணிகர்கள் வந்தனர். கடைகளில் முத்துகளும், வைரங்களும் குவியலாக விற்கப்பட்டன என்று அயல்நாட்டுப் பயணிகள் கூறியுள்ளனர். பேரரசின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப் பகுதிகளில் இருந்த துறைமுகங்களில் இருந்து சரக்குகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்டன.

சமயம் : அனைத்து சமயங்களும் பேரரசிடமிருந்து கொடைகளைப் பெற்றன. குடிமக்கள் அவர்களுக்குப் பிடித்த சமயத்தைப் எந்த தடையுமின்றி பின்பற்ற அரசர்கள் சுதந்திரம் கொடுத்தனர், இஸ்லாமியர்களுக்கு மசூதிகள் அமைக்கப்பட்டன, அவர்கள் விஜயநகரத்தின் இராணுவத்திலும் நியமிக்கப்பட்டனர், விஜயநகரப் பேரரசர்கள் போர்ச்சுகீசியர்களுடன் நல்ல வணிகத் தொடர்பைப் பெற்றிருந்தனர். அவர்கள் கிறித்துவத்தையும் ஆதரித்தனர்.

இலக்கியம் : விஜயநகர காலத்தில், சமஸ்கிருதம், கன்னடம் மற்றும் தெலுங்கு இலக்கியங்கள் தழைத்தன. சிறந்த கன்னட கவிஞர்களான குமார வியாசர், சாமராசர் மற்றும் இரத்னாகர வரணி இக்காலத்திய கவிஞர்களாவர். விஜயநகர காலம் தெலுங்கு இலக்கியத்தின் ''பொற்காலமாக'' இருந்தது.

குமாரவியாசர் (நாரணப்பா) வலுவான உணர்வைக் கொண்ட கவிஞராவார். அவர் ''கர்நாடகா பாரத கதா மஞ்சரியை'' இயற்றினார். சாமராசரின் ''பிரபுலிங்கலீலா'' அல்லம்பிரபுவின் வாழக்கை வரலாறு ஆகும். அது ஒரு குறிப்பிடத்தக்க படைப்பாகும். ''பரதேஷ வைபவா'' இரத்னாகர வருணியின் சிறப்பான படைப்பாகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

இசை : விஜயநகரப் பேரரசர்கள் நடனம், கலை மற்றும் இசையை ஆதரித்தனர். அக்காலத்திலிருந்தே, தென்னிந்திய இசை அமைப்பு கர்னாடிக் இசை என்று அழைக்கப்பட்டது. அக்காலத்து புனிதர்கள் பக்திப் மார்க்கத்தை போதிக்க இசையைப் பயன்படுத்தினர். இம்மார்க்கம் தாச பன்தா என்று அழைக்கப் பெற்றது. தாசர்களில், புரந்தரதாசர் மற்றும் கனகதாசர் புகழ் பெற்றவர்களாவர்.

பல இலட்சக்கணக்கான பாடல்களை இயற்றிய புரந்தரதாசர், ''கர்னாடிக் இசையின் தந்தை'' (கருநாடக சங்கீத பிதாமஹா) என்று புகழ் பெற்றவர். கனகதாசர் ஒரு சாதாரண பின்னணியிலிருந்து வந்தவர். மோகன தரங்கினி, இராமதன்ய சரித்ரே, நலசரித்ரே, ஹரிபக்திசாரா இவருடைய முக்கிய படைப்புகளாகும்.

செயல்பாடு : கருநாடகத்தில் பக்தி மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்ய ஹரிதாசர்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து ஒரு பக்க அளவில் ஒரு கட்டுரையை எழுதுக.

கட்டடக்கலை: விஜயநகர காலத்தில், கட்டடங்களை அமைப்பதற்கு கருங்கற்களைப் (கிரானைட்) பயன்படுத்தினர். தென் இந்தியாவில் அப்பொழுது இருந்த கோயில்களுக்கு உயர்ந்த கோபுரங்களும் (ராய-கோபுரங்கள்) மற்றும் அழகான கல்யாண மண்டபங்களும் அமைக்கப்பட்டன. அத்தகைய நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் அமைக்கப்பட்டதால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாயப்பு கிடைத்தது.

ஹம்பி : ஹம்பியில் பல அழகான கோயில்கள் இருந்தன. அவற்றில் ஹஜாரா, விஜய விட்டலசுவாமி கோயில், கிருஷ்ணசுவாமி கோயில் மற்றும் அச்யுதராயா கோயில் ஆகும். விட்டலா சுவாமி கோயிலின் குட்டையான தூண்களைத் தட்டினால் இசையின் ஏழு சுவரங்கள் கேட்கப்படுவது வியக்கத்தக்கதாகும்.

KTBS REPUBLISHED

ஹஜாரா இராமசுவாமி கோயில், ஹம்பி

- சிருங்கேரியின் வித்யாசங்கரர் கோயில், ஹஜாரா இராமசுவாமி கோயிலின் ஆயிரந் தூண் கோயில், மற்றும் மூடபிதிரியின் ஆயிரந்தூண் பசதி (திருபுவன திலக சூடாமணி) விஜயநகரக்கால கோயில்களாகும்.

வித்யாசங்கரர் கோயில், சிருங்கேரி

• ஒற்றைக்கல் சிற்பங்கள்: இக்காலக்கட்டத்தில் தான், பிரம்மாண்ட ஒற்றைக் கல் சிற்பங்களை செதுக்கி உருவாக்கும் பாணி நடைமுறைக்கு வந்தது. சாசிவேகாலு கணேஷா, கடலேகாளு கணேஷா, மற்றும் இலட்சுமி நரசிம்மா ஹம்பியின் ஒற்றைக் கல் சிற்பங்களாகும். விட்டல சுவாமி கோயிலுக்கு முன்பாக இருக்கும் ஒற்றைக் கல் தேர் மிகவும் அழகுள்ளது. இது கருடனின் கோயிலாகும். இது கார்கலா மற்றும் வேணூரிலுள்ள பாகுபலியின் ஒற்றைக்கல் சிற்பங்கள் அக்காலத்திய சிற்பக்கலைக்கு சான்றுகளாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

சாசிவேகாலு கணேஷா, ஹம்பி

இலட்சுமி நரசிம்மா, ஹம்பி

கற்தேர், ஹம்பி

பாமினி இராஜ்ஜியம்

விஜயநகரப் பேரரசின் சமகாலத்தவரான பாமினி பேரரசு பொ.ச.1347 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கிருஷ்னா நதி நாட்டின் தெற்கு எல்லையாகும். ஆரம்பத்தில் கலபுரகி, பிறகு பீதர் அதன் தலைநகரமாகும். இதனை நிறுவியவர் அலாவுதின் ஹசன் கங்கு பகுமன் ஷா.

பீதர் நகரம் ஒரு வரலாற்று இடம் மற்றும் அது கருநாடகத்தின் வடக்குப் பகுதியில் உள்ளது. ஒரு நூற்றாண்டு வரை பாமினி சுல்தான்களின் தலைநகரமாக விளங்கியது. பீதரின் பிரம்மாண்ட கோட்டையை கவனிக்கவும்.



கோட்டை, பீதர்

NOT TO BE REPUBLISHED

பாமினி பேரரசின் நிலப்படத்தை கவனிக்கவும். தற்போதைய கருநாடகம், மகாராஷ்டிரம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளை இது உள்ளடக்கியது. பாமினி சாம்ராஜ்ஜியமும் விஜயநகரப் பேரரசும் அண்டை நாடுகளாக இருந்தன, அவ்வப்போது, ஒருவரோடு ஒருவர் போர்களில் ஈடுபட்டனர்.

ஃபிருஜ் ஷா

ஃபிருஜ் ஷா பாமினி பேரரசின் சிறந்த அரசராவார். அவர் நேர்மையானவர், தயாள குணம் படைத்தவர், தெய்வ பக்தி உடையவர்.

ஃபிருஜ் ஷா ஒரு எழுத்தாளர், பன்மொழியாளர். அவர் ஜியோமிதி மற்றும் சமய நூல்களில் தேர்ந்தவர். அவர் மகாராஷ்டிரத்தின் தௌலதாபாத்தில் ஒரு வானியல் ஆய்வகத்தை நிறுவினார். அவர் கலபுரகி தலைநகரத்தின் அழகை மேம்படுத்தினார் மற்றும் பீமா ஆற்றக்கரையில் ஃபெரோஜாபாத் என்ற புதிய நகரத்தை நிறுவினார். அவர் தம்மைக் காண வந்த சுஃபி புனிதரான பந்தே நவாஜ்ஜுக்கு பல கிராமங்களைப் பரிசாகக் கொடுத்தார். அவர் துறைமுகங்களை மேம்படுத்தினார். அது அயல்நாட்டு வணிகத்திற்கு உத்வேகம் கொடுத்தது.



@KTBS NOT TO BE REPUBLISHED

முகமது கவான்

முகமது கவான், மூன்றாம் முகமதின் முதல் மந்திரியாக இருந்தார். அவர் பாமினி சுல்தான்களை விட அதிக சிறப்பு பெற்றவர். பாரசீகப் பின்புலத்திலிருந்து வந்த அவர் பிரதமராக தன்னலம் கருதாமல் பணி செய்தார்.

சாதனைகள் :

* போரில் நிபுணத்துவம் பெற்ற கவான், தன்னுடைய வெற்றிகளினால் பேரரசை விரிவாக்கினார்.
* இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் ஒரு நல்ல நிர்வாகத்தை அவர் வழங்கினார்.
* வரி வசூலிக்கும் முறையை மேம்படுத்தினார், தபால் முறையை திறமை வாய்ந்ததாக மாற்றினார்.
* மண் வளம் மற்றும் நீர்ப்பாசன வசதிகளின் அடிப்படையில் நிலவரியை நிலைப்படுத்தினார்.
* மிகுந்த கடுமையான வரிகளை ஒழித்தார்.
* அறிஞரான முகமது கவான், பீதரில் ஒரு மதராசாவை நிறுவினார். அது இஸ்லாமிய நம்பிக்கை மற்றும் சட்டப்படிப்பை ஊக்குவித்தது.
* வானியல், கணிதம், வரலாறு முதலிய படிப்புகளும் இங்கு வழங்கப்பட்டன.
* மாணவர்களுக்கு கல்வி மற்றும் தங்குமிடம் இலவசமாகக் கொடுக்கப்பட்டது.
* மதராசா நூலகத்தில் சுமார் 3000 கையெழுத்து பிரதிகள் இருந்தன.

சுறுக்கமாக கூறினால், முகமது கவான் பாமினி பேரரசின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பெரும் பங்களித்தார். ஆயினும், பேரரசின் மற்ற தலைவர்கள் அவருடைய சாதனையைக் கண்டு பொறாமைப்பட்டனர். அவர்கள் அவருக்கு எதிராக சதி செய்து கொன்றனர். அவருடைய கல்லறையின் மீது ‘அப்பாவி கவான் கொல்லப்பட்டார்’ என்று செதுக்கப்பட்டுள்ளது.

அவனுடைய மறைவிற்குப் பிறகு அதிகாரத்திற்கு உள்நாட்டு சண்டை இருந்தது. இதன் விளைவாக பேரரசு ஐந்து புதிய பேரரசுகளாக பிரிக்கப்பட்டது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

இவ்வைந்து பேரரசுகளாவன:

- பிஜாப்பூரின் ஆதில் ஷாஹி,
- பீதரின் பரீத் ஷாஹி,
- கொல்கொந்தாவின் குதுப் ஷாஹி,
- அகமதா நகரின் நிஜாம் ஹாஹி,
- பீரரின் இம்மத் ஷாஹி.

இவற்றில் முதலிரண்டு பேரரசுகள் கருநாடகத்தை தலைநகரங்களாக கொண்டிருந்தன.

சமுதாயம் :

இஸ்லாமிய சட்டத்தின் படி நிர்வாகம் நடைபெற்றது. சுல்தான், நிர்வாகத்தின் தலைவராகவும் தலைமை நீதிபதியாகவும் இருந்தார். அவர் படைத் தலைவராகவும் சமயத் தலைவராகவும் இருந்தார். அவர் கடவுளின் பிரதிநிதியாக கருதப்பட்டார்.

நிர்வாகத்தில் இஸ்லாமியர்கள் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டனர். அதிகாரிகளுக்கு ஜஹாகீர்கள் (நிலங்களைப் பரிசாக) வழங்கப்பட்டன. ஆனால் இந்து ஜஹாகீர்தார்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

பாரம்பரிய இந்து முறைப்படி, சுல்தான்கள் நிலத்தின் விளை பொருளின் ஆறில் ஒரு பங்கை வரியாக செலுத்த வேண்டியிருந்தது. அரிசி, கோதுமை, சோளம் மற்றும் பருப்பு வகைகள் அவர்களுடைய அன்றாட உணவாக இருந்தது. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் மற்ற தலைவர்களும் ஆடம்பரமான வாழக்கையை நடத்தினர். பொது மக்களின் நிலைமை சரியாக இருக்கவில்லை. பேரரசில் சமண மற்றும் கிறித்துவ சமூகங்கள் இருந்தன. சூஃபி வகுப்பினர் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக இருந்தனர்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

பாமினி பேரரசின் கலாச்சாரப் பங்களிப்புகள்

இலக்கியம்: பாமினி சுல்தான்கள் அயல் நாட்டு அறிஞர்களை ஆதரித்தனர். அரேபிய மற்றும் பாரசீக இலக்கியம் இதன் விளைவாக வளர்ச்சியடைந்தது. பந்தே நவாஜ் அக்காலத்திய புகழ்பெற்ற சூஃபி புனிதரும் எழுத்தாளருமாவார். இவரும் பிற வெளிநாட்டு அறிஞர்கள் கையாண்ட மொழி தகனி என்று பிரபலமானது. பிறகு இதுவே உருது மொழியாக வளர்ச்சியடைந்தது.

கட்டிடக்கலை : பாமினிகளின் வரலாறு அவர்களின் கட்டிடக்கலைக்கு புகழ் பெற்றது. அவர்களின் கலபுரகி, பீதர் மற்றும் வேறு இடங்களில் அமைத்த கட்டிடங்கள் இன்டோ-இஸ்லாமிக் வடிவமைப்பில் உள்ளது. இது தக்கானி வடிவம் என்று புகழ் வாய்ந்தது. இராஜ்ஜியத்தின் முதல் கட்டிடம் கலபுரகியின் ஜாமி மசூதி ஆகும். இதை கட்டுவித்தவர் முகமது ஷா. சிறிய குவிமாடங்களுடன் கூடிய இங்குள்ள சபாமன்றம், எல்லோரையும் கவர்ந்தது. கலபுரகியின் அருகில், பெரிய குவிமாடங்களைக் கொண்ட கல்லறைகள் உள்ளன. பந்தேநவாஜின் கல்லறை இன்னொரு முக்கிய கட்டிடமாகும்.

கவானின் மதராஸா, பீதர்

பீதரின் கோட்டையிலுள்ள சோலாகாம்ப் மசூதியும் அழகான அரண்மனைகளும் புகழ்பெற்றவை. இக்கட்டிடங்கள் நுண்ணிய மர வேலைபாடுகளால் அலங்கரிக்கப்பட்டவை. பீதர் அருகிலுள்ள அஸ்தூரின் பன்னிரெண்டு சமாதிகள் மிகச் சிறந்தவை பாமினி காலத்தின் மிக முக்கியமான கட்டிடம் கவான் கட்டுவித்ததாகும். இது 76 மீ. (250 அடி) நீளமானது மற்றும் மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது. இந்த மதராஸாவிற்குள் இருக்கும் மசூதி இன்றளவும் நல்ல நிலைமையில் உள்ளது. இது ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக தன் பெருமையை பறைசாற்றுகிறது.

விஜயபுரத்தின் ஆதில் ஷாஹிகள்

ஷாஹிகளில் முக்கியமானவர் விஜயபுரத்தின் ஆதில் ஷா ஆவார். கருநாடகத்தில் ஆதில் ஷாஹிக்கள் கருநாடகத்தில் இரண்டு நூற்றாண்டுகள் வரை ஆட்சி புரிந்தனர்.

இரண்டாம் இப்ராஹிம் :

இப்ராஹிம் ரோசா, விஜயபுரா

விஜயபுரத்தின் திறமை வாய்ந்த அரசர் இரண்டாம் இப்ராஹிம் ஆவார். இவர் காலத்தில் இராஜ்ஜியம் விரிவானது மற்றும் வளமை பெற்றது. தொழிலும் வணிகமும் வளம் பெற்றது. மத சகிப்பு மிகுந்த அரசரான இவர், இந்து அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் இசைக் கலைஞர்களுக்கும் ஆதரவளித்தார். அவரது அரண்மனைக் கோட்டையில் உள்ள தானமாக அளித்த தத்த ஆலயங்களைப் பழுதுப்பார்த்து வழிபாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இந்து இஸ்லாமிய கலாச்சார ஒற்றுமைக்காக இப்ராஹிம் பாடுபட்டார். உருது மொழியில் 'கிதாப் இ நவரஸ்' என்ற நூலை இயற்றி மக்களிடையே இசை ஆர்வத்தை வளர்த்தார். இந்த நூல் இந்து கடவுள்களான சரஸ்வதி, கணபதி, பைரவர் போன்றவர்களை துதி பாடுவதிலிருந்து ஆரம்பமாகிறது. அவர் சிறந்த இசைக் கலைஞராக விளங்கினார். இப்ராஹிம் ரோசா என்கின்ற ஒரு பிரம்மாண்ட கட்டிடம் இவர் கட்டியதாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED



கோல்கும்பஸ், விஜயபுரா

விஜயபுரத்தில் கோல் கும்பஸ் என்ற பிரம்மாண்ட கட்டிடத்தை இப்ராஹிமின் காலவழியினர் கட்டினார். அசார் மஹால் அவரால் கட்டப்பட்ட இன்னொரு கட்டடமாகும்.

முகமதுக்குப் பிறகு விஜயபுர பேரரசு வீழ்ச்சியடைந்தது. தென் இந்தியாவில் முகலாயர்களின் படையெடுப்பும், விஜயபுர பேரரசுக்கு மராத்தியர்கள் விளைவித்த கொடுமையும் இதற்கான காரணங்களாகும். ஔரங்கசீப் விஜயபுரத்தைக் கைப்பற்றியதும் ஆதில் ஷாஹியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

கட்டிடக்கலை

கருநாடகத்தின் கட்டிடக்கலை வரலாற்றில் ஆதில் ஷாஹியின் கட்டிடங்கள் முக்கிய இடம் வகிக்கிறது. அவைகள் :- அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள் மற்றும் கல்லரைகளும் ஆகும்.

- விஜயபுரத்தின் கோட்டை 96 கோட்டை அரண் முகப்புகள் (கோபுரங்கள்) மற்றும் ஆறு முக்கிய வாயில்களைப் பெற்றுள்ள ஒரு பிரம்மாண்டமான கட்டிடமாகும். அரண்மனைகளில் **ககன்மஹால்** பிரம்மாண்டமானது. **அசார் மஹாலில்** வண்ணமயமான ஓவியங்கள் உள்ள அறைகள் உள்ளன.

- விஜயபுரத்திலுள்ள **ஜும்மா மஸ்ஜித்** அனைவருடைய கவனத்தை ஈர்க்கும் கட்டிடமாகும்.

- கல்லறைகள் ஆதில் ஷாஹி கட்டிடங்களில் முக்கியமானவை. இப்ராஹிம் ரோசாவின் இணை கட்டிடங்களில் ஒன்று மசூதி இன்னொன்று கல்லறையாகும். ரோசா, தக்காணத்தின் தாஜ் மகால் என்று வர்ணிக்கப்படுகிறது. ரோசாவை மிஞ்சும் கட்டிடத்தை நிறுவ வேண்டும் என்று முகமது **கோல்கும்பஸ்** என்கின்ற கல்லறை கோயிலை நிறுவினார். இதன் மையத்தில் விசாலமான குவிமடம் உள்ளது. குவிமடத்தின் உட்பகுதியில் கிசுகிசுக்கும் கூடம் உள்ளது. நவீன கட்டடக் கலைஞர்கள், இந்த குவிமடம் எழுப்பும் கிசுகிசுப்புத் தன்மையைக் கண்டு வியக்கின்றனர். கோல் கும்பஸ் உலகத்திலேயே நான்காவது பெரிய கட்டிடமும் இந்தியாவிலேயே முதல் பெரிய குவிமடமாக விளங்குகிறது. இது உலகின் கட்டிடக் கலை அதிகசயங்களில் ஒன்றாகும்.

காலவரிசை முறை

விஜயநகரப் பேரரசு நிறுவப்பெற்றமை :	பொ.ச.1336
பேரரசின் ஆட்சிக்காலம் -	பொ.ச. 1336 - 1646
கிருஷ்ண தேவராயரின் ஆட்சி -	பொ.ச. 1509 - 1529
ரக்கஸ - தங்கடி போர் :	பொ.ச. ஜனவரி 23, 1565

© KTBS NOT TO BE REPUBLISHED

பாமினி பேரரசு : பொ.ச. 1347 - 1489

பீதர் மதராஸாவின் கட்டுமானம் : பொ.ச. 1461

ஆதில் ஷாஹிக்களின் ஆட்சிக்காலம் : பொ.ச. 1489 - 1686

இப்ராஹிம் ரோசா நிறுவப்பட்டது : பொ.ச. 1626

கோல் கும்பஸ் நிறுவப்பட்டது - சுமார் பொ.ச.1650 இல்

புதிய சொற்கள்

ஃபகீர் : இஸ்லாமிய புனிதர்.

கோட்டை அரண் முகப்பு : படைவீரர்கள் நின்று பாதுகாக்க கோட்டையின் மீது அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் அல்லது கோபுரங்களாகும்.

பார்சி : பாரசீக மொழி

தக்காணம் : தென்னிந்தியாவின் ஒரு பகுதி

பயிற்சிகள்

I. பொருத்தமான சொற்களை பயன்படுத்தி காலி இடங்களை பூர்த்தி செய்.

1. விஜயநகர பேரரசின் சின்னம் ________ .
2. பாமினி சுல்தான் பேரரசை நிறுவியவர் ________ .
3. கருநாடக சங்கீதத்தின் பிதாமகன் என்று ________ அழைப்பர்.
4. கோல்கும்ப ________ நகரத்தில் உள்ளது.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி :

5. ஆதில் ஷாஹி சுல்தான்களில் பெரியவர் யார்?
6. கோல்கும்பஸ் ஏன் புகழ்பெற்றது?
7. விஜியநகர அரசர்களில் மிகவும் புகழ் வாழ்ந்த அரசன் யார்?
8. ஹம்பியின் முக்கிய கோவில்கள் யாவை?
9. குமாரவியாசரின் படைப்பு யாது?
10. கிருஷ்ண தேவராயரின் படைப்புகளைப் பெயரிடுக.
11. விஜயநகரத்திற்கு வருகை தந்த அயல்நாட்டவர் யாவர்?

©KTBS NOT TO BE REPUBLISHED

செயற்பாடுகள் :

1. பாமினி ஷாஹி மற்றும் ஆதில் ஷாஹி கட்டடங்களின் படங்களைச் சேகரிக்கவும். ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு சிறு குறிப்பு வரைக.

2. இந்தியாவிலுள்ள இந்து, கிறித்துவ மற்றும் இஸ்லாமிய கலாச்சாரங்களின் வழிப்பாட்டு சின்னங்களைக் குறிப்பிடும் கோயில்கள், தேவாலயங்கள் (சர்ச்சுகள்) மற்றும் மசூதிகளின் படங்களை சேகரித்து தொகுப்பேடு ஒன்றை தயாரிக்கவும்.

3. புரந்தரதாசர் மற்றும் கனகதாசரின் பாடல்களை சேகரித்து, 'கடுகின பாரத்தா' விலிருந்து செய்யுட்களை குழுக்களில் பாடி மகிழ்க.

4. கருநாடகத்தில் ஹரிதாசரின் பக்தி இயக்கத்தைப் பற்றிய தகவல்களை சேகரித்து ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

5. விஜயநகர காலத்து முக்கியமான கட்டடங்களைப் பற்றிய விவரங்களையும் படங்களையும் சேகரிக்கவும்.

6. ஹம்பிக்கு சுற்றுப் பயணம் சென்று உங்கள் அனுபவத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஐஐஐஐ

பாடம்
15

முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள்

H2R9V7

பாட அறிமுகம்

பொ.ச. 1526 இல் பாபர் பாரதத்தின் மீது படையெடுத்து வந்து, தில்லி சுல்தான்களின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து முகலாய பேரரசை நிறுவினான் இப்பாடத்தில் அக்பர் மற்றும் ஔரங்கசீபின் ஆட்சியை பற்றி அறிமுகபடுத்தப்பட்டுள்ளது. இதனுடன் முகலாயரின் ஆட்சி மற்றும் கலாச்சார பங்களிப்புகளை பற்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. முடிவில் பேரரசின் அழிவிற்கு காரணமான அம்சங்கள் கூறப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இரண்டு நூற்றாண்டுகளாக அரசியல் சக்தியாக உருவேடுத்து இலக்கியத்திற்கும் கலைக்கும் சிறப்பான பங்களிப்பை அளித்த முகலாயப் பேரரசின் ஏழு வீழ்ச்சிகளின் வரலாறு இது.

சிவாஜியின் குழந்தைப் பருவம், இலட்சியங்கள், முகலாய பேரரசு மற்றும் விஜயபுர மாநிலங்களை விரட்டிய வீரசாகச கதை, மராத்திய இராஜ்ஜியத்தின் ஸ்தாபனம், ஆட்சி முறை மற்றும் சிறப்பான ஆளுமை இவைகளின் விவரணை உள்ளது.

திறன்கள் :

1. அக்பரின் தாராளமயக் கொள்கை மற்றும் சாதனைகளை அறிந்து கொண்டு பாராட்டுவர்.
2. ஔரங்கசீபின் குறுகிய மனப்பான்மை, அணுகுமுறைகள், நாட்டின் கிளர்ச்சிகள் பேரரசின் வீழ்ச்சிக்கும் காரணமாயின என்பதை அறிந்துக் கொள்வர்.
3. இலக்கியம் மற்றும் கலைகளை முகலாய பேரரசர்கள் எவ்வாறு மேன்மைபடுத்தினர் என்பதை பாராட்டுவர்.
4. முகலாயர் காலத்து வரலாற்று இடங்களை வரைபடத்தில் குறிப்பிடுவர்.
5. சிவாஜியின் வாழ்க்கை, சாகசம், குணம் மற்றும் சாதனைகளை புரிந்துக் கொள்வர்.
6. வரைபடத்தில் சிவாஜிக்கு தொடர்புடைய வரலாற்று இடங்களை குறிப்பிடுவர்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

இந்த நினைவு சின்னத்தை நீங்கள் அடையாளம் காணமுடியுமா?

தாஜ்மஹால், ஆக்ரா

இது உலக பிரபலமான தாஜ்மஹால் ஆகும். பளிங்குகற்களால் உருவாக்கப்பட்ட இந்த மிகப்பெரிய கட்டிடக்கலை முகலாயரின் முக்கிய பங்களிப்பாக உள்ளது.

பாபர் முகலாய அரச வம்சத்தின் நிறுவனர். ஆரம்பத்தில் இவன் ஆப்கானிஸ்தானின் காபூல் என்ற சிறிய பிரதேசத்தை ஆட்சி செய்தான் . செழிப்பான பாரதத்தின் மேல் தாக்குதல் நடத்த காத்திருந்தான்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பாபர் மங்கோல் சந்ததியை சேர்ந்தவன். 'முகலாயர்' இவ்வார்த்தையின் மூலம் 'மங்கோல்' பாரதத்திற்கு ரோஜாவை பாபர் அறிமுகப் படுத்தினார்.

தில்லியின் சுல்தான்கள் பலவீனமாகி கொண்டிருந்த நிலையில் பாபர் தில்லியின் மேல் படையெடுத்து வந்து அவர்களின் ஆட்சியை முடிவடைய செய்தான். ஆனால் அவன் அதில் திருப்தி அடையவில்லை. ஏன் என்றால் இங்குள்ள ராஜபுத்திரர் மற்றும் ஆப்கானர் அவரை கடுமையாக எதிர்த்தனர். போர் வீரனாக இருந்த பாபர் நல்ல ஆயுத பலத்தால் எதிரிகளை தைரியத்தோடு எதிர்த்து பின் வாங்கச் செய்தான்.

பாபர் தில்லி, ஆக்ரா மற்றும் சுற்றும் முற்றும் உள்ள பகுதிகளை மூன்று போர்களில் கைப்பற்றி பேரரசை நிறுவினான், ஆனால் குறுகிய காலத்தில் பாபர் இறந்து விட்டான். பிறகு அவன் மகன் ஹீமாயூன் சிம்மாசனத்தில் அமர்ந்தான்.

ஹுமாயூன் : தொடக்கத்தில் ஹுமாயூன் எதிரிகளை தோற்கடித்தாலும் ஆப்கான் சேனாதிபதியான ஷேர்ஷா சூரியால் தோல்வியைக் கண்டான் இராஜ்ஜியத்தை இழந்து பாரசீகத்திற்கு தப்பி ஓடி அங்கு பதினைந்து வருடங்கள் இருந்தான். ஆப்கானின் ஆட்சி பலவீனமாக தொடங்கியதும் ஹுமாயூன் பாரதத்தின் மேல் படையெடுத்து வந்து தில்லியை கைப்பற்றிக் கொண்டான். ஆனால் குறுகிய காலத்தில் ஹுமாயூன் இறந்து விட்டான்.

அக்பர்

ஹுமாயூனின் மகன் அக்பர் பாரதத்தில் பேரரசை நிறுவும் லட்சியம் உள்ளவனாக இருந்தான். இச்சமயத்தில் வீரத்திற்கு பெயர் பெற்ற ராஜாபுத்திர அரசர்களை தன்வசம் ஈர்க்க முயற்சித்தான். அவர்களில் சிலர் அக்பரின் பக்கம் சேர்ந்தனர். ஆனால் மேவாடத்தின் ராணா பிரதாபசிம்மன் அக்பருக்கு சிறிதும் அடிபணியவில்லை. அவன் தன்மானமுள்ளவனும் மாவீரனுமாக இருந்தான். பிறகு இவர்களுக்குள் ஹால்திகாட் (ராஜஸ்தான்) என்னுமிடத்தில் பயங்கரமான போர் நடந்தது. போரில் ராணா பிரதாபசிம்மன் தோல்வி அடைந்தும், இறுதிவரை துணிச்சலுடன் போராடினார்.

அக்பர்

NOT TO BE REPUBLISHED @KTBS

சேதக் பெயர் கொண்ட தன் குதிரை மேல் ஏறி போர்க்களத்தில் போராடும் இவனின் மிகப்பெரிய வெண்கல சிலையை ஹால்திகாட்டில் தேசத்திற்கு சுதந்திரம் வந்த பின் நிறுவப்பட்டது தேசபக்தனான ராணா பிரதாப் சிம்மன் இந்தியர்கள் அனைவராலும் விரும்பப்படுபவர்.

பிறகு அக்பர் பல வருடங்கள் ராணுவ செயல்களில் சுறுசுறுப்பாக ஈடுபட்டான் பிரதிபலனாக குஜராத், வங்காளம், காஷ்மீர், காபூல் முதலிய பகுதிகளை வென்று மாபெரும் பேரரசை நிறுவினான் .

அக்பரின் சாதனைகள்

நிர்வாகம் : அக்பர் சிறந்த ஆட்சியாளனாகவும் பரந்த மனப்பான்மை உள்ளவனாகவும் இருந்தான். சிறந்த மன்னரிடம் இருக்க வேண்டிய அனைத்துக் குணங்கள் அவனிடம் இருந்தது. அவன் கொடுங் கோவ அரசனாக இருக்கவில்லை. பெரும் எண்ணிக்கையில் இருந்த தன் இந்திய மக்களின் நம்பிக்கையை பெறுவது அவசியம் என்று அறிந்தான். இந்துக்களுக்கு தனது அரசவையில் உயர்ந்த பதவிகளை அளித்தான். முந்தைய இஸ்லாமிய ஆட்சியாளர் இந்து மக்களின் மேல் விதித்திருந்த 'ஜெஸியா' (ஜிஜியா) என்ற தலைவரியை மற்றும் யாத்திரை வரியை ரத்து செய்தான். அக்பர் பசு படுகொலை மற்றும் சதி (உடன்கட்டை ஏறுதல்) நடைமுறையை தடுத்தான். குழந்தைகள் திருமணத்தை எதிர்த்தான். அக்பரின் நிலவரி முறை மக்களின் ஆதரவை பெற்றது. நிலவரியை நடைமுறை படுத்தியவன் வருவாய் அமைச்சர் இராஜா தோதர்மல் ஆவார்.

மதக் கொள்கை : அக்பர் பிற மதங்களை சகிப்பவனாக இருந்தான். தனது புதிய தலைநகரான பதேபூர் சிக்ரியில் ''இபாதத் கானா'' என்ற பிரார்த்தனை கூடத்தை கட்டினான். இங்கு முகமதிய பிரிவின் பிரமுகர்களுடன் மத விஷயங்களை விவாதித்தான். இந்து, ஜைனம், புத்தம், பார்சி, கிறிஸ்தவர் முதலிய மதங்களின் பிரமுகர்களை இங்கு அழைத்து அவர்களின் விஷயங்களையும் அறிந்து கொள்ளுவான். இந்த சிந்தனைகளின் பலனாக அக்பர் (தீன்-இ-இலாஹி) என்ற தனது புதிய பிரிவை நிறுவினான். அது எல்லா மதங்களின் நல்ல கருத்துக்களையும் உட்கொண்டிருந்தது. ஆனால் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு மக்கள் மட்டுமே அதை பின்பற்றுபவர்களாயிருந்தனர்.

செயல்பாடு: தீன்-இ-இலாஹி பிரிவு ஒரு மதமாக தோன்றி, மக்கள் ஆதரவு பெற இயலவில்லை. இதைக் குறித்து கலந்துரையாடல் ஏற்படுத்தி கருத்துக்களை சேகரிக்கவும்.

கலைப்படைப்பு: அக்பர் இலக்கிய கலைகளுக்கு சிறந்த ஊக்கம் அளித்தான். பைஜி, அபுல் பசல் மற்றும் பீர்பல் இவனின் அவையில் இருந்த புகழ்பெற்ற கவிஞர்கள் ஆவர். அழியாத புகழ்பெற்ற சங்கீதக்காரன் தான்சென் அவரது அரசவையை அலங்கரித்தார். கட்டடக்கலை மற்றும் ஓவியக்கலைக்கு அக்பர் அளித்த ஊக்கம் பாராட்டத்தக்கது.

NOT TO BE REPUBLISHED @KTBS

அக்பருக்கு பிறகு பட்டத்திற்கு வந்த ஜஹாங்கீர் மற்றும் ஷாஜஹான் இருவரும் அவனுடைய கொள்கையை பெரும்பாலும் பின்பற்றினர். ஷாஜஹான் ஆக்ராவில் பிரபலமான தாஜ்மஹால், தில்லியில் மகா பெரிய செங்கோட்டை மற்றும் பிரம்மாண்டமான அரண்மனைகளை கட்டி பிரபலமடைந்தான்.



வரைபடம் 8 அக்பரின் பேரரசு (கி.பி.1605)

@KTBS NOT TO BE REPUBLISHED

ஔரங்கசீப்

ஷாஜஹானின் மகன் ஔரங்கசீப் கடைசி முகலாய பேரரசன். இவன் ஐம்பது வருடகாலம் நீண்ட ஆட்சி புரிந்தான். பேரரசு இன்னும் அதிகம் விரிவானது. ஆனால் இறுதியில் வெகுவிரைவில் அழிவைக் கண்டது.

மதக்கொள்கை : ஔரங்கசீப் பாராம்பரிய முகமதியனாக இருந்தான். மதுபானம், சூதாட்டம், கேளிக்கை மற்றும் சங்கீதம் இவைகளிலிருந்து விலகியிருந்தான்.

ஔரங்கசீப் அக்பரின் பரந்த மனப்பான்மைகளைக் கைவிட்டான். ‘‘ஜெசீயா வரியை மீண்டும் திணித்தான். இந்து விழாக்கள், மதபோதனைகள் மற்றும் சடங்குகளுக்கு தடை விதித்தான். அவனின் அரசகட்டளைப்படி பல கோவில்கள் பாழாயின. இம்முறைகள் அரசியல் மோதல்களுக்கு வாய்ப்பளித்தது.

சீக்கிய கிளர்ச்சி: ஔரங்கசீபின் மதக் கொள்கையை சீக்கியர் மற்றும் மராத்தியரை கிளர்ந்தெழச் செய்தது. சீக்கிய குரு, தேஜ் பஹதூரை வெளிப்படையாக கொன்றனர். அவனுடைய மகன் குரு கோவிந்த சிம்மன் எல்லா சீக்கிய சமூகத்தை ஒரு போராளிப் பிரிவாக மாற்றி அமைத்தான். அவர்கள் பஞ்ச ‘க’ காரியங்கள் என்றால் (நீள கூந்தல்) கங்கா, (சீப்பு), கிர்பன் (சிறிய கத்தி), கச்சே (தளர்வான கால் சட்டை) மற்றும் கங்கணா (இரும்பு வளையல்) போட வேண்டி இருந்தது. இந்த வழக்கம் சீக்கியர்களில் இப்போதும் பழக்கத்தில் உள்ளது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

கிளர்ச்சிகள்: வட இந்தியாவில் சீக்கியர் மற்றும் இராஜபுத்திரர் ஔரங்கசீபை கடுமையாக எதிர்த்தனர். தக்காணத்தில் சிவாஜி கிளர்ச்சியில் எழுந்தார். கிளர்ச்சி நீண்ட காலம் நீடித்தது. ஔரங்கசீப் பெரும் செல்வம், வீரர்கள் மற்றும் எல்லாவற்றையும் விட அதிகமாக தனது கௌரவத்தை இழந்து விட்டார். பேரரசின் பல பகுதிகள் விடுதலை அடைந்தன. தக்காணாவின் போர்களினால் ஔரங்காசீப் பொருளாதார நிலைமையையும், இராணுவ பலத்தையும் முற்றிலும் சுற்றி வளைக்கபட்டதால், சோர்வுற்று தக்காணத்தில் இறந்தார். அவர் மரணத்திற்கு பின் முகலாயர்களின் ஆதிக்கம் பெரிதும் பலவீனமடைந்தது.

குரு கோவிந்த சிம்மன்

பொற்கோவில், அம்ரித்சர்

முகலாயர்களின் ஆட்சி

முகலாய பேரரசன் அனைத்து குடிமக்கள் மற்றும் இராணுவ அதிகாரத்தை பெற்றிருந்தான். நியாயம் விசாரிப்பில் அவனுடைய தீர்மானம் இறுதியாக இருந்தது.

பேரரசை மாகாணம் (சபா), மாவட்டம் (அரசாங்கம்) மற்றும் தாலுகாவாக (பரகண) என பிரிக்கப்பட்டது. நகரங்களில் கோத்வாலா என்ற அதிகாரி சட்டம் ஒழுங்கைக் கவனித்து வந்தார்.

வருவாய் அமைப்பு: அக்பரின் அமைச்சர் இராஜா தோதர்மல் நில வரி அமைப்பை வடிவமைத்தான். இந்த அமைப்பின் கீழ் மண்ணின் வளம் மற்றும் விளைச்சலின் அடிப்படையில் நிலவரி நிர்ணயிக்கப்பட்டது.

கலாச்சார பங்களிப்புகள் :

இலக்கியம்: முகலாயர்கள் பாரசீக இலக்கியத்தை சிறப்பான முறையில் ஆதரித்தனர். அக்பரின் அரசவையில் அபுல் பசல், நிசாமுத்தின் மற்றும் பதௌனி என்பவர்கள் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்கள் இருந்தனர். **அக்பர்நாமா** என்பது அபுல் பசலின் முக்கியமான இலக்கிய படைப்பு ஆகும். முகலாய இராஜ குமாரன் தாரா ஷீகோ, சிறந்த அறிஞனாக இருந்தான். **பகவத்கீதையை** மொழிபெயர்த்தான். இந்தி இலக்கியம் அரசவை ஆதரவு பெறவில்லை என்றாலும் புனிதர்களின் முயற்சியால் செல்வாக்கு பெற்றது. ராமசரிதமானசா என்ற துளசிதாசனின் புகழ் பெற்ற படைப்பு இக்காலத்துக்குரியது.

கட்டடக்கலை: தில்லியில் உள்ள **ஹுமாயூனின் கல்லறை** அக்பரின் ஆரம்பக் கால கட்டுமானமாக இருந்தது. அவர் ப்தேபூர் சிக்ரியில் (ஆக்ராவிற்கு அருகில்) புதிய தலைநகரை கட்டினார். தலைநகரின் அற்புதமான அரண்மனை, மசூதி மற்றும் மண்டபங்கள் உள்நாட்டு

NOT TO BE REPUBLISHED @KTBS

வெளிநாட்டில் இருந்து சுற்றுலா பயணிகளை ஈர்க்கின்றன. இங்கே ஜாமியா மசூதியின் நுழைவாயில் (புலந்த் தர்வாஜா) இந்தியாவிலேயே மிகவும் பெரிதாக உள்ளது. இதின் உயரம் 40 மீ. கொண்டதாகும்.

ஹுமாயூனின் கல்லறை, தில்லி

ஷாஜஹான் ஆக்ரா கோட்டையின் உள்ளே கட்டிய அரண்மனை, மோதி மஹல் அற்புதமாக உள்ளன. இவன் ஆக்ராவில் தனது அன்பு ராணியான மும்தாஜ் மஹல்லின் நினைவாக கட்டிய தாஜ்மஹல் முகலாய கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. தில்லியின் புகழ்பெற்ற செங்கோட்டையையும் ஷாஜஹான் கட்டினான்.

ஓவியக்கலை: முகலாயர் காலத்தில் புதிய ஓவியக்கலை பாரம்பரியம் ஒன்று உருவானது. இதை சிகினி என்று அழைப்பர். அக்பரின் அரசவையில் நூற்றுக்கு மேலான ஓவியக்கலைஞர்கள் இருந்தனர். ஓவியக்கலை ஜஹாங்கீரின் ஆதரவில் முழுமையடைந்தது. மரபு வழி மற்றும் சம்பிரதாயவாதியான ஔரங்கசீப் ஓவியக்கலைக்கு ஊக்கம் அளிக்கவில்லை.

கோட்டை, ஆக்ரா

செங்கோட்டை தில்லி

செங்கோட்டை தில்லி

இசை: அக்பர் காலத்தில் இசைக் கலைக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. அரசவையின் இசைக்காரர்கள் ஏழு குழுவாக பிரிக்கப்பட்டனர். தினம் ஒரு குழுவினால் இசை கச்சேரி நடத்தப்பட்டது. தான்சேனன் அக்பரின் அரசவையில் குறிப்பிடத்தக்க இசையமைப்பாளர் ஆவார். ஜஹாங்கீர் மற்றும் ஷாஜஹானின் காலத்திலும் இசைக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் ஔரங்கசீப் இசையை தடை செய்தான். ஆனாலும் இசை மக்கள் மனதில் நிலைத்து நின்றது.

NOT TO BE REPUBLISHED © KTBS

முகலாய பேரரசின் வீழ்ச்சி:

ஔரங்கசீபின் காலத்தில் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது வீழ்ச்சிக்கான காரணங்கள்.

- படைத்தலைவர்கள் ஊழல் செய்தார்கள்.
- சிம்மாசனத்தின் அடுத்த அதிகாரத்திற்காக தீவிரமான உட்பூசல்கள் நடந்தன.
- மாகாண அதிகாரிகள் இந்த சூழ்நிலைகளை தங்களுக்கு சாதகமாக பயன் படுத்தி கொண்டு தங்கள் சுதந்திரத்தை அறிவித்தனர்.
- அனைத்திற்கும் மேலாக பாரதத்தை ஒரு இஸ்லாமியர் அரசாக மாற்றும் ஔரங்கசீபின் கொள்கைக்கு எல்லா இடங்களிலும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டது.

- சீக்கியர், இராஜபுத்திரர் மற்றும் மராத்தியர்கள் உடன் நீண்ட கால மோதல்களினால் பேரரசின் வலிமை முற்றிலும் வீழ்ச்சியடைந்தது.
- இதன் இடையில் நாதிர்ஷா என்ற பாரசீக படையெடுப்பாளன் தில்லியின் மீது தாக்குதல் நடத்தினான். முகலாயர் இருநூறு ஆண்டுகாலம் சேகரித்த செல்வங்களை சூறையாடினான். உலகபுகழ் கோஹினூர் வைரம் மற்றும் ஷாஜஹானின் மயூர சிம்மாசனத்தை எடுத்துச் சென்றான். முகலாயர் கருவூலம் வெறுமையானது.

மராத்தியர்கள்

சத்ரபதி சிவாஜி

வட இந்தியாவில் முகலாயர்கள் உயர்ந்த நிலையில் இருந்தபோது தக்கான நிலப்பரப்பில் முகலாயர்களை எதிர்த்து அதிகாரத்திற்கு வந்தவர்கள் மராட்டிய வம்சத்தை தொடங்கிய சிவாஜி.

சத்ரபதி சிவாஜி

சிவாஜியின் குழந்தைப் பருவம்

சிவாஜி ''பூனே'' (மாஹாராஷ்டிரா) அருகில் உள்ள சிவநேரி மலைக் கோட்டையில் பிறந்தார். இவரது தந்தை ஷஹஜி போஸ்லே. இவன் விஜயபுர சுல்தானிடம் பெரிய பதவியில் இருந்தார். தாய் ஜிஜாபாய் ஆவார். சிவாஜி தனது தாய் ஜிஜாபாய் பராமரிப்பில் வளர்ந்தார். அவள் இராமயணம், மகாபாரதம் முதலிய காவிய புராணங்களை, வீராதி வீரர்களின் கதைகளை தன் மகனுக்கு சொல்லி அவனுக்கு மத பாதுகாப்பு, தேசபக்தி மனோபாவங்களை தூண்டிவிட்டாள். குருவாக இருந்த தாதாஜி கொண்டதேவ் மற்றும் தானாஜி மாலசுரே சிவாஜிக்கு ஆயுத கலையை கற்பித்தனர். இந்த சிறு வீரனின் மனதை விழிப்படையச் செய்தனர். தொடக்கத்தில், சிவாஜி மராத்திய தலைவர்கள் மற்றும் மேற்கு மலைத் தொடர்களின் மாவளி என்ற உறுதியான பழங்குடியினரை சேர்த்து படையை நிறுவினான்.

©KTBS NOT TO BE REPUBLISHED

சிவாஜியின் ஆரம்பக்கால சாகசங்கள்: சிவாஜி தனது 19ஆம் வயதில் விஜயபுராவின் ஆதில்ஷாவின் தலைமையில் தோரணதுர்காவை கைப்பற்றினான். பிறகு ராய்கட், சிம்மகட், பிரதாபகட முதலிய கோட்டைகளை ஒன்றொன்றாக கைப்பற்றினான். இதனால் கோபம் கொண்ட விஜயபுர சுல்தான் சிவாஜியை எதிர்க்க தன் தளபதி அப்ஜல் கானை அனுப்பினான். அப்ஜல்கான் ஒப்பந்த பேச்சுகளைப் பேச சிவாஜியை அழைத்து வரசொல்லி, வஞ்சகமாக அவனை கொல்ல முயற்சித்தான். ஆனால் சிவாஜியின் கை மேலோங்கி அவன் அப்ஜல் கானை கொன்றான்.

சிவாஜி மற்றும் அப்ஜல் கான் சந்தித்தப்போது ஒருவரையொருவர் அனைக்கும் போது அப்ஜல் கான் தனது குத்துவாளினால் சிவாஜியை முதுகில் குத்துவதற்குள் சிவாஜி மறைவாக அணிந்து இருந்த புலிகுறியில் (வியாக்ராநக) அவனின் உடலை கீறி கொன்றான்.

வியாக்ராநக என்னும் ஆயுதம்

முகலாய போர்வீரனின் தோல்வி: சிவாஜி நாளுக்கு நாள் வளர்ச்சி அடைவதை அறிந்த செய்தி ஔரங்கசீபிற்கு தெரியவந்தது. ஔரங்கசீப் தக்காண பகுதியின் அதிகாரியாக இருந்த, ஷயிஸ்தகானை சிவாஜியை அழிக்க அனுப்பினான். ஆனால் சிவாஜி ஷயிஸ்தகானை தந்திரமாக தோற்கடித்தான்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

இரண்டு வருடகாலம் ஷயிஸ்தகான் பூனே அரண்மனையில் தங்கி இருந்தான். இரண்டு வருடம் ஆனாலும் சிவாஜியை சிறைபிடிக்க அவனால் இயலவில்லை. சிவாஜி வீரர்களுடன் வேஷம் மாறி கானின் குடியிருப்பை நல்லிரவில் நுழைந்து அவனை திடீரென்று தாக்கினான். கான் எப்படியோ தாக்குதலில் இருந்து தப்பித்தாலும் தனது கட்டைவிரலை இழந்தான். ஷயிஸ்தகான் பயந்து பூனேயில் இருந்து தப்பி ஓடினான்.

ராஜா ஜெயசிம்மன் தக்காணுக்கு அனுப்பட்டார்: இதற்கு அடுத்த ஆண்டே சிவாஜி முகலாயர்கள் வசமிருந்த சூரத் நகரத்தை முற்றிகையிட்டு கைப்பற்றினார். மேலும் அங்கிருந்து பெரும் செல்வத்தையும் சேகரித்தார். இதனால் ஆத்திரம் அடைந்த ஔரங்கசீப் எப்படியாவது சிவாஜியை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இராஜா ஜெயசிம்மன் என்ற இராணுவப்படை தளபதியை அனுப்பினான்.

அவர்கள் இடையில் போர் நடந்து சிவாஜி தோல்வி அடைந்து, தனது சில கோட்டைகளையும் முகலாயர்களிடம் ஒப்படைத்த வேண்டி வந்தது. ஒப்பந்தம் செய்து கொள்ள சிவாஜியை தில்லிக்கு வரவழைத்தனர். ஔரங்கசீப் சிவாஜியை கைது செய்து ஆக்ரா சிறையில் வைத்தான். ஆனால் சிவாஜி தந்திரமாக சிறையில் இருந்து தப்பி தன்னுடைய தலைநகரை வந்து அடைந்தான்.

அடுத்த இரண்டு வருட காலம் சிவாஜி தன் அதிகாரத்தை இன்னும் அதிகமாக பலப்படுத்தினான். இழந்த எல்லா கோட்டைகளையும் தன் வசப்படுத்திக் கொண்டான். சூரத் நகரை முற்றுகையிட்டு மகத்தான செல்வத்தை திரட்டினான்.

சிவாஜியின் பட்டாபிஷேகம்: குறுகிய காலத்தில் சிவாஜியின் பட்டாபிஷேகம் தலைநகரான ராயகடத்தில் மிகவும் விமரிசையாக நடந்தது. அவன் 'சத்ரபதி' என்ற விருதுடன் தன் இராஜ்ஜியத்தை 'இந்தவி ஸ்வராஜ்' என்று அழைத்தான். அடுத்து சிவாஜி ஜின்ஜி, வேலூர், மைசூர் மாகாணத்தின் விசாலமான பிரதேசங்களை கைப்பற்றி வெற்றிக் கண்டு மகத்தான செல்வத்தை சேர்த்தான். ஆனால் மராத்தியர்களின் மகிமையை காண சிவாஜி நீண்டகாலம் வாழவில்லை.

©KTBS NOT TO BE REPUBLISHED

சிவாஜியின் ஆட்சி முறை

ஆட்சியை சுமுகமாக செய்வதற்கு உதவியாக அஷ்டபிரதானிகள் என்ற எட்டு அமைச்சர்கள் இருந்தனர். பிரதமர் பேஷ்வா என்று அழைக்கப்பட்டார்.

- **வருவாய் நிர்வாகம்:** விவசாயிகள் விதைக்கும் விதைகள் மற்றும் கால் நடைகளை வாங்க அனுகூலம் ஆகும் வண்ணம் அரசாங்கம் அவர்களுக்கு கடன் வழங்கியது. விவசாய நிலத்திற்கு நீர்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கை நில வருவாய் வரியாக அரசு சேகரித்தது.

- **இராணுவ ஆட்சி :** சிவாஜி இராணுவ ஆட்சிக்கு சிறப்பு கவனம் மற்றும் ஆதரவு செலுத்தினார். இராணுவத்தில் காலாட்படை, குதிரைப்படை, கப்பற்படை மற்றும் பீரங்கி படைகள் இருந்தன. சிவாஜியின் படை ஒழுக்கத்திற்கு பெயர் பெற்றிருந்தது. போரின் போது மக்கள் மற்றும் பசுக்களும் கொள்ளையடிக்கவில்லை.

- **கோட்டைகள்:** சிவாஜி கொரில்லா போர் முறை கையாண்டார். கொரில்லா போர் வீரர்களுக்கு பாதுகாப்பு அளிக்க கோட்டைகளில் மிக முக்கிய இடங்கள் இருந்தன. அவன் வசமாக இருந்த 240 கோட்டைகளில் 111 கோட்டைகள் அவனே கட்டிக்கொண்டது.

சிவாஜியின் கோட்டை ராயகட

©KTBS NOT TO BE REPUBLISHED

சிறு சிறு குழுக்களில் பகைவர்கள் மீது திடீரென்று தாக்குதல் நடத்துவான். பகைவர்களுக்கு தொல்லைத் தரும் போர் தந்திரமே ''கொரில்லா போர் தந்திரம்'' போர்காலத்தில் சிறைபிடித்த பெண்கள் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். போர்காலத்தில் போர் வீரர்கள் மசூதிகள் மீது தாக்குதல் நடத்த கூடாது. புனித குரான் கையில் கிடைத்தால் அதை மரியாதையுடன் சம்பந்தபட்டவர்களுக்கே திருப்பி அளிக்க வேண்டியிருந்தது.

சிவாஜியின் ஆளுமை மற்றும் சாதனை:

- சிவாஜியின் வாழ்க்கை ஒழுக்கமும் உயர்ந்த குணங்களையும் வெளிப்படுத்தியது. வேற்றுமதங்களுக்கு செலுத்திய மரியாதை பின்பற்றும்படி இருந்தது.
- சிறுவயதில் இருந்தே சிவாஜி நல்ல தலைவனாக இருந்தான். வலிமையை வலிமையினாலும் துரோகத்தை திரோகத்தினாலும் எதிர்க்கும் புத்தி அறிவாற்றலை பெற்றிருந்தான்.
- சிவாஜியின் இராணுவ அமைப்பு சிறப்பாக இருந்தது. அவன் கொரில்லா போரிய தந்திர திறமைசாலியாக இருந்தான் சிவாஜி ஓர் இலட்சிய வாதியாக திகழ்ந்தான்.

சிவாஜியின் குருவான திறமைமிக்க இராமதாசர் ஒரு முறை சி வாஜியிடம் ஒரு பிச்சை பாத்திரத்தை நீட்டிய போது தனது இராஜ்ஜியத்தையே அவருக்கு அளித்தான். இராமதாசர் அதை அங்கீகரித்து மீண்டும் சிவாஜிக்கே அதை திருப்பி கொடுத்தார். ‘‘என் சார்பாக நீ இராஜ்ஜியத்தை ஆளுகை செய் என்று’’ வாழ்த்தினார். புனிதர் இராமதாசரின் ஒத்துழைப்பால் மகாராஷ்ட்ராவில் சுமார் 1200 உடற்பயிற்சி கூடங்கள் நிறுவப்பட்டது.



NOT TO BE REPUBLISHED @KTBS

காலவரிசை (பொ.ச.)

பாபர்	:	பொ.ச.1526 - 1530
அக்பர்	:	பொ.ச. 1556 - 1605
ஔரங்கசீப்	:	பொ.ச. 1659 - 1707
சிவாஜி	:	பொ.ச. 1627 - 1680

புதிய சொற்கள்

வீரம்	- வலிமை
விக்ரஹம்	- சிலை
கோத்வால்	- கோட்டை மற்றும் நகரத்தை காப்பவர்
ஜெசியா	- முகலாய அதிகாரிகளுக்கு ஹிந்து மக்கள் ஒவ்வொருவரும் அளிக்க வேண்டிய வரி.
துரை	- முக்கிய அதிகாரி
இந்தவி ஸ்வராஜ்யம்	- இந்து இராஜ்ஜியம்
சத்ரபதி	- மகாராஜா

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களை பயன்படுத்தி கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்.

1. அக்பரை எதிர்த்த மேவாடத்தின் புகழ்பெற்ற ராஜா ________ .
2. ஃபதேபூர் சிக்ரியை ________ பேரரசன் நிறுவினான்.
3. ராம சரித மானஸா ________ எழுதிய படைப்பு.
4. சிவாஜி ________ என்ற இடத்தில் பிறந்தான்.
5. ஷஜகானின் மகன் பெயர் ________ .

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி :

6. முகலாயர் காலத்தின் இலக்கிய கொடைகள் யாவை?
7. அக்பரின் ஆட்சியைப் பற்றி விவரி.
8. முகலாயர் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை கூறு.
9. தாய் ஜீஜாபாய் சிவாஜியின் எதிர்காலத்தை எப்படி உருவாக்கினார்?
10. விஜயபுரத்தின் சுல்தான் சிவாஜியை ஏன் பகைத்து கொண்டான்?

11. ஷயிஸ்தகான் யார்? அவன் சிவாஜியுடன் நடத்திய போரின் விளைவுகள் யாவை?

12. சிவாஜியின் பட்டாபிஷேகம் எங்கு நடந்தது? அச்சமயத்தில் அவனுக்கு அளித்த பட்டம் என்ன?

13. நீங்கள் சிவாஜியின் எந்த குணநலங்களை விரும்புகிறீர்கள்? ஏன்?

செயல்பாடுகள்:

1. முகலாயர்களின் கட்டடக்கலையை விவரங்களுடன் படங்களை சேகரிக்கவும்.
2. முகலாயர்களின் காலத்து வரலாற்று இடங்களை வரைபடத்தில் குறிக்கவும்.
3. அக்பர் மற்றும் ஔரங்கசீபின் அணுகுமுறையில் உள்ள முரண்பாடுகளை விவாதித்து ஒரு அறிக்கை தயாரிக்கவும்.
4. வரைப்படத்தில் சிவாஜிக்கு தொடர்புடைய வரலாற்று இடங்களை குறிக்கவும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பாடம்	இந்திய அறிவுசார் மற்றும் பக்தி இயக்கம்
16	

M7U6H1

மத மற்றும் சமூக சீர்திருத்த இயக்கங்கள்

பாட அறிமுகம்

- பொ.ச. 8 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் பல மத மற்றும் சமூக சீர்திருத்த இயக்கங்கள் காணப்பட்டன. மக்களின் மத மற்றும் சமூக வாழ்க்கையை மாற்றியமைப்பதை நோக்கமாக கொண்ட மதத்தலைவர்களால் இவ்வியக்கங்கள் வழி நடத்தப்பட்டன
- இந்த அத்தியாயத்தில் சீர்திருத்த இயக்கங்களில் முன்னணியில் இருந்த சங்கராச்சாரியார், ராமானுஜாச்சாரியார், பசவேஷ்வரா மற்றும் மத்வாச்சாரியார் ஆச்சாரியா ஆகியோரின் வாழ்க்கை போதனைகள் மற்றும் சீர்திருத்தங்கள் சுருக்கமாக விவரிக்கப் பட்டுள்ளன.
- புரந்தரதாசர், கனகதாசர் போன்றவர்களை பற்றி அறிந்தீருக்கிறீர்கள் அல்லவா? தாசர்கள் போன்ற வட இந்திய மகான்களும் தங்கள் போதனைகள் மூலம் மக்களை விழிப்படையச் செய்தார்கள் அவர்களைப் பற்றியும் படிக்கலாம்.
- இந்த அத்தியாயத்தில் பக்தி வழிப்பாட்டின் பொருள் மற்றும் அம்சங்கள், ஸ்ரீ சைதன்ய, குருநானக் மற்றும் மீராபாய், சூஃபி துறவிகள் போன்ற பக்தி துறவிகளைப் பற்றி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பக்தி வழிபாட்டு முறை பல்வேறு மத குழுக்களிடையே நிறுவப்பட்ட நல்லிணக்கம் மற்றும் அது அளித்த பங்களிப்பை அறிமுகப்படுத்தியது. பிராந்திய மொழி வளர்ச்சிக்கு தீர்வு காணப்பட்டது.

திறன்கள் :

1. மதத்தலைவர்களின் போதனைகள் மற்றும் சீர்திருத்தங்களைப் புரிந்துகொள்வர்.
2. அவர்களின் சீர்திருத்தங்களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் உகந்த தன்மைகளை புரிந்துகொள்வர்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

3. பக்தி துறவிகளின் பங்களிப்பையும் சமூக நல்லிணக்கத்தையும் புரிந்துக்கொள்வர்.

4. புனிதர்களின் போதனைகளைப் புரிந்துக் கொள்வர் மற்றும் அதன் விரிவான கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்வர்.

இந்தியாவின் துறவிகள் தங்கள் போதனையின் மூலம் மக்களை வழிநடத்தியது மட்டுமல்லாமல், தீவிரமான மத மற்றும் சமூக சீர்திருத்தங்களை மேற்காண்டனர், அவர்களின் சீர்திருத்தங்கள் மக்களிடையே அறியாமை மற்றும் தீய பழக்கவழக்கங்களை அகற்றியது. அவற்றின் தாக்கம் தற்போதும் உணரப்படுகிறது.

ஸ்ரீ சங்கராச்சாரியார்

சங்கராச்சாரியார் கேரளாவிலுள்ள காலடி என்னும் கிராமத்தில் பிறந்தார். புகழ்பெற்றவரான இவர் தமது எட்டாவது வயதிலேயே நான்கு வேதங்களை படித்தறிந்தார்.

சிவகுரு மற்றும் ஆர்யாம்பா சங்கரரின் பெற்றோர்கள் ஆவர் சங்கரர் போதித்த தத்துவங்களை அத்வைதம் என்பார்கள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

சங்கராச்சாரியரின் சீர்திருத்தங்கள் :

- சங்கராச்சாரியர் அன்றைய காலத்தில் இந்து சமுதாயத்தின் மூட நம்பிக்கைகளைக் கண்டித்தார். சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்.
- அத்வைதம் தத்துவங்களின் மூலம் மனிதர்கள் அனைவரும் ஒன்று (சமம்) என்ற கொள்கையை போதித்தார்.
- சாதியின் பெயரால் ஏற்பட்ட மோதல்களை தடுத்து சமூக சீர்த்திருத்தவாதியாக மாறினார்.
- சங்கரர், பதரிநாத் (உத்ரகண்டம்), துவாரக (குஜராத்), பூரி (ஒடிஷா) மற்றும் கர்நாடகத்திலுள்ள சிருங்கேரியில் நான்கு மடங்களை நிறுவினார். சிருங்கேரியில் தமது பீடத்தை அமைத்தார். இப்பீடங்கள் இந்திய மக்களின் எண்ணங்களையும்,

மதசாஸ்திரங்களின் ஒருங்கிணைப்பு மையங்களாக இருந்தன.

பத்ரிநாத் கோயில் பத்ரிநாத்

• சங்கரர் பல்வேறு சாஸ்திர நூல்களையும் எழுதியுள்ளார் அவருடைய கீர்த்தனையான ‘பஜகோவிந்தம்’ இன்றும் மக்களால் போற்றப்படடப்படுகிறது. சங்கரர் தம்முடைய 32 ஆண்டு காலத்தில் இத்தனை சாதனைகளை புரிந்தது வியக்கத்தக்க செய்தியாகும்.

ஸ்ரீ ராமானுஜச்சாரியார்

ஸ்ரீ ராமானுஜச்சாரியார் சென்னை நகருக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தார். காஞ்சி நகரத்தில் வேதசாஸ்திரங்களைக் கற்றார்.

ஸ்ரீ ராமனுஜச்சாரியா

> இராமனுஜரின் தந்தையார் கேசவ தீக்ஷிதர். தாய் காந்திமதி அவருடைய கொள்கையை விஸிஷ்டாத்வைதம் என்று அழைக்கிறோம்.

இராமனுஜர் நாட்டின் நான்கு மூலைகளிலும் வைணவத்தைப் பரப்பினார். முக்திக்கு பக்தியே மார்க்கம் மற்றும் சரணாகதியே முக்கியமானது என்றும் பறை சாற்றினார். கர்நாடக ஹொய்சள அரசரான விஷ்ணுவர்தன் இவரை வரவேற்றார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

செலுவநாராயணா ஆலயம் மேல்கோட்டை

இராமனுஜரின் சீர்திருத்தங்கள்:

- இராமனுஜர் ஜாதி நல்லிணக்கத்தை ஊக்குவித்தார்.
- சாதி வெறியை கண்டித்து அனைத்து சாதியினருக்கும் பக்தி கொள்கையைப் போதித்தார்.
- முக்திக்கு பக்தியே மார்க்கம் என்னும் சரணாகதியே முக்கியமானது என்றும் போதித்தார்.
- எந்த ஆசையும் இல்லாமல் கடவுளிடம் சரணடைய வேண்டும் என்று போதித்தார்.
- பக்தி மார்கத்தின் மூலம் முக்தி அடையலாம் என்று உறுதிபடக் கூறினார்.
- இராமானுஜர் மேல்கோட்டை மற்றும் தென் இந்தியாவில் அநேக கோயில்கள் கட்டுவதற்கு காரணமானார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

ஸ்ரீ பசவேஷ்வரர்

பசவேஸ்வரர்

கர்நாடகவில் சமுதாயம் மற்றும் சமய கிளர்ச்சிகளில் பசவேஷ்வரர் தீவிரமாக போராடினார். பசவேஷ்வரர் விஜயபுரா மாவட்டத்திலுள்ள பசவன பாகேவாடி தாலுக்காவில் பிறந்தார். சிறுவயதில் உபநயனம் சடங்கிற்கு ஒப்புக் கொள்ளாமல் லிங்க தீக்ஷையைப் பெற்றார். அவர் ஆரம்பக்கால கல்வியை கற்றபின் கூடல சங்கமத்தில் சென்று கல்விகற்றார்.

> பசவேசுவரின் பெற்றோர்கள் மாதரச மற்றும் மாதலாம்பிகை இவர்கள் பாகேவாடி அக்ரஹார சைவ பிராமணரர்கள். இவர் ''சக்தி விஸிஷ்டத்வைத'' கொள்கையை முன்மொழிந்தார்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

கல்யாண் நகரில் ஆட்சி செய்து வந்த கலச்சூரி வம்சத்தின் பிஜ்ஜளன் பசவேஷ்வரரை கருவூல அதிகாரியாக நியமித்தான். கல்யாணில் பசவண்ணர் புரட்சிகரமான சமுதாய சீர்திருத்தங்களின் பிரசாரத்தை செய்தார். பழமையில் ஊறியவர்கள் இச்சிந்தனைகளை எதிர்த்தனர். இதனால் மனம் வருந்திய அவர் கல்யாண் நகரத்தை விட்டுவெளியேறி கூடல சங்கமத்திற்கு சென்றார், அங்கு இறுதி நாட்கள் வரை தங்கி கூடலசங்கமத்தில் ஐக்கியமானார் என்று நம்பப்படுகிறது.

பசவேஸ்வரரின் சீர்திருத்தங்கள்

- பசவேஷ்வரர் சாதி மதமற்ற சமூகத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டார்.
- (காயகவே கைலாசா) 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பதே அவரின் முக்கிய போதனைகளில் ஒன்றாகும்.
- பசவேஷ்வரர் சாதிமதம், பேதம், யாகம், பூஜைகள், ஓமம் வளர்த்தல் முதலானவைகளை கண்டித்தார். நம்முடைய''தேகமே'' ''ஆலயம்'' என்று கூறினார்.
- பெண் - தாய், அவளே அனைத்துமானவள் எனும் அவரின் கூற்று பெண்களுக்கு தங்களது உரிமைக்கு குரல் கொடுக்கவும் மற்றும் ஆத்ம விசுவாசத்தையும் அளித்தது.
- அவர் பசவகல்யாணில் 'அனுபவ மண்டபத்தை' நிறுவினார். இது சீர்திருத்தவாதிகளின் மேடையாக அமைந்தது.

- பசவேசுவரர் எண்ணிலடங்கா வசனங்களை இயற்றினார், இவை 'கூடல சங்கமதேவா' எனும் அடையாளச் சொல்லினைக் கொண்டு முடிவுபெறும்.
- மனித குலத்தின் நலனுக்காக வசன இயக்கத்தின் தலைவரான ஸ்ரீ பசவேஷ்வரரின் போதனைகள் காலத்தால் அழியாதது. இந்த பின்னனியில், கருநாடகத்தில் கலாச்சாரத்தின் தலைவராக 'விஷ்வகுரு' என்று பசவண்ணாவை கருநாடக அரசு **13.02.2024** ம் அன்று அறிவித்தது.

செயல்பாடு: பசவேஸ்வரரின் 3 வசனங்களை தேர்வு செய்து அவரின் ''சாதிமதமற்ற சமூகம்'' என்ற அவரின் கனவினை குறித்து குறிப்பு எழுதவும்.

காயகவே என்பது பக்தியுடன் செய்யும் தொழில், காயகத்தில் இருந்து வந்த பலனை சமமாக ஏற்றுக்கொள்ளும் வழிமுறையே 'தாஸோஹா' பசவேஸ்வரரின் நோக்கம் மக்களிடையே உழைப்பின் மேன்மையை (கலாச்சாரத்தை) வளர்ப்பதாக இருந்தன.

@KTBS NOT TO BE REPUBLISHED

வசன இலக்கியம் : ''வசனம்'' ஒரு சிறந்த இலக்கிய வகையாகும். வசனம் உரைநடைப் போன்று படிக்கவும், செய்யுளைப் போல் பாடவும் கூடிய இலக்கியம் ஆகும். ஜேடர தாசிமய்யா, அல்லமபிரபு, சென்ன பசவண்ணா, அக்கமகாதேவி முதலான வசனகாரர்கள் இருந்தனர். அவர்கள் அனைத்து ஜாதி வர்ககங்களை சார்ந்தவர்களாக இருந்தனர். வசனங்களில் உள்ள சிந்தனைகள் இன்றும் பொருந்தக் கூடிய போதனைகளாக உள்ளன.

ஸ்ரீ மாதவாச்சாரியர்

மாதவர் உடுப்பிக்கு அருகில் உள்ள பாஜகா (பெள்ளே) கிராமத்தில் பிறந்தார்.

ஸ்ரீ மாதவாச்சாரியர்

துறவு மேற்கொண்ட பிறகு மாதவச் சாரியார் தம்முடைய போதனைகளை பரப்புவதற்காக இந்தியா முழுவதும் இரண்டு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இவர் விஷ்ணுவை வழிபடுபவர்.

துளு பிரமாணரான மத்யகேஹ பட்டா மற்றும் வேதவதி இவருடைய பெற்றோர்கள் ஆவர். இவர் த்வைத தத்துவங்களை பரப்பினார்.

மாதவச்சாரியரின் சீர்திருத்தங்கள்:

- மாதவச்சாரியர் சமஸ்கிருதத்தில் மத்வ தத்துவம் தொடர்பான பல படைப்புகளை இயற்றினார்.
- உடுப்பியில் ஸ்ரீ கிருஷ்ணரின் வழக்கமான பூஜைகளைச் செய்ய அவர் தனது எட்டு சீடர்களை நியமித்தார்.
- அவருடைய எளிய பக்தி மார்கத்தை மக்கள் பின்பற்றினர்.

கிருஷ்ணருடைய பூஜையை எட்டு மடங்களில் துறவிகள் 2 மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக செய்யவேண்டுமென மாதவச்சாரியர் ஒழுங்கு செய்தார். இத்தொடர்ச்சியின் கால அளவை ஸ்ரீவாதிராஜர் 2 ஆண்டு காலமாக விரிவுபடுத்தினார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

எட்டு மடங்களுடன் உத்தராதி, வியாஸராயர் மற்றும் ராகவேந்திர மடங்கள் மாதவர் தத்துவங்களைப் பின்பற்றுகின்றனர். அவைகள் தர்ம மையங்களாக அமைந்துள்ளன.

கருநாடகம், ஆந்திரா, தமிழ்நாடு, மஹாராஷ்டிரா போன்ற இடங்களில் மத்வாச்சாரியரின் போதனைகளால் மக்கள் ஈர்க்கப்பட்டனர்.

ஸ்ரீ கிருஷ்ணர் கோயில் உடுப்பி

பக்தி இயக்கம்

நம் தேசம் புனிதர்கள் மற்றும் முனிவர்கள் வாழ்ந்த நிலமாகும். நூற்றுக்கணக்கான துறவிகள் காலங்காலமாக இங்கு பிறந்துள்ளனர். அவர்கள் சமூக நல்லிணக்கம் பற்றி கூறி மக்களை சரியான பாதையில் நடக்க ஊக்குவித்தவர்கள். சமூக அவலங்களையும் வெளியே கொணடு வந்தார்கள்.

ஞானிகள் பக்தி அல்லது பக்தியின் பாதையைப் போதித்தார்கள். பக்தி ஒன்றே அவருடைய கருணையை பெறுவதற்கான ஒரே வழி என்று அவர்கள் நம்பினார்கள். கடவுளுக்கான இந்த முறையை ''பக்தி வழிபாட்டு முறை'' என்று அழைக்கப்படுகிறது.

பக்தி இயக்கத்தின் அம்சங்கள்:

- ''பக்தி வழிபாட்டு முறை'' உயர்ந்தவர்களுக்கும், தாழ்ந்தவர்களுக்கும் இடையிலான பாகுபாட்டை கண்டித்தது. எல்லா மனிதர்களும் சமம் என்று அறிவித்தனர்.
- பக்தி துறவிகள் தீய பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகளை எதிர்த்தனர்.
- சூஃபி துறவிகள் மதம் என்பது மனித குலத்திற்கான அனைத்து சேவைகளையும் நேசிப்பதைக் குறிக்கின்றன என அறிவித்தனர். அவர்கள் கடவுள் பலர் இல்லை ஒருவரே என்று நம்பினார்கள்.
- துறவிகள் மக்களின் இதயங்களை ஒன்றிணைக்கும் பணியை மேற்கொண்டனர்.

பக்தி புனிதர்கள்

ஸ்ரீ சைத்தன்யா: சைத்தன்யர் மேற்கு வங்காலத்தில் பிறந்தார். ஜாதி பாகுபாட்டை கண்டித்தார். பக்தி மட்டுமே கடவுளின் முக்தியை உணரும் பாதை என்று போதித்தார்.

அவரது போதனைகள் அன்பு, சகோதரத்துவம் மற்றும் தொண்டு ஆகியவற்றில் வேருன்றியிருந்தன. அவர் இந்தியா முழுவதும் அன்பின் செய்தியை பரப்பினார்.



ஸ்ரீ சைத்தன்யா

குருநானக்

குருநானக்: குருநானக் சீக்கிய மதத்தை நிறுவியவர். அவர் பஞ்சாபில் பிறந்தார். அவர் இந்து மதமும், இஸ்லாம் மதமும் பொதுவானவை என்பதை வலியுறுத்தினார். 'ஜப்ஜி' என்று அழைக்கப்படும் அவரது பாடல்கள் ''குரு கிரந்த சாஹிப்'' பில் உள்ளன. இது சீக்கியரின் புனித நூல் ஆகும். சீக்கிய மதக்கடவுளின் பெயரை உச்சரிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது, ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே உள்ள சமத்துவம் பற்றிய வினாவை நானக் எழுப்பினார். ''ராஜா மற்றும் தீர்க்கதரிசிகளை பெற்றெடுக்கும் பெண் ஆண்களை விட எப்படி தாழ்ந்தவர்களாக இருக்க முடியும்?'' எனக்கு ஒரு இலட்சம் நாவுகள் இருந்தாலும் அந்த எல்லா மொழிகளிலும் ஒரே கடவுளின் பெயரை உச்சரிப்பேன் என்று அறிவித்தார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

நானக் தனது பயணத்தின் போது கர்நாடாகாவிற்கு விஜயம் செய்தார். அவர் தங்கி இருந்த இடம் ''நானக் ஜாரா'' என்று அழைக்கப்படுகிறது.

மீராபாய்

மீராபாய் : புனித (துறவி) மீராபாய் : புனித துறவி மீராபாய் கலியுகத்தின் ராதா என்று போற்றப்படுபவர். சிறந்த பாடல்களை இயற்றியவர். அவர் ராஜஸ்தானில் உள்ள ராஜபுத்திரர்களின் அரச குடும்பத்தில் பிறந்தவர். தனது இளம் வயதில் அவள் தாத்தா கொடுத்த கிருஷ்ணரின் சிலையுடன் விளையாடுவதை மிகவும் விரும்பினார். அவர் அத்தை அதை ஏற்றுக்கொள்ளாததால் இதை தாங்க முடியாமல் அரண்மனையை விட்டு நிரந்தரமாக வெளியேறி மீரா கிருஷ்ணருடன் தொடர்புடைய புனிதஸ்தலமான பிருந்தாவனத்திற்குச் சென்றார். பக்தி உணர்வும், அன்பும் அவரது பாடல்களில் முதன்மையானவை. கிரிதர் கோபால், அவளது இதய தெய்வம் இன்றும் இந்தியா முழுவதும் பிரபலமான அவரது பஜனைகள் மூலம் கோடிக் கணக்கான மக்களின் இதயங்களில் மீராபாய் நிரந்தர இடத்தைப் பிடித்துள்ளார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பிற முக்கிய பக்தி துறவிகள்:

கபீர்தாஸ்: கபீர்தாஸ் சாதி அமைப்பு, சிலை வழிபாடு, புனிதயாத்திரை, நோன்பு, மற்றும் பிற மத சடங்குகளின் அநீதியை கண்டித்தார். அவர் தன்னை ''நான் அல்லா மற்றும் ராமரின் குழந்தை'' என அறிவித்தார்.

துளசிதாசர்: இவரது புகழ்பெற்ற காவியம் ''இராமசரிதமானசா'' ஆகும்.

சூர்தாசர்: இவர் மற்றொரு துறவி - கவிஞர். இவர் குருடராக பிறந்தார். ''சுர்சாகர்'' இவரது புகழ்பெற்ற கவிதை புத்தகமாகும்.

சூஃபி இயக்கம் : சூஃபி வழிபாட்டு முறை அரேபியாவில் இருந்தது, பின்னர் இந்தியாவில் பரவியது. சூஃபி துறவிகள் வறுமையின் அடையாளமான கரடுமுரடான கம்பளி ஆடைகளை அணிந்தனர். இதன் காரணமாக இவர்கள் சூஃபி என்று அழைக்கப்படுகின்றனர். படிபடியாக சூஃபிக்கள் யோக, வேதாந்தம் மற்றும் பௌத மதம் ஆகியவற்றால் கவரப்பட்டனர். அவர்கள் பலர் (உதாரணமாக பாபா பூடன்) தத்தாத்ரேயாவை வழிபடுபவர்கள். சூஃபி துறவி. விஜயபூர் புடன் அல்-தின்-பகவான் கிருஷ்ணரைப் புகழ்ந்து பாடல்களை எழுதினார்.

சூஃபிகள் மனித குலத்திற்கு அன்பும், சேவையும் வேண்டும் என்று போதித்தார்கள். அவர்கள் பாட்டு மற்றும் நடனம் மூலம் தங்கள் பக்தியை வெளிப்படுத்தினர். இந்த இரண்டு நடைமுறைகளும் மரபு வழி முஸ்லீம்களால் தடை செய்யப்பட்டன. சூஃபிக்களில் பெண்களும் இருந்தனர். சூஃபிக்களில் அனுயாயி ரபிஹா போன்றவர்கள் இன்றும் போற்ற தக்கவர்கள்.

நிஜாமுதின் அவுலியா : இந்தியாவின் முன்னனி சூஃபி துறவி ஆவார். அவர் தில்லியில் குடியேறி வறுமையில் வாடினார். ஓலைக்கூரையுடன் கூடிய மசூதியே அவரது செயல்பாட்டின் மையமாக இருந்தது. டெல்லி சுல்தான் வழங்கிய கிராமத்தை நிராகரித்த அவர் அரசியலில் இருந்து விலகிக் கொண்டார்.

நிஜாமுதின் அவுலியா

தன்னை காணவந்த பக்தர்களுக்கு நல்லிணக்கத்தையும் தயாள குணத்தையும் போதித்தார்.

பந்தே நவாஸ் : கர்நாடகாவின் ஒரு பிரபலமான சூஃபி துறவி ஆவார். அவரது புகழ்வாய்ந்த தர்கா கல்புர்கியில் உள்ளது. இவரை இந்துக்கள் பந்தேநவாஸை ''கேஷவ் சைதன்யா'' என்று அழைத்து அவரை வணங்கினர்.

சலீம் சிஸ்த்தி கல்லறை ஆக்ரா

சிஸ்தி : சிஸ்தி ஒரு முக்கியமான சூஃபி பிரிவு, அதனை நிறுவியவர் மொய்னுதீன் சிஸ்தி அஜ்மீரில் தனது மையத்தை நிறுவினார். ஒருவர் தன் குருவுக்கு பக்தியுடன் சேவை செய்தல், நல்வழியில்

©KTBS NOT TO BE REPUBLISHED

செல்வது ஆகியவை அவரை பின்பற்றுபவர்களின் பண்புகளாகும். இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தில், சிஸ்திகள் உண்மையான அக்கறை கொண்டிருந்தனர். அவர்கள் பிராந்திய மொழிகளில் எழுதினார்கள். ஃபதேபூரின் (ஆக்ராவில்) சலீம் ஒரு பிரபலமான சிஸ்தி.

பக்தி இயக்கத்தின் தாக்கம்:

- இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பக்தி துறவிகள் காரணமாக இருந்தனர்.
- பக்தி துறவிகள் உள்ளூர் மொழிகளில் இலக்கியங்களை இயற்றினர். இதன் விளைவாக இந்திய மொழிகள் வளம் பெற்றன.

காலவரிசை: (பொ.ச.)

சங்கராச்சாரியர்	:	பொ.ச. *8 - 9* ஆம் நூற்றாண்டு
இராமானுஜச்சாரியர்	:	பொ.ச. *11 - 12* ஆம் நூற்றாண்டு
பசவேஷ்வரர்	:	பொ.ச. *12* ஆம் நூற்றாண்டு
மத்வாச்சாரியர்	:	பொ.ச. *13 - 14* ஆம் நூற்றாண்டு
ஸ்ரீ சைத்தன்யர்	:	பொ.ச. *1486 - 1534*
குருநானக்	:	பொ.ச. *1469 - 1538*
மீராபாய்	:	பொ.ச. *1498 - 1546*
நிஜாமுதின் அவுல்ய	:	பொ.ச. *1238 - 1325*
மொய்னுதீன் சிஸ்தி	:	பொ.ச. *13* ஆம் நூற்றாண்டு
பந்தேநவாஜ்	:	பொ.ச. *15* ஆம் நூற்றாண்டு
சலீம் சிஸ்தி	:	பொ.ச. *16* ஆம் நூற்றாண்டு

புதிய சொற்கள் :

தீக்ஷை	-	மந்திர போதனை
கந்தாசாரா	-	கட்டுப்பாடு
ஜாரா	-	இனிமையான நீர் ஊற்று
களஞ்சியம்	-	கருவூலம்

தெரிந்து கொள்வோம் :

ஸ்ரீ சைத்தன்யா பிறந்த இடம், மேற்கு வங்காளத்தில் நவாத்வீப் (நதியா) குருநானக் பிறந்த இடம் : பாகிஸ்தானில் உள்ள தலவண்டி, மீராபாய் : ஜோத்பூரின் ராத்தோட் குடும்பத்தைச் சேர்ந்த ரத்தன் சிங்கனின் ஒரே மகள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பயிற்சிகள்

I. பொருத்தமான சொற்களை கொண்டு காலி இடங்களை பூர்த்தி செய்.

1. குரு நானக்கின் பாடல்களை ________ என்று அழைப்பர்.
2. சீக்கியர்களின் புனித நூல் ________ .
3. ராமானுஜாச்சாரியர் ________ இடத்தில் பிறந்தார்.
4. கலியுகத்தின் ராதை என்று ________ அவரை அழைப்பர்.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் :

5. சங்கராச்சாரியார் செய்த சீர்திருத்தங்கள் யாவை?
6. பசவேஸ்வரரின் போதனைகள் யாவை?
7. வசன இலக்கியத்தின் முக்கியத்துவம் யாது? சில வசனங்களின் பெயர்களை எழுதவும்.
8. பக்தி புனிதர்கள் என்ன உபதேசித்தார்கள்?
9. இந்தியாவின் முன்னணி சூஃபி துறவிகள் யார்?
10. பக்தி இயக்கத்தின் செல்வாக்கை எழுதவும்.
11. பந்தேநவாஜ் தர்கா எங்குள்ளது?
12. துளசிதாசரின் புகழ்பெற்ற காவியங்கள் யாவை?
13. குருநானக்கின் பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
14. பக்தி இயக்கத்தின் சாரம் என்ன?

III. குழுவில் விவாதித்து பதிலளி :

15. பக்தி இயக்கத்தின் போதனைகள்?
16. சமூக சீர்திருத்தவாதிகள் கொண்டுவந்த மாற்றங்களை குழுவில் விவாதிக்கவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

செயல்பாடுகள் :

1. ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ இராமாணுஜர் பசவேஷ்வரர் மற்றும் மாதவரின் வாழ்க்கை சரித்திரத்தை படிக்கவும்.

2. பசவேஷ்வரரின் ஏதேனும் 10 வசனங்களை சேகரிக்கவும்.

3. வசனகாரர்களின் பெயரையும், அவர்களின் புனைப்பெயர்களையும் சேகரிக்கவும்.

4. நீங்கள் ஆச்சாரியர்கள் புனிதர்கள் மற்றும் துறவிகள் போல் உடை அணிந்து பள்ளியில் விழாவின்போது மேடையில் அவர்களின் போதனைகளை கூறுங்கள்.

5. ''திருடாதே-கொல்லாதே'' வசனத்தில் காணப்படும் விழுமியங்கள் என்ன? இந்த விழுமியங்கள் நம் சமூகத்தில் நடைமுறையில் இருப்பதை காண்கிறோமா? விவாதிக்க.

6. சங்கராச்சாரியர், ராமானுஜாச்சாரியர், பசவேஷ்வரர் மற்றும் மாதவச் சாரியரின் போதனைகளை சேகரித்து எழுதுக.

7. பக்தி துறவிகளின் படத்தை விவரங்களுடன் சேகரிக்கவும்.

8. ஸ்ரீ சைதன்யா, குருநானக், மீராபாய், துளசிதாசர், கபீர், சூர்தாசர் மற்றும் சூஃபி ஆகியோரின் சுயசரிதத்தை படிக்கவும்.

9. மீராபாயின் பஜனைகளை கேட்கவும்.

10. இணையத்தில் இருந்து சூஃபிதத்துவத்தைப் பற்றிய கூடுதல் தகவல்களை கண்டறிந்து, இந்தியாவின் பல மதங்கள் சமூகத்தில் அவற்றின் செல்வாக்கு மற்றும் தற்போதைய சூழலில் அவற்றின் பொருத்ததைப் பற்றி விவாதித்து ஒரு பக்கம் அறிக்கையை தயார் செய்யவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

வட இந்தியாவின் புகழ்பெற்ற அரச குடும்பங்கள்

வ. எண்	ராஜ வம்சங்கள்	நிறுவியவர்	புகழ்பெற்ற அரசர்கள்	தலைநகரம்
1.	மௌரியர்கள்	சந்திர குப்த மௌரியர்	அசோக சக்ரவர்த்தி	பாடலி புத்திரா
2.	குஷாணர்கள்	குஜலகட் ஃபீஸ்	கனிஷ்கா	புருஷபுரா
3.	குப்தர்கள்	ஸ்ரீகுப்தர்	சமுத்ரகுப்தர்/2 ஆம் சந்திர குப்தர்	பாடலிபுத்திரா
4.	வர்தனர்கள்	புஷ்யபூதி	ஹர்ஷவர்தனர்	கனௌஜ்
5.	கார்கோட்டா வம்சம்	துர்லபவர்தனர்	லலிதாதித்தயா	பரிஹாஸபுரா
6.	ராஜபுத்திரர்கள்			
a)	குர்ஜராவின் பிரதஹாரர்கள்	ஹரிசந்திரா	நாகபட் டா/மஹிரபோஜா	உஜ்ஜயினி
b)	சௌஹானர்கள்	வாசுதேவ சௌஹான்	3ஆம் பிருத்விராஜ சௌஹான்	தில்லி
c)	பாலகர்கள்	சிம்ஹராஜா	தர்மபாலா	முடகாகிரி
d)	குஹிலர்கள் (கோகிலர்கள்)	பப்பா ரவால்	ராணா கும்பன்/ ராணா சங்கா	மேவார்
e)	பாரமாரர்கள்	உப்பேந்திர கிருஷ்ணராஜா	சியாகா	தாரா
f)	சோளங்கியர்கள்	1 ஆம் மூலராஜா	1 ஆம் பீமராயர்	அனஹீலவாடா
g)	சந்தேலர்கள்	நன்னுகா	டங்கா	கஜுராஹோ
7.	அஹோம்	சுகாபா	சுபாத்பா	சிராய்டாய்
8.	தில்லி சுல்தான்கள்			
a)	அடிமை வம்சம்	குதுப்புத்தீன் ஐபக்	இல்துமுஷ்	தில்லி
b)	கில்ஜி வம்சம்	ஜலாலுதீன் கில்ஜி	அலாவுதீன் கில்ஜி	தில்லி
c)	துக்ளக் வம்சம்	கியாசுத்தீன்	முகம்மது பின் துக்ளக்	தில்லி
d)	சய்யத் வம்சம்	கிஜர் கான்	கிஜர் கான்	தில்லி
e)	லூதி வம்சம்	பகுலோல் லூதி	சிக்கந்தர் லூதி	தில்லி
9.	முகலாயர்கள்	பாபர்	அக்பர்	தில்லி
10.	மராட்டியர்கள்	சிவாஜி	சிவாஜி	ராய்காட்

©KTBS NOT TO BE REPUBLISHED

குடிமையியல்

பாடம் **17**

ஜனநாயகம்

பாடப்பொருள் அறிமுகம்

முற்காலத்தில் நம் தேசத்தை மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். மன்னராட்சி அவர்களது கொள்கைகளாக இருந்தது. ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மாற்றங்களின் காரணங்களை அறிந்து கொள்வதோடு ஜனநாயகத்தின் முக்கியத்துவம், தேர்தல்களின் பங்கு மற்றும் தேர்தல் செயல்முறைகளை குறித்த கண்ணோட்டம் இப்பாடப் பொருளில் அடங்கியுள்ளது.

திறன்கள் :

1. முடியாட்சி (மன்னராட்சி) மற்றும் ஜனநாயகம் என்பதின் பொருள் மற்றும் வேறுபாடுகளை அறிந்து கொள்ளுதல்.
2. ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்.
3. ஜனநாயகத்தின் தேர்தலின் பங்கைக் குறித்தும் மேலும் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்.
4. தேர்தல் நடைமுறைகளை அறிந்து கொள்ளுதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பாட அணுகல்



1. இடதுப்புறத்திலுள்ள படத்தை கவனி, சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் யார்?
2. அவரின் அக்கம்பக்கத்தில் அமர்ந்திருப்பவர்கள் யார்?
3. வலதுப்பக்கத்தின் படத்திலுள்ள மனிதர் என்ன செய்கிறார்?
4. நீங்கள் எப்பொழுதாவது தேர்தலில் வாக்களித்தது உண்டா?

முன்னொரு காலத்தில் இரத்தினாபுரம் என்னும் பட்டணத்தை சந்திரஷ்யா என்னும் மன்னர் ஆண்டுவந்தார். அவரின் ராணி, ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தப்பின் மரணமடைந்தாள். சில காலம் சென்றப்பின் மன்னர் அரசவை நாட்டியப் பெண்மணியை மணந்தார். அவளுக்கு ஒரு ஆண் குழந்தைப் பிறந்தது. அண்ணன், தம்பி இருவரும் கல்விக்கற்று குருகுலத்தில் அறிவில் சிறந்து விளங்கினர் மன்னர் தம்முடைய இளம் வயதிலேயே மூத்த மகனுக்கு இளவரசர் பட்டத்தை அளித்தார். இதனால் தன் மகன் அரசனாவான் என்ற அரசவை நாட்டியகாரியின்ஆசை நிறைவேறாமல் போயிற்று. அவள் தன் மகனின் மனதில் தீய ஆலோசனைகளை விதைத்தாள். அரசு அதிகாரத்திற்காக அண்ணன் -தம்பியின் இடையே சண்டை மூண்டது. மன்னர் இக்கவலையிலேயே இறந்தும் போனார்.

அண்ணன் - தம்பியின் இடையில் உள்ள சண்டையினால் அரசு நிர்வாகம் சீர்குலைந்து போனது - மக்களின் பிரச்சினைகளைப் கேட்பாரில்லாமல் போயிற்று. கொலை, மிரட்டல்கள் அதிகரித்தது. இதனால் மக்கள் மிகவும் அவதிப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஒன்றுக்கூடி ராஜ்ஜியத்தை தாங்களே ஆட்சி செய்வதென்று தீர்மானம் கொண்டனர். அதற்குத் தேவையான சட்டங்களையும் வகுத்தனர். அச்சட்டங்களுக்கு அனைவரும் கீழ்படிய வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. இவ்வாறு இரத்தினபுரத்தில் 'மன்னராட்சி' முடிவுற்றது, மக்களாட்சி (ஜனநாயகம்) தோன்றியது.

1. மன்னர் இளவரசர் பட்டத்தை யாருக்கு அளித்தார்?
2. மன்னர் இறந்த பின்னர் இயல்பாக அரசாட்சியின் அதிகாரம் யாருக்கு கிடைக்கும்?
3. மன்னராட்சி காலத்தில் அதிகாரத்திற்காக உள்ளூர் கிளர்ச்சிகள் ஏற்பட்டால் உண்டாகும் தீமைகள் யாவை?
4. பரம்பரை முறையாக வரும் ஆட்சி / நிர்வாக்த்தை நீங்கள் விரும்புகிறீர்களா?

© KTBS NOT TO BE REPUBLISHED

மன்னராட்சி : மேலுள்ள கதையில் நாம் இரண்டு வகையான ஆட்சி முறைகளை அடையாளம் காணலாம். அவை மன்னராட்சி (முடியாட்சி) மற்றும் ஜனநாயக ஆட்சியாகும். அரசாங்கத்தின் சகல அதிகாரங்களும் ஒரே நபரின் கையில் இருந்தால் அதனை மன்னராட்சி என்பர். இதில் அனைத்தும் அரசனின் விருப்பப்படியே நடக்கும். அவரது ஆட்சிக்கு குறிப்பிட்ட ஒரு கால கட்டம் இருக்காது. ஒரு அறிவாளி மற்றும் தைரியசாலியான அரசனால் ராஜ்ஜியம் பலப்படும், குடிமக்களும் மகிழ்ச்சியாக இருப்பார்கள், ஆனால் ஒரு மதியீனம் மற்றும் பலவீனமான அரசனின் அரசாட்சி அவன் காலத்துடன் முடிவு பெற்று விடும்.

ஜனநாயகத்தின் பொருள்: குடிமக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்தலின் மூலம் தேர்தெடுத்து அவர்களால் நடைபெறும் அரசியல் அமைப்பை ''ஜனநாயகம்'' என்று அழைக்கப்படுகிறது. இது மக்களே அரசாங்கமாக இருப்பதால் குடிமக்கள் நலனை பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

முக்கியத்துவம் : ஜனநாயகம் என்பது ஒரு பிரபலமான அரசியல் அமைப்பு ஆகும். இதில் சில சிறப்பான அம்சங்கள் உள்ளன.

* குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே ஆட்சி செய்வர்.
* அனைவருக்கும் சமத்துவத்திற்கான வாயப்பு இங்கு அளிக்கப்படுகிறது.
* தேர்தல்கள் முறையாக நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியேர்ப்பார்கள்.
* பிரச்சினைகளை விவாதித்து மக்களின் நலன் கருதி, தீர்மானங்கள் எடுக்கப்படும்.
* ஜனநாயக நாட்டில் மக்கள் விவேகத்துடன் தீர்மானங்கள் எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

ஜனநாயகத்தின் சவால்கள் :

* சில சமயங்களில் பணம் மற்றும் ஆள் பலத்தை பயன்படுத்தி வாக்குகள் பெறப்படுகின்றன..
* தேர்தலில் சாதி, மதம், மொழிகளின் தாக்கங்கள் உள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED

* தேர்தலில் வெற்றிப் பெற்ற பிரதிநிதிகள் தங்களின் சுயநலத்திற்காக கட்சியை விட்டு வேறொரு கட்சியுடன் இணைந்து விடுவதுண்டு, இத்தகைய கட்சி மாற்றங்களினால் அரசாங்கம் (ஆட்சி) நிலைத்து நிற்காது.

* இந்த அமைப்பில் குண்டர்கள் குற்றவாளிகள் தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளது.

தேர்தல் :



வாக்களித்தல்

1. மக்கள் ஏன் வரிசையில் செல்கிறார்கள்?

2. நீ எப்பொழுதாவது இதுப்போன்ற நிகழ்வினை கண்டதுண்டா?

3. வாக்குச்சீட்டு அல்லது வாக்களிப்பு பெட்டகத்தின் மேல் சின்னங்கள் ஏன் அச்சடிக்கப்பட்டுள்ளது?

ஜனநாயகத்தில் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்தலின் மூலம் தேர்ந் தெடுக்கப் படுகிறார்கள். தேர்தல் முறையில் வாக்களிப்பது ஒரு முக்கிய அங்கமாகும். இந்தியாவில் பதினெட்டு மற்றும் அதற்கும் மேற்பட்டவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. வாக்காளர்கள் இரகசிய வாக்கெடுப்பதின் வாயிலாக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

வேட்பாளர்களுக்கு தேர்தல் சின்னங்கள் வழங்கப்படும் இச்சின்னங்களை பார்த்து படிப்பறிவு இல்லாதவர்கள் கூட வாக்களிக்கலாம்.

வாக்களிப்பின் முக்கியத்துவம்:

* குடிமக்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கு உதவுகிறது.
* அனைத்து தரப்பு மக்களும் பிரதிநிதியாக வருவதற்கு வாய்ப்பளிக்கிறது.

தேர்தல் நடைமுறைகள் :

* தேர்தல்கள், தேர்தல் அட்டவணைப்படி நடத்தப்படுகிறது.
* ஆரம்பத்தில் வேட்பாளர்களின் வேட்புமனு தாக்கல் செய்தல்.
* அரசாங்க அதிகாரிகள் வேட்புமனுவை பரிசீலிப்பர்.
* போட்டியிலிருந்து விலக விரும்பும் வேட்பாளர்களின், வேட்புமனுவை திரும்பப் பெறச்செய்தல்.
* தேர்தலுக்கான வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சாரம், கட்சித் தலைவர்களின் தேர்தல் பிரச்சாரம்.
* குறிப்பிட்ட நாளில் தேர்தல் நடத்துதல்.
* வாக்குகளின் கணக்கெடுப்பு மற்றும் தேர்தல் முடிவுகளை அறிக்கையிடுதல்.
* வெற்றிப்பெற்ற வேட்பாளர்களின் பட்டியல்களை வெளியிடுதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

புதிய சொற்கள் :

வாக்களிப்பு	-	தேர்தல் நேரத்தில் வாக்குச்சாவடிக்கு சென்று தங்களுக்கு விருப்பமான வேட்பாளரை தேர்தெடுத்து வாக்கு பதிவு செய்தல்.
பரம்பரை வம்சம் ஆட்சி	-	ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆட்சி செய்தல்.
வாக்குச் சீட்டு	-	வேட்பாளர்கள் பெயர் மற்றும் சின்னங்கள் அச்சடிக்கப்பட்ட வாக்குச் சீட்டு.

இரகசிய வாக்கெடுப்பு	-	தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரும் வாக்களர்கள் தேர்வு குறித்து இரகசியம் காக்கப்படுகிற அமைப்பு.
வாக்குச் சாவடி	-	ஒரு குறிப்பிட்ட பகுதியின் வாக்காளர்கள் சென்று வாக்களிக்கும் இடம்.

அறிந்து கொள்ளுங்கள்:

1. சமீபகாலமாக மின்னனு இயந்திரங்கள், வாக்குப்பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.
2. இந்தியாவில் தேர்தல் பணிகளை மேற்கொள்ளவதற்கு தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் சுதந்திரமாக செயல்படுகிறது.

பயிற்சிகள்

I விடப்பட்டுள்ள இடங்களை ஏற்ற சொற்களை கொண்டு நிரப்புக.

1. அனைத்து அதிகாரமும் ஒருவரிடத்தில் மட்டுமே இருந்தால் அது ________ஆட்சி.
2. வாக்களிப்பதற்கு ________ வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
3. வாக்களிக்கும் இடத்தை ________ என்பர்.

II கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவும்.

4. ஜனநாயகம் என்றால் என்ன?
5. ஜனநாயகத்தின் முக்கியத்துவம் என்ன?
6. ஜனநாயகத்தின் சவால்கள் என்ன?
7. வாக்களிப்பதன் முக்கியத்துவம் என்ன?

III குழுவில் கலந்துரையாடி விடையளிக்கவும் :

8. வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்ளுவதற்கான நடைமுறைகள்.
9. ஜனநாயக நாட்டின் வெற்றியில் நமது பங்களிப்பு.

செயல்பாடு:

இந்திய அரசியல் கட்சிகளின் சின்னங்களை சேகரிக்கவும், ஆல்பம் தயாரிக்கவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பாடம்

18

மாநில இயக்கத்தின் கொள்கைகள்

D8T8N8

பாட அறிமுகம்

நம் அரசியலமைப்பில் நான்காம் பகுதியின் 36 முதல் 51 வரையிலான பிரிவுகள் மாநில இயக்கத்தின் கொள்கைகளை விளக்குகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அரசியலமைப்பின் விருப்பங்களை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் இவை. இந்த பாடம் அவற்றின் விளக்கத்தையும் குறிப்பிடத்தக்க விவாதத்தையும் உள்ளடிக்கியுள்ளது.

திறன்கள் :

1. மாநில இயக்கத்தின் கொள்கைகளின் நோக்கங்களை அறிதல்.
2. மாநில இயக்கத்தின் கொள்கைகள், நல்ல மாநிலத்தை நிறுவுவதற்கு எவ்வாறு துணைபுரிகிறது என்பதை புரிந்துக் கொள்வர்.

@KTBS
NOT TO BE REPUBLISHED



ஏழைகளுக்கு சமூக நீதி

ஒரு வளமான அரசை நிறுவுவதற்கான அரசியலமைப்பின் நான்காவது பகுதியில் காந்தியவாதி சமூகவாதி மற்றும் தாராளவாதி அறிவுசார் கொள்கைகளை செயல்படுத்துவதற்கான அரசியலமைப்பின் வழிகாட்டும் கொள்கைகள், மாநில கொள்கையின் வழிகாட்டும் கொள்கைகளாகும். எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இந்த கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்பது அரசியலமைப்பின் தார்மீக உத்தரவு. இவைதான் இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றன.

மாநில கொள்கையின் வழிகாட்டுதல் கோட்பாடுகளின் முக்கியத்துவம் :

மாநில இயக்கத்தின் கொள்கைகள் மத்திய மற்றும் மாநில அவை அரசாங்கத்திற்கு அரசியலமைப்பு சட்டத்தால் கொடுக்கப்படும் வழிமுறைகளாகும். சட்டங்களை உருவாக்கும் போதும், கொள்கைகளை உருவாக்கும்போதும், நடைமுறைபடுத்தும் போதும், இந்தக்

கொள்கைகளை கடைப்பிடிப்பது அவசியம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடைவதற்கும், மகிழ்ச்சியான அரசை நிறுவுவதற்கும் மாநில இயக்கத்தின் கொள்கைகள் முக்கியமானது.

இந்தியக் குடியரசின் குடிமக்கள் பின்பற்ற சில வழிகாட்டுதல் கோட்பாடுகள் பின்வருமாறு :

1. *சமூக நீதி :* அரசு குடிமக்களுக்கு நியாயமான மற்றும் உறுதியான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதி வழங்கி மக்கள் நலனை காக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

2. **ஏழைகளுக்கு சமூக நீதி :** ஏழைகளுக்கு வாழ்வாதாரம் அளிப்பது. அவர்களின் பொருளாதார சுரண்டலை தடுத்து அவர்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் இலவச சட்ட உதவிகளை வழங்குதல் என்பதாகும்.

3. **பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்:** ஒரே வகையான வேலைக்கு ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமமான கூலி. பெண்களுக்கு பிரசவ வசதிகள் / சலுகைகள் குழந்தைகளை துன்புறுத்தத் தடை, சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குதல் மேலும் கட்டாய ஆரம்பக் கல்வியை வழங்குதல்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பெண் மற்றும் குழந்தை பராமரிப்பு

இலவச மற்றும் கட்டாயக் கல்வி

4. **தொழிலாளர் நலன்:** அரசு தொழிலாளர் நலனை கவனித்துக் கொள்வதும், வேலை வாய்ப்பு உரிமை, வேலை செய்ய வசதியான சூழல், தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமும், நிர்வாகத்தில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் வழங்குதல்.

தொழிலாளர் நலன்

உதவியற்றவர்களுக்கு உதவுதல்

5. **உதவியற்றவர்களுக்கு உதவுதல்:** வயதானவர், நோயாளி மற்றும் வேலையில்லாதவர்கள் உயிர்வாழ்வதற்கு ஒரு உறுதியான வாழ்வாதாரத்தை வழங்குவது அரசின் கடமையாகும்.

6. **அனைவருக்கும் சமமான உரிமை:** இந்தியாவின் எல்லா குடி மக்களுக்கும் சமமான குடிமையியல் சட்டம் நடை முறைபடுத்த வேண்டும்.

7. **மதுபானம் தடை:** மதுபானத்தினால் உடல் நலம் பாதிக்கிறது. குடும்பத்தின் பொருளாதார நிலை பாதிக்கப்படுகிறது. அதனுடன் பெண்களை துன்புறுத்துவது அதிகமாகிறது. இதற்காக நம் அரசியல் அமைப்பு மதுபான தடையை நடை முறைக்கு தரக்கோரி மாநில அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மதுபானம் தடை

கால்நடை வளர்ப்பு

8. **விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு அமைப்பு:** ''மாநிலம் விவசாயம் மற்றும் கால் நடை வளர்ப்பை நவீன மற்றும் அறிவியல் ரீதியில் அமைக்க முயற்சி செய்ய வேண்டும் மற்றும் குறிப்பாக விளைச்சலை பாதுகாத்து மேம்படுத்தவும், பசுக்கள் மற்றும் கன்றுகள், பால் கொடுக்கும் மற்றும் சுமை இழுக்கும் கால்நடைகளின் படுகொலையை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது'' என்று அரசியல் கொள்கையில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் கர்நாடக அரசு 2020 இல்

@KTBS NOT TO BE REPUBLISHED

கால்நடை படுகொலை தடை சட்டத்தை நடைமுறைப் படுத்தியது (கர்நாடகத்தை சேர்ந்து பல மாநிலங்களில் கால்நடை படுகொலை தடை சட்டம் நடை முறையில் உள்ளது. (Karnataka Prevention of Slaughter and Prevention of Cattle Act - 2020)



விவசாய வளர்ச்சி

நவீன விவசாயம்

9. **சுற்று சூழல் :** சுற்று சூழல் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி. எ.கா: சுரங்கதொழில் மற்றும் கைத்தொழில்கள் மூலம் உண்டாகும் சுற்றுச் சூழல் மாசடைதலைப் பாதுகாப்பது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

10. **வரலாற்று நினைவு சின்னங்களின் பாதுகாப்பு:** வரலாற்று நினைவு சின்னங்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். எ.கா: ஹம்பி பேலூர், ஹளேபீடு, பட்டதகல் முதலானவை.

11. சர்வதேச அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவது அரசின் மற்றுமொரு பொறுப்பாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

சமூக நீதி என்றால் என்ன?

சமூக நீதி என்பது, அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பளிப்பது மற்றும் சாதி, மதம், பாலினம், மொழி, நிறம், பிறந்த இடம் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் சமமாக நடத்துவதாகும். குறைந்த பட்ச ஊதியத்தை வழங்குதல், கொத்தடிமைத் தொழிலாளர்களை ஒழித்தல் மற்றும் குழந்தைகள் துன்புறுத்தலை தடை விதித்தல் மற்றும் பெண்களுக்கு சம உரிமை மற்றும் மரியாதை ஆகியவை சமூக நீதியின் கீழ் வருகின்றன.



துன்புறுத்தல்

அரசியலமைப்பு அரசுக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது. ஆனால் அவை மீறப்பட்டால், குடிமக்கள் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய இயலாது. (எ.கா: அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஏழு தசாப்தங்கள் (பத்தாண்டுகள்) கடந்துவிட்டன. இந்தியா முழுவதும் மது அருந்துவதை தடை விதிக்கமுடியவில்லை.

செயல்பாடு: மாநில வழிகாட்டும் கொள்கைகள் நம் மாநிலத்தில் எவ்வளவு அளவிற்கு நடைமுறைப்படுத்தப்பட்டது? இன்றும் பல வகையில் துன்புறுத்தல் நடந்துக் கொண்டே உள்ளது. இதன் அடிப்படையில் விவாத கூட்டத்தை ஏற்படுத்தி அதில் சேகரித்த கருத்துக்களை பட்டியல் செய்யவும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. மாநில கொள்கையின் வழிகாட்டுதல் கோட்பாடுகள் என்றால் என்ன?
2. பெண் மற்றும் குழந்தை பராமரிப்பு நிறுவுவதற்கு அரசியலமைப்பு மாநிலத்திற்கு எவ்வழி முறைகளை அளித்துள்ளது?
3. மாநில இயக்கத்தின் கொள்கைகள் கால்நடை படுகொலை தடை செய்ய வேண்டும் என்ற கொள்கையை ஏன் கொண்டுவந்தது?
4. மதுபான தடை அமல் படுத்த மாநிலத்திற்கு ஏன் வழி முறைகள் கொடுக்கப்பட்டுள்ளது?

குழுவில் கலந்துரையாடி பதிலளிக்கவும்.

1. ஏழைகளுக்கு சமூக நீதி.
2. மதுபானத் தடை.
3. வரலாற்று நினைவு சின்னங்களின் பாதுகாப்பு.
4. சிறுவர் கல்வி உரிமையை மேலும் மேம்படுத்துவதற்கு என்ன செய்யலாம்?

செயல்பாடுகள்:

1. உங்களை சுற்றிலும் உள்ள சமூகத்தில் காணப்படும் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பலவீனமானவர்களை கவனிக்கவும். அவர்கள் ஏன் பலவீனமாக இருக்கின்றனர் என்பதைப் பற்றி வகுப்பு தோழர்களுடன் கலந்துரையாடவும்.
2. இளைஞர்கள் மதுபானம் உட்கொள்வதும், போதை பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து கருத்தரங்கு ஏற்பாடு செய்து குழு விவாதம் நடத்தி கருத்துக்களை சேகரிக்கவும்.
3. ''சிறுவர் உரிமை'' குழந்தையின் அனைத்து வளர்ச்சிக்கும் மிக அவசியமானதாகும். அவைகள் மீறப்படும் நேரங்களில் சைல்ட் ஹெல்ப்லைன் (Child help line) 1098 என்ற எண்ணிற்கு அழைக்கலாம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா? இதைக் குறித்து விவாத கருத்தரங்கு ஒன்றை ஒழுங்குப்படுத்தி விவாதித்து கருத்துகளை சேகரிக்கவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

ஜஜஜஜ

பாடம் 19	மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள்

Q5F3D4

பாட அறிமுகம் :

மனித உரிமைகள் பொருள் மற்றும் முக்கியத்துவத்தை அறிமுகப் படுத்துதல் மேலும் நம் அரசியல் அமைப்பு இந்திய குடிமக்களுக்கு அளித்துள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை இந்த பாடத்தில் அறிமுகப்பட்டுள்ளது.

திறன்கள் :

1. மனித உரிமைகளின் பொருள் மற்றும் முக்கியத்துவத்தை அறிந்துக்கொள்வர்.
2. இயல்பான உரிமைகளுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்வர்.
3. குழந்தைகள் உரிமைகளின் மகத்துவத்தை அறிவர்.
4. இந்திய குடிமகனுக்கு அரசியல் அமைப்பு கொடுத்துள்ள அடிப்படை உரிமைகளை புரிந்துக் கொள்வர்.
5. அரசியல் அமைப்பில் சொல்லப்பட்ட பதினோரு அடிப்படை கடமைகளை அறிந்து தங்கள் வாழ்க்கையில் அவைகளை கடைப்பிடித்து நடக்கும் திறமை பெறுவர்.
6. ஒருவரின் உரிமைகள் பறிக்கப்படும் போது அவற்றை திரும்பப் பெறும் வழிமுறைகளைக் கண்டறிதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

உரிமைகள் என்றால் என்ன?

ஒரு குடிமகனுக்கு வழங்கப்படும் சலுகைகள் அவரது உரிமைகள், ''இயற்கை உரிமை'' யாக இருக்கலாம் (எ.கா - உயிர் வாழும் உரிமை, உயிர் பாதுகாப்புகான உரிமை) மேலும் 'சட்டபூர்வமான உரிமைகள் ஆக இருக்கலாம். (எ.கா - சமத்துவ உரிமை, கல்வி உரிமை).

மனித உரிமைகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையாகவே பிறப்பால் சில உரிமைகள் உள்ளன. இனம், ஜாதி, மொழி, மதம், பாலினம் அல்லது வேறு எந்தப் பண்பு குணாதிசயங்களைப் பொருட்படுத்தாமல்,

இந்த உரிமைகளை ஒவ்வொரு மனிதனும் பெற்றிருப்பான். இந்த உரிமைகளிலிருந்து யாரும் விலக்கப்பட முடியாது. மனிதனின் ஒரு பகுதியாவே இந்த உரிமைகள் நம் வாழ்வில் பொதிந்துள்ளன. அத்தகைய உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை மனித உரிமைகள் என்று அழைப்பதன் மூலம் மனித உரிமைகளுக்கு உலகளாவிய அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

மனித உரிமைகள் என்ற கருத்தின் தோற்றம் :

உலகின் அனைத்து தத்துவ தரிசனங்களும் மனிதனின் மேன்மையை பறைசாற்றியுள்ளன. மனிதன் இயற்கையின் குழந்தை உலகின் அனைத்து பழக்க வழக்கங்களுடனும் வாழ்ந்து, தனது சொந்த வாழ்க்கை முறையை உருவாக்கி கொண்டுள்ளான். ''பிறரை நம்மைப்போலவே பார்த்துக் கொண்டால் நமக்கு சொர்க்கம் கிடைத்தது போன்றாகும்.'' என்ற சர்வக்ஞரின் வசனத்திற்கு பின்னால் மனித உரிமைக்கு வேண்டுக்கோல் விடுப்பதை காணலாம். ஆனால் மனிதர்கள் பரிணாம வளர்ச்சியடைய, அவர்கள் புதியக் கண்டுப்பிடிப்புகளை செய்தார்கள். சுயநலம் வளரத்தொடங்கியது. இந்த பின்னணியில் ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், பாரபட்சமின்றி வாழ வேண்டும் என்ற விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மனித உரிமைகள் அறிவிப்பு தோன்றியுள்ளது. ஹெரால்ட் ஜே லாஸ்கியின் கூற்றின்படி ''நியாயமான, மனிதாபிமான சமூக நிலமைகளே மனித உரிமைகள்''.

சர்வதேச மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு :

மனித வரலாற்றில் கடந்த காலங்களில் பல்வேறு இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையிலான மோதல்கள் பெருமளவிலான மனிதர்களைக் கொன்றுள்ளன. 20 ஆம் நூற்றாண்டில் நடந்த இரண்டு மகா போர்களில் லட்சக்கணக்கான மக்கள் எரிந்து சாம்பலானார்கள், மேலும் ஏராளமான மக்கள் தங்கள் உயிரை இழந்தனர் என்பது வரலாற்றின் வஞ்ச புகழ்ச்சி. இவ்வாறான வன்முறைகள் மற்றும் பாகுபாடுகளை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் தொடங்கபட்ட ஐக்கிய நாடுகள் சபை, மக்கள் மனிதாபிமான அடிப்படையில் வாழ்வதற்கான வாய்ப்பை உருவாக்கும் வகையில், **1948** ஆம் ஆண்டு டிசம்பர் **10** ஆம் தேதி மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பை செய்தது.

©KTBS NOT TO BE REPUBLISHED

மனித உரிமைகளின் முக்கியத்துவம் :

1) தனிநபரின் அனைத்து வகையான ஆளுமை வளர்ச்சியையும் பூர்த்தி செய்கின்றன.

2) கண்ணியமான வாழ்க்கையின் அடித்தளமாக விளங்குகிறது.

3) மனிதாபிமானம் மற்றும் நீதியுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கும்.

4) தனிமனிதனுக்கும் அரசுக்கும் இடையே இணக்கமான உறவுக்கு ஒரு பாலமாக விளங்குகிறது.

5) உலகளாவிய வாழ்க்கைக்கு உயிர்நாடியாக உள்ளது.

மனித உரிமைகளின் முக்கியத்துவம்

மனித உரிமைகளில் குழந்தைகளின் உரிமைகளும் அடங்கும். ஒவ்வொரு குழந்தைக்கும் இயற்கையாகவே சில வசதிகள் உள்ளன. ஒவ்வொரு குழந்தையும் தனது குழந்தை பருவத்தை பெற்றோருடன் பெறுவதற்கு உடலின் பாதுகாப்பு, உணவு, கல்வி மற்றும் சுகாதார வசதிகளை பெறுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. மேலும் குழந்தைகளுக்கு இனம், பாலினம், நிறம், மதம் மற்றும் இயலாமை ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் சமூக உரிமைகளை குழந்தைகள் பெற்றிருப்பார்கள். இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வியை வழங்குகிறது. குழந்தைகள் கல்வி கற்பதிலிருந்து விலகி இருந்து, தொழிலில் ஈடுபட்டால் குழந்தைகளின் உரிமைகளை மீறுவதாகும் குழந்தை தொழிலாளர் என்பது மனித உரிமை மீறல்; தொழில் கூலிக்காகவோ அல்லது கூலி இல்லாத தொழிலாக இருந்தாலும் அது குழந்தை தொழிலாகக் கருதப்படுகிறது. குழந்தை தொழிலாளர் குழந்தைகளின் உரிமைகளுக்கு எதிரானது. அதனால் தான் 1986 ஆம் ஆண்டிலேயே குழந்தை தொழிலாளர் தடைச்சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தை மீறுபவர்கள் 3 மாதங்கள் முதல் 1 வருடம் வரையிலான சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப் படலாம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

மனித உரிமைகள் பாதுகாப்பு

இவ்வாறு மனித உரிமைகள் மற்றும் குழந்தை உரிமைகள் உருவாக்கப்பட்டு உள்ளூர் மட்டத்திலிருந்து உலகளாவிய மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் வரை இதற்காகவே செயற்பட்டு வருகின்றன. குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 1098 உதவி எண் திறக்கப்பட்டுள்ளது.

இதை தவிர, அனைத்து உயிரினங்களும் நல்வாழ்வு வாழ நல்ல மற்ற நிலையான சூழல் தேவை. மேலும் நல்ல ஆரோக்கியம், வீடு, உணவு, தண்ணீர் மற்றும் சுகாதார பாதுகாப்புடன் ஒரு விரிவான நல்ல சூழலைப் பாதுகாப்பதும் மனித உரிமைகளின் பாதுகாப்பாகும் என்பதை ஐக்கிய நாடுகள் சபை 2012 இல் அறிவித்தது. அதை செயல்படுத்துவது உலக நாடுகளின் முக்கிய பொறுப்பு மற்றும் கடமையாகும்.

அடிப்படை உரிமைகள்

அடிப்படை உரிமைகள் என்பது அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்ட மற்றும் பாதுகாக்கப்படும் உரிமைகள். இவை குடிமக்களுக்கு அளிக்கப்பட்ட அரசியலமைப்பு உரிமைகளாகும். இவைகளை யாரும் மீறுதல் கூடாது.

தனிமனிதனின் வளர்ச்சிக்கும் மற்றும் தேசத்தின் செழுமைக்கும் சில சுதந்திரங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள் இன்றியமையாதவை. அதனால் தான் அரசியலமைப்புச் சட்டம் குடிமக்களுக்கு உரிமைகளை வழங்கியுள்ளது.

அரசியலமைப்பு தேசத்தின் எல்லா குடிமக்களுக்கும் ஆறு அடிப்படை உரிமைகளை அளித்துள்ளது. அவை

1. சமத்துவத்திற்கான உரிமை
2. சுதந்திர உரிமை
3. துன்புறுத்தலை எதிர்க்கும் உரிமை
4. மத சுதந்திரத்திற்கான உரிமை
5. கலாச்சாரம் மற்றும் கல்வி உரிமை
6. அரசியலமைப்பு தீர்வுகளுக்கான உரிமை

NOT TO BE REPUBLISHED @KTBS

***1.* சமத்துவத்திற்கான உரிமை:** சட்டத்தின் முன் அனைவரும் சமம். யாரும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்ற கொள்கை சமத்துவத்திற்கான உரிமையில் அடங்கும்.



சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள்

©KTBS NOT TO BE REPUBLISHED

சமத்துவத்திற்கான உரிமையானது மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் அனைத்து குடிமக்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவாதம் அளிக்கிறது. கடைகள், பொது உணவகங்கள் மற்றும் பொது பொழுது போக்கு அணுகல் தொடர்பாக எந்த குடிமகனும், எந்த கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தப்பட மாட்டார்கள். பொது கிணறு, குளம், சாலை மற்றும் ஓய்வு இடங்களைப் பயன்படுத்த எந்த தடையும் இருக்கக் கூடாது. அரசாங்க வேலைக்கு சேர எல்லா குடிமகனுக்கும் சமமான உரிமை உண்டு. பொது வழிபாட்டு தலங்களில் அந்தந்த மதத்தினர் சென்று பிரார்த்தனை செய்வதை தடுக்கக் கூடாது.

சமத்துவத்திற்கான உரிமையின் பின்னணியில், பாலின சிறுபான்மையினரின் உரிமைகளை மதிக்க சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. உதாரணமாக இந்திய அரசு பாலின

சிறுபாண்மையினரின் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தை இயற்றியுள்ளது. 2019 மற்றும் கர்நாடக அரசின் பாலின சிறுபான்மை மாநிலக் கொள்கை பொ.ச.2017 ல் நடைமுறைப்படுத்தப் பட்டது.

2. சுதந்திரத்திற்கான உரிமை : அரசியலமைப்பு சட்டம் ஆறு சுதந்திர உரிமைகளை வழங்கியுள்ளது. அவை

1. பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம்.
2. அமைதியாக கூடும் சுதந்திரம்.
3. சங்கங்களை நிறுவும் சுதந்திரம்
4. இந்தியா முழுவதும் கட்டுப்பாடு இல்லாமல் பயணிக்கும் சுதந்திரம்.
5. இந்தியாவின் எல்லாப் பகுதியிலும் வசிக்கும் சுதந்திரம்.
6. எல்லா வகையான தொழிலை, பணியை. வியாபாரத்தை செய்யும் சுதந்திரம்.

பேச்சு சுதந்திரம்

NOT TO BE REPUBLISHED @KTBS

செயல்பாடு: பேச்சு சுதந்திரம் எவ்வளவு முக்கியமாக உள்ளது? இன்று நாம் அதை தவறாக பயன்படுத்துகிறோம் இதைக் குறித்து ஒரு கருத்தரங்கு நடத்தி ஒரு அறிக்கையை தயாரிக்கவும்.

சுதந்திரம் என்பது அடிப்படை உரிமை என்றாலும் அதை மனம் விரும்பும்படி செயல்படுத்த முடியாது. சில நேரங்களில் தனி மனித சுதந்திரத்தின் மீது அரசு கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்பதை அரசியலமைப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. எ.கா: பேச்சு சுதந்திரம் உள்ளது என்று பிறரை பற்றி தகாத முறையில் பேசக் கூடாது.

3. துன்புறுத்தலுக்கு எதிரான உரிமை: பெண்கள், குழந்தைகள், நலிவடைந்தவர்களை துன்பப்படுத்த கூடாது என்பது இந்த உரிமையின் நோக்கம் ஆகும். துன்புறுத்தலை தடுக்க மத்திய மாநில அரசுகள் பல சட்டங்களை இயற்றியுள்ளன. உதாரணமாக - வரதட்சணை பெறுவது தண்டனைக்குரியது. அடிமைத்தனம் தடை செய்யப்பட்டது, சுரங்கத்தொழில், பீடி தயாரிப்பு, பட்டாசு தயாரிப்பு மாதிரியான அபாயமான வேலைகளில் சிறுவர்களை ஈடுபடுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. சிறுவர் தொழிலாளர்களை அரசு தடை செய்துள்ளது. அவர்கள் பதினான்கு வயது வரை கட்டாயமாக கல்வி கற்க வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளை கடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

குழந்தை தொழிலாளர் தடை செய்யப்பட்டுள்ளது

4. மத சுதந்திரத்திற்கான உரிமை: ஒவ்வொரு குடிமகனுக்கும் அவரவர் மதத்தை பின்பற்றும் உரிமை உள்ளது. பொது ஒழுக்கம், கொள்கை மற்றும் சுகாதாரம், பிற விதிகளுக்கு உட்பட்டு இறையியலை கடைப்பிடிக்க அனைவருக்கும் உரிமை உண்டு. வலுக்கட்டாயமாக ஏமாற்றியோ கவர்ந்திழுத்தோ யாரையும் வேறு மதத்திற்கு மாற்றக் கூடாது என்பதை அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.



மத சுதந்திரம்

@KTBS NOT TO BE REPUBLISHED

5. கலாச்சாரம் மற்றும் கல்வி உரிமை: இந்த அடிப்படை உரிமையின் நோக்கம் மதம் மற்றும் மொழி சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதாகும். எந்தவொரு மக்களுக்கும் மொழி, எழுத்து அல்லது கலாச்சாரத்தை பாதுகாக்கும் உரிமை உண்டு. சிறு பான்மையினருக்கு கல்வி நிறுவனங்களை நிறுவவும் நிர்வகிக்கவும் உரிமை உண்டு. ஆனால் மொழி மற்றும் மத சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் மாநில விதிமுறைகளை கடைபிடிக்கவேண்டும்.

@NBS NOT TO BE REPUBLISHED

கலாச்சாரம் மற்றும் கல்வி உரிமை

6. அரிசியலமைப்பு தீர்வுக்கான உரிமை: ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது நீதி மன்றத்தில் புகார் செய்யலாம். இந்த உரிமையை ''அரசியலமைப்பு தீர்வுக்கான உரிமை'' என்பர்.

அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால், அதனால் பாதிக்கப்பட்டவர் நேரடியாக நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தை நாடி இழப்பீடை பெறலாம். அடிப்படை உரிமைகளுக்காக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் மனுக்கலை 'ரிட்மனு' என்பர்

அடிப்படை கடமைகள்

அடிப்படை உரிமைகளும் கடமைகளும் ஒரே நாணயத்தின் இரு முகங்கள் போன்றவை. ‘‘கடமை’’ என்பது ஒரு நபர் தனது தேசத் திற்காக செய்ய வேண்டிய பொறுப்பு. குடிமக்கள் தங்கள் அடிப்படை கடமைகளை சுய ஆர்வத்துடன் முன்வந்து செய்தால் நாடு வேகமாக முன்னேறுவதை காணலாம்.

அரசியலமைப்பில் பதினொரு அடிப்படைக் கடமைகள் கொடுக்கப் பட்டுள்ளன. அவை பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது.



அரசியலமைப்பு, தேசியக்கொடி மற்றும் தேசிய கீதத்தை கௌரவித்தல்

1. அரசியலமைப்பு, தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்தை கௌரவித்தல்.

2. சுதந்திர இயக்கத்தின் உயர்ந்த இலட்சியங்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

3. இந்தியாவின் ஒருமைப்பாட்டை பாதுகாத்தல்.

4. தாய்நாட்டைப் பாதுகாத்தல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

தேசத்தை பாதுகாத்தல்

5. இந்தியர்களான நாம் அனைவரும் சகோதரர்கள் என்ற எண்ணத்தை வளர்ப்பது.

நாம் எல்லோரும் இந்தியர்கள்

6. நமது வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் வரலாற்று நினைவு சின்னங்களை பாதுகாப்பது.

7. இயற்கை சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு

8. அறிவியல் மனப்பான்மை மற்றும் ஆராய்ச்சி செய்யும் உணர்வை வளர்த்தல்.

9. பொது சொத்துக்களைப் பாதுகாத்தல்.

10. தனிநபர் தனது சிறப்பை அடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

11. 6 வயது முதல் 14 வயதுவரை உள்ள குழந்தைக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாயப்புகளை வழங்குதல் வேண்டும்.

NOT TO BE REPUBLISHED @TNTBS

செயல்பாடு: 'சுற்றுச் சூழல் பாதுகாப்பில் இன்று மாணவர்களின் பங்கு' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஏற்பாடு செய்து கருத்துக்களை சேகரியுங்கள்.

ஒரு குடிமகன் தனது அடிப்படை கடமைகளைச் செய்யத் தவறினால் அரசு அதை சட்டப்பூர்வமாக செயல்படுத்த முடியாது ஆனால் முன்னேற்றத்திற்காக அனைத்து குடிமக்களும் தானாக முன்வந்து அடிப்படைக் கடமைகளைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களைக்கொண்டு விடப்பட்டுள்ள இடங்களை நிரப்புக :

1. உரிமை என்றால் __________ .
2. அடிப்படை உரிமைகள் __________ உண்டு.
3. குழந்தை தொழிலாளர்கள் தடைச் சட்டம் __________ ஆண்டு நடை முறைக்கு கொண்டு வரப்பட்டது.
4. நமது மொழி பண்பாட்டை பாதுகாக்க நமக்கு __________ உரிமை வாய்ப்பளித்துள்ளது.

II. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

5. மனித உரிமை என்றால் என்ன ?
6. குழந்தைகள் உரிமையை பட்டியலிடுக.
7 அடிப்படை உரிமைகள் என்றால் என்ன? அவை யாவை?
8. நாம் ஏன் தானாக முன்வந்து அடிப்படைப் கடமைகளை செய்ய வேண்டும்?
9. சமத்துவ உரிமை என்றால் என்ன?
10. சமூக மற்றும் பொருளாதார சுரண்டல் எவ்வாறு நடை பெறுகிறது? எடுத்துக் காட்டுகளை தரவும்.
11. ஏதேனும் மூன்று அடிப்படைக் கடமைகளைக் குறிப்பிடவும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

III. குழுவில் கலந்துரையாடி பதிலளிக்கவும் :

12. அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம்.

13. பள்ளி வளாகத்தில் மாணவர்கள் செய்ய வேண்டிய கடமைகள்.

14. மனித உரிமையின் முக்கியத்துவம்.

15. குழந்தைகள் உரிமையின் முக்கியத்துவம்.

செயல்பாடுகள்:

1. அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் குறித்து மாணவர்களிடமிருந்து இரண்டு நிமிட விரிவுரை செய்ய வைப்பது.

2. குடிமக்கள் அடிப்படைக் கடமைகளைக் கடை பிடிக்காத நிகழ்வுகளை குறித்து மாணவர்கள் சொல்வது (எ.கா ஊரின் பொது ஏரியில் கழிவுகளை வீசுதல், பழங்கால கோட்டைக் கற்களை ஒவ்வொன்றாக திருடுவது, வாக்குரிமையைப் பயன்படுத்துவதில்லை).

@KTBS
NOT TO BE REPUBLISHED

பாடம்
20

தேசிய ஒருமைப்பாடு

N4Q2W7

பாட அறிமுகம்

இந்த பாடத்தில் தேசிய ஒருமைப்பாடு, இந்தியாவின் பன்முகத்தன்மை, வேற்றுமையில் ஒற்றுமை மற்றும் தேசிய ஒற்றுமையை பற்றி அறிமுகப்படுததுகிறது. தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் காரணிகள் மற்றும் சிக்கலாக்கும் காரணிகளை குறித்து விவாதிக்கப்படுகின்றன.

திறன்கள் :

1) தேசிய ஒருமைப்பாட்டை புரிந்துக்கொள்வது.
2) தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தைப் பாராட்டுதல்.
3) இந்திய பன்முக தன்மையை அறிந்து பெருமை கொள்ளுதல்.
4) பன்மையுடன் ஒற்றுமையின் அவசியத்தை அறிவது.
5) தேசிய ஒருமைப்பாடு மற்றும் வளர்ச்சிக்கு பங்களிக்கும் காரணிகளை கண்டறிதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

தேசிய ஒருமைப்பாட்டின் பொருள்: தேசிய ஒருமைப்பாடு என்பது ஒரு இனம் மற்றொரு இனத்தை அல்லது ஒருவர் மற்றொருவர் மீது வெறுப்பு, பொறாமை மற்றும் பாரபட்சம் பார்க்காமல், தேசத்தின் மக்கள் அனைவரும் ஒன்று என்ற உணர்வுடன் இருப்பதே தேசிய ஒருமைப்பாடு.

மற்றவர்களை மதிக்கவும், ஒருவருக்கொருவர் நட்புடன் இருப்பது. நாமனைவரும் தேசமென்னும் ஒரே குடும்பத்தின் சம உறுப்பினர்கள் என்ற எண்ணத்தை கொண்டிருப்பது, சாதி, சமயம், பிரிவு, மதம், பாலினம், என்ற பாகுபாடின்றி, ஒரு தேசத்தின் மக்களனைவரும் ஒன்றே என்னும் எண்ணத்தை உருவாக்குவதே தேசிய ஒருமைப்பாடு.

ஒரு வலுவான தேசத்தை உருவாக்க இத்தகைய தேசிய உணர்வை அனைவரிலும் உருவாக்குவது அவசியம் இந்தியர்கள் அனைவரும் ஒன்றே என்னும் உணர்வை வலுப்படுத்துவதே தேசிய ஒருமைப்பாடு.

முக்கியத்துவம் : ஒரு தேசத்தின் மக்களிடையே ஒற்றுமையை உருவாக்க ஒருமைப்பாடு தேவைப்படுகிறது. தேசத்தின் நலனை அடைய தேச மக்கள் ஒற்றுமை உணர்வை வளர்த்துக் கொள்வது அவசியம். நாட்டின் ஒட்டுமொத்த சகோதரத்துவம் மற்றும் சமத்துவத்திற்கு தேசிய ஒருமைப்பாடு ஒரு முக்கிய உந்துதலாக மாறுகிறது.

இந்தியாவின் பன்முகத்தன்மை:- இந்தியா பன்முகத்தன்மை கொண்ட நாடு. இந்தியாவின் பன்முகத்தன்மை, இயற்கை பன்முகத்தன்மை, உயிரிகளின் பன்முகத்தன்மை மற்றும் மனித வாழ்க்கை பன்முகத்தன்மை ஆகியவற்றில் வெளிப்படுகிறது.

இயற்கை பன்முகத்தன்மை: இந்தியாவில் மிக உயர்ந்த மலைத்தொடர்கள், நீளமான ஆறுகள் மற்றும் பரந்த சமவெளிகள் உள்ளன. இதேப்போல் மிகவும் குளிரான மற்றும் வெப்பமான பகுதிகள் உள்ளன. சுடும் பாலைவனமும் இங்கு உள்ளது. அடர்ந்த காடு, குளுமையான ஏரி, துள்ளி குதிக்கும் நீர்வீழ்ச்சி, மனதைக்கவரும் கடற்கரை பகுதி, நூற்றுக்கணக்கான குட்டித்தீவுகள் இவை இயற்கை நமக்கு கொடுத்த பரிசுகள்.

உயிரிகளின் பன்முகத்தன்மை : இந்தியாவின் உயிரிகளின் பன்முகத்தன்மை மகத்தானது. உலகில் ஒரு சில நாடுகளில் மட்டுமே இத்தகைய பன்முகத்தன்மை உள்ளது.

> இதுவரை 47,000க்கும் மேற்பட்ட தாவர இனங்கள் கண்டறியப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளன. சுமார் 90,000 வெவ்வேறு வகையான விலங்குகள் உள்ளன. அவைகளில் 1,232 வகையான பறவைகளும், 2546 வகையான மீன்களும் உள்ளன. பன்முகத்தன்மை உடைய உயிரிகளின் பெருக்கம் இந்தியாவின் மதிப்புமிக்க சொத்து.

NOT TO BE REPUBLISHED @KTBS

மக்களின் பன்முகத்தன்மை : பரந்த இந்தியாவில் பல்வேறு வகையான சமூகங்களை சேர்ந்த மக்கள் உள்ளனர். அவர்களின் தோற்றம், உடலமைப்பு, மொழி, உடை, உணவு, நடத்தை, பழக்க வழக்கங்கள் மற்றும் மதங்கள் வேறுபட்டவை. வகைவகையானவை. நம் மக்களின் வாழ்வின் அழகைக் கண்டு சுவைக்க இந்தியாவை சுற்றி வரவேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமை:- பன்முக கலாச்சாரம் என்பது வெவ்வேறு மொழிகள் கலாச்சாரங்கள் மற்றும் மதங்களில் நம்பிக்கை கொண்ட மக்களை குழுவாகக் கொண்டது. இந்தியா பன்முகத்தன்மை கொண்ட நாடு பொ.ச. 2023 ஏப்ரல் 21 அன்று வெளியிடப்பட்ட

ஐக்கிய நாடுகளின் மக்கட் தொகை நிதி (UNITED NATIONS POPULATION FUND) அறிக்கையின்படி பொ. ச. 2023ன் நடுப்பகுதியின் காலத்தில், உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக சீனாவை இந்தியா முந்திவிடும். உலகில் மக்கள் தொகையில் இது இராண்டாவது இடத்தில் உள்ளது. நாம் புவியியல் ரீதியாக வேறுப்பட்ட நாடு. பிராந்திய மொழியில் பேசி சமூக வாழ்வில் கலந்துக் கொள்ளலாம். எனவே, இந்தியாவில் இந்த வேறுபாடுகளுடன் வாழும் மக்கள் ''ஒற்றுமையின் காரணமாக வேற்றுமையில் ஒற்றுமை காணமுடியும். வெவ்வேறு மொழி, கலாச்சாரம், மதங்களில் நம்பிக்கை கொண்டிருக்கும் பன்முக கலாச்சார மக்கள் இங்கு வாழ்கின்றனர். பல்வேறு மதங்களை கொண்ட நமது தேசத்தில் ஒவ்வொரு குடிமகனும் தனக்கு விருப்பமுள்ள மதத்தை பின்பற்ற முடியும். ஒரு தேசத்தில் வாழும் மக்கள் இந்த பல வேறுபாடுகளில் ஒற்றுமையுடன் இருப்பதால், வேற்றுமையிலும் ஒற்றுமை காணமுடியும். பன்மைத்துவம் நமது அரசியலமைப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பன்மைத்துவம் ஒருமைப்பாட்டிற்கு ஒரு போதும் ஆபத்தானது அல்ல, ஆனால் ஆதரவுமிக்கது.

இந்தியாவில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் காரணிகள் :

1. **மதசார் பின்மை :** இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு, மதங்களுக்கு நல்லிணக்கம் உள்ளது. இங்கு அனைத்து மதங்களுக்கும் சம வாய்ப்பு இருப்பதால், இது தேசத்தின் ஒற்றுமையை ஊக்குவிக்கிறது.

2. **மக்களாட்சி :** இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இங்கு சாதி, மதம், பிரிவு, பாலினம், அடிப்படையில் பாகுபாடு செய்யக் கூடாது மற்றும் ஆண்-பெண் பாகுபாடு இன்றி வாக்களிக்கும் உரிமை இருக்க வேண்டும் என்ற கொள்கையை அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த அம்சம் தேசத்தின் ஒற்றுமைக்கு ஆதரவாக உள்ளது.

3. **தேசிய விழாக்கள் :** இந்தியர்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக தேசிய பண்டிகைகளை கொண்டாடுவதால், தேசிய ஒற்றுமையை மேம்படுத்த உதவுகிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

4. **நமது தேசிய சின்னங்கள் :** தேசிய சின்னம், தேசிய கீதம், தேசியக் கொடி, தேசிய மலர், தேசிய பறவை மற்றும் தேசிய விலங்கு போன்ற நமது தேசிய சின்னங்களும் நம்மை அடையாளப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

5. **ஒன்றுக்கொன்று சார்ந்திருத்தல் :** மத்திய மற்றும் மாநில அரசுகள் பொதுவான நோக்கங்களின் மூலம் செயல்படுகின்றன. நாட்டின் ஒவ்வொரு பகுதியும் மற்ற பகுதியை சார்ந்து உள்ளது. முழுமையாக தன்னிறைவு பெறவில்லை. நாம் அனைவரும் அதே தேசத்தை சேர்ந்தவர்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

இதை தவிர இயற்கைக் காரணிகள், தகவல் தொடர்பு வலையமைப்பு, சமூக ஊடகங்கள், பல்வேறு கலாச்சாரங்கள், பிராந்தியவாதம், மதம், மொழி போன்ற பிற காரணிகள் இருந்தாலும் முழு தேசத்தின் மக்கள் ஒன்று என்ற ஒருமைப்பாட்டை காணலாம்.

தேசிய உணர்வு மற்றும் ஒருமைப்பாட்டை பாதிக்கும் காரணிகள் :

1) **சாதிவெறி :** சாதிவெறி என்பது ஒருவரின் ஜாதியை மற்ற சாதிகளுக்கு எதிராக நிலைநிறுத்துவதாகும். சாதிவெறி என்பது ஒருவரின் சொந்த சாதி உயர்ந்தது மற்றவை தாழ்ந்தவை என்ற மேலாதிக்கம். சாதிவெறி ஒற்றுமைக்கு எதிரானது இன்று சாதிவெறி அனைத்து துறைகளையும் உள்ளடக்கியுள்ளது. இதன் காரணமாக, குறுகிய உணர்வு வளர்ந்து வருகிறது. அதனால் நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் சாதிவெறி ஒரு தடையாக உள்ளது.

2) **மதவெறி :** மத மேலாதிக்கத்திற்கான மோதலில் ஈடுப்படுவது அல்லது வன்முறையில் ஈடுப்படுவது மதவெறி அல்லது வகுப்புவாதம் என்று அழைக்கப்படுகிறது. வகுப்புவாதம் அமைதியைக் குலைக்கிறது. இதனால் உயிர் மற்றும் உடமைகள் சேதம் அடைகிறது. அதுமட்டுமின்றி மக்களிடையே நட்பையும், நம்பிக்கையையும் பாழாக்கும். பல்வேறு மதத்தினரிடையே நல்லிணக்கம் இல்லாததால் வகுப்புவாதம் ஒரு பிரச்சனையாக மாறியுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றதிற்கும் மதவெறி தடையாக உள்ளது.

© KTBS NOT TO BE REPUBLISHED

3) பிராந்தியவாதம் : தேசிய ஒருமைப்பாட்டிற்கு தடையான மற்றொரு காரணி பிராந்தியவாதம். ஒரு நபர் தனது பிரதேச த்தில் கொண்டிருக்கும் ஒருதலைப்பட்ச விசுவாசத்தின் உணர்வு பிராந்திய வாதம் அரசியலமைப்பு சட்டத்தின்படி நாம் வெவ்வேறு மாநிலங்களை ஒன்றுக்கூடிய அமைப்பாக இருப்பதால் பிராந்திய மொழி, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் மற்றும் நிர்வாகங்களின் இருப்பு முக்கியமானது. எனவே ஒருமைப்பாட்டுக்கு அச்சு றுத்தலான குறுகிய பிராந்தியவாதம் ஆரோக்கியமற்றது. ''நாம் முதலில் இந்தியர்கள் பிறகு ஒரு மாநிலம் அல்லது பிரதேசத்தை சேர்ந்தவர்கள்,'' என்பதை அறிந்துக்கொள்ள வேண்டும். பிரதேச ங்களாக இருப்பதை தனிமைப்படுத்தப்படக் கூடாது. பின்னர் அது தேசிய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் பிராந்திய ஏற்றத்தாழ்வை போக்குவதற்கான வாய்ப்புகள் அரசியலமைப்பிலேயே வழங்கப்பட்டுள்ளன. இந்த பின்னணியில் தான் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் நிவிர்த்தி செய்ய கல்யாண கர்நாடகாவுக்கான *371* (ஜெ) ஐ அங்கீகரித்தது. தெலுங்கானா தனி மாநிலமாக அறிவிக்கப்பட்டதை வைத்து அடையாளம் காண்போம்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையூறு விளைவிக்கும் சாதிவெறி, மதவெறி மற்றும் குறுகிய பிராந்தியவாதம் போன்ற காரணிகளை மிதித்து நின்றால் தேசிய ஒருமைப்பாடு மேம்படுத்த முடியும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. தேசிய ஒருமைப்பாடு என்றால் என்ன?

2. பன்முகம் அல்லது பன்முக கலாச்சாரம் என்றால் என்ன?

3. இந்தியாவில் ஒற்றுமைக்கு பங்களிக்கும் காரணிகளை பட்டியலிடுக.

4. சாதியமைப்பு ஒற்றுமைக்கு தடைக்கல்லாக இருக்கிறது - விவாதிக்கவும்.

II. குழுவில் கலந்துரையாடி பதில் கூறுக :

தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்த எந்த குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்?

செயல்பாடுகள்

1. இன்று இந்தியாவில் ஒருமைப்பாடு என்ற கண்ணோட்டத்தில் பல பிரச்சினைகள் இருப்பதை நாம் அறிவோம். இதற்கான காரணங்கள் என்ன? அதை எப்படி சரி செய்வது? தேசத்தில் ஒருமைப்பாட்டை எப்படி உருவாக்க முடியும்? ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்து ஆலோசனைகளை பட்டியல் செய்யவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் **21**

தேசிய சின்னங்கள் மற்றும் தேசிய விழாக்கள்

U1G6Y9

பாட அறிமுகம்

இந்த பாடத்தில் தேசியக் கொடி, தேசியச் சின்னம் தேசிய கீதம், தேசிய விழாக்கள் தேசிய அணி, தேசிய விலங்கு, தேசிய பூ, மற்றும் கொண்டாட்டங்கள் குறித்து அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

திறன்கள் :

1. தேசியக்கொடியின் சிறப்பைப் புரிந்துக் கொள்வர்.
2. தேசியச் சின்னங்களின் விவரங்களை மற்றும் முக்கியத்துவத்தை புரிந்துக் கொண்டு பாராட்டுதல்.
3. தேசியகீதம் மற்றும் தேசிய அணியின் பின்னணி மற்றும் அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வது.
4. தேசிய விழாக்கள் மற்றும் கொண்டாட்டத்தின் நாட்களின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வர்.

NOT TO BE REPUBLISHED @KTBS

தேசிய சின்னங்கள் : பொதுவாக ஒரு நாடு அதன் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் தனித்தன்மையை பிரதிபலிக்கும் சில சின்னங்களை பயன்படுத்துகிறது. அவை தேசிய சின்னங்கள் என்பர். முக்கியமாக தேசியக்கொடியும் தேசிய சின்னமும் ஒரு நாட்டின் முக்கிய தேசிய அடையாளங்கள் ஆகும். அதேப்போலவே ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் சொந்த தேசிய கீதம் உள்ளது. சில நாடுகளில் தேசிய விலங்கினங்கள், தேசிய பறவைகள் மற்றும் தேசிய மலர்கள் உள்ளன. இவை குடிமக்களிடையே தேசபக்தி மற்றும் ஒருமைப்பாடு உணர்வுகளை ஊக்குவிக்கின்றன.

நம் தேசியக்கொடி

‘கொடி’ என்பது ஒரு தேசத்தின் சின்னம் ஆகும். இது சுதந்திரம், தேசபக்தி, ஒற்றுமை மற்றும் விசுவாசத்தின் அடையாளமாக உள்ளது . கொடி கம்பத்தில் உயரமாக பறப்பதை பார்க்கும் பொழுது ஒவ்வொரு குடிமகனின் உள்ளமும் பெருமிதம் கொள்கிறது.

சுதந்திர இந்தியாவின் மூவர்ணக் கொடியின் விளக்கம்: நமது கொடி மூன்று நிறங்களைக் கொண்டது கொடியின் மேலே காவி, நடுவில் வெள்ளை, கீழே பச்சை நிறமும் உள்ளன. வெள்ளை நிறத்தின் நடுவில் கரு நீல வண்ண சக்கரம் உள்ளது. சக்கரத்தில் 24ஆரங்கள் உள்ளன. சக்கரத்தின் விட்டம் வெள்ளை பட்டியின் அகலத்திற்கு சமமாக உள்ளது.

தேசியக் கொடி

தேசிய கொடி

கொடி செவ்வக வடிவில் உள்ளது. இருப்பினும் அதன் உயர அகல விகிதம் 3 : 2 ஆகும். மூன்று வண்ண பட்டியல்கள் சம அளவில் உள்ளன கொடியின் துணி பருத்தி மற்றும் பட்டு ஆக இருக்க வேண்டும். அதோடு அது கையால் நெய்ததாக இருக்க வேண்டும். அதன் நூல் கையினால் சுற்றப்பட்டதாக இருக்க வேண்டும்.

தேசியக் கொடியின் சிறப்பு:

நம் தேசியக் கொடியின் வண்ணங்கள் என்ன சொல்கின்றன? காவிநிறம் தன்னலமற்ற தன்மை மற்றும் தியாகத்தை குறிக்கிறது. வெள்ளை நிறம் உண்மை, அமைதி மற்றும் தூய்மையை குறிக்கிறது. பச்சை நிறம் பசுமை செழிப்பான பூமியைக் குறிக்கிறது. விவசாயம் மற்றும் தொழில் வளத்தின் செழிப்பைக் குறிக்கிறது.

இந்தச் சக்கரம் சாரநாத்தின் அசோக தூணில் உள்ள சக்கரத்தின் பிரதியாகும். அசோக சக்கரம் 'தர்மச்சக்கரம்' ஆகும். இது தொடர்ச்சியான இயக்கத்தின் சின்னமாகவும் உள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED

தேசியக் கொடியின் குறியீடு

- கொடி அசுத்தமாக இருக்கக்கூடாது. கிழிந்திருக்க கூடாது.
- ஏற்றும் போது எப்போதும் காவிநிறம் மேலே உள்ளவாறு ஏற்றவேண்டும்.
- தேசியக் கொடியின் உயரத்திற்கு வேறு எந்தக் கொடியையும் பறக்க விடக்கூடாது.
- கம்பத்தின் விளிம்பு வரை மேலேற்றி பறக்கவிட வேண்டும்.
- சூரிய உதயத்திற்கு பிறகு எப்போதும் கொடியை பறக்கவிட வேண்டும். சூரிய அஸ்தமனத்திற்கு முன் கீழே இறக்கி மடித்து வைக்க வேண்டும்.
- தேசிய துக்க நாட்களில் கொடியை அரை கம்பத்தில் பறக்க விட வேண்டும்.
- கொடியை வலது கையில் பிடித்து நடக்கவேண்டும்.
- கொடியை தரையில் இறக்கக்கூடாது.
- பிளாஸ்டிக் கொடியைப் பயன்படுத்தக்கூடாது.

நமது தேசிய கீதம் (Our National Anthem)

NOT TO BE REPUBLISHED @KTBS

'ஜனகனமன' இந்தியாவின் தேசியகீதம். இது ரவீந்திரநாத் தாகூர் என்பவரால் பொ.ச.1911 இல் பெங்காலி மொழியில் உருவாக்கப்பட்டது. இந்த நீண்ட பாடலின் முதல் 5 சரணங்கள் தேசிய கீதம் என்று அரசியலமைப்புச் சபையில் 24 ஜனவரி பொ.ச. 1950 அன்று அங்கீகரித்தது. இக்கீதத்தை 52 வினாடிகளில் பாட வேண்டும். சில நிகழ்வுகளில் சுருக்கமாக பாடல் சரணத்தில் முதல் மற்றும் கடைசி வரிகள் மட்டுமே பாடப்படும். இது சுமார் 20 விநாடிகளில் பாடலாம்.

தேசிய கீதத்திற்கு மரியாதை செலுத்துவது ஒவ்வொரு இந்தியனின் கடமையாகும், ஆனால் பாடுவதைத் தடுப்பதோ அல்லது அவமதிப்பதோ சட்டபடி குற்றமாகும்.

* தேசிய கீதத்தை நின்று கொண்டு பாட வேண்டும்.
* சரியான உச்சரிப்புடனும், இசையுடனும் பாட வேண்டும்.

நமது தேசியப் பாடல் (Our National Song)

நம் அரசியலமைப்பில் தேசிய கீதத்திற்கு இணையாக கருதுவது தேசிய பாடல் 'வந்தே மாதரம்' ஆகும்.

''வந்தே மாதரம்'' என்ற பாடலை இயற்றியவர் பங்கீம்சந்திர சாட்டர்ஜி. அவரது நாவல் ''ஆனந்தமடம் நாவலில்''இல் வரும் பாடல், சுதந்திர போராட்டத்தின் போது தேசிய கீதம் என்று அந்தஸ்தைப் பெற்றது. தேசபக்தி நிறைந்த மக்கள், தேசத்தை காக்க தங்கள் உயிரைக் கொடுத்து, இறுதி மூச்சுவரை ''வந்தே மாதரம்'' என்று பாடியது உண்டு.

நமது தேசிய சின்னம்

தேசிய சின்னம்

நமது தேசிய சின்னத்தை உற்று கவனிக்கவும். இது அசோகரின் சாரநாத்தின் கல்வெட்டின் (மேல் பாகத்தில்) செதுக்கப்பட்டுள்ளது. அதில் சிங்கங்கள் இருப்பதால் இதை 'சிங்கஸ்தூபி' என்பர். சாரநாத்தின் சிங்கஸ்தூபி தேசிய சின்னம் ஆகும்.

அசல் சிற்பத்தில் நான்கு சிங்கங்கள் ஒரு பீடத்தில் நான்கு திசைகளிலும் ஒன்றையொன்று முதுகைகாட்டி நிற்கின்றன. பீடம் வட்டமானது. அதன் நான்கு திசை களிலும் ஒவ்வொரு சக்கரம் உள்ளது. அந்த சக்கரங்களுக்கிடையே யானை, காளை, குதிரை, சிங்கங்களின் உருவம் உள்ளது. பீடத்தில் உள்ள சக்கரத்தை 'தர்மசக்கரம்' என்று அழைப்பர். நம் தேசியகொடியின் வெள்ளை பட்டியலின் நடுவில் இச்சக்கரத்தின் சின்னம் உள்ளது.

இந்திய அரசு நமது தேசிய சின்னத்தை 26 ஜனவரி 1950 அன்று ஏற்றுக் கொண்டது. படத்தில் மூன்று சிங்கங்கள் மட்டுமே காணப்படுகின்றன. பீடத்தின் கீழே தேவநகரி எழுத்தில் எழுதப்பட்ட ''சத்யமேவஜெயதே'' (வாய்மையே வெல்லும்) என்று தூணில் முண்டக உபநிடதத்தின் வாக்கியமுள்ளது.

NOT TO BE REPUBLISHED @KTBS

தேசிய விலங்கு, பறவை மற்றும் மலர்

புலி நமது தேசிய விலங்கு. மயில், இந்தியாவின் தேசிய பறவை. தாமரை, நமது தேசிய மலராகும்.

தேசிய விலங்கு புலி

தேசிய பறவை மயில்

தேசிய மலர் தாமரை

தேசிய நாட்காட்டி: இந்தியா முழுவதும் பலவகையான நாட் காட்டிகள் பயன்பாட்டில் உள்ளன. தினசரி பயன்பாட்டிற்கு, தேசம் முழுவதும் ஒரே மாதிரியான நாட்காட்டி இருக்க வேண்டும். என்ற நோக்கத்தில் பொ.ச.1957 மார்ச் மாதம் 22 ஆம் நாள் 'தேசிய நாட்காட்டி' நடைமுறைக்கு வந்தது. புகழ் பெற்ற விஞ்ஞானி மறைந்த மேகநாதன் நாட்காட்டியை தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.தேசிய நாட்காட்டியானது, நூறு ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கிறிஸ்தவ ஆண்டுக்கு 78 ஆண்டுகளுக்கு பிறகு தொடங்குகிறது. தேசிய நாட்காட்டியின் படி ஆண்டின் முதல் மாதம் சைத்ர மாதம். ஆண்டு தொடக்கம், பொதுவாக மார்ச் 22 லீப் ஆண்டில் இது மார்ச் 21 அன்று தொடங்குகிறது. இந்திய அரசாங்கம், அதன் தகவல் தொடர்பு மற்றும் பதிவுகளில் தேசிய மற்றும் கிறிஸ்துவ நாட்காட்டிகளின் படியே தேதிகளைப் பயன்படுத்துகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

தேசிய விழாக்கள்

நாடு முழுவதும் ஒரே மாதிரியாக கொண்டாடப்படும் பண்டிகைகள் தேசிய விழாக்கள் எனப்படும்.

குடியரசு தினவிழா: 1950 ஜனவரி 26 தேதியன்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அதை நினைவு கூரும் வகையில் ஜனவரி 26, ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது. பல்வேறு துறைகளில் நாட்டிற்கு சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு அன்றைய தினம் விருதுக்கள் வழங்கப்படுகின்றன. முக்கிய விருந்தினர்கள் முன்னிலையில் குடியரசுத் தலைவர் கொடி ஏற்றிய பின் ஊர்வலம்

தொடங்கும். நாட்டின் தலைநகரான புது தில்லியில் நடக்கும் ஊர்வலம் பிரம்மாண்டமானது. அனைத்து மாநில தலைநகரங்களிலும் முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

குடியரசின் அணிவகுப்பு

@KTBS NOT TO BE REPUBLISHED

சுதந்திர தினம் : நம் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் *15* ஆம் நாள், சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. டெல்லி செங்கோட்டையில் சிறப்பு விழா ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது முதன் முதலில் இந்தியாவின் மூவர்ணக் கொடி இங்கு தான் ஏற்றப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் *15* ஆம் தேதி காலை செங்கோட்டையில் நாட்டின் பிரதமர் கொடியேற்றிவைப்பார்.அதன் பின் கூடியிருக்கும் மக்கள் மத்தியில் நாட்டைக் குறித்து உரையாற்றுவார். நாடு முழுவதும் சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது எல்லா நகரங்களிலும், கிராமங்களிலும் கொடியேற்றம், கொடி வணக்கத்துடன் நடைபெறும்.

காந்தி ஜெயந்தி : மோகன்தாஸ் கரம்சந்த் காந்திஜி உலகில் 'மகாத்மா' என்று போற்றப்படுகிறார். அவரது தலைமையில், இந்திய சுதந்திரப் போராட்டம் ஒரு புதிய உத்வேகத்தைப் பெற்றது.

மகாத்மா காந்தி

நாடு முழுவதும் காந்தியின் பிறந்த நாள் அக்டோபர் 2 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. உலக அமைப்பும் மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் தேதியை சர்வதேச அகிம்சை தினமாக அறிவித்துள்ளது. நமது முன்னைய பிரதமர் ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்த நாள் இதே நாளில் தான் கொண்டாடப்படுகிறது.

நினைவு நாள் கொண்டாட்டங்கள்

அம்பேத்கர் ஜெயந்தி: சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பை உருவாக்கிய வரைவுக் குழுவின் தலைவரான பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கரின் பிறந்தநாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 ஆம் தேதி அம்பேத்கார் ஜெயந்தியாகக் கொண்டாடப்படுகிறது. உலக அமைப்பும் டாக்டர் பி. ஆர். அம்பேத்கரின் பிறந்த நாள் (ஏப்ரல் 14) அறிவியல் தினமாக அறிவித்தது. சமூக சுதந்திரம் இல்லாத அரசியல் சுதந்திரம் அர்த்தமற்றது என்று டாக்டர் பி. ஆர் .அம்பேத்கர் உறுதியாக நம்பினார். சாதி பாகுபாடுகளை ஆராய்ந்து அதன் அழிவுக்கான போராட்டங்களை வகுத்தார். 'மஹத்' மற்றும் 'காலாராம்' இயக்கங்களை உருவாக்கினார். அவர் மூன்று வட்ட மேஜை கூட்டங்களில் பங்கேற்று மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கினார்.

Dr. B.R. அம்பேத்கர்

© KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர் தினம் : இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் எஸ். ராதாகிருஷ்ணன் ஒரு சிறந்த அறிஞர் மற்றும் ஆசிரியர் ஆவார். இந்த உன்னத தத்துவஞானியின் நினைவாக இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. இவர் கருநாடகத்தின் மைசூர் பல்கலைகழகத்தில் பணிப்புரிந்தார்.

Dr. S. **ராதாகிருஷ்ணன்**



ஜவஹர்லால் நேரு

குழந்தைகள் தினம் : இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 ஆம் நாள் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. நேரு இயற்கை ஆவலர். சிவப்பு ரோஜா அவருக்கு பிடித்த மலர் ஆகும். பண்டித் ஜவஹர்லால் நேரு ஹோம் ரூல் இயக்கத்துடன் சுதந்திர போராட்டத்தில் நுழைந்தார். பொ.ச.1929ல் லாகூர் கூட்டத்தின் தலைவராக இருந்தார். தொழில்மயமாக்கல் மற்றும் புதிய இந்தியாவின் சிற்பியாக இந்தியாவின் பிரதம மந்திரியாக இருந்த நேரு அவர்களை நாம் பார்க்கிறோம் - சுதந்திரத்திற்கு பிறகு அவர் ஐந்தாண்டு திட்டங்கள் மற்றும் வெளியுறவு கொள்கை மற்றும் சீரமைப்பு மற்றும் பஞ்சசீல கொள்கைகளின் ஆதரவாளராக இருந்தார்.

சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் : தேசிய இளைஞர் தினம் : சுவாமி விவேகானந்தர் (பொ.ச 1863-1902) இளைய தலை முறையினரை ஊக்குவிப்பதன் மூலம், முழு தேசத்தையும் ஒரு புதிய திசையை நோக்கி அழைத்துச் சென்றார். மதங்களின் பெயரால் பின்பற்றப்படும் குருட்டு நம்பிக்கையை அகற்றி, ராமகிருஷ்ணா மிஷனை நிறுவினார். அதன் மூலம் முற்போக்கான சிந்தனைகளைப்

©KTBS NOT TO BE REPUBLISHED

பரப்பினார். துறவு வாழ்க்கைக்கு சமூக சேவையின் புதிய பரிமாணத்தை வழங்கியவர் சுவாமி விவேகானந்தர். ''ஏழைகள், அஞ்ஞானிகள், படிப்பறிவற்றவர்கள் மற்றும் நோயாளிகள் - இவர்களே உங்கள் கடவுளாக இருக்கட்டும். இவர்களின் சேவையே உயர்ந்த மதம் என்பதை தெரிந்து கொள் என்று சுவாமிஜீ அழைப்பு விடுத்தார்.

அவரது பிறந்த நாளை இளைஞர் தினம் என்று (ஜனவரி 12) மத்திய அரசு அறிவித்துள்ளது. கர்நாடக அரசு இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய திட்டங்களை அறிவித்துள்ளது.

கர்நாடக ராஜ்யோத்சவா நவம்பர் 1 : பம்பாய், மதராஸ் மற்றும் ஹைதராபாத் மாகாணங்களில் உள்ள கன்னட பகுதிகளையும் மற்றும் குடகு மாகாணம், மைசூர் மகாணம் ஒன்றிணைத்து கூடி பொ.ச.1956 நவம்பர் 1 ஆம் தேதி அன்று கன்னட மாநிலம் உருவாக்கப் பட்டது. இதை மைசூர் மாநிலம் என்று அழைத்தனர். இதை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1ஐ கர்நாடக ராஜ்யோத்சவ நாள் என்று கொண்டாடப்படுகிறது. 1973 நவம்பர் 1ஐ அப்போது முதல் அமைச்சராக இருந்த தேவராஜ அரஸ் மைசூர் மாநிலத்தை ''கர்நாடக மாநிலம்'' என்று மறுபெயரிட்டார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. ஏற்றச் சொற்களைக் கொண்டு விடுப்பட்டுள்ள இடங்களை நிறப்புக.

1. நமது தேசிய கொடியில் உள்ள வெள்ளை நிறம் ____________ குறிக்கிறது.
2. தேசியப் பாடலை இயற்றியவர் ____________.
3. மைசூர் மாநிலத்தை கருநாடகம் என ____________ ஆண்டு பெயர் சூடினர்.
4. சிவப்பு கோட்டையின் மேல் ____________ தேசிய கொடியை ஏற்றுவார்.

II. **கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும் :**

5. நமது தேசிய சின்னங்கள் யாவை?

6. தேசிய கொடி குறியீட்டில் உள்ள காரணிகள் என்ன?

7. தேசிய விழாக்கள் யாவை?

8. பள்ளிக் கூடத்தில் கொண்டாடப்படும் சில நினைவு நாட்களை குறிப்பிடுக.

செயல்பாடுகள்

1. வெவ்வேறு நாடுகளின் தேசியக் கொடிகளை சேகரிக்கவும்.
2. வேறு வேறு நாடுகளின் தேசிய கீதத்தை கேளுங்கள்.
3. தேசியப் பாடலை முழுவதுமாக மனப்பாடம் செய்யுங்கள்.
4. உங்கள் ஊரில் கொண்டாடப்படும் ஊர் பண்டிகைகளை தெரிந்துக் கொள்ளுங்கள்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

புவியியல்

பாடம் 22	ஆசியா கண்டம்

M9X8V7

பாட அறிமுகம்

ஆசியா கண்டத்தின் இருப்பிடம், பரப்பளவு மற்றும் இயற்கை அமைப்பு, அதன் பிரிவுகள், இயற்கையின் தனிச்சிறப்புகள், முக்கிய நதிகள், மற்றும் விவசாயம் தட்ப வெப்ப நிலை மற்றும் தாவரங்கள், முக்கிய கனிம வளங்கள், மக்கள் தொகை பெருக்கம், அதன் பங்கீடு மற்றும் செறிவு பற்றிய அறிமுகம்.

திறன்கள் :

1. ஆசியா கண்டத்தின் இருப்பிடம், பரப்பளவு, இயற்கை அமைப்பு மற்றும் சிறப்பைப் பற்றி அறிவீர்.
2. நில அமைப்பின் பிரிவுகள் மற்றும் அவற்றின் இடையேயுள்ள ஒற்றுமைகளை அறிவீர்
3. ஆசியாவின் முக்கிய இயற்கை அமைப்புகளைப் பற்றி விவரங்களை அறிவீர்.
4. நதிகள் மற்றும் விவசாயம் இடையேயுள்ள தொடர்பை அறிந்து கொள்வீர்.
5. தட்ப வெப்ப நிலை மற்றும் இயற்கைத் தாவரங்களின் இடையே உள்ள தொடர்பைப் பற்றி அறிவீர்.
6. முக்கிய கனிவளம் அதன் விநியோகம், மக்கட் தொகை பரவல் மற்றும் நெருக்கம் பற்றி அறிவீர்.

NOT TO BE REPUBLISHED @KTBS

1. இடம், பரப்பளவு மற்றும் நிலஅமைப்பு

அறிமுகம் : உலகத்திலுள்ள கண்டங்களில் ஆசியா மிகவும் பெரியது. எனவே, அதனுடைய இயற்கை அமைப்புகள், தட்ப வெப்ப நிலை, தாவர இனங்கள், காடுகள், மண் முதலியவற்றில் பன்முகத் தன்மை உள்ளது. இக்கண்டத்தில் மிக உயரமான மலைகள், பீடபூமிகள், வளமான சமவெளி பாலைவனங்கள், நதி அமைப்பு மற்றும் நீர்வீழ்ச்சிகள் உள்ளன. மொழி, மதம், மக்கட்தொகை பங்கீடு மற்றும் மக்கட்தொகை நெருக்கத்திலும் நாம் பன்முகத்தன்மையைக் காணலாம். எனவே ஆசியாவை ஒரு ''மாறுபட்ட கண்டம்'' என்று அழைப்பர்.

செயல்பாடு: ஆசியா கண்டம் ஒரு மாறுப்பட்ட கண்டம் என்று அழைக்கப்பட காரணங்கள் என்னவென்பதை குழுக்களில் கலந்துரையாடுக. மேலும் நில வரைப்படத்தை முன்னால் வைத்துக் கொண்டு கலந்துரையாடவும்.

இருப்பிடம்: ஆசியா கண்டம் 1^{0} - 16' வடக்கிலிருந்து 77^{0}-41' வடக்கு அட்சரேகை மற்றும் 26^{0}-04 கிழக்கிலிருந்து 169^{0}-40' மேற்கு தீர்க்கரேகை வரை பரவியுள்ளது. மலேசியாவின் தென்பகுதியின் சிறிது பாகத்தில் பூமத்திய ரேகையும், இந்தியா மற்றும் அரேபியாவின் நடுவே கடக ரேகைகளும் செல்கின்றன.

பரப்பளவு : ஆசியாவின் மொத்த பரப்பளவு சுமார் 44 மில்லியன் சதுர கிலோ மீட்டர்களாகும். இது உலகத்தின் மேற்பரப்பளவில் 33% வரையுள்ளது. ஆசியா முழுவதும் வடஅரைக்கோளத்தில் உள்ளது.

@KTPS
NOT TO BE REPUBLISHED



உலகளவில் ஆசியாவின் இருப்பிடம்

இயற்கை அமைப்பு : ஆசியா கண்டத்தின் மூன்று பக்கங்கள், பெருங் கடல்களாலும் ஒரு பக்கம் நிலத்தாலும் சூழப்பட்டுள்ளன. வடக்கே ஆர்டிக் பெருங்கடலும், கிழக்கே பசிபிக்பெருங்கடலும், தெற்கே இந்துமகா சமுத்திரமும் உள்ளன. மேற்கில் ஐரோப்பா கண்டம் உள்ளது.

ஐரோப்பா மற்றும் ஆசியாவை இணைத்து யுரேஷியா என்பர்.

ஆசியா மற்றும் ஐரோப்பா கண்டங்களைப் பிரிக்கும் பாரம்பரிய கற்பனை எல்லைக் கோடு பல வளைவுகளாலானது. அது யூரல் மலைகள், காஸ்பியன் கடல், ககாசஸ் மலை மற்றும் கருப்பு கடலினூடே செல்கிறது.



ஆசியாவின் இருப்பிடம் மற்றும் நிலஅமைப்பு

ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களின் எல்லைக்கோடு பொதுவாக சூயஸ் கால்வாய் வழியாகவும், ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவின் எல்லைக்கோடு நியூகினி மற்றும் ஆஸ்திரேலியாவினிடையே செல்கிறது.

2. ஆசியாவின் நிலப்பகுதி பிரிவுகள்

இன்று ஆசியாவில் 48 நாடுகளுள்ளன. அவற்றை கீழ்காணும் 5 நில அமைப்புகளாகப் பிரிக்கலாம்.

1. ***கிழக்கு ஆசியா :*** இதில் சீனா, வடக்கு மற்றும் தென்கொரியா, ஜப்பான், ஹாங்காங், தைவான் மற்றும் மங்கோலியா நாடுகள் சேரும். இது வடக்கே பரந்த உருசியா, தெற்கே தென் ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் இடையே பரந்துள்ளது.

2. ***தென்கிழக்கு ஆசியா :*** இது மயன்மார், லாவோஸ், வியட் நாம், தாய்லாந்து, கம்போடியா, மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், ப்ரூன்ஹே மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளை உள்ளடக்கும். இது ஒரு தீபகற்பம் மற்றும் பல தீவுக்கூட்டங்களின் பிரதேசமாகும். எ.கா: சுமத்திரா, ஜாவா, சுலாவேசி, போர்னியோ, பாபுவா முதலியன. இதன் மேற்குப்பகுதியில் இந்து மகா சமுத்திரம் மற்றும் கிழக்கே பசிபிக் பெருங்கடல் உள்ளது.



ஆசியாவின் நிலப் பகுதிப் பிரிவுகள்

3. ***தென் ஆசியா :*** இது இந்தியா, வங்காள தேசம், பூடான், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை மற்றும் மாலத்தீவுகளை உள்ளடக்கும். இவற்றில் இந்தியா மிகப்பெரியது. தெற்கே இந்து மகா சமுத்திரமும் துணை பிரிவுகளான வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடலும் சூழ்ந்துள்ளன. வடக்கே இமயமலைத்தொடர், கிழக்கே மயான்மார் மற்றும் மேற்கே ஆப்கானிஸ்தான் உள்ளன.

4. **தென் மேற்கு ஆசியா :** ஆப்கானிஸ்தான், பஹ்ரேன், சைப்ரஸ், ஈரான், ஈராக், இஸ்ரேல், ஜோர்டான், குவைத், லெபனன், ஓமன், கத்தர், சிரியா, பாலஸ்தீனம், சௌதி அரேபியா, அரபிய எமிரேட்ஸ், ஏமன் மற்றும் துருக்கிய நாடுகள் இப்பகுதியைச் சேரும். இந்தப்பகுதி கருப்புக் கடலின் தென்பகுதியில் உள்ளது. இது மேற்குத் திசையில் மெடிட்டரேனியன் கடல் மற்றும் கிழக்கு திசையில், இந்தியாவினிடையே பரந்துள்ளது. இது பெரும்பாலும் பாலைவனம் மற்றும் அரைப் பாலைவனங்களினால் சூழப்பட்டிருந்தாலும், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிபொருட்களினால் வளமை பெற்றுள்ளது.

5. **மத்திய ஆசியா :** இது காஸ்பியன் சமுத்திரத்திலிருந்து சீனா வரையிலும், கஜகிஸ்தானிலிருந்து ஈரான் - ஆப்கானிஸ்தான் வரையிலும் பரந்துள்ளது. இந்தப் பகுதியின் முக்கிய நாடுகள், கஜகிஸ்தான், கிர்கிஸ்தான் தஜகிஸ்தான், டர்கீனிஸ்தான், உஜ்ஜேகிஸ்தான் மற்றும் சைபீரியா (ரஷ்யா) ஆகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

3. இயற்கை அமைப்புகள்

ஆசியாவின் இயற்கை அமைப்புகளில் உயரமான மலைத்தொடர்கள் முக்கியமானவை. வெவ்வேறு வகையான பீடபூமிகள், வண்டல் மண் பிரதேசங்கள் மற்றும் தீவுக்கூட்டங்களும் இங்கு உள்ளன.

முக்கிய இயற்கை பிரிவுகள் : ஆசியாவின் நில அமைப்பு மற்றும் மேற்பரப்பு இயல்புகளின் அடிப்படையில், அதை ஐந்து இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

1. வடமேற்கு தாழ்நிலப்பகுதி.
2. மத்திய மேட்டு நிலங்கள்.
3. தெற்கு பீடபூமி.
4. நதிகளின் மகா சமவெளிகள்.
5. தீவுக் கூட்டங்கள்.

1. **வடமேற்கு தாழ்நிலப்பகுதி :** ஆசியாவின் இயற்கைப் பிரிவுகள் பேரிங்க் ஜலசந்தியில் இருந்து காஸ்பியன் கடல் வரையிலும் பரந்துள்ளது. மத்திய மேட்டு பகுதிகள் மற்றும் ஆர்க்டிக் பெருங் கடலுக்கு இடையே காணப்படுகிறது. முக்கோண வடிவிலுள்ள இந்தப் பரந்த தாழ்நிலப் பகுதியை 'சைபீரியா மைதானம்' என்றும்

அழைப்பர். வடப்பகுதியில் ஒரு சாதாரண சரிவு உள்ளது. இந்த மைதானத்தின் வழியாக சில நதிகள் பாய்கின்றன. எ.கா: லீனா, ஒப் மற்றும் என்ஸி. இவை வடக்கே பாய்ந்து ஆர்க்டிக் பெருங்கடலை சேருகின்றன.



மௌன்ட் எவரெஸ்ட்

2. **மத்திய மேட்டு நிலங்கள் :** இது ஆசியாவின் இரண்டாம் முக்கிய இயற்கைப் பிரிவாகும். வடமேற்கு தாழ்நிலப்பகுதியின் தென் பகுதியில் அமைந்துள்ளது. மத்திய ஆசியாவிலுள்ள மலைத்தொடர்களையே 'மத்திய மேட்டு நிலப்பகுதிகள்' என்று அழைப்பர். இது ஆசியா மைனரிலிருந்து பேரிங் ஜலசந்தி வரை பரந்துள்ளன. இங்கு பல மலைத்தொடர்கள் பாமிர் முடிச்சிலிருந்து எங்கும் பரவியுள்ளது. கிழக்கே இமயமலை, குன்லுன், காராகோரம், டியென்ஷான், ஆல்டாய், சயான், யப்லோனி, கிங்கான் மற்றும் ஸ்டான்வாய் மலைகள் முக்கியமானவை. மேற்குத் தொடர்களில் இந்துகுஷ், கிர்தார், சுலைமான், எல்பர்க், ஜாக்ரோஸ், ககாசஸ் பொன்டின் மற்றும் டாரஸ் மலைகள் சேர்ந்துள்ளன.

மடிச்சு மலைகளான இமயமலைத் தொடர்கள் பாமிர் பகுதியிலிருந்து தென்கிழக்குப் பகுதி வரை பரந்துள்ளது. அவை உலகிலேயே மிக உயரமான மலைகளாகும். இங்குள்ள மௌன்ட் எவரெஸ்ட் உலகிலேயே உயரமான சிகரமாகும்.

மலைத் தொடர்களினிடையே பல பீடபூமிகளுள்ளன. எ.கா: திபெத், மங்கோலியா, ஈரான், அனடோலியா பீடபூமி முதலியன. ஆசியா கண்டத்தின் பல நதிகள் இவ்வுயரமான மலைப் பகுதிகளில் பிறக்கின்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED



ஆசியாவின் இயற்கைப் பிரிவுகள்

3. **தெற்கு பீடபூமிகள் :** இவை திடமான மற்றும் ஸ்படிகக் கற்களாலான பழைய பீடபூமிகளாகும். அவற்றில் சிறந்தவை அரேபியா, தக்காணம் (இந்தியா) யுன்னான் (சீனா) மற்றும் ஷான் (மயன்மார்) பீடபூமி.

அரேபிய பீடபூமி, ஒரு அண்டை தீவு மற்றும் அது ஒரு வறண்ட பிரதேசமாகும்.

தக்காண பீடபூமி, தீபகற்ப இந்தியாவின் ஒரு பெரிய பகுதியை சூழ்ந்துள்ளது. மத்திய இந்தியாவின் மலைத்தொடர்கள், மேற்கு மலைத்தொடர்களின் மற்றும் கிழக்குக் மலைத்தொடர்களின் இடையே உள்ளது. இது கிழக்கு திசையில் சரிவாக இருப்பதால் பல நதிகள் இங்கு பாய்கின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் யுன்னான் பீடபூமியுள்ளது. இது அதிக சுண்ணாம்புக்கல் நிறைந்த பகுதியாகும். இப்பகுதியின் தொடர்ச்சியே ஷான் பீடபூமியாகும்.

4. **நதிகளின் மகா சமவெளிகள் :** இந்துமகா சமுத்திரம் அல்லது பசிபிக் பெருங்கடலை அடையும் ஆசியாவின் நதிகள் பல சமவெளிகளை உள்ளடக்குகின்றன. இங்கு பாயும் ஆறுகள் வண்டல் மண்ணைச் சேர்ப்பதால், செழிப்பான சமவெளிகளை உருவாக்குகின்றன. இப்படிப்பட்ட முக்கிய சமவெளிகள் சிரியா மற்றும் ஈராக்கின் டைக்ரஸ்-யூப்ரெடிஸ், இந்தியா-பாகிஸ்தானின், சிந்து-கங்கா சமவெளி, மயன்மாரின் இரவாடி, இந்தோ சீனாவின் மீனாம் மற்றும் மிகாங், சீனாவின் சியாங், (யாங்-ட்சே)-கியாங், (சிகியாங்-ஜியாங்) மற்றும் ஹுவொங் ஹோ சமவெளிகளாகும். இங்கு பெரும் எண்ணிக்கையில் மக்கள் வாழ்கின்றனர்.

5. **தீவுக்கூட்டம் :** ஆசியா கண்டத்தின் தென்கிழக்கு பகுதி மற்றும் பசிபிக்கரையில் பல தீவுகள் உள்ளன. அவை வடக்கே கமசட்காவிலிருந்து தெற்கே பிலிபைன்ஸ் மற்றும் போர்னியோ வரை, ஒரு மலையைப் போல பரந்துள்ளன. அவை ஐந்து கடல்களினால் சூழப்பட்டுள்ளன.

எ.கா: ஒகோடஸ்கா கடல், ஜப்பான் கடல், மஞ்சள் கடல், கிழக்கு சீனா கடல் மற்றும் தென்சீனா கடல்.

முக்கியமான தீவுக்கூட்டங்கள் : 1. கியூரைல் 2. ஜப்பான் 3. லாச்சு 4. பிலிபைன்ஸ் 5. போர்னியோ இவற்றில் பல எரிமலைகள் உருவாகியுள்ளன. செழிப்பான மண் ஆழமான பள்ளத்தாக்கு மற்றும் கூம்பு வடிவ மலைகளும் உள்ளன.

NOT TO BE REPUBLISHED @KTBS

4. முக்கிய நதிகளும், வேளாண்மையும்

ஆசியாவின் முக்கிய நதிகள் : ஆசியாவின் நதிகள் மாறுபட்டவை. இந்தத் தீவின் நதி அமைப்பின் மீது இயற்கை குணங்கள் மற்றும் சுற்றிலுமுள்ள நீர் பகுதிகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆர்க்டிக், பசிபிக் மற்றும் இந்து மகாசமுத்திரம் ஆசியாவைச் சூழ்ந்துள்ளது. இக் கண்டத்தில் பாயும் பல நதிகள் இப்பெருங்கடல்களை அடைகின்றன. இவ்வாறு, பெருங்கடல்களுக்கு நதிகள் இணைவதன் அடிப்படையில் ஆசியாவின் நதிகளை 4 குழுக்களாகப்

பிரிக்கலாம்.

1. **இந்துமகா சமுத்திரத்துடன் இணையும் நதிகள் :** இக்குழுவிற்கு சேரும் நதிகளான, சிரியா மற்றும் ஈராக் நாடுகளின் டைக்ரிஸ் மற்றும் யூப்ரேடிஸ் நதிகள், பர்ஷியா காரியன், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவின்



ஆசிய நதிகள் அமைப்பு

சிந்து, கங்கா மற்றும் பிரம்மபுத்ரா நதிகள், இமயமலையில் பிறந்து தெற்கே பாயும் பல நதிகள் இப்பெருங் கடல்களைச் சேருகின்றன. மயான்மாரின் சிட்டாங்க், சால்வீன் மற்றும் இரவாடி நதிகள் வங்காள விரிகுடாவை அடைகின்றன.

2. **பசிபிக் கடலை அடையும் நதிகள் :** இக்குழுவில், உருசியாவின் அமுர், சீனாவின் ஹவொங் ஹோ, சியாங் ஜியாங் (யாங்சே) மற்றும் சிக்கியாங் நதிகள் கிழக்கே பாய்ந்து முறையே ஓகோடஸ்கா, மஞ்சள் கடல் மற்றும் சீனா கடல்களைச் சேருகின்றன. இந்தோசீனாவின் மீனாம் மற்றும் மிகாங் நதிகள் தென்சீன கடலை அடைகின்றன.

3. **ஆர்க்டிக் பெருங்கடலை அடையும் நதிகள் :** ஓப், யென்சி மற்றும் லீனா இக்குழுவின் முக்கிய நதிகளாகும். இவை மத்திய உயரப் பகுதியிலிருந்து பிறந்து, வடக்கு நோக்கிப் பாய்ந்து ஆர்க்டிக் கடலை அடைகின்றன.

4. **உள்நாட்டு நதிகள் :** இக்குழுவிற்கு சேரும் நதிகள் உள்நாட்டு கடல்களை அடைகின்றன. எ.கா: வோல்கா மற்றும் யூரல் நதி காஸ்பியன் கடலையும், அமுதரியா மற்றும் சிர்தரியா நதிகள் ஆரல் கடலையும் அடைகின்றன.

NOT TO BE REPUBLISHED ©KTBS

ஆசியாவின் வேளாண்மை

ஆசிய மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மையாகும். சுமார் நான்கில் மூன்று பங்கு மக்கள் வேளாண்மையில் ஈடுபடுகின்றனர். ஆசியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பெரும்பகுதி சரக்குகளில் வேளாண் பொருட்களும் சேரும்.

ஆசியாவின் விவசாயம் மற்றும் நதி அமைப்புகளினிடையே நெருங்கிய தொடர்புள்ளது. சைபீரியாவைத் தவிர, மீதமுள்ள சமவெளி களின் நதிக்கரைகளின் பெரும் பகுதிகளில் விவசாயம் நடைபெறுகிறது. இங்குள்ள செழிப்பான மண் மற்றும் நீர்பாசனம் இதற்கான முக்கிய காரணமாகும்.

ஆசியாவின் பல நாடுகளில், வேளாண் செயல்களுக்கு விவ சாயிகள் கையினால் செய்யப்பட்ட உபகரணங்களையும், விலங்கு களையும் பயன் படுத்துகிறார்கள். அவர்கள் செறிநிலை வேளாண்மை செய்கிறார்கள். நீர்பாசன மற்றும் புன்செய் வேளாண்மை, நடுதோட்ட வேளாண்மை, கலப்பு வேளாண்மை மற்றும் இடமாற்ற வேளாண்மை முதலியவை பழக்கத்திலுள்ள வேளாண் முறைகளாகும். தற்போது நவீன வேளாண்மை உபகரணங்கள், வேதியல் உரங்கள், அதிக விளைச்சல் தரும் விதைகளைப் பயன்படுத்துதல் முதலியன ஆசி யாவின் சில நாடுகளில் பழக்கத்திலுள்ளன. இருப்பினும் பல நாடுகளில் அநேக காரணங்களினால் விளைச்சலின் அளவு குறைந்துள்ளது.

விளைப்பொருட்கள் : ஆசியாவில் பல விவசாய முறைகள் காணப் படுகின்றன. நெற்பயிர், மற்றும் கோதுமை முக்கிய விளைப்பொருட் களாகும். உலகில் விளையும் மொத்த நெற்பயிர் விளைச்சலில் 90% சீனாவிலும், இந்தியாவிலும் பயிரிடப்படுகின்றன. ஜப்பான், வங் காள தேசம், தாய்லாந்து மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் நெற் பயிர் விளைவிக்கும் மற்ற நாடுகளாகும். சீனா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆசியாவின் உருசியப் பகுதிகள், அதிகளவில் கோதுமை பயிர் செய்யும் முக்கிய நாடுகளாகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

நெற்பயிர்

தேயிலைத் தோட்டம்

காப்பித் தோட்டம்

உலகத்தில் ரப்பர் மற்றும் தேயிலை உற்பத்தியில் ஆசியா முதலிடம் பெறுகிறது. இந்தோனேஷியா, மலேசியா மற்றும் தாய்லாந்து முக்கிய ரப்பர் உற்பத்தியாளர்கள் ஆவர். சீனா, இந்தோனேஷியா, மலேசியா, இந்தியா மற்றும் தாய்லாந்து நாடுகள் முக்கிய தேயிலை உற்பத்தியாளர்களாவர்.

பருத்தி, சணல், கரும்பு ஆசியாவில் விளையும் மற்ற பயிர்களாகும். சீனா, இந்தியா, பாகிஸ்தான், டர்கி, டர்கேனிஸ்தான் மற்றும் உஜ்ஜே கிஸ்தான் முக்கியமாக பருத்தி பயிரிடும் நாடுகளாகும். வங்காள தேசம், சீனா மற்றும் இந்தியாவில் சணல் பயிரிடப்படுகிறது. கரும்பு அதிகமாக இந்தியா, இந்தோனேஷியா, பிலிபைன்ஸ் மற்றும் வங்காளதேசத்தில் பயிரிடப்படுகின்றன. இந்தியா உலகிலேயே அதிகமாக கரும்பு விளைவிக்கும் நாடாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

காபி, கொக்கோ, கேழ்வரகு, சாமை, கம்பு, இருவிதை தானிய எண்ணெய் வித்துக்கள், சாம்பார் பொருட்கள் முதலியவற்றின் உற்பத்தியில் ஆசியா பெயர் பெற்றுள்ளது.

5. தட்ப வெப்ப நிலையும், தாவரங்களும்

தட்ப வெப்ப நிலை : ஆசியா மிகப்பெரிய கண்டம். அது தெற்கு நிலநடுக் கோட்டிலிருந்து துருவப்பகுதிகள் வரையிலும் பரந்துள்ளது என்பதை நாம் அறிவோம். ஆகையால் இக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் மாறுபட்ட தட்ப வெப்பநிலை உள்ளது. ஆசியாவின் சில பகுதிகளில் குளிர் அதிகமாகவும் (துருவப்பகுதிகள்) சில பகுதிகளில் வெப்பம் அதிகமாகவும் (மத்திய மற்றும் தென்மேற்கு) உள்ளது. அதுபோல வறட்சியான மற்றும் மழை அதிகமாக உள்ள இடங்களும் இங்கு காணப்படுகின்றன. ஆசியாவின் மாறுபட்ட தட்ப வெப்ப நிலைக்கு பல அம்சங்கள்

காரணமாகின்றன. எ.கா: பரப்பளவு, அட்ச ரேகைகளின் பரப்பளவு, இயற்கை அமைப்பு, பருவக்காற்று முதலியன.



வருடத்தின் வெப்ப அளவு பங்கீடு

வெப்ப அளவு : இது சாதாரணமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கும், ஒரு பருவத்திலிருந்து மற்றொரு பருவத்திற்கும் மாறுபடுகிறது. ஜனவரி மாதத்தில் ஆசியாவின் தென்னாடுகளைவிட வடநாடுகளில் குளிர் அதிகமாக உள்ளது. சைபீரியாவிலுள்ள வர்க்கோயான்ஸ் அதிகமான குளிர் பிரதேசமாகும். ஜூலை மாதத்தில் சைபீரியாவின் வடப் பகுதிகள் மற்றும் மத்திய ஆசியாவின் உயர்ந்த மலை மற்றும் பீடபூமி பகுதிகளைத் தவிர ஆசியாவின் பல பகுதிகளில் வெப்பம் அதிகமாக உள்ளது. சில பகுதிகளில் வெப்ப அளவு 40% செல்ஷியஸ்ஸை விட அதிகமாக உள்ளது.

மழையின் பங்கீடு : ஆசியாக்கண்டத்தில் தென்மேற்கு பருவக் காற்றினால் கோடைக்காலத்தில் அதிக மழை பெய்கிறது. ஆனால் பருவக் காற்று மத்திய ஆசியாவை சென்றடைவதில்லை. அப்பகுதி

யில் வருடம் முழுவதும் வறட்சியான நிலைமையே உள்ளது. மேற்கு ஆசிய நாடுகள் குளிர்காலத்தில் மேற்கு திசைக்காற்றினாலும் மற்றும் சீனாவின் கிழக்குப்பகுதி மற்றும் பிலிபைன்ஸ், மலேசியா முதலியவை வெப்பமண்டல சுழற்காற்றுகளினால் மழை பெறுகின்றன.



வருடத்தின் மழை அளவு பங்கீடு

NOT TO BE REPUBLISHED

குளிர்காலம் : ஆசியாவின் பல பகுதிகளில், அக்டோபரிலிருந்து மார்ச் வரை குளிர்காலம் நிலவுகிறது. ஆசியாவின் பெரும்பகுதி வடஅரைகோளத்தில் உள்ளது. இந்த காலத்தில் வடஅரைக்கோளப் பகுதியில் சூரியனின் வெப்பக் கதிர்கள் சாய்வாக விழுகின்றன. இப்படி ஆசியாவின் பல பகுதிகளில் மிகக் குறைந்த வெப்ப அளவும், அதிக குளிர்ச்சியான தட்ப வெப்ப நிலையும் உள்ளது.

மத்திய ஆசியாவில் காற்று அழுத்தம் அதிகம் மற்றும் இந்து மகா சமுத்திரத்தில் அழுத்தம் குறைவு. இதனால் காற்று தரைப்பகுதியிலிருந்து கடல் நோக்கி வீசுகிறது. அவை வறண்ட காற்றுகள் ஆகும், எனவே மழை கொண்டு வராது. குளிர்காலத்தில் மழை குறைவு.

கோடைக்காலம் : இங்கு குளிர்காலத்தில் மாறான நிலைமையைக் காணலாம். இது ஏப்ரலில் தொடங்கி செப்டம்பரில் முடிகிறது. வட அரைக்கோளப் பகுதிகளில் சூரியனின் கதிர்கள் நேராக விழுகின்றன. ஆகவே ஆசியாவின் பல பகுதிகளில் வெப்ப அளவு அதிகமாகவும், மத்திய ஆசியாவில் அழுத்தம் குறைவாகவும் இருக்கிறது. காற்று கடலிலிருந்து தரைப் பகுதியை நோக்கி வீசுகிறது. அவை ஏறக்குறைய கண்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் மழை பெய்யச் செய்கின்றன.

- ஜனவரியில் சைபீரியாவின் வர்கோயான்ஸ்க்கில் -51^{0} செ மற்றும் ஓமியாக்னியில் 71^{0}குறைந்த அளவு வெப்பம் பதிவாகியுள்ளன.
- இந்தியாவின் மெகாலயா மாநிலத்தின் மாசின்ராம் உலகிலேயே அதிகமான மழைபெறும் பகுதியாகும் (*1187* செ.மீ.)

இயற்கைத் தாவரங்கள் :



இயற்கைத் தாவரங்கள்

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆசியாவின் இயற்கைத் தாவரங்கள் மற்றும் தட்ப வெப்ப நிலைகளுக் கிடையே நெருக்கமாக தொடர்பு உண்டு. நில அமைப்பு, மண் மற்றும் மனிதர்களின் குறுக்கீடுகளாலும் தாவரங்களின் வகைகள் மற்றும் பங்கீட்டின் மீது தாக்கங்களை ஏற்படுத்துகிறது. ஆசியாவின் தாவர இனங்களில் வகைப்பாடுகள் உள்ளன. அவற்றை 7 வகைகளாகப் பிரிக்கலாம்.

1. **துந்திர தாவர வகைகள் :** இத்தாவர வகைகள் ஆர்க்டிக் கடற்கரையின் நீண்ட பகுதியின் ஒரு சிறிய பாகத்தில் காணப்படுகின்றன. இது பெரும்பாலும் பனிக்கட்டிகள் மற்றும் பனியால் சூழப்பட்டுள்ளது. ஆதலால் இங்கு பாசி மற்றும் காளான்கள் வளர்கின்றன.

2. **ஊசியிலை மரங்களின் காடுகள்** (Coniferous) : துந்திரப் பிரதேசத்தில் பரவி யுள்ளன. அவை 'டைகா காடுகள்' என்றும் அழைக்கப் படுகின்றன. பர், ஸ்ப்ரூஸ், லார்ச் மற்றும் பைன் போன்றவை இங்குள்ள முக்கிய மரங்களாகும். அவை மென்மைவகை மரங்களாகும்.

©KTBS
Not to be REPUBLISHED

டைகா காடுகள்

3. **மித தட்பவெப்பநிலை உள்ள பகுதியின் புல்வெளிகள் (ஸ்டெப்பீஸ்) :** மத்திய ஆசியா மற்றும் பாலைவனப் பகுதிகளின் எல்லைகளில் காணப்படுகின்றன. குறைவான மழை பெறுவதால் இங்கு புற்கள் குறைந்த வளர்ச்சியே நிலவுகிறது.

4. **பாலைவனத் தாவர வகைகள் :** இவை ஆசியாவின் வெப்பமான பகுதிகள் மற்றும் மித தட்ப வெப்ப நிலையுள்ள பாலைவனங்களில் காணப்படுகின்றன. எ.கா: அரேபியா, ஈரான், தார் பாலைவனம் முதலியன. இங்கு முட்புதர்கள், சப்பாத்திக்கள்ளி மற்றும் புற்கள் வளர்கின்றன. பாலைவனச் சோலை அருகில் பேரிச்சம் மற்றும் பனை இன மரங்களைக் காணலாம்.

மான்சூன் காடுகள்

5. **பருவநிலை காடுகள் :** தெற்கு, தென்மேற்கு மற்றும் கிழக்கு ஆசியா பகுதிகளில் காணப்படுகின்றன. இங்கு அதிக வெப்பம் மற்றும் மழை பெய்வதால் காடுகள் உள்ளன. தேக்கு, சால், ஆலமரம் சந்தனம் முதலிய பல வலிமையான மரங்கள் இங்கு வளர்கின்றன. இலையுதிர் காலத்தில் அவற்றின் இலைகள் உதிர்ந்து விடுகின்றன.

6. **நிலநடுக்கோட்டுப் பகுதிகளிலுள்ள காடுகள் :** இவை கிழக்கு இன்டீஸ் மற்றும் அதிகமழை பெய்யும் பருவமழை பிரதேசங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை பசுமை நிறமான அடர்ந்த காடுகளாகும். உயரமான மரங்களும் இங்கு உள்ளன. மஹாகனி, எபோனி, ரப்பர், மூங்கில் போன்றவை இங்கு வளரும் முக்கிய மரங்களாகும்.

நிலநடுக்கோட்டுப் பகுதி காடுகள்

7. **மெடிட்டரேனியன் (மத்திய தரைக்கடல்) தாவர வகைகள் :** ஆசியாவின் தென்மேற்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. இங்கு ஆலிவ், ஃபிக், ஓக் மரங்களும், புதர் செடிகளும் வளர்கின்றன. இங்குள்ள மரங்களின் உயரம் குறைவானது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

6. முக்கிய கனிமவளங்கள்

இரும்புத்தாது : இது இரும்பு மற்றும் எஃகு தயாரிப்பதற்குத் தேவையான கச்சாப் பொருளாகும். ஆசியாவில் இரும்புத்தாது ஏராளமாகக் கிடைக்கிறது. மற்றும் உலகத்தின் 30 சதவீதம் வரையுள்ள இரும்புத்தாது இக்கண்டத்தில் உள்ளது. சீனா அதிகமாக இரும்புத் தாது தயாரிக்கும் நாடாகும். இந்தியா, டர்கி, பிலிபைன்ஸ், மலேசியா, தாய்லாந்து, இந்தோனேஷியா, மயன்மார், வியட்நாம், கஜகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் மற்ற முக்கிய உற்பத்தியாளர்கள் ஆவர். தென் கொரியா, தாய்வான், இலங்கை, ஜப்பான் மற்றும் தென்மேற்கு ஆசிய நாடுகளில் இரும்புத்தாது குறைவாகக் கிடைக்கிறது.

மாங்கனீஸ் : இது முக்கியமான கலவை உலோக கனிமமாகும். உயர்தர எஃகு உற்பத்திக்கு இது இன்றியமையாதது. ஆசியா கண்டம் அதிக அளவில் மாங்கனீஸ் புதையல்களைப் பெற்றுள்ளது. அவை டிரான்ஸ் ககாஸஸ், மத்திய ஆசியா, சைபீரியா, சீனா மற்றும் இந்தியாவின் பல இடங்களில் பரவியுள்ளன. மாங்கனீஸ் உற்பத்தியில் சீனா முதலிடம் பெறுகிறது.



முக்கிய கனிமவளங்கள்

பாக்ஸைட் : ஆசியா ஏராளமான பாக்ஸைட் புதையல்கள் பெற்றுள்ள கண்டமாகும். இது கஜகிஸ்தான் மற்றும் மத்திய தென் சைபீரியாவில் அதிகமாகக் கிடைக்கிறது. அதுமட்டுமல்ல இந்தியா, இந்தோனேஷியா, டர்கி, மலேசியா மற்றும் சீன நாடுகளிலும் போதுமான அளவு பாக்ஸைட் கிடைக்கிறது.

நிலக்கரி : இது புதைபடிவ எரிபொருள் கனிமமாகும் மற்றும் ஆற்றலின் முக்கிய மூலமாகும். ஆசியாவில் அதிக அளவில் நிலக்கரி கிடைக்கிறது. ஆனால், அதனுடைய விநியோகத்தில் ஏற்றத்தாழ்வு உள்ளது. அதிக மான அளவு நிலக்கரி, சீனா, இந்தியா, இந்தோனேஷியா, சைபீரியா மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் காணப்படுகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

உலகிலேயே அதிகமான நிலக்கரி புதையல் மற்றும் உற்பத்தி இரண்டிலும் சீனா முதலிடம் பெறுகிறது. சீனாவின் எல்லா பகுதிகளிலும் நிலக்கரி கிடைக்கிறது. இந்தியா, ஆசியாவின் இரண்டாவது முக்கியமான நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடாகும். தற்போது மத்திய சைபீரியா விலுள்ள குஜெனெட்ஜ் என்னும் பரந்த நிலப்பகுதி அதிகமான நிலக் கரி உற்பத்தி செய்யும் பகுதியாகும். சிறிதளவு நிலக்கரி புதையல்கள் உஜ்பேகிஸ்தான், கிர்கிஸ்தான், தஜகிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் ஜப்பான் நாடுகளில் கிடைக்கிறது.

பெட்ரோலியம் : இது ஒரு எரிபொருளாகும். தானியங்கி வாகனங்கள், இரயில், படகு மற்றும் விமானங்களுக்கு தேவையான ஆற்றல் மூலமாகும். தென்மேற்கு ஆசியாவில் ஏராளமான பெட்ரோலியம் புதையல்கள் உள்ளன. அது அதிகமாக சௌதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத், பஹ்ரேன், கத்தார் மற்றும் அரப் எமிரேட்ஸ் (UAE) யிலும் காணப்படுகிறது. இவை உலகத்தின் மொத்த பெட்ரோல் கிணறுகளில் அரைபாகத்தை பெற்றுள்ளது. மற்றும் 25 சதவீதம் வரை பெட்ரோலை உற்பத்தி செய்கிறது

கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் சில நாடுகளிலும் பெட் ரோல் கிணறுகள் உள்ளன. எ.கா: இந்தோனேஷியா, மலேசியா, சீனா, தாய்வான், மையன்மார் இந்தியா வியட்நாம் முதலியன.

தற்போது சைபீரியாவின் பகுதிகளில் பெட்ரோலியம் உற்பத்தி அதிகமாக உள்ளது.

©KTBS NOT TO BE REPUBLISHED

> பெட்ரோலியம் என்ற சொல் (Petroleum), 'Petra' என்றால் 'கல்' மற்றும் 'Oleum' என்றால் எண்ணெய் என்ற இரண்டும் இலத்தீன் மொழியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.
>
> சௌதி அரேபியா உலகிலேயே அதிகமான பெட்ரோல் உற்பத்தி செய்யும் நாடாகும்.

மத்திய ஆசியாவின் டர்க்மேனிஸ்தான், உஜ்ஜேகிஸ்தான், கஜகிஸ்தான் முதலான பகுதிகளிலும் போதுமான அளவு பெட்ரோல் உள்ளது.

தொழில்வளம் பெற்ற முக்கியப் பிரதேசங்கள் : ஆசியா கண்டம் பரந்த பிரதேசமாக இருந்தாலும், அதிக கனிமவளம் மற்றும் வேளாண் உற் பத்தி பொருட்களைப் பெற்றிருந்தாலும், ஐரோப்பா கண்டத்தைப்

போல தொழில்வளம் பெறவில்லை. இதற்கான முக்கிய காரணங்கள் தொழில்நுட்பக் குறைபாடு, பாரம்பரிய, பழக்கவழக்கங்கள் மற்றும் மக்கள் அதிக எண்ணிக்கையில் வேளாண்மையில் ஈடுபடுதலாகும்.

முக்கியமான தொழிற்சாலைகள் மற்றும் தொழில் செயல்பாடுகள் நடைபெறும் பிரதேசங்களை 'தொழிற்சாலைப் பிரதேசங்கள்' என்று அழைப்பர். இவற்றை தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு அனுகூலமான சில பகுதிகளில் மட்டுமே காணலாம்.

ஆசியாவின் முக்கிய தொழிற்சாலைப் பகுதிகள் கீழ்வருமாறு :

ஜப்பான் : இங்கு நான்கு முக்கிய தொழிற்சாலைப் பகுதிகள் உள்ளன.

1. **கிஹின் பிரதேசமானது** டோக்கியோ, கவாசாகி மற்றும் யோகோஹாமா நகரங்கள் உள்ளடக்கிய பெரிய தொழிற்சாலைப் பிரதேசமாகும். இங்கு ஜவுளி, என்ஜினியரிங், கப்பல் கட்டுதல், காகிதம் மற்றும் சிமென்ட் தொழிற்சாலைகள் உள்ளன.
2. **ஹான்ஷின் பிரதேசத்தில்** ஒசாகா, கோபே மற்றும் கியோடோ மாநகரங்கள் உள்ளன. இங்கு ஜவுளி (துணி) தொழிற்சாலைகள் முக்கியமானவை.
3. **ஐசே விரிகுடா பிரதேசம்** நகோயா நகரத்தின் சுற்றுப்புறங்களில் முற்றும் பரந்துள்ளது. இங்கு ஜவுளி மற்றும் என்ஜினியரிங் தொழிற்சாலைகள் முக்கியமானவை.
4. கிட கியூஷு பிரதேசம் யவாட்டா, மோஜி மற்றும் கோகுரா நகரங்களால் ஆனது. எஃகு, கப்பல், எந்திர உபகரணங்கள் மற்றும் ஜவுளி உற்பத்தியில் சிறந்தது.

சீனா : இங்கு வேளாண்மை முக்கியத் தொழிலாகும். தொழில் வளர்ச்சி குறைவு, கம்யூனிஸ்ட் அரசு வந்தபின் தொழிலாக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்நாட்டின் முக்கிய தொழிற்சாலைப் பிரதேசங்கள்:

1. **மன்சூரியா பிரதேசம் :** இங்கு எஃகு என்ஜினியரிங் மற்றும் வேதிப் பொருட்களின் தொழிற்சாலைகள் முக்கியமானவை.
2. **பீஜிங் பிரதேசம் :** என்ஜினியரிங், கப்பல் கட்டுதல், ஜவுளி மற்றும் இரசாயன தொழிற்சாலைகள் முக்கியமானவை.
3. **ஷான்யி - பாவடோவ் :** இரும்பு, எஃகு மற்றும் வேளாண்மை உபகரணங்கள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

4. சாங்-ஜியாங், பிரதேசத்தில் ஜவுளி உற்பத்தி, கப்பல் கட்டுதல் மற்றும் எஃகு தயாரிக்கும் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

5. வூஹான் பிரதேசம் : உலோகத் தயாரிப்பு, பெரிய தொழிற் துறை பொருட்கள் தயாரிப்பு.

இந்தியா :

இந்தியாவிலுள்ள தொழிற்சாலைப் பிரதேசங்கள் :

1. ஹுக்லி - கொல்கொத்தா பிரதேசம்
2. மும்பை - புனே பிரதேசம்
3. அகமதாபாத் - வடோதரா பிரதேசம்
4. மதுரை -கோயமுத்தூர் - பெங்களூர் பிரதேசம்
5. சோட்டா நாக்பூர் பிரதேசம்
6. தில்லி - மீரட்
7. விசாக பட்டணம் மற்றும் குண்ட்டூரு
8. கொல்லம் - திருவனந்தபுரம் பிரதேசம்.

தென்கொரியா, ஹாங்காங், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் ஆசியாவின் மற்ற தொழிற்சாலைப் பிரதேசங்கள் உள்ளன.

©KTBS NOT TO BE REPUBLISHED

7. ஆசியாவின் மக்கட்தொகை



ஆசியாவின் மக்கட்தொகை

மக்கட்தொகை பெருக்கம் : ஆசியா கண்டத்தில் சுமார் 476 கோடி மக்கட்தொகையுள்ளது. இது உலகத்தின் மக்கட்தொகையில் 60% ஆகும். இன்றறைய மக்கட்தொகை, கடந்த மூன்று நூற்றாண்டுகளைவிட ஐந்து மடங்கு அதிகமாகியுள்ளது. பொ.ச.1950இல் ஆசியாவின் மக்கட்தொகை 140 கோடி ஆக மட்டுமே இருந்தது . மக்கட்தொகை அதிகமாகிக் கொண்டே சென்ற நிலைமை மாறி இப்பொழுது குறைந்து வருகிறது.

மக்கட்தொகை விநியோகம் மற்றும் நெருக்கம் : ஆசியா கண்டத்தின் மக்கட்தொகை விநியோம் பங்கீடு சமமாக இல்லை. வரைபடத்தை கவனிக்கவும். ஆசியாவின் பல பகுதிகளில் குறைவான மக்கட்தொகையும் சிறிய பகுதிகளில் அதிகமான மக்கட்தொகை அதிகமிருப்பதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

ஆசியா கண்டத்தின் சராசரி மக்கட்தொகை ஒவ்வொரு சதுர கி.மீ.க்கு 153 மக்கள் ஆகும். அதிக குளிர்ச்சியான வடக்கு மற்றும் கிழக்கு

@KTBS
NOT TO BE REPUBLISHED

சைபீரியா, பாலைவனங்களை பெற்றுள்ள அரேபியா, ஈரான் மற்றும் தார் (இந்தியா) பகுதிகளும், உயரமான மத்திய ஆசியப் பகுதிகளும் மிகக் குறைவான மக்கட்தொகையுள்ள பிரதேசங்களாகும்.

ஆசியாவின் அதிக மக்கட்தொகையுள்ள பகுதிகளில் இந்தியாவின் மகாசமவெளிகள், வங்காள தேசம், சீனா, ஜப்பான், கொரியா மற்றும் ஜாவாதீவு (இந்தோனேஷியா) முக்கியமானவை. இவற்றில் பல பகுதிகள் செழிப்பான சமவெளிகளை அல்லது நதிக்கரைகளைப் பெற்றுள்ளன. மயன்மார், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஈராக், இலங்கை, வியட் நாம், மலேசியா மற்றும் கம்போடியாவிலும் மக்களடர்த்தி அதிகமாக உள்ளது.

புதிய சொற்கள் : இலையுதிர்காலம், பிலியன், ஊசியிலைத் தாவரங்களின் காடுகள், புதைப்படிவ எரிப்பொருள், முடிச்சு மலைகள், சுண்ணாம்புக் கல், பாசி,ஒயேசிஸ், கச்சாபொருள், டைகா, துந்திரா.

அறிந்து கொள்ளுங்கள் :

- ஆசியா கண்டத்தின் மிக உயரமான முனை மௌன்ட் எவரெஸ்ட் (*8848 மீ*)
- ஆசியாவின் மிக தாழ்ந்த மட்டம் சாக்கடல்.
- உலகிலேயே அதிக எண்ணிக்கையிலுள்ள பனி நதிகள் காராகோரம் மலைத் தொடர்களில் உள்ளன.
- திபெத் உலகிலேயே மிக உயரமான பீடபூமியாகும். இதை ''உலகத்தின் மேற்கூரை'' என்று அழைப்பர்.
- காஸ்பியன் கடல் உலகத்தின் பரந்த உள்நாட்டு நீர்பகுதியாகும்.
- தென் சைபீரியாவில் பைகல் ஏரி உலகிலேயே ஆழமானது.
- பரப்பளவு மற்றும் மக்கட்தொகை இரண்டும் குறைவாகவுள்ள சிறியநாடு மாலத்தீவுகள் ஆகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களை கொண்டு விடப்பட்டுள்ள இடங்களை நிரப்புக.

1. ஆசியா கண்டம் ________ அரைக்கோளத்தில் உள்ளது.
2. ஆசியாவின் மிக உயரமான சிகரம் ________
3. ரப்பர் உற்பத்தியில் ஆசியாவிலேயே முதன்மையான நாடு ________
4. மித தட்பவெப்ப நிலை பகுதிகளில் உள்ள புல்வேளிகளை ________ என்று அழைப்பர்.

II. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும் :

5. 'ஆசியாவை மாறுபட்ட கண்டம்' என்று அழைப்பர். ஏன்?
6. ஆசியாவின் நில அமைப்பைப் பற்றி குறிப்பிடவும்?
7. ஆசியாவின் முக்கிய இயற்கைப் பிரிவுகள் யாவை?
8. ஆசியாவில் எந்த பருவகாலத்தில் அதிக மழை பெய்கிறது?
9. ஆசியாவின் முக்கிய உணவு விளைப்பொருட்கள் யாவை?
10. ஆசியாவின் முக்கிய புதைப்படிவ எரிபொருட்களைக் குறிப்பிடவும்?
11. ஆசியா கண்டத்தின் எந்த பகுதியில் குறைவான மக்களடர்த்தி உள்ளது.ஏன்?

செயல்பாடுகள் :

1. உங்கள் அட்லாசில் ஆசியாவின் வரைபடத்தை கவனிக்கவும். மலை, பீடபூமி, சமவெளிகள் மற்றும் நதிகளைக் குறிப்பிடவும், மற்றும் பட்டியலிடவும். அவைகளை வரைப்படத்தில் குறிப்பிடவும்.
2. ஆசியா கண்டத்தின் முக்கிய நதிகள் அவற்றின் கிளைகளின் விவரங்களான-பிறக்கும் இடம், நீளம், கிளைகள், சமவெளிகள் அணைக் கட்டுகளின் விவரம் மற்றும் படங்களைச் சேகரிக்கவும் வரைப்படத்தில் அவற்றைக் குறிப்பிடவும்.
3. நீங்கள் வசிக்கும் இடத்திலுள்ள சூழலைக் கவனிக்கவும் அங்குள்ள பயிர்கள், தாவர இனங்கள் மற்றும் வெவ்வேறு நீர்ப்பகுதிகளைப் பட்டியலிடவும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பாடம்

23

ஐரோப்பா கண்டம்

I9G4G2

பாட அறிமுகம்

இப்பாடத்தில் ஐரோப்பா கண்டத்தின் இருப்பிடம் பரப்பளவு, மற்றும் நிலத்தோற்றம் இயற்கை அமைப்பு, தட்ப வெப்ப நிலையின் வகைகள், தாவர வகைகள், விவசாயம், கால்நடை வளர்த்தல், மீன் பிடித்தொழில், கனிமப் பொருட்கள், தொழிற்சாலை வளர்ச்சி, மக்கட் தொகை வளர்ச்சி, மக்கட் தொகை விநியோகம் மற்றும் அடர்த்தி பற்றிய விவரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

திறன்கள் :

1. ஐரோப்பாவின் இருப்பிடம், பரப்பளவு மற்றும் நிலத்தோற்றம் பற்றி அறிதல்.
2. ஐரோப்பாவின் இயற்கை அமைப்பு, தட்ப வெப்ப நிலையின் வகைகளைப் பற்றி அறிதல்.
3. இயற்கைத் தாவர இனங்கள் மற்றும் தட்ப வெப்ப நிலைகளின் இடையேயுள்ள தொடர்பை அறிதல்.
4. ஐரோப்பாவில் கிடைக்கும் கனிமப் பொருட்களின் அடிப்படையில் தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றதைப் பற்றின விவரம் அறிதல்.
5. ஐரோப்பாவின் சமசீரற்ற மக்கட் தொகை, மக்கள் பெருக்கம் குடிபெயர்ப்பு போன்ற அம்சங்களைப் பற்றி விவரித்தல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

முன்னுரை: உலகின் அதிக மக்கட் தொகை மற்றும் நாகரீக வளர்ச்சியடைந்த கண்டங்களில் ஐரோப்பாவும் ஒன்றாகும். இது செழிப்பான மற்றும் தொழில்வளத்தில் முன்னேற்றம் அடைந்த கண்டமாகும். பரப்பளவில் உலகின் ஆறாம் இடத்தில் உள்ளது. இயற்கை வளங்கள் நிலத்தோற்றம், சமூக கலாச்சாரம் மற்றும் ஆட்சி அமைப்பினால் முன்னேற்றம் அடைந்த கண்டமாகும். பல பெரிய மற்றும் சிறிய நாடுகளைக் கொண்ட கண்டமாகும். இதில் மொத்தம் 56 நாடுகள் உள்ளன.

1. இருப்பிடம், பரப்பளவு நிலத்தோற்றம்

இருப்பிடம்: ஐரோப்பா 10° மேற்கிலிருந்து 60° கிழக்கு தீர்க்கரேகை வரையிலும் 36° வடக்கிலிருந்து 72° வடக்கு அட்சரேகை வரையிலும் பரந்துள்ளது.

பரப்பளவு: ஐரோப்பா உலகின் இரண்டாவது பெரிய கண்டமாகும். அதன் மொத்த பரப்பளவு 10.4 மில்லியன் சதுர கிலோ மீட்டர்களாகும். இது இந்தியாவின் பரப்பளவை விட மூன்று மடங்கு பெரியதாகும். பூமியின் நிலப்பரப்பில் 7% ஐரோப்பா ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. ஆனால், உலகின் மொத்த மக்கட் தொகையில் 1/4 பகுதியை மட்டுமே ஐரோப்பா பெற்றுள்ளது.

நிலத்தோற்றம்

ஐரோப்பா ஒரு பெரிய தீபகற்பமாகும், மூன்று பக்கம் நீரால் சூழப்பட்டுள்ளது. வடக்கே பேரண்ட் சமுத்திரத்தாலும், மேற்கே அட்லாண்டிக் சமுத்திரத்தாலும், தெற்கே மத்தியத்தரைக் கடலாலும் சூழப்பட்டுள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED



உலகவரைபடத்தில் ஐரோப்பாவின் இருப்பிடம் நிலை



இருப்பிடம், பரப்பளவு மற்றும் நிலத்தோற்றம்

1. ஐஸ்லாந்து, 2. நார்வேஜியம் கடல், 3. பேரன்ட் கடல், 4. யூரோப்பியன் ரஷ்யா, 5. பின்லாந்து, 6. நார்வே, 7. ஐயர்லாந்து, 8. வடக்கடல், 9. டென்மார்க், 10. பால்டிக் கடல், 11. இஸ்டோனியா, 12. டால்வியா, 13. லிதுயா, 14. அட்லாண்டிக் பெருங்கடல் 15. பெல்ஜியம், 16. நெதர்லாந்து, 17. போலந்து, 18. பெலரஸ், 19. பிரான்ஸ், 20. போர்ச்சுகல், 21. ஸ்பெயின், 22. சுவிட்சர்லாந்து, 23. ஜெக்குடியரசு 24. யூக்ரேன், 25. ஆஸ்த்ரியா, 26. ஸ்லொவாகியோ, 27. ஹங்கேரி, 28. ரொமேனியா, 29. க்ரோவியா, 30. இத்தாலி, 31. மால்டோவா, 32. ஏட்ரியாடிக் கடல், 33. பாஸ்னிமா, 34. யுகோஸ்லாவியா, 35. பல்கேரியா, 36. கருங்கடல், 37. மாசிடோனியா, 38. அல்பனியா, 39. ஆல்ஜியன் கடல், 40. கிரீஸ், 41. அயனியன் கடல், 42. ஆசியா, 43. காஸ்பியன் கடல், 44. ஆப்பிரிக்கா.

NOT TO BE REPUBLISHED

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில் ஆசியா கண்டம் உள்ளது. யூரல் மலைகளும், ககாசஸ் மலைகளும், காஸ்பியன் கடலும் ஐரோப்பாவிலிருந்து ஆசியா கண்டத்தை பிரிக்கின்றன. தென் பகுதியில் ஆப்பிரிக்கா உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பூகோள அமைப்புகள் ஐரோப்பா மற்றும் ஆசியாவின் இடையே நிலையான எல்லைகளாக இருப் பதில்லை. எனவே இதனை ஒரே கண்டம் எனக் கருத்தில் கொண்டு ‘‘யுரேஷியா’ என்ற ஒரே பெயரினால் அழைப்பர்.

2. இயற்கை அமைப்பு :

ஐரோப்பா கண்டம் வித்தியாசமான இயற்கை குணங்களைப் பெற்றுள்ளது. இக்கண்டத்தின் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் பனியால் மூடப்பட்டுள்ள சிகரங்களுள்ள மலைகள், கணவாய்கள், மேட்டு நிலங்கள் பள்ளத்தாக்குகள் மற்றும் சிறிய சமவெளிகள் உள்ளன. ஆனால் இக்கண்டத்தின் கிழக்கு பகுதி அதிகமாக நிலையான பீடபூமியால் சூழப்பட்டுள்ளது. ஆங்காங்கு சில மாற்றங்கள் காணப்படுகின்றன.

ஐரோப்பா கண்டத்தின மிக உயரமான சிகரம் ‘மவுண்ட் எல்ப்ரூஸ்’’ (5633 மீ) இது கக்காசஸ் மலைத் தொடரில் அமைந்துள்ளது. தாழ்வான இடம் காஸ்பியன் கடலாகும். இது கடல் மட்டத்திலுருந்து 28மீ கீழுள்ளது.

எல்ப்ரூஸ் சிகரம்

உண்மையில் ஐரோப்பா ஆசிய நிலப்பரப்பின் ஒரு பெரிய தீபகற்பமாகும். ஐரோப்பா பல தீபகற்பங்களைப் பெற்றுள்ளது. எ.கா: ஸ்கேண்டி நேவியா, சைபீரியா, ஐஸ்லாண்டு, பால்கன் தீபகற்பம் முதலானவை. எனவே இதனை ‘‘தீபகற்பங்களாலான தீபகற்பம்’’ என்று அழைக்கப்படுகிறது.

ஐரோப்பா 80,500 கி.மீ. நீளமுள்ள கடலோரப் பகுதியாகும். இது ஆசியா கண்டத்தின் கடலோரப் பகுதியை விட நீளமானது. இக்கண்டத்தின் கடலோரப் பகுதிகளில், ஆயிரக்கணக்கான தீவுக்கூட்டங்கள் உள்ளன. அவற்றில் பிரிட்டன் மற்றும் ஐயர்லாந்து மிகப் பெரியவை, ஷெட்லாண்டு, ஃபைரோஸ், ஓர்க்னி, சிசிலி சார்டினியா கோர்சிகா, கிரேட்டு மற்றும் சேனல் தீவுகள் முக்கியமானவை.

இயற்கை பிரிவுகள் :

இயற்கை சூழலுக்கு ஏற்ப, ஐரோப்பா நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. வடமேற்கு மலைத்தொடர். 2. வடக்கில் உள்ள பரந்த சமவெளி

3. மத்திய பீடபூமி. 4. தெற்கு மலைகள்.

NOT TO BE REPUBLISHED © KTBS

1. **வடமேற்கு மலைத் தொடர்கள் :** இந்த இயற்கை பகுதி மிகவும் பழமையான மலைத் தொடர்களுள்ள பின்லாந்து, ஸ்வீடன், நார்வேயை உள்ளடக்கும். ஐயர்லாந்து பிரிட்டன் வரையிலும் பரந்துள்ளது. சிகரங்களின் மீது மூடப்பட்டுள்ள பனி உருகி நதிகளாகும் போது இச்சிகரங்களின் உயரம் குறைகிறது. இம்மலைச் சிகரங்கள் கற்களால் ஆனது என்பது அங்குள்ள சான்றுகள் மூலம் அறிந்து கொள்கின்றோம், ஸ்கான்டிநேவியாவில் இதனுடைய உயரம் 2000மீ ஆகும். ஐயர்லாந்து மற்றும் ஸ்காட்லாந்தில் 600மீட்டர் மட்டும் ஆகும். நார்வேயிலுள்ள கோல்ட்ஹோ பிக்கன் (2469 மீ.) வட ஐரோப்பாவின் மிக உயரமான சிகரம் ஆகும். ஸ்காட்லாந்திலுள்ள, பென்னேவிஸ் (1343 மீ) வேல்ஸின் ஸ்நொடோன் (1085 மீ.) மற்ற சிகரங்களாகும். இப்பகுதியின் வடக்குத் திசையில் மெல்லிய சரிவு உள்ளது. இப்பகுதியில் பல நதிகள் பாய்கின்றன.

2. **வடக்கு ஐரோப்பாவின் பரந்த சமவெளி:** இதனை ''மத்திய தாழ்நிலம்'' என்றும் அழைப்பர். இது கிழக்கே யூரல் மலைகளிலிருந்து. மேற்கே அட்லாண்டிக் கடற்கரை வரையிலும் பரந்துள்ளது. ஐரோப்பாவின் பெரும் பகுதி இங்கு உள்ளது. யூரோப்பியன் ரஷ்யா, போலந்து, வடக்கு ஜெர்மனி, நெதர்லாந்து (ஹாலந்து) டென்மார்க், பெல்ஜியம் வடக்கு பிரான்சு மற்றும் இங்கிலாந்தின் கிழக்குப் பகுதிதனைச்சாரும்.

   இப்பகுதியின் கிழக்குப் பகுதி அகலமானதாகவும், மேற்குப் பகுதி குறுகியும் உள்ளது. நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் நாடுகளின் சில சமவெளிகள் கடல் மட்டத்தை விட கீழே உள்ளன. இவை நதிகள் கொண்டுவரும் வண்டல் மண் படிந்துள்ள சமவெளிகளாகும்.

   இச்சமவெளிகள் இந்தியாவின் சிந்து - கங்கை சமவெளிகளைப் போல அகன்றவை அல்ல. சில பகுதிகளில் இச்சமவெளிகள் சரிவுகளைப் பெற்றுள்ளன. சில இடங்கள் சிகரங்கள் மற்றும் மலைத் தொடர்களினால் வேறுபடுகின்றன. இங்கு உலகிலேயே, சிறந்த வளமான வேளாண் நிலங்கள் உள்ளன.

NOT TO BE REPUBLISHED ©KTBS



இயற்கை பிரிவுகள்

3. **மத்திய பீடபூமி :** இவை பழமையான கற்களால் ஆனவை. பல பழமையான சிகரங்கள், மலைகள் மற்றும் பீடபூமிகளைப் பெற்றுள்ளன. அவைகளின் சராசரி உயரம், கடல் மட்டத்தில் இருந்து 600 மீ விட அதிக உயரமில்லை.

இப்பகுதி மேற்கே அயர்லாந்து மற்றும் கிழக்கே ரஷ்யா வரை பரந்துள்ளது. ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலின் மெசட்ட, பிரான்சின் மத்திய மாசிப் மற்றும் வோஸ்ஜேஸ், ஜெர்மனியின் பிளாக் ஃபாரஸ்ட் மற்றும் ஜெக் ஸ்லோவேகியா குடியரசு நாடுகள், குறைந்த உயரம் உள்ள பல தொடர்கள் இதைச் சேரும்.

சில பகுதிகளில் காடுகள் உள்ளன. பல பகுதிகள் பாறைக் கற்களால் ஆனவை. வேளாண்மைக்கு உகுந்ததாகவும் இல்லை. ஆனால் நதிக்கரைகள் சிறந்த வேளாண் நிலங்களைத் கொண்டுள்ளன.

@KTBS
NOT TO BE REPUBLISHED

4. தெற்கில் உள்ள மலைத் தொடர்கள் : இப்பகுயை ஆல்பைன்ஸ் மலைத் தொடர் பகுதி என்றும் அழைக்கப்படுகிறது. இவற்றில் பல மலைத்தொடர்கள் உள்ளன. அவை சியெர்ரா மோரெனா (ஸ்பென்ஸ்), பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினின் இடையே எல்லையாகத் திகழும் பிரனீஸ் மலைகள் ஆகும். இவை மேற்கு அட்லாண்டிக் கரையிலிருந்து காஸ்பியன் கடல் வரையிலும் சம வெளித் தொடர்களாகப் பரந்துள்ளன. இவை இமயமலையைப் போல முடிச்சு மலைகளாகும். இங்குள்ள ஆல்ப்ஸ் மலைத் தொடர்கள் முக்கியமானவைகள். உயரமான சிகரம் மௌன்ட் பிளாங்க் (4807 மீ) ஆகும். ஆல்ப்ஸ் மலைத் தொடர்கள், பிரான்சின் தென்கிழக்குப் பகுதி, இத்தாலியின் வடப்பகுதி, சுவிட்சர்லாந்தின் பெரும் பகுதி, ஜெர்மனி, ஆஸ்ட்ரியா மற்றும் ஸ்லோவேனியா பகுதிகளில் பரந்துள்ளன. இத்தாலியின் பெரும்பகுதிகளில் அபனைன் மலை, குரீஷியா, போஸ்னியா மற்றும் யுகோஸ்லோவியாவின் டினாரிக் ஆல்ப்ஸ், பல்கேரியாவின் பால்கன் மற்றும் வட ஸ்லோவேனியாவில் கார்ப்பேதியன் மலைகளும் உள்ளன.

பிளாங்க் சிகரம்

3. தட்ப வெப்ப நிலையும், இயற்கைத் தாவரங்களும்

ஐரோப்பாவின் தட்ப வெப்ப பிரதேசங்களைப் பற்றி தர்க்கம் செய்வதற்கு முன்பு, அதனுடைய பொதுவான தட்ப வெப்ப நிலையைப் பற்றி அறியலாம். இக்கண்டத்தின் அதிகமான பகுதிகள் 'சம சீதோஷ்ண' மண்டலத்திலுள்ள தட்ப வெப்ப நிலையைப் பெற்றுள்ளன. இதை 'மித தட்ப வெப்பநிலை' என்றும் அழைப்பர். தட்ப வெப்ப நிலையின் மீது விளைவுகளை ஏற்படுத்தும் காரணிகள் அட்சரேகை, மேற்பரப்பு அம்சங்கள், காற்றுகள் ஆகும். ஆயினும் கண்டத்தை முழுவதுமாக சூழ்ந்து கொண்டுள்ள அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து வீசும் காற்றுகள் இக்கண்டத்தின் தட்பவெப்ப நிலையின் மீது அதிகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. கல்ஃப் ஸ்ட்ரீம் வெப்பக் கடற்காற்றுகளும், புகழ்பெற்ற மேற்கு காற்றுகளும் இதற்கான முக்கிய காரணங்களாகும்.

@TNTBS NOT TO BE REPUBLISHED



வருடாந்திர வெப்ப அளவு விநியோகம்

வருடாந்திர மழை விநியோகம்

NOT TO BE REPUBLISHED @KTBS

பொதுவாக, தென் ஐரோப்பாவின் குளிர்ச்சியான குறைந்த கால கோடையை விட, வடக்கில் நிலவும் குளிர்காலம் நீண்டகாலம் வரையிலும் குளிர் அதிகமாகவும் இருக்கும். வெப்பம் அதிகமாகவுள்ள குறைந்த கால கோடையையும் இது எதிர்கொள்கிறது.

தட்ப வெப்ப நிலை பிரதேசங்கள்.

தட்ப வெப்ப நிலையின் அடிப்படையில் ஐரோப்பாவை நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கலாம்.

1. **வடமேற்கு ஐரோப்பாவின் கடலோர தட்ப வெப்ப நிலை பிரதேசம் :** இப்பிரதேசம் நார்வே கடலோர பகுதியிலிருந்து ஸ்பெயினின் வடக்கு மற்றும் ஐரோப்பாவின் உள் நாடு வரை பரவியுள்ளது. மிதமான குளிர்காலம் வெதுவெதுப்பான கோடை காலம் மற்றும் போதுமான அளவு மழை, மேக மூட்டத்துடனும் இருள் சூழ்ந்த பகலும், இத்தட்ப வெப்ப நிலையின் முக்கிய அம்சங்களாகும். குளிர்காலத்திலும், கோடைக்காலத்திலும் வெப்ப நிலை சாதாரணமாக (10° செ மற்றும் 18° செ) ஆகும். மழையின் விநியோகம் அதிகப் பட்சம் (75° செ.மீ) ஆக உள்ளது.

2. **கண்டங்களிடையேயுள்ள தட்ப வெப்ப நிலை பிரதேசம் :** இத்தட்ப வெப்ப நிலை பெரும்பாலும் போலந்து, ஸ்லோவாகிய, ஜெக் குடியரசு ஹங்கேரி, ருமேனியா மற்றும் பல்கேரியாவில் நிலவுகிறது. இத்தட்ப வெப்ப நிலையின் அம்சங்கள் குளிர்ச்சியான குளிர்காலம், வெது வெதுப்பான கோடைக்காலம் (-12° செ மற்றும் 10° செ) மற்றும் சராசரி ஆண்டு மழை 50 செ.மீ. ஆகும். கோடைகாலத் தொடக்கத்தில் வெப்பச்சலன மழையாக அதிகபட்ச மழை பெய்யும்.

3. **மெடிட்டரேனியன் (மத்திய தரைக்கடல்) தட்ப வெப்ப நிலைப் பிரதேசம் :** அதிக அளவு வெப்பம், வறட்சி மற்றும் வெப்பத்துடன் கூடிய கோடைகாலம் மற்றும் குறைவான மழையுடன் கூடிய, மிதமான குளிர்காலம் இத்தட்பவெப்ப நிலையின் தனிச் சிறப்புகளாகும். குளிர் காலத்தில் சராசரி வெப்ப அளவு 8° செல்சியஸ் மற்றும் கோடை காலத்தில் 22° செல்சியஸ் ஆகும். சராசரி ஆண்டு மழை 75 லிருந்து 100 செ.மீ. ஆகும். இப்படிப்பட்ட நிலை தட்ப வெப்ப மெடிட்டரேனியன் (மத்திய தரைக்கடல்) கடற்பகுதிகள் உள்ளடக்கிய தென் ஐரோப்பாவில் காணலாம்.

NOT TO BE REPUBLISHED @KTBS

4. **மலைப்பிரதேசங்களில் நிலவும் தட்ப வெப்பநிலை:** இந்த தட்ப வெப்ப நிலை ஆல்ப்ஸ் மலை மற்றும் ககாகஸ் மலைப்பகுதிகளில் காணப்படுகிறது. இதன் உயரம், சூரிய கதிர்களின் கோணம் மற்றும் காற்றின் அளவை கட்டுப்படுத்துகிறது. குளிர்காலத்தில் வெப்ப அளவு 4° செ. மற்றும் கோடைகாலத்தில் 16° செ. ஆகும். சராசரி மழைப்பங்கீடு, மலைக் காற்றுக்கு எதிர்பகுதியில் 50 செ.மீ மற்றும் காற்றின் முகச்சரிவு பகுதிகளில் 200 செ.மீ ஆக உள்ளது. மிக உயரமான பகுதிகளில், வெப்ப அளவு உறைபனிநிலைக்கும் குறைவாக இருக்கும்.

இயற்கை தாவரங்கள்!

ஐரோப்பாவில் பல ஆண்டுகாலங்களாக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கு அதிக மக்கட் தொகையும் உண்டு, ஆகவே இயற்கை தாவரங்கள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. மக்களுக்கு பயன்படாத மற்றும் உயர்ந்த பகுதிகளில் மட்டுமே இத்தாவரங்கள் காணப்படுகின்றன. ஐரோப்பாவில் கீழ்க்காணும் ஆறு தாவர வகைகள் உள்ளன.

© KTBS NOT TO BE REPUBLISHED

1. **துந்திரா பகுதி தாவரங்கள்:** பாசிவகை தாவரங்கள் (Lichens and mosses) காணப்படுகின்றன. அயர்லாந்து, வடக்கு நார்வே, சுவீடன், பின்லாந்து இவைகளின் குறுகிய பகுதியையும் உள்ளடக்கும். இப்படிப்பட்ட தாவரங்கள் ஆல்ப்ஸ் மற்றும் யூரல் மலைகளின் உயர்ந்த பகுதிகளில் காணப்படுகின்றன.

2. **டைகா காடுகள் :** நார்வே, சுவீடன் மற்றும் பின்லாந்தின் துருவப் பிரதேசங்களில் காணப்படுகின்றன. இங்கு சில வகை மரங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவைகளை ''ஊசியிலைக் காடுகள்'' என்றும் அழைப்பர். இக்காடுகளில் ஸ்காட்ஸ்பைன், ஸ்ப்ரூஸ் மற்றும் லார்ச் போன்ற மரங்கள் வளருகின்றன. இவற்றின் இலைகள் ஊசி போன்று கூர்மையாகவும் சங்கு போன்ற வடிவமும் பெற்றுள்ளன.

3. **கலப்புக் காடுகள்:** தென் மையப் பகுதியில் இக்காடுகள் காணப்படுகின்றன. இங்கு இலையுதிரும் மற்றும் ஊசியிலை மரங்களும் வளர்கின்றன. முக்கியமான மரங்கள் ஓக், ஆஷ், ஏல்ம், பாப்லர், வில்லோ, பீச் முதலியன.

4. **மத்தியத் தரைக்கடல் தாவரங்கள் :** சாதாரணமாக இக்காடுகள் மத்தியத் தரைக்கடல் (மெடிட்டரேனியன் கடல்) ஓரங்களில் காணப்படுகின்றன. இத்தாவரங்கள் அகலமான இலைகளைக் கொண்ட பசுமைத் தாவரங்கள் ஆகும். ஏனென்றால் வறண்ட காலத்திலும், இத்தாவரங்களின் இலைகள் உதிர்வதில்லை, கார்க் ஓக், ஆலிவ் லாரெல், போன்ற மரங்கள் இங்கு வளர்கின்றன.



ஐரோப்பாவின் இயற்கைத் தாவரங்கள்

1. ஐஸ்லாந்து, 2. நார்வேஜியன் கடல், 3. பாரன்ட் கடல் 4. பின்லாந்து, 5. நார்வே, 6. சுவீடன், 7. பால்டிக் கடல், 8. வடக் கடல் 9. அயர்லாந்து, 10. ஐக்கிய நாடுகள், 11. அட்லான்டிக் பெருங்கடல் 12. பிரான்சு, 13. ஜெர்மனி, 14. நெதர்லாந்து, 15. எஸ்டானியா, 16. லரிதவியா, 17. லிதுவானியா, 18. போலந்து, 19. பெலாரஸ், 20. யுரோப்பியன் ரஷ்யா 21. ஜெக், 22. சுவிட்சர்லாந்து, 23. ஆஸ்ட்ரியா, 25. ஸ்லொவேனியா,26. ஹங்கேரி, 27. ரொமேனியா சியர்ரா மான்டி நீக்ரோ, 28. குரோஷியா, 29. குரேஷியா, 30. ஸலோவேனியா, 31. மாசிடோனியா, 32. பல்கேரியா, 33. அல்பேனியா, 34. ஏஜியன் கடல், 35. அயனியன் கடல், 36. போர்ச்சுகல், 37. ஸ்பெயின், 38. மெடிட்டரேனியன் கடல், 39. ஆசியா, 40. காஸ்பியன் கடல்

NOT TO BE REPUBLISHED

5. **புல்வெளிகள்:** இலையுதிர்காடுகள் தென் பகுதியில் காணப்படுகின்றன. எ.கா ஹங்கேரி, பல்கேரியா, ரூமேனியா மற்றும் யுரோப்பின் ரஷ்யா. இது குறைவான மரங்கள் மற்றும் புற்கள் உள்ள ஸ்டெப்பீஸ் புல் வகையாகும்.

6. **ஆல்பைன்ஸ் தாவரங்கள் :** ஐரோப்பாவின் தென் பகுதியில் மிக உயர்ந்த மலைப்பகுதிகள் சூழ்ந்துள்ளன. எ.கா: ஆல்ப்ஸ், பிரனிஸ், பால்கன், கார்ப்பேத்தியன் மற்றும் டினாரிக் மலைகள்.

4. வேளாண்மை, கால்நடை வளர்த்தல் மற்றும் மீன் பிடித்தல்

வேளாண்மை : தொழிலாக்கத்திற்கு அடுத்து ஐரோப்பாவில் வேளாண்மையே முக்கிய தொழிலாக விளங்குகிறது. இக்கண்டம் பரந்த, சமதளமான செழிப்பான நிலம் மற்றும் சிறப்பான நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றிருப்பதில் இக்கண்டம் செல்வம் நிறைந்ததாகும். இங்குள்ள தட்பவெப்ப நிலை வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது.

ஸ்காண்டிநேவியாவின் நாடுகளைத் தவிர ஐரோப்பாவின் பல நாடுகள் அவற்றின் பரப்பளவில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பகுதிகளை வேளாண்மைக்கு பயன்படுத்துகிறார்கள். ஐரோப்பாவின் சராசரி வேளாண் பகுதிகளின் அளவு 10 ஹெக்டேர்களாகும்.

மேற்கு ஐரோப்பா நாடுகளில் கலப்பு விவசாய முறைகள் பழக்கத்தில் உள்ளன. இது விளைச்சல் மற்றும் கால்நடை வளர்த்தல் இரண்டையும் உள்ளடக்கும். கோழி வளர்த்தல், பன்றி வளர்த்தல், பலவகைப் பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை விளைவிக்க பயன் படுத்துகிறார்கள்.

தென் ஐரோப்பாவில் மத்திய தரைக்கடலின் தட்பவெப்ப நிலையுள்ளதால் வேளாண்மை முறைகளில் மாறுபாடுகள் உள்ளன. அது தானியப்பயிர்கள், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றின் சாகுபடி மற்றும் கால்நடை வளர்த்தலையும் உள்ளடக்கும்.

பெரிய சந்தைகளுக்கேற்ப சிறப்பான விவசாய முறைகளில் வளர்ச்சி எற்பட்டுள்ளது. அதிகமான மக்கட் தொகை உள்ள நகரப் பகுதிகளினருகே வேளாண்மை சிறப்பான முறையில் நடைபெறுகிறது. ஐரோப்பாவில் 10 விழுக்காட்டிற்கும் குறைவானோர் வேளாண்மையில் ஈடுபடுகின்றனர்.

நிலமேற்பரப்பு அம்சங்கள், மண்வளம், தட்பவெப்ப நிலை, சந்தை மற்றும் வேளாண்மையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையை

© KTBS NOT TO BE REPUBLISHED

சார்ந்து, ஐரோப்பாவின் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு பயிர் வகைகளை விளைவிக்கிறார்கள்.

கோதுமை, ஐரோப்பாவின் முக்கிய உணவு தானியம் ஆகும். பாரிஸ் பள்ளத்தாக்கு, ஐரோப்பாவின் பெரிய சமவெளி ஹங்கேரி நிலப்பரப்பு, தாழ்ந்த சமவெளி நாடுகள் மற்றும் இத்தாலியின் 'போ' நதி பள்ளத்தாக்கு போன்றவை ஐரோப்பாவின் முக்கிய கோதுமை விளையும் நிலங்கள் ஆகும்.

மக்காச் சோளம் ஐரோப்பாவின் இரண்டாம் முக்கிய தானியமாகும் பிரான்ஸ், இத்தாலி, ஹங்கேரி, ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் மக்காச் சோளம் விளையும் முக்கிய நாடுகள் ஆகும். ''ரை'' (Rye) மற்றொரு உணவுப் பயிர் ஆகும். இதில் பெரும்பாலும் பிரட் (ரொட்டி) மற்றும் மதுபானம் தயாரிக்கப்படுகிறது. போலந்து ஜெர்மனி, ஜெக் மற்றும் ஸ்லோவாகிய குடியரசு நாடுகள் ''ரை'' (Rye) பயிரிடும் முக்கிய நாடுகள் ஆகும். பார்லி உற்பத்தியிலும் ஐரோப்பா முன்னிலையில் உள்ளது. இதை உணவு தானியமாகவும். மாடுகளுக்கு தீவனமாகவும், மதுபானம் தயாரிப்பிலும் பயன்படுத்துகிறார்கள். சில பகுதிகளில் ''ஓடஸ்'' (oats) பயிரிடப்படுகிறது. நெற்பயிர் மிகக் குறைந்த அளவில் பயிரிடப்படுகிறது. இது கோடைப் பயிராகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

சர்க்கரை வள்ளிக்கிழங்கு மற்றும் உருளைக்கிழங்கு (Potato) இவை ஐரோப்பாவின் இரண்டு முக்கிய கிழங்கு வகைகளாகும். சர்க்கரை வள்ளிக்கிழங்கு சர்க்கரை தயாரிப்பதற்கும், மாட்டுத் தீவனமாகவும் பயன்படுத்துகின்றனர்.

உருளைக்கிழங்கு பெரும்பாலும் மத்திய கிழக்கு ஐரோப்பா சமவெளி பிரதேசங்களில் பயிரிடப்படுகிறது. உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஐரோப்பா உலகிலேயே முதலிடம் பெற்றுள்ளது. **சணல் (Flax)** ஐரோப்பாவின் முக்கிய நார்பயிர் ஆகும்.

ஐரோப்பாவின் மலைச் சரிவுகளில் திராட்சை, ஆப்பிள், அத்தி, சாத்துக்குடி, எலுமிச்சை, உலர் திராட்சை (பிளம்), மாதுளை, செஸ்ட்நட் முதலிய பழவகைகள் பயிரிடப்படுகின்றன. பல்கேரியா, ரோஜாப்பூ, காய்கறிகள் மற்றும் தோட்டப்பயிர்களுக்கு சிறப்பானது.

கால்நடை வளர்த்தல்: ஐரோப்பாவின் கலப்பு வேளாண் முறையில் கால்நடை வளர்த்தல் சிறப்பு வாய்ந்தது. குளிர்ந்த ஈரமான தட்பவெப்பநிலை, அதிக மக்கட்தொகைக் கொண்ட நகரங்கள் வசதியான சாலைகள், இரயில் போக்குவரத்து, சிறந்த உயிரியல் தொழில்நுட்ப முன்னேற்றம், குளிர்சாதன முறைகள், வணிக ரீதியாக

பால் உற்பத்தியின் இயந்திரமயமாக்கல் மற்றும் ஏராளமான மேய்ச்சல் நிலங்கள், ஐரோப்பாவின் கால்நடை வளர்த்தல் மற்றும் பால் உற்பத்தியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பாவின் கால்நடைவளர்த்தல்

டென்மார்க், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளில் கால் நடை வளர்த்தல் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. டென்மார்க், கால்நடை வளர்த்தலில் புகழ் பெற்றது. ஐரோப்பா நாடுகள் பால் பொருட்களை எற்றுமதி செய்கின்றது. எ.கா: வெண்ணெய், கடும்பால், சீஸ் (பால்க்கட்டி), சாக்லெட் முதலியன.

மீன் பிடித்தல் : வரலாறு முழுவதும் மீன்பிடித்தல், ஐரோப்பிய உணவின் முக்கிய அங்கமாக இருந்து வருகிறது. குறைவான ஆழமுள்ள கடற்பகுதியில், மீன் பிடித்தல் முக்கியமாக நடைபெறுகிறது. வடமேற்கு ஐரோப்பா சிறந்த மீன் பிடிப்பகுதிகளாகும். அவை ஆர்டிக் வட்டப் பகுதியிலிருந்து மத்திய கடல் வரை பரந்துள்ளது. வடக்குக் கடல் புகழ் பெற்ற மீன்பிடித்தல் பிரதேசமாகும். அதில் நார்வே, பிரிட்டன், டென்மார்க், ஸ்வீடன் மற்றும் ஜெர்மனி சேரும். டாகர் பேங்க் மற்றும் கிரேட் பிஷர் பேங்க் வடக்குக் கடலின் இரண்டு சிறந்த மீன் பிடிப்பிரதேச ங்களாகும். நார்வே மக்கள் மீன்பிடித்தலில் சிறந்தவர்கள்.

சீல் மற்றும் திமிங்கலம் துருவப் பிரதேசங்களில் பிடிக்கப்படுகின்றன. நார்வே அதிகமான மீன்களை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் நாடாகும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS



ஐரோப்பாவின் மீன் பிடிப் பகுதிகள்

வேளாண் நிலங்கள் மற்றும் உணவு தானியவகைகளின் குறைபாட்டினால் ஐரோப்பாவில் மீன் பிடித்தொழில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

5. கனிமப் பொருட்கள்

கனிமப்பொருட்கள் : ஐரோப்பா கண்டத்தில் பல்வேறு வகையான கனிமப் பொருட்கள் மற்றும் ஆற்றல் மூலங்கள் உள்ளன.

இக்கண்டத்தில் அதிக அளவு இரும்பு கனிமப்பொருட்கள் உற்பத்தியாகின்றன. ஐரோப்பாவின் பல நாடுகளில் இரும்புக் கனிமப் பொருட்கள் கிடைக்கின்றன. உலகிலுள்ள மொத்த இரும்பு கனிமப் பொருட்களில் சுமார் 5 சதவீதம் ஐரோப்பாவில் கிடைக்கின்றது. பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் சுவீடன் மிகச்சிறந்த இரும்பு கனிமப் பொருள் கிடைக்கும் நாடுகளாகும்.

பல்கேரியா மற்றும் போலந்து புகழ் பெற்ற தாமிரம் தயாரிக்கும் நாடுகளாகும். ஐரோப்பாவில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிப்பொருட்கள் மிகக் குறைவு. மிகச் சிறந்த பெட்ரோலியம் தயாரிக்கும். பகுதிகள் வடகடல், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ஜெர்மனி ஆகும். உயர்ந்த பிட்மின்ஸ் நிலக்கரி ஐரோப்பாவில், ஜெர்மனி, ரஷ்யா மற்றும் பிரிட்டனில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED

நிலக்கரி, ஐரோப்பாவின் முக்கியமான மின்சக்தி மூலமாகும். ஸ்காண்டிநேவியா மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளைத் தவிர இக்கண்டம் முழுவதும் நிலக்கரி புதையல்கள் உள்ளன. உயர்தர பிட்மினஸ் நிலக்கரி ஐரோப்பாவில், ரஷ்யா ஜெர்மனி மற்றும் பிரிட்டனில் விநியோகப்பட்டுள்ளது. சில இடங்களில் பாக்ஸைட் மற்றும் பொட்டாஷ்களும் கிடைக்கின்றன.



கனிம வளங்களின் பங்கீடு

NOT TO BE REPUBLISHED

முக்கிய தொழிற்சாலைகள் :

இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள்: நவீன யுகமானது, இரும்பு மற்றும் எஃகு யுகமாகும். இது பெரிய தொழிற்சாலை மற்றும் பல சிறிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரும்பு மற்றும் எஃகைத் தயாரிக்கிறது. முக்கியமான இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி செய்யும் பிரதேசங்கள்:

(1) ஜெர்மனி: ருஹ஽ர், சார், வெஸர் நதிக்கரைகள் மற்றும் பெர்லின் பிரதேசம்.

(2) பிரிட்டன்: பிளாக் கன்ட்ரி, ஷெபீல்ட், வடகிழக்கு கடற்கரைப்பகுதி மற்றும் வேல்ஸ் பிரதேசம்.

(3) பிரான்ஸ் : லோரைன், வடமேற்கு மற்றும் கிழக்கு எல்லைப் பகுதிகள், போலந்தின் சைலீசியா, இத்தாலியின் ''போ'' நதிப்பள்ளத்தாக்குகள் மற்றும் லம்பார்டி நிலப்பரப்பு.

பருத்தி ஆடை தொழிற்சாலைகள் : ஐரோப்பாவிலும் பல வேளாண் அடிப்படையில் தொழிற்சாலைகள் வளர்ச்சியடைந்துள்ளன. அவற்றில் பருத்தி ஆடை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் ஒன்றாகும். ஐரோப்பா முழுவதும் பருத்தி ஆலைகள் உள்ளன. வேறு நாடுகளிலிருந்து கச்சா பருத்தியை இறக்குமதி செய்கிறார்கள், பிரிட்டன் நவீன பருத்தி தொழிற்சாலைகளின் பிறப்பிடமாகும். இங்குள்ள லங்கஷைர், ஜெஸ்ஷைர் மற்றும் டர்பிஷைர் முக்கிய பருத்தி ஆலைகளுள்ள மையங்களாகும். ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் மற்ற சிறந்த பருத்தி ஆடை தயாரிக்கும் பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகளாகும்.

தரமான பட்டு, கம்பளி ஆடை, கைத்தறி ஆடைகளுக்கு பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் இத்தாலி நாடுகள் புகழ் பெற்றவை.

கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் : இது பெரிய என்ஜினியரிங் மற்றும் கூட்டு தொழிற்சாலையாகும். தொழில் நுட்ப முன்னேற்றம், சிறந்த துறைமுக வசதிகள், தொழிற்சாலை முன்னேற்றம் முதலியன இத்தொழில் வளர்ச்சிக்கான காரணங்களாகும். ஐரோப்பாவில் ஜெர்மனி சிறந்த கப்பல் கட்டும் நாடாகும். ஸ்வீடன், பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் கப்பல் கட்டும் மற்ற நாடுகளாகும்.

தானியங்கி வாகன தொழிற்சாலை:

வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்: இவை கார், டிரக், பேருந்து, ஸ்கூட்டர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகும். இவை கூட்டு தொழிற்சாலைகளாகும். மிகச்சிறந்த தொழில் நுட்பம் மற்றும் அதிக முதலீடு செய்ய கூடிய தொழில் ஆகும். ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் பிரிட்டன் மிகச்சிறந்த தானியங்கி வாகனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைக் கொண்ட நாடுகளாகும்.

6. ஐரோப்பாவின் மிகச்சிறந்த தொழிற்சாலைப் பகுதிகள்

ஐரோப்பாவின் மிகச்சிறந்த தொழில் மற்றும் தொழில் மையங்கள் ஒரு முக்கோண வடிவில் இணைகின்றன. இதை ஐரோப்பாவின் தொழிற்சாலைகளின் இதயம் என்பர். இந்த முக்கோணம், வடக்கு

©KTBS NOT TO BE REPUBLISHED

சமுத்திரத்திலிருந்து போலந்தின் மத்தியப்பகுதி மற்றும் தென் இத்தாலியின் ''போ'' நதிப்பள்ளத்தாக்கிலிருந்து வட ஸ்வீடன் வரையிலும் பரந்துள்ளது.

ஐரோப்பாவின் சிறந்த தொழில் மையங்கள் கீழ்வருமாறு:

1. பிரிட்டனின் தொழிற்சாலைப் பகுதிகள்.
2. மேற்கு முக்கோண தொழில் மையம்.
3. பேரிஸ் தொழில் மையம், ''ஐரோப்பாவின் தொழிற்சாலைகளின் இதயம்'' என்பர்.
4. லோரைன் - சார் தொழில் மையம்.
5. ரைன் நதியின் மேற்பள்ளத்தாக்கு மையம்.
6. சைலேசியாவின் மேற்பள்ளத்தாக்கு மையம்.
7. தெற்கு ஸ்காண்டிநேவியாவின் மையம், ஸ்டாக் ஹோமை உள்ளடக்குகிறது.
8. கிழக்கு ஜெர்மனியில் இருந்து வடகிழக்கு ஜெக்கோ மற்றும் ஸ்லோவாக்கியா மையம்.
9. வட இத்தாலியின் தொழில் மையத்திலுள்ள ''போ'' நதியின் சமவெளி.

@KTBS NOT TO BE REPUBLISHED

7. மக்கட் தொகை

ஐரோப்பாவின் நிலப்பரப்புக்கு ஒப்பிட்டு நோக்கும் பொழுது அதனுடைய மக்கட் தொகை அதிகமாக உள்ளது. ஐரோப்பியன் ரஷ்யா நாட்டைத் தவிர உலகின் நிலப்பரப்பில் 11 விழுக்காட்டு நிலப்பரப்பளவை ஐரோப்பா பெற்றுள்ளது. ஆனால் உலகின் மொத்த மக்கட் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியை மட்டுமே பெற்றுள்ளது. அதனுடைய மொத்தம் மக்கட் தொகை 742 மில்லியன்கள் (2023). இதில் நகரங்களில் வாழும் மக்கட் தொகையின் விழுக்காடு அதிகம்.

மக்கள் தொகைப் பங்கீடு :

ஐரோப்பாவில் மக்கள் தொகைப் விநியோகம் சமமாக இல்லை. ஜெர்மனி, பிரிட்டன், இத்தாலி மற்றும் பிரான்ஸ், ஐரோப்பாவின் அதிகமான மக்கள் தொகையுள்ள நாடுகள் ஆகும். மேற்கு ஐரோப்பாவில் மக்கள் தொகை குறைவு. ஆல்ப்ஸ், ககாசஸ், அரை - வறண்ட பிரதேசமான தென்கிழக்கு ஐரோப்பாவின் பகுதிகளில் மக்கள் அடர்த்தி குறைவாக உள்ளது.

ஐரோப்பாவின் அதிக மக்கள் அடர்த்தியுள்ள நாடுகள் பெல்ஜியம், லக்சம்பர்க், நெதர்லாந்து முதலியன ஆகும். இதற்கு தொழிலாக்கம், போக்குவரத்து, இயற்கை வளங்கள் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியே முக்கிய காரணங்களாகும்.

வளர்ச்சி : ஐரோப்பாவின் பல நாடுகளில் குறைந்த மக்கட் தொகையும், மக்கட் தொகை பெருக்கத்தில் சரிவும் ஏற்பட்ட நிலைமையைக் காண்கிறோம். மக்கட் தொகை அதிகரிப்பு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுபடுகிறது.

குடிபெயர்ப்பு : சுமார் 200 வருடங்களாக ஐரோப்பியர்கள் மற்ற நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். பல்வேறு காரணங்களால் வேற்று நாட்டு மக்கள் ஐரோப்பாவிற்கு குடிபெயர்ந்து அங்கேயே தங்கி வாழ்கின்றனர்.

இரண்டாம் உலகப்போருக்கு பிறகு வேற்று கண்டங்கள் மற்றும் நாடுகளில் இருந்து மக்கள் பிரிட்டனுக்கு குடிபெயர்ந்துள்ளனர். அதில் பெரும்பாலானோர் இத்தாலியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

மக்களடர்த்தி

இரண்டாம் உலகக்ப்போருக்கு முன்பு ஜெர்மனியர்கள் வெவ்வேறு நாடுகளுக்கு குடிபெயர்ந்து உள்ளனர். போலந்து, ரூமேனியா, ஹங்கேரி, ஸ்லோவாகியா செக் குடியரசு மற்றும் யுகோஸ்லோவியாவில் ஜெர்மனியர் சிறுபான்மையினராக கருதப்பட்டனர்.

மக்கட் தொகை : ஐரோப்பாவின் மக்கட் தொகையில் வேற்றுமைகளைக் காணலாம். புகழ் பெற்ற நெதர்லாந்தில் ஒவ்வொரு சதுர கி.மீக்கு 950 மக்கள் இருந்தால், ஐஸ்லாந்தில் (ஐயர்லாந்தில்) ஒரு சதுர கி.மீ.க்கு 3 மக்கள் மட்டுமே உள்ளனர். வட ஐரோப்பாவில் தாழ்நிலப் பகுதிகளில் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ளது.

ஐரோப்பாவின் அதிக மக்கள் அடர்த்தியுள்ள பிரதேசங்கள், தொழிற்மைய மாவட்டங்கள். பெல்ஜியம் மற்றும் ஜெர்மனியின் நிலக்கரி பிரதேசங்கள்,கிரேட்டர் லண்டன், நெதர்லாந்து ரைன் நதிசமவெளி, வட இத்தாலி மற்றும் ஸ்பெயினின் கடலோரப் பகுதிகள் ஆகும்.

குறைந்த மக்கள் அடர்த்தி உள்ள பிரதேசங்கள், மத்திய பிரான்சு மலைப்பகுதிகள் பால்கன் பிரதேசம் மற்றும் ஸ்காட்லாந்தின் மேட்டு நிலப்பகுதிகள் ஆகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

புதிய சொற்கள் :

ஆல்பைன், ஆல்ப்ஸ், தானியங்கி, சணல்நார், இருட்டான முடிச்சு மலைகள், கடலோர தட்பவெப்பநிலை, மாசிஃப் மெசட்டா, குடிபெயர்ப்பு, தீபகற்பம், டைகா, ஜவளி தொழிற்சாலை, ரை (கடுகு).

உங்களுக்கு தெரியுமா?

1. ஸ்காண்டிநேவியா, வட ஐரோப்பாவின் பகுதியைச் சேரும். இது நார்வே, ஸ்வீடன் மற்றும் பின்லாந்துகளை உள்ளடக்கும்.
2. பிரிட்டன் அல்லது கிரேட் பிரிட்டன், ஐரோப்பாவின் மிகப் பெரிய தீவு. இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ்களை உள்ளடக்கும். வட அயர்லாந்து உட்பட்ட ஐக்கிய நாடுகள் (UK) என்றழைக்கப்படுகின்றது.
3. சுமார் 500 வருடங்களுக்கும் மேலாக ஐரோப்பாவை உலகத்தின் இதயப் பகுதி என்று அழைத்து வருகின்றனர்.
4. பிளாக் பாரஸ்ட் என்பது காடு அல்ல. அது ஒரு மலைப்பகுதி. தெற்கு ஜெர்மனியில் உள்ளது. இதன் உட் பகுதி அடர்ந்த காடுகளால் இருண்டு காணப்படுவதால் இப்பெயர் வந்துள்ளனது.

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களைக் கொண்டு விடப்பட்டுள்ள இடங்களை நிரப்புக:

1. ஐரோப்பாவை ஆசியாவின் ________ கற்பம் என்றழைப்பர்.
2. ஐரோப்பாவின் புகழ்பெற்ற மலை ________ .
3. ஐரோப்பாவின் தட்பவெப்ப நிலையின் மீது விளைவு உண்டாக்கும் காற்று ________ .
4. ஐரோப்பாவின் முக்கிய உணவு பயிர் ________ .

II. குழுக்களில் கலந்துரையாடின பின்னர் விடையளிக்கவும்:

5. ஐரோப்பாவின் புவியியல் இருப்பிடத்தை பற்றி எழுதுக.
6. ஐரோப்பாவின் இயற்கை பிரிவுகளைக் குறிப்பிடவும்?
7. ஐரோப்பாவின் சிறந்த தட்ப வெப்ப நிலைப் பிரதேசங்கள் யாவை?
8. ஐரோப்பாவின் சிறந்த இயற்கை தாவர வகைகளைக் குறிப்பிடவும்.
9. ஐரோப்பாவின் புகழ்பெற்ற கால்நடை வளர்க்கப்படும் நாடுகள் யாவை?
10. ஐரோப்பாவின் முக்கிய உணவுப் பயிர்கள் யாவை?
11. ஐரோப்பாவின் முக்கிய மீன் பிடித்தல் மையங்கள் யாவை?
12. ஐரோப்பாவின் முக்கிய கனிமப் பொருட்கள் யாவை?

செயல்பாடுகள் :

1. வரைபடத்தில் ஐரோப்பாவின் முக்கிய பிரிவுகளைக் குறிப்பிடவும்.
2. உங்கள் ஆசிரியரின் உதவியுடன் ஐரோப்பாவின் முக்கிய மலைகள் மற்றும் சிகரங்களை குறிப்பிடவும்.
3. உங்கள் சுற்றுப்புறத்தை கவனித்து நிலப்பரப்பின் தோற்றம், தாவரங்கள் மற்றும் பயிர்களைப் பட்டியலிடவும்.
4. ஐரோப்பா வரைபடத்தில் நாடுகளின் தலை நகரங்களின் பெயர்கள், சுற்றுலா இடங்கள் மற்றும் தொழில் மைய பிரதேசங்களை குறிப்பிடவும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பாடம்
24

ஆப்பிரிக்கா கண்டம்

G8R3Z5

பாட அறிமுகம்

இப்பாடத்தில் ஆப்பிரிக்காவின் பூகோள அமைப்பு, பரப்பளவு இயற்கை அமைப்பு, நதி அமைப்பு, தட்ப வெப்ப நிலை, இயற்கைத் தாவரங்கள், விலங்குச் செல்வம், வேளாண்மை, தொழிற்சாலைகள், விலை மதிப்பு வாயந்த கனிமங்கள், மக்கட் தொகை பெருக்கம், பங்கீடு மற்றும் மக்களடர்த்தியை பற்றி அறிவீர்கள்.

திறன்கள் :

1. ஆப்பிரிக்கா கண்டத்தின் இட அமைப்பு, பரப்பளவு, நில அமைப்பு மற்றும் இயற்கை அமைப்பை பற்றி அறிதல்.
2. ஆப்பிரிக்காவிலுள்ள முக்கிய நதி அமைப்பு, தட்பவெப்ப நிலையும் அவற்றின் பிரதேசங்கள், இயற்கை தாவரங்கள் மற்றும் விலங்குச் செல்வத்தைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
3. வேளாண்மை, தொழிற்சாலை மற்றும் விலையுயர்ந்த கனிவளம் பற்றி அறிவீர்கள்.
4. ஆப்பிரிக்காவின் மக்கட்தொகை, வளர்ச்சி, பங்கீடு மற்றும் மக்கள் அடர்த்தி பற்றி அறிதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

முன்னுரை: ஆசியாவிற்கு அடுத்ததாக, ஆப்பிரிக்கா உலகின் இரண்டாவது பெரிய கண்டமாகும். மக்கட் தொகைப் பெருக்கத்திலும் இது இரண்டாவது இடத்தை பெறுகிறது. அண்மை வருடங்கள் வரைக்கும் இக்கண்டம் ''இருட்டு கண்டம்'' என்று அழைக்கப்பட்டது, இதற்கான காரணம். இங்கு பெரும்பாலும் கருமை நிற மக்கள் (Negroes) இருப்பதினால் அல்ல. அங்குள்ள நிலமைக்கு மாறாக பீடபூமிகளின் விளிம்புகள் கடற்கரை வரையிலும் பரவி இருப்பது மற்றும் வடக்கே சஹாரா வரையில் பாலைவனங்கள் இருப்பதால், வெளியுலத்திற்கு வெகுநாட்களாக தென்படாமல் இருந்ததே அதற்கான காரணமாகும். இது 54 நாடுகளைக் கொண்டுள்ளது.

1. இருப்பிடம், பரப்பளவு மற்றும் நிலத்தோற்றம்

இருப்பிடம் : ஆப்பிரிக்கா கண்டம் 37° வடக்கு மற்றும் 35° தெற்கு அட்சரேகை மற்றும் 17° மேற்கு மற்றும் 50° கிழக்கு தீர்க்கரேகை

மத்தியில் உள்ளது. ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதியின் பிரதான தீர்க்கரேகை, வடக்கும்- தெற்குமாக செல்கிறது. கடகரேகை மற்றும் மகர ரேகைகள் இரண்டும் இக்கண்டத்தின் வழியே பாய்ந்து செல்வது. இதன் சிறப்பு அம்சமாகும். நிலநடுக்கோடு ஏறக்குறைய இக்கண்டத் தின் மையப்பகுதியில் பாய்ந்து செல்வதால் இதனை 'மத்திய கண்டம்' என்றழைப்பர்.

பரப்பளவு : ஆப்பிரிக்காவின் மொத்த பரப்பளவு 30.4 மில்லியன் ச.கி.மீ. ஆகும். இது தெற்கே 8000 கி.மீ நீளம் மற்றும் கிழக்கு - மேற்கே 7400 கி.மீ. அகலம் உள்ளது. ஆல்-கிரம் (டுனிசியா) ஆப்பிரிக்காவின் வடக்கு உச்சி மற்றும் அகுல்ஹாஸ் முனை (தென் ஆப்பிரிக்கா) தென் உச்சியாகும்.



©KTBS NOT TO BE REPUBLISHED

உலகத்தில் ஆப்பிரிக்காவின் இடம்

நில அமைப்பு : ஆப்பிரிக்காவின் பல பகுதிகள் சமுத்திரம் அல்லது பெருங்கடல்களால் சூழப்பட்டுள்ளன. வடக்கே மத்திய தரைக்கடல், தெற்கே அட்லாண்டிக் கடல், கிழக்கே செங்கடல் மற்றும் இந்து மகா சமுத்திரத்தால் சூழப்பட்டுள்ளது. முன்பு, இக்கண்டத்தின் வடக்கிழக்குப் பகுதி சீனாய் தீபகற்பத்தின் மூலம் ஆசியாவுடன் இணைந்திருந்தது. இப்பொழுது அது சூயஸ் கால் வாயினால் பிரிகிறது. ஆப்பிரிக்கா ஜிப்ரால்டர் நீரிணையினால் ஐரோப்பாவிலிருந்தும் அரேபியா தீபகற்பத்திலிருந்து செங்கடலினாலும் பிரிகிறது. ஆப்பிரிக்கா கண்டத்தின் கடற்கரை 30,500 கி.மீ. நீளமாகும்.



ஆப்பிரிக்கா கண்டத்தின் இடமும் நில அமைப்பும்

@KTBS NOT TO BE REPUBLISHED

2. இயற்கை அமைப்புகள்

ஆப்பிரிக்கா கண்டத்தின் இயற்கை அமைப்புகள் அதன் உள்ளமைப் புகைளைப் பிரதிபலிக்கின்றன. இக்கண்டம் முழுவதுமாக ஒரு பரந்த பீடபூமியாகக் கருதப்படுகிறது. அது பழங்கால ஸ்படிகக் கற்களால் ஆனது இது குறுகிய கடற்கரை விளிம்பலிருந்து செங்குத்தாக உயர்ந்து நிற்கிறது. எனவே இக்கண்டத்தின் உள்நாடுகளுக்குச் செல்வது கடினமாகும் பீடபூமி, தென்கிழக்கு பகுதியில் உயரமாகவும், வடகிழக்குப் பகுதியில் மென்மையான சரிவையும் பெற்றுள்ளது.

ஆப்பிரிக்கா கண்டத்தின் அளவுடன் ஒப்பிடும் பொழுது, அது மற்ற கண்டங்களை விட குறைவான உயரமுள்ள மலைகள் மற்றும் தாழ்நிலைகளைப் பெற்றுள்ளது.

ஆப்பரிக்காவின் கடற்கரை, ஏறக்குறைய நேராக உள்ளது. அது சில பெரிய தாழ்நிலங்கள் இயற்கை துறைமுகங்கள் மற்றும் நதி முகத்துவாரங்களைப் பெற்றுள்ளது. அங்கு விரிகுடா மற்றும் வளைகுடா இல்லை. அதுமட்டுமல்லாமல் கடற்கரையின் உட்பகுதிகள் ஆழமாகக் குடையப் பட்டுள்ளன.



மகா பிளவுப் பள்ளத்தாக்குகள்

மகா பிளவுப் பள்ளத்தாக்குகள்: இரண்டு அல்லது இரண்டு தாழ்நிலங்களுக்குக்கிடையேயுள்ள நிலப்பகுதியின் சரிவினால் உருவான சமதள பள்ளத்தாக்கைப் பிளவு பள்ளத்தாக்கு என்றழைப்பர். ஆப்பிரிக்காவின் பிளவுப்பள்ளத்தாக்கு மிகவும் நீளமானது (6900 கி.மீ) எனவே, இதனை ''மகா பிளவு பள்ளத்தாக்கு'' என்று அழைப்பர்.

ஆங்கில 'Y' எழுத்தின் வடிவத்திலுள்ள மிகப்பெரிய இப்பிளவுப்பள்ளத்த தாக்கானது. ஆப்பிரிக்கா கண்டத்தின் தெளிவான மற்றும் குறிப்பிடத்தக்க இயற்கை அமைப்பாகும். இது தென் மொஜாம்பிக்கிலிருந்து மாலவி, டான்ஜானியா, கென்யா மற்றும் இதியோபியா வழியாக செங்கடல் ஆக்யூபா வளைகுடா, சாக்கடல் மற்றும் காலிலி சமுத்திரம் வரைச் சென்று சிரியாவிலுள்ள ஜோர்டன் பள்ளத்தாக்கில் முடிவு பெறுகிறது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

©KTBS NOT TO BE REPUBLISHED

இயற்கைப் பிரிவுகள்

ஆப்பிரிக்காவின் தாழ்நிலப்பகுதிகள்!

ஆப்பிரிக்காவில் ஐந்து முக்கியமான தாழ் நிலப்பகுதிகள் உள்ளன. அவை கீழ்வருமாறு.

1. **சுடான் தாழ்நிலப்பகுதி** வெள்ளை மற்றும் நீல நைல் நதிகள் பாயும் பிரதேசமாகும். உலகிலேயே அதிகமான பரப்பளவுள்ள இந்த சதுப்பு நிலத்தை ''சட்'' (sudd) என்று அழைப்பர்.

2. சாட் **(chad) தாழ்நிலப்பகுதி** சாட் ஏரியினால் சூழப்பட்டுள்ளது. இதுவும் சதுப்பு நில பிரதேசமாகும் மற்றும் சஹாரா பாலைவனம் இதை சூழந்து கொண்டுள்ளது.

3. **ஜோஃப் (Djouf) தாழ்நிலப்பகுதி** சஹாரா பாலைவனத்தின் மேற்குப் பகுதியை உள்ளடக்கும் மற்றும் மாரிடானியா- மாலி எல்லை முழுவதும் பரந்துள்ளது. இதன் வழியாக நைஜர் நதி பாய்கிறது.

4. **காங்கோ (ஜைரே) தாழ் நிலப்பகுதி** பெரிய கட்டமைப்பான தாழ்நிலப்பகுதி மற்றும் பீடபூமியினால் ஆனது. இதன் மூலம் கங்கோவும் அதன் கிளை நதிகளும் பாய்கின்றன. இது ஒரு காட்டுப் பகுதியாகும்.

5. **கலஹரி தாழ்நிலப்பகுதி** பெரும்பாலும் பாலைவனம் மற்றும் ஸ்டெப்பீஸ் புல் வெளிப்பகுதிகளாகும். இது பீடபூமிகளினால் சூழப்பட்டுள்ளது.

ஏரிகள் : ஆப்பிரிக்கா கண்டம் பொருளாதார விருத்திக்கு. துணை புரியும் பல ஏரிகளைப் பெற்றுள்ளது. அவற்றில் எட்டு முக்கியமானவை. கிழக்கு ஆப்பிரிக்காவில் மிகப்பெரிய மற்றும் ஆழமான ஏரிகளுள்ளன.



தாழ்நிலப்பகுதிகள்

அவை அத்தனையும் பொதுவாக பிளவுப் பள்ளத்தாக்குகளுடன் தொடர்பு பெற்றுள்ளன. பிளவுப் பள்ளத்தாக்குகளின் மேற்கே ஆல்பர்ட், எட்வர்ட், கிவி, டாங்கனிகா மற்றும் நியாசா ஏரிகளுள்ளன, அது மட்டுமல்லாமல் பிளவு பள்ளத்தாக்குகளின் கிழக்கே ருடால்ஃப் (டுர்க்காணி) நட்ரோன் மற்றும் இயாசி ஏரிகளுள்ளன.

டங்கனிகா ஏரி உலகிலேயே இரண்டாவது ஆழமான ஏரியாகும். அது சுமார் 1436 மீ. ஆழமானது. பிளவு பள்ளத்தாக்குகளின் இரண்டு வரிசைகளின் இடையேயுள்ள விக்டோரியா ஏரியானது ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய ஏரியாகும். அது சமார் 69,481 ச.கி.மீ வரை பரந்துள்ளது. நைல் நதி இங்கிருந்து தான் உருவாகிறது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

மலைகள் : ஆப்பிரிக்கா கண்டத்தில் அதிக மலைகள் இல்லை. ஆப்பிரிக்காவின் சமவெளிகளை முறியடிக்க சில சிறுச்சிறு மலைத்தொடர்கள் உள்ளன. அவற்றில் அட்லஸ் தொடர்கள் டிரேகன்ஸ்பர்க் மலைகள் மற்றும் கிலிமஞ்ஜாரோ மலைகள் முக்கியமானவை.

அட்லஸ் தொடர்கள் : இது இந்தியாவின் இமயமலைத் தொடர்களைப் போல் முடிச்சு மலைகளாகும். இது தென் ஐரோப்பா மலைகளின் தொடர்ச்சியாகும். மௌன்ட் டாப்கால் உயரமான சிகரமாகும். அட்லஸ் தொடர்கள் அல்ஜீரியா, மொராகோ மற்றும் டுனீஷியா பகுதிகள் வரையிலும் பரந்துள்ளன.

டிரேகன்ஸ் பர்க் மலைகள் : ஆப்பிரிக்காவின் தென் கிழக்கு கடற்கரை முழுவதும் பரந்துள்ளன. மலைகளென்று அழைக்கப்பட்டாலும் இவை பீடபூமிகளின் சரிவு எல்லைகளாகும்.

கிலிமஞ்ஜாரோ மலைத் தொடர்கள்: இம்மலைத் தொடர்கள் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ளன. இது ஆப்பிரிக்கா கண்டத்தின் மிக உயரமான சிகரங்களைப் பெற்றுள்ளன. உயரம் 5,895 மீட்டர்களாகும். நிலநடுக்கோட்டிற்கு அருகே இருந்தாலும், இதன் சிகரம் எப்பொழுதும் பனியால் மூடப்பட்டுள்ளது. அதனுடைய உயரமே இதற்கான காரணமாகும்.

கிலிமஞ்ஜாரோ மலை

மேல்கண்டவைகளைத் தவிர ஆஹாகார், டெபெஸ்டி, ரூவென்ஜொரி, கேப் தொடர் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவின் மலைத் தொடர்கள் ஆப்பிரிக்காவின் மற்ற மலைகள் ஆகும்.

ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த சிகரம் கிலிமஞ்சாரோ மற்றும் மிகத் தாழ்வான பிரதேசம் அசல் (ஜிபோடி) ஏரி ஆகும்.

சூயேஜ் வளைகுடா: இரண்டு பரந்த நில அமைப்புகளை இணைக்கும் மற்றும் இரண்டு நீர்பகுதிகளை வேறுபடுத்தும் சிறிய நிலப்பகுதி ''வளைகுடா'' ஆகும். வளை குடாக்களில் சுயேஜ் சிறப்பானது.

சூயேஜ் வளைகுடா இது மெடிட்டரேனியன் (மத்திய தரைக்கடல்) சமுத்திரம் மற்றும் செங்கடலின் இடையே அமைந்துள்ள சிறிய வளைகுடா ஆகும். இது ஆப்பிரிக்காவையும், ஆசியாவையும்

©KTBS NOT TO BE REPUBLISHED

இணைக்கிறது.தற்போதைய ஆப்பிரிக்கா நாடுகளில் ஒன்றான எகிப்து நாட்டை இந்த வளைகுடாப் பகுதி இணைக்கிறது மற்றும் இது ஆப்பிரிக்காவின் வடகிழக்கு பகுதியில் உள்ளது. இதை சூயெஜ் கால்வாயை அமைக்க தோண்டியுள்ளனர். இந்த கால்வாய் சிறப்பான செயற்கை கால்வாயாகும். மெடிட்டரேனியன் சமுத்திரத்தையும், செங்கடலையும் இணைக்கின்றனது. இது உலகிலேயே பல கப்பல்கள் செல்லும் கடல் வழியாகும் மற்றும் ஐரோப்பாவையும், ஆசியாவையும் குறைந்த தொலைவில் இணைக்கிறது.

சூயேஜ் வளைகுடா



சூயேஜ் கால்வாய்

©KTBS NOT TO BE REPUBLISHED

3. நீர் வளங்கள்

ஆப்பிரிக்காவின் நதிகள் :

ஆப்பிரிக்காவின் நதி அமைப்புகள் தன்னதே ஆன தனித்தன்மைகளை உடையது. பல நதிகள் அதனுடைய மேற்பகுதியில் பாறை இடுக்குகளை உருவாக்கியுள்ளன நீர் வீழ்ச்சிகள் வேகமான நீரோட்டத்தைப் (Rapids) பெற்றுள்ளன. பருவ மழையின் பங்கீட்டின் விளைவாக பல ஆறுகள் வற்றாமல் பாய்கின்றன. கப்பல் போக்குவரத்திற்கு இது ஏற்றதல்ல, எல்லா காலங்களிலும் பாய்ந்து ஓடும் நதிகள் மிகவும் குறைவு, இங்கு உள்நாட்டு நதிகளே இங்கு அதிகம்.

ஆப்பிரிக்கா கண்டம் நான்கு முக்கியமான நதிகளைப் பெற்றுள்ளது. அவை நைல் நதி, காங்கோ (ஜைரே), நைஜர், ஜாம்பெஜி நதிகளாகும். ஆப்பிரிக்காவின் மற்ற சிறப்பான நதிகள் - செனெகல், ஆரெஞ்சு மற்றும் லிம்போபோ ஆகும்.

நைல்நதி : உலகிலேயே மிக நீளமானது. இதன் நீளம் 6,650 கி.மீ. ஆகும். விக்டோரியா ஏரியிலிருந்து நைல் நதியாக உருவாகி சஹாரா பாலைவனத்திற்கு வடக்கே பாய்ந்து மத்திய தரைக்கடலைச் சேருகிறது. நைல் நதிக்கரை மிகவும் செழிப்பானது அதன் நீரை பாசனத்திற்கு பயன்படுத்தும் மில்லியன் கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது. அதனுடைய மிகப் பெரிய இடதுகரை துணைநதி, அல்-கஜல், சூபத் நீலநைல், அட்பாரா என்பன வலதுகரை துணைநதிகளாகும்.

நீல நைல்நதி தானா ஏரியில் (இதியோபியா) உருவாகி கார்டும் என்னும் இடத்தில் வெண் நைலை சேருகிறது. நைல் நதி உலகிலேயே புகழ்பெற்ற கழிமுகங்களை (delta) உருவாக்கியுள்ளது. இந்நதியில் அமைக்கப்பட்ட அணைகட்டுகளில் அஸ்வான் பெரியதாகும்.

காங்கோ நதி: காங்கோ அல்லது ஜைரே நதி ஆப்பிரிக்காவின் நீளமான நதிகளில் இரண்டாவதாகும். ஆப்பிரிக்க மக்கள் இந்த நதியை வெவ்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர். இது உருவாகும் இடத்தில் இந்த நதியை ''லுவாபுலா'' என்றும் மீதமுள்ள பகுதியை ''லுவாலாபா'' என்றும் அழைப்பர்.

காங்கோ நதி நிலநடுக்கோட்டிற்கு அருகில் உருவாகி முதலில் வடக்குத் திசையிலும் பிறகு தென்மேற்கு திசையிலும் 4640 கி.மீ. தொலைவு வரை பாய்ந்து, அட்லாண்டிக் பெருங்கடலை அடைகிறது. இது ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்தில் நிலநடுக்கோட்டுக் காடுகளினிடையே பாய்கிறது. அங்கு புகழ்பெற்ற லிவிங்ஸ்டன் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. ஆனால் நதிக்கு முகத்துவாரம் கிடையாது.

©KTBS NOT TO BE REPUBLISHED

ஆப்பிரிக்காவின் நதிகள்

@KTBS NOT TO BE REPUBLISHED

நைஜர் நதி : ஆப்பிரிக்காவின் மூன்றாவது நீளமான நதியாகும். இது மேற்கு கடற்கரைப் பிரதேசத்தின் உயரமான பகுதியில் உருவாகி, அட்லாண்டிக் பெருங்கடலைச் சேருகிறது. இது வருடந்தோறும் நிரம்பி ஓடும் நதியல்ல, இதன் நீளம் 4000 கி.மீ. ஆகும்.

ஜாம்பெஜீ நதி : ஆப்பிரிக்காவின் நான்காவது முக்கிய நதியாகும் இது தென் ஆப்பிரிக்கப் பகுதியின் புகழ் பெற்ற நதியாகும். இது மத்திய ஆப்பிரிக்காவில் பிறந்து தென்கிழக்கே பாய்ந்து இந்து மகா சமுத்திரத்தைச் சேருகிறது. அதன் போக்கில் ஏராளமான நீர்வீழ்ச்சிகளை அமைத்துள்ளது. அவற்றில் புகழ் பெற்றது விக்டோரியா நீர்வீழ்ச்சியாகும். இந்த நதி பல ஆழமான பள்ளத்தாக்குகளின் வழியாகப் பாய்கின்றது. அவற்றில்

''கரிப கந்தரா'' புகழ் பெற்றதாகும். இந்த நதியின் நீளம் சுமார் 3500 கி.மீ.கள் ஆகும்.

செனெகல் நதி: இது கினியிலுள்ள கெளட்ட ஜால்லோன் பீடபூமியிலிருந்து உருவாகிறது. வடமேற்குத் திசையில் சுமார் 1640 கி.மீ. வரைப் பாய்ந்து கடைசியில் அட்லாண்டிக் பெருங்கடலை அடைகிறது. மாரிடானியா மற்றும் செனெகல் பிரதேசங்களுக்கிடையே அவற்றின் எல்லையாக விளங்குகிறது.

விக்டோரியா நீர்வீழ்ச்சி

4. தட்ப வெப்பநிலை, இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகள்

© KTBS NOT TO BE REPUBLISHED

தட்ப வெப்ப நிலை: அதிக நீளமாகவும், அகலமாகவும் உள்ள ஆப்பிரிக்கா கண்டம் வட அரைக்கோளம் மற்றும் தென் அரைக்கோளம் வரையிலும் பரந்துள்ளது. ஆதலால் இதை மத்திய கண்டம் என்றும் அழைக்கலாம். இக்கண்டத்தின் நடுபகுதியில் பூமத்திய ரேகை கடந்து செல்வதால் சூரியன் கதிர்கள் செங்குத்தாக பரவுகிறது. இக்கண்டத்தில் வெப்ப மண்டலத்தில் தட்ப வெப்ப நிலையுள்ளது. அதுமட்டுமல்லாமல் வேறு அம்சங்களும் இக்கண்டத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவை உயரமான மலைகள் இல்லாமலிருப்பது பெருங்கடலிலிருந்து வீசும் காற்று, கிழக்கிலிருந்து மேற்கு வரையுள்ள அதிக பரப்பளவு மற்றும் சூழல், சஹாராவின் மேற்கு எல்லைகள் முழுவதும் வீசும் (கெனரி வெள்ளம்) மற்றும் கலஹரியின் மேற்கு கடற்கரையிலும் (பெங்க்வல மின்னோட்டம்) பாயும் குளிர்ந்த கடல் நீரோட்டங்கள் கடலோர தாழ்நிலங்களை ஒட்டியுள்ள பகுதிகளின் வெப்ப நிலையை குறைக்கின்றன. இவை இரண்டும் குளிர் நீரோட்டங்கள் என்பதால் அதிக ஈரபதத்தை கொண்டு வரமுடியாது. ஆனால் மொசாம்பிக் வெப்பமண்டல பெருங்கடல் நீரோட்டம் தெற்கு கடற்கரையை ஒட்டி அதிக ஈரப்பதத்யும் மழையையும் தருகிறது.

உயரமான மலைகள் இல்லாமலிருப்பது, தட்ப வெப்ப நிலைப் பிரிவுகள் இங்கு வெப்பக் காற்றுகளின் தடையற்ற இயக்கத்திற்கு வழிவகுக்கிறது. ஆதலால் தட்ப வெப்ப நிலையில் மாற்றம் நிதானமாகவும் மெதுவாகவும் ஏற்படுகின்றன.

ஆப்பிரிக்காவின் தட்ப வெப்ப நிலையில், மழையின் பங்கீடு பெரும் பங்கு வகிக்கிறது. இப்பிரதேசங்களின் சராசரி வருடாந்திர மழை 200 செ.மீ ஆகவும், நிலநடுக்கோட்டிலிருந்து தூரம் செல்லச் செல்ல மழை குறைந்து விடுகிறது. சஹாரா, கலஹரி மற்றும் நமீபியா பிரதேசங்களில் மழை, சுமார் 15 செ.மீ ஆக உள்ளது. கேமரூன் ஆப்பிரிக்காவின் மிக ஈரமான பகுதியாகவும், அது சுமார் 1016 செ.மீ. சராசரி வருடாந்திர மழையையும் பெறுகிறது.

தட்ப வெப்ப நிலைகள்

தட்ப வெப்ப நிலையின் அடிப்படையில் ஆப்பிரிக்கா கண்டத்தை கீழ்க்காணும் எட்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பூமத்திய வட்டத்தின் ஈரமான பகுதி
2. சவன்னா மாதிரி பகுதி
3. வெப்ப மண்டல பாலைவனப் பகுதி
4. மத்திய தரைக்கடல் (மெடிட்டரேனியன்) பகுதி
5. மித வெப்ப புல்வெளி பகுதி
6. மேட்டு நிலங்கள்
7. ஈரமான துணை வெப்ப மண்டலம்
8. வறண்ட குளிர்காலம் நிலவும் துணைவெப்ப மண்டலம்.

1. ***பூமத்திய வட்டத்தின் ஈரமான பகுதி :*** இது தாழ்நிலப் பகுதிகளில் நிலநடுக்கோட்டின் இரு பக்கங்களிலும் காணப்படுகிறது. மற்றும் காங்கோ தாழ்நிலத்திலிருந்து கினியா வரை பரந்துள்ளது. இங்குள்ள தட்பவெப்ப நிலை வெப்பமானது மற்றும் வருடந்தோறும் மழையைப் பெறுகிறது. ஒவ்வொரு மதிய நேரத்திலும் கனமழை (Downpour) பொழிகிறது. வெப்பச் சலனம் (Conventional) மழை வகையை சேரும். அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பதமான நிலைகள் நிலவுவதால் இந்த தட்பவெப்ப நிலை நன்மையானதல்ல.

2. ***சவன்னா மாதிரி தட்ப வெப்ப நிலை பகுதி :*** இது சொமாலியா இதியோபியா, சுடான், சாட் மற்றும் நைஜர் பகுதிகளை உள்ளடக்கும். இந்த தட்பவெப்ப நிலைமை பெரும்பாலும் சுடானில் காணப்படுகிறது. எனவே இதை ‘‘சுடான் மாதிரி தட்ப வெப்ப நிலை’’ என்று அழைப்பர். இங்கு அதிகளவில் வெப்பம் நிலவுகிறது. தாழ்நிலப் பகுதிகளை விட கிழக்குப் பகுதியின் மேட்டு நிலங்களில் வெப்பளவு குறைவாகவும், கோடை காலத்தில் அதிக மழையும் பெய்கிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

3. **வெப்பமண்டல பாலைவனப் பகுதி:** ஆப்பரிக்கா கண்டத்தின் வடப்பகுதி மற்றும் தென்பகுதிகளிரண்டிலும் பாலைவனங்கள் உள்ளன. இப்பிரதேசங்களில் அதிக வெப்பமான கோடைக்காலமும், மிகுந்த குளிர்ச்சியான குளிர்காலமும் உள்ளது, பகல் மற்றும் இரவு நேரங்களின் வெப்ப அளவில் அதிகமான மாற்றங்கள் காணப்படுகின்றது. மழை மிகவும் குறைவு மற்றும் மேகமூட்டமும் அரிது.

4. **மத்திய தரைக்கடல் (மெடிட்டரேனியன்) தட்ப வெப்ப நிலைப் பகுதி:** ஆப்பிரிக்கா கண்டத்தின் வட கடற்கரைப் பகுதிகள் மற்றும் தென் முனைப் பகுதிகளில் இப்படிப்பட்ட தட்ப வெப்ப நிலை காணப்படுகிறது. இப்பிரதேசங்களில் மோராக்கோ, வட அல்ஜீரியா மற்றும் கேப் மாகாணங்கள் சேரும். அதிக வெப்பம் மற்றும் வறண்ட கோடைக்காலமும் மழையுடன் கூடிய குளிர்காலமும் இத்தட்ப வெப்ப நிலையின் முக்கிய அம்சங்களாகும். இது மட்டுமே குளிர்காலத்தில் மழையைப் பெரும் பிரதேசமாகும்.

5. **மிததட்ப வெப்ப சமவெளி பகுதி :** இதை வெல்டு பிரதேசங்களென்றும் அழைக்கலாம். டச் மொழியில் வெல்ட்ஸ் (Veldts) என்றால் துறை என்று பொருள். இந்த தட்ப வெப்ப நிலையுள்ள பிரதேசங்களைத் தென் ஆப்பிரிக்காவின் உள்நாடுகளில் காணலாம். இது கடற்கரையிலிருந்து. தொலைவில் உள்ளது. இதனால் குளிர்காலம் மற்றும் கோடைக்கால வெப்பளவில் அதிக வேறுபாடுகள் உள்ளன. கோடைக்காலத்தில் வெப்பளவு அதிகமாகவும், குளிர்காலத்தில் குளிர்ச்சியாகவும் இருக்கும். இவ்விரண்டு காலங்களிலும் மழையின் அளவு குறைவாகவே உள்ளது.

6. **உயரமான பிரதேசத்தின் தட்ப வெப்ப நிலை உள்ள பகுதி:** இது எதியோப்பியாவின் உயரமான பகுதிகள் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவின் பகுதிகளை உள்ளடக்கும். கடல் மட்டத்தை விட உயரத்தில் உள்ள இப்பிரதேசங்களில் குளிர்ச்சியான தட்பவெப்ப நிலை உள்ளது. மழைப் பங்கீடு குறைவு மற்றும் கோடைக்காலத்தில் மட்டுமே மழை பெய்கிறது.

7. **ஈரமான உபவெப்ப மண்டலம் தட்ப வெப்ப நிலை உள்ள பகுதி:** இப்பிரதேசம் டிரேகன்ஸ் பர்க் மலைப்பகுதிகளிலிருந்து மடகாஸ்கர் உள்ளிட்ட, கிழக்கு கடற்கரைப் பகுதி வரை பரந்துள்ளது. இங்கு கோடைக்காலத்தில் அதிகமான வெப்பம் மற்றும் மழை யோடும் குளிர்காலத்தில் குளிர் மற்றும் வறண்ட நிலையோடும் காணப்படுகின்றது.

@KTBS NOT TO BE REPUBLISHED



ஆப்பிரிக்காவின் தட்ப வெப்ப நிலைப் பிரதேசங்கள்

8. **வறண்ட குளிர்காலம் உள்ள வெப்பமண்டலம் :** இது ஆப்பிரிக்காவின் தென் கிழக்கு பகுதிகளை உள்ளடக்கும். கோடைக் காலத்தில் அதிக வெப்பமும் மழையும், மிதமான மற்றும் வறண்ட குளிர்காலமும். இத்தட்ப வெப்ப நிலையின் முக்கிய அம்சங்களாகும். நிலநடுக்கோடு தட்ப வெப்ப பிரதேசங்களைப் போன்ற மழைப் பங்கீடே இங்கும் காணப்படுகிறது. ஆயினும், உயரமான மற்றும் பருமமான பனிக்கட்டிகளினால், வெப்பளவு பங்கீட்டில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

NOT TO BE REPUBLISHED @KTBS

இயற்கைத் தாவரங்கள் :

ஆப்பிரிக்காவின் இயற்கை தாவரங்கள் வேறுபட்டவை ஏனென்றால் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தட்ப வெப்பநிலை, மண், மேற்பரப்பு அம்சங்கள் மற்றும் மனிதவாழ்க்கை இவைகளின் குறுக்கீடுகளினால் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இக்கண்டத்தின் பல பகுதிகளிலுள்ள தாவர வகைகளில், மனித செயல்பாடுகளினால் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பாலான காடுகளும், சமவெளிகளும், வெவ்வேறு மனித நோக்கங்களின் காரணமாக அழிக்கப்படுகின்றன மற்றும் சுட்டெரிக்கப்படுகின்றன. இதனால் ஆப்பிரிக்கா கண்டத்தில் தற்போது காணப்படும் தாவர வகைகள் அத்தனையும் ''இயற்கை தாவரங்களல்ல''.



இயற்கைத்தாவரங்கள்

நிலநடுக்கோட்டின் அதிகமான வெப்பம் மற்றும் வறண்ட தட்பவெப்ப நிலையானது. அங்கு அடர்ந்த காடுகள் வளர வழி வகுத்துள்ளது. மரங்கள் உயரமாக வளர்கின்றன. நிலநடுக்கோட்டில் அமைந்துள்ள பசுமையான காடுகளிலுள்ள தாவரங்களின் இலைகள் அகலமாகவும் கொடிகளாகப் படரும் தன்மையும் பெற்றுள்ளன.

பயோபாப் மரம்

சிறப்பு பண்புகள் பெற்றுள்ள பல்வேறு வகையான மரங்கள் இங்கு மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. ஆயினும் வெப்ப மண்டலத்தின் விலையுயர்ந்த வலிமையான மரங்கள் ரப்பர், பீட் எபோனி, சின்கோனா, தேக்கு, பனை கருங்காலி முதலிய மரங்கள் இங்கு வளர்கின்றன. மாங்குரோவ் தாவரங்களும் கடலோரக் காட்டு சதுப்பு நிலப்பகுதிகளில் வளர்கின்றன.

பசுமைமாறா இருக்கும் நிலநடுக்கோட்டுக் காடுகளினால் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் முட்செடிகள் மற்றும் பயோபாப், யானை, புலி (Baobab) மரங்களினாலான அடர்ந்த சவன்னா காடுகள். முட்புதர்கள் மற்றும் புல்வெளிகளுக்கு வழி வகுத்து கொடுக்கின்றன. முட்புதர்கள் மற்றும் பைன், ஜனிபர், கார்க், சிடார், ஃபிக் மற்றும் ஆலிவ் மரங்கள் மத்திய தரைக்கடல் தட்ப வெப்ப நிலையிலுள்ள பிரதேசங்களில் காணப்படுகின்றன.

பீடபூமிகளின் உயரமான பகுதிகளில் மலைத்தாவரங்களும் (பவோபாப் மரம்) சஹாரா மற்றும் கலஹரி பகுதிகளில் பாலைவனத் தாவர இனங்களும் உள்ளன. தென் ஆப்பிரிக்காவின் கர்ரு பகுதியில் புகழ்பெற்ற குருசலு தாவர இனமும் நைல் நதிக்கரையில் 'சட்' என்னும் விசேஷ தாவர இனமும் உண்டு.

விலங்கு செல்வம்:

ஆப்பிரிக்காவின் காட்டு விலங்குகளில் பலவகை உண்டு இங்குள்ள தட்ப வெப்பநிலை, மேற்பரப்பு அம்சங்கள், காடு, மண்வகைகள் மற்றும் ஆசியாவுடனும், ஐரோப்பாவுடனும் உள்ள தொடர்பு -

©KTBS NOT TO BE REPUBLISHED

பலவகை விலங்குகள் இங்கு வாழ்வதற்கான காரணங்களாகும் - மழை மற்றும் காட்டுப் பகுதிகள் பல விலங்குகளுக்கு அடைக்கலம் அளிக்கின்றன. சிம்பான்ஜி, பல்வேறு இனக்குரங்குகள், கொரில்லா, காட்டெருமை, சிறுத்தை மற்றும் குளம்பு விலங்குகள் இங்கு காணப்படுகின்றன. முதலைகளும், நீர்யானைகளும் நதிகள் மற்றும் நீரினால் சூழப்பட்டுள்ள சதுப்பு நிலப்பகுதிகளில் காணப்படுகின்றன. கவர்ந்திழுக்கக் கூடிய வெவ்வேறு வண்ணப்பறவைகளும் இங்கு இயல்பாக காணப்படுகின்றன. எ.கா தீக்கோழி, கருடன், மீன்கெத்தி முதலியன.



முக்கிய வன விலங்குகள்

வரிக்குதிரை (ஜீப்ரா), காட்டுப் பூனை, ஒட்டகச்சிவிங்கி (ஜிராஃபெ) காண்டாமிருகம், யானை, சிறுத்தை மற்றும் ஆப்பிரிக்கா, சிங்கங்கள் வெப்ப மண்டலத்தின் புல்வெளிகளிலும், சவன்னா பிரதேசங்களிலும் காணப்படுகின்றன.

பாலைவனப்பகுதிகளில், தேள், ஒட்டகம், பல்லி, பாலைவன நரி, மற்றும் பலவகை பூச்சிகள் காணப்படுகின்றன. இதனுடன் மான் இனத்தை சேர்ந்த அழகிய விலங்குகள், கழுதை, குதிரை மற்றும் அட்டாக்ஷக்கள் (ஆப்பிரிக்கா மான்) காணப்படுகின்றன. ஒட்டகம் சிறப்பு வாய்ந்த மற்றும் எல்லோராலும் அறியப்பட்ட பாலைவன விலங்காகும், இதை சிலசமயங்களில் ''பாலவைனத்தின் கப்பல்'' என்றும் அழைப்பர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

இம்பாலா மற்றும் ஆப்பிரிக்கமான் (அட்டாக்ஷகள்)

தீக்கோழி: இது ஆப்பிரிக்காவில் பூர்வீகமான இனப்பறவை ஆகும். கலஹரி பாலைவனம் மற்றும் ஆப்பிரிக்காவின் தென் சமவெளிகளில் காணப்படுகிறது. இது உலகிலேயே நீண்ட நாட்கள் உயிர்வாழும் மிகப் பெரிய பறவையாகும். உலகிலேயே மிகப்பெரிய முட்டையையும் இடுகின்றது. இதற்கு பறக்க இயலாது. ஆனால் மிக வேகமாக ஓடும் பறவையாகும். தனது கால்களில் இரண்டு விரல்களைப் பெற்றுள்ள ஒரே பறவையாகும்.

தீக்கோழி

@KTBS NOT TO BE REPUBLISHED

5. வேளாண்மையும், தொழிற்சாலைகளும்

ஆப்பிரிக்காவின் பல நாடுகளில் வேளாண்மை மக்களின் முக்கிய பொருளாதாரம் திரட்டும் செயல்பாடாகும், சுமார் 75%க்கும் அதிகமான மக்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.

நிலநடுக்கோட்டுப் பகுதியைத் தவிர ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் வேளாண்மை மக்களின் வாழ்வாதாராமாக விளங்குகிறது. நவீன வகை உரங்களும், பூச்சி கொல்லிகளின் பயன்பாடும் குறைவு. பல இடங்களில் வேளாண்மை கைகளால் செய்யப்படுகிறது. மனித உழைப்பால் நடை பெறுகிறது. ஒவ்வொரு ஹெக்டேரிலிருந்து கிடைக்கும் விளைச்சலும் குறைவு.

பல வேளாண் பகுதிகளில் உணவுப் பயிர்கள் முக்கியமாக விளைவிக்கப்படுகின்றன. மக்காச் சோளம், நெற்பயிர், தினை, சர்க்கரை வள்ளிக்கிழங்கு மற்றும் மரவள்ளிக்கிழங்கு, வேர்கடலை, பட்டாணி மற்றும் மாவுப்பயிர்கள் முதன்மையானவை. நிலநடுக்கோட்டுப் பகுதிகளிலுள்ள தட்ப வெப்பநிலைப்பகுதிகளில்

தோட்ட விவசாயம் முக்கியமானது. புருண்டி பிரதேசத்தில் ஏற்றுமதிக்காக காபியும், கோடே-டி-வோரே மற்றும் கானாவில் கொக்கோவும், பட்டாணிகள் போன்றவை காம்பியா தேசத்திலும் பயிரிடப்படுகின்றன. ஆப்பிரிக்காவில் விளையும் மற்ற பயிர்கள், கரும்பு, வாழை, தேயிலை, தென்னை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் எலுமிச்சை இன பழங்கள் - இவை அத்தனையும் பெரிய எஸ்டேட்டுகளில் நீர்பாசன வேளாண் முறையின் மூலம் விளைவிக்கின்றனர். செனெகல், மாரிடானியா, மாலி, நைஜர், சாட், வடக்கு சுடான், எதியோப்பியா மற்றும் சோமாலியா நாட்டு மக்கள் (Sahel) மேன்மேலும் பஞ்சத்தில் அடிப்பட்டு பட்டினியால் வாடுகின்றனர்.

ஆப்பிரிக்கா வெவ்வேறு வகையான பழங்களுக்கு புகழ் பெற்றது. மத்திய தரைக்கடல் பகுதிகளில் எலுமிச்சை, ஆரஞ்சு திராட்சை முதலியவை பொதுவாக வளர்கின்றன. கிழக்கு ஆப்பிரிக்காவில் முந்திரி விளைவிக்கிறார்கள். ஜான்ஜிபாரா தீவு மற்றும் டான்டனியா, லவங்கத்திற்கு புகழ்பெற்றவை.

இங்கு மாட்டுச்சோளம் முக்கியமான பயிராகும். சில பிரதேசங்களில் நெற்பயிர் மற்றும் கரும்பு பயிரிடுகிறார்கள். வணிகப் பயிர்களான காபி, தென்னை, நிலக்கடலை மத்திய கிழக்குப் பகுதிகளிலும் ஆப்பிரிக்காவின் மற்ற பகுதிகளிலும் பயிரிடப்படுகின்றன. எதியோப்பியாவில் பல்லாயிரம் வருடங்களாக காபியை பயிரிட்டு வருகிறார்கள். எகிப்து நாடு பருத்திக்கு புகழ்பெற்றது.

ஐரோப்பியர் வாழ்ந்த கென்யா, தென் ஆப்பிரிக்கா மற்றும் ஜிம்பாப்வேயில் கால்நடை வளர்த்தல் முக்கிய தொழிலாகும். உலகத்தின் கால்நடைகளில் 15% ஆப்பிரிக்காவில் உள்ளன.

வேளாண்மை பின் தங்கியுள்ளதற்கான காரணங்கள் :

ஆப்பிரக்காவில் வேளாண்மை பின்தங்கியிருப்பதற்கு பழமையான வேளாண் முறைகள், பழமையான வேளாண் உபகரணங்களின் பயன்பாடு, எழுத்தறிவின்மை, பழங்குடி அமைப்பு பொருளாதாரம் மற்றும் அயல்நாட்டுப் பொருளாதார சேமிப்பில் குறைபாடு, முதலியவை முக்கிய காரணங்களாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

தொழிற்சாலைகள் நிதானமாக வளர்ச்சியடைவதற்கான காரணங்கள் :

* ஆப்பிரிக்காவின் பல நாடுகள், நீர், காடு மற்றும் கனிம வளங்களில் சிறந்தவை. இவ்வியற்கைச் செல்வங்களின் பங்கீடு சமமாக இல்லை. இங்குள்ள பல நாடுகளின் பொருளாதார நிலமை வேளாண்மையை சார்ந்துள்ளது.

* கடந்த நூற்றாண்டின் இடைக்காலம் வரையிலும் ஆப்பிரிக்காவின் இயற்கைச் செல்வம் ஐரோப்பியர்களால் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டிருந்ததால். தொழிற்சாலைகளின் வளர்ச்சியில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனுடன், தொழிலாக்கத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளின் குறைபாடு, பொருளாதார தட்டுப்பாடு, தொழில் நுட்பத் தட்டுப்பாடு, திறமையான தொழிலாளிகளின் குறைபாடு, வாங்கும் ஆற்றலின் குறைபாடு மற்றும் அரசியல் பிரச்சனைகள் போன்றவை. ஆப்பிரிக்கா நாடுகளில் தொழிற்சாலை முன்னேற்றத்தில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதற்கான காரணங்களாகும்.

* கடந்த பத்து ஆண்டுகளில் தொழிலாக்கத்திற்கு உட்பட்ட நாடுகள் ஜிம்பாப்வே, நைஜீரியா, எகிப்து, அல்ஜீரியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகும். சுதந்திரம் அடைந்த பிறகு பல ஆப்பிரிக்கா நாடுகள் சிறு தொழிற்சாலைகளான ஜவுளி தயாரித்தல், மருந்துகள் மற்றும் உணவு பதப்படுத்தும், தோல் தயாரிப்புகள் மற்றும் பானங்கள் போன்ற தொழிற்சாலைகளின் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுகின்றன.

* பெரிய தொழிற்சாலைகளான இரும்பு, எஃகு, ரப்பர், சிமெண்ட் மற்றும் பெட்ரோ வேதிப்பொருட்களின், தயாரிப்புகள் தென் ஆப்பிரிக்காவில் மையபடுத்தப்படுகின்றன. அல்ஜீரியா, டியூனிஸியா, எகிப்து மற்றும் ஜிம்பாவே நாடுகளில் இரும்பு மற்றும் எஃகு தொழிற் சாலைகள் உள்ளன. ஆப்பிரிக்காவின் மின்பொறிகள், போக்குவரத்து உபகரணங்கள் டிராக்டர் தயாரிப்பு மற்றும் போரில் பயன்படும் விமானங்களைக் கட்டுதல் போன்ற மற்ற தொழிற்சாலைகளும் உள்ளன.

© KTBS NOT TO BE REPUBLISHED

6. விலையுயர்ந்த கனிமங்கள்

வைரம் மற்றும் தங்கம்.

ஆப்பிரிக்கா கண்டம் அதிகமான கனிமச் செல்வத்தைப் பெற்றுள்ளது. விலையுயர்ந்த கனிமங்களான வைரம், தங்கம் மற்றும் பிளாட்டினம் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன.



முக்கிய கனிமங்கள்

©KTBS NOT TO BE REPUBLISHED

வைரம் : உலகத்தின் மொத்த வைரப் புதையல்களில் 80% ஆப்பிரிக்காவிலேயே உள்ளது. போன்ஸ்வானா ஜைரேமற்றும் தென் ஆப்பிரிக்கா அதிகமாக வைரம் உற்பத்தி செய்யும் நாடுகளாகும். அங் கோலா, நமீபியா மற்றும் கானா இவைகளும் வைரங்களை உற்பத்தி செய்யும், மற்ற பிரதேசங்களாகும். வைரத்தை படிகவைரம் மற்றும் தொழிற்சாலை வைரம் என்று வகைப்படுத்தலாம். வைரத்தைத் சிராய்ப்பு காகிதம் மற்றும் கண்ணாடி வெட்டும் உபகரணங்களை தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள்.

தங்கம் : உலகத்தில் பாதியளவு தங்கப் புதையல்கள் தென் ஆப்பிரிக்காவில் உள்ளன. தங்கப் புதையல்கள் விநியோகிக்கப்பட்டுள்ள முக்கிய இடங்கள். விட்வாடர்ஸ் ராண்ட் (டிரான்ஸ்வால்) மற்றும் ஆரஞ்சு ஃப்ரீ ஸ்டேட் நாடுகளாகும். இக்கண்டத்தின் மொத்த தங்க உற்பத்தியில் 50% விட அதிக அளவு தங்கம் தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே மற்றும் காங்கோ குடியரசுகளில் காணப்படுகிறது.

7. மக்கட்தொகை : வளர்ச்சி, பங்கீடு மற்றும் நெருக்கம்

உலகிலேயே முதன் முதலில் மனிதன் தென்பட்டதும், உபகரணங்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டதும் ஆப்பிரிக்காவில் தான் என்ற கருத்து நிலவுகிறது. மனித சாஸ்திர அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் கருத்தின் படி ஹோமோ சேபியன்கள் ஆப்பிரிக்காவின் கென்யா மற்றும் எதியோபியாவிலுள்ள கிழக்கு ஏரி அருகில் தென்பட்டனர் என்று தெரிய வந்துள்ளது.

முக்கியமாக ஆப்பிரிக்கா, நீக்ரோ மற்றும் அவர்களுடைய, ஆதிவாசிகளின் குழுக்களினால் ஆனது. இப்பொழுது ஆப்பிரிக்காவில் வெவ்வேறு பரம்பரையினரும் இனத்தவரும் உள்ளனர். இக்கண்டத்தில் பல்வேறு மக்கள் அவர்களின் மொழி மற்றும் கலாச்சாரம் கலந்துள்ளது.

சுமார் 1051 மில்லியன் மக்கள் ஆப்பிரிக்கா கண்டத்தில் வாழ்கின்றனர். நைஜீரியா, எகிப்து, எதியோப்பியா, ஜைரே மற்றும் தென் ஆப்பிரிக்கா அதிகமான மக்கட் தொகை நெருக்கமுள்ள பிரதேச ங்களாகும். கடந்த முப்பதாண்டுகளாக ஆப்பிரிக்காவின் சில நாடுகளில் மரணங்களின் சதவீதம் குறைந்துள்ளது. அதிகமான உணவு உற்பத்தி, மருத்துவ வசதிகள் மற்றும் சுகாதார முறைகளில் முன்னேற்றம். இதற்கான காரணங்களாகும். இதனால் பிறப்பு வீதம் உயர்ந்து, அதிக மக்கட் தொகை நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலகளவில் ஒப்பிட்டு

KTBS NOT TO BE REPUBLISHED

பார்க்கும் பொழுது ஆப்பரிக்காவின் மக்கட் தொகை நெருக்கம், உலகத்தின் சராசாரியை விட அதிகமாக உள்ளது.

சோமாலியா, எதியோபியா, சாட், நைஜீரியா, மாலி போன்ற நாடுகளில் வாழும் மக்களின் வாழ்நாட்கள் மிகக்குறைவு. அதாவது 50 வருடங்கள் மட்டுமே ஆகும்.



NOT TO BE REPUBLISHED

ஜனத்தொகையின் விநியோகம்

மக்கட் தொகை பங்கீட்டில் சமமான நிலமை காணப்படுவதில்லை. மிக அதிகமான மக்கட் தொகை நெருக்கம் ஆப்பிரிக்காவின் கினியா கடற்கரைப் பிரதேசம் நைல் நதிக்கரை, கிழக்கு ஆசியாவின் மேட்டு நிலங்கள், மடகாஸ்கர் வடக்கு கடலோரப் பகுதி தென் ஆப்பிரிக்கா, சுரங்க நகரப் பகுதிகளான ஜிம்பாவே, மற்றும் ஜைரே மற்றும் கினி பிரதேசங்களில் உள்ளது.

குறைந்த மக்களடர்த்தி, பாலைவனம், மலைப் பிரதேசங்கள் மற்றும் நிலநடுக்கோட்டுப் பகுதியின் அடர்ந்த காடுகளில் உள்ளது. லிபியாவின் சஹாரா மற்றும் அல்ஜீரியாவில் மக்களடர்த்தி குறைவாக உள்ளது. அங்குள்ள மக்களடர்த்தி ஒவ்வொரு ச.கி.மீக்கு 15 மக்கள் ஆகும்.

ஆப்பிரிக்கா மக்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கலாம்:

1. பிக்மிக்கள், புஷ்மென் மற்றும் மசாயி. இவர்கள் சஹாரா பாலைவனத்தின் தென் பகுதியில் வசிக்கின்றனர்.
2. அரேபியர், வட ஆப்பிரிக்காவில் வசிக்கின்றனர்.
3. இந்தியர்கள் தென் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் வசிக்கின்றனர்.
4. ஐரோப்பியார், தென் அமெரிக்காவிலும், மற்ற செழிப்பான நதிகரையோரப் பகுதிகளிலும் வசிக்கின்றனர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

புதிய சொற்கள்:

தீபகற்பம், விரிகுடா (பிளவுப்) பாலைவனம், பிளவு பள்ளத்தாக்கு ஏரிகள், மக்கள் வாழ்நாட்கள். மக்களடர்த்தி, தீர்க்கரேகை, வளைகுடா, கடக ரேகை, மகர ரேகை, சவன்னா.

அறிந்து கொள்க :

- நைல் நதியின் நீண்ட பெரும் பகுதி சஹாரா பாலைவனத்தின் வழியாகச் செல்கிறது. ஆயினும் அது எப்பொழுதும் வறண்டு போவதில்லை, நைல் நதியின் நீர்பிடிப்பு பகுதிகளில் போதுமான அளவு மழை பெய்வதே இதற்கான காரணம் ஆகும்.
- சஹாரா பாலைவனம் ஆப்பிரிக்காவின் வடப்பகுதியைச் சூழ்ந்துள்ளது. இது உலகத்திலியே பெரிய பாலைவனமாகும்.
- லிபியாவின் அல் அஜிஜியாவில் உலகிலேயே அதிக அளவு வெப்பளவு 58° செல்ஷியஸ் ஆக பதிவாகியுள்ளது.

- ஆப்பிரிக்கா மான் (அட்டாக்ஷ) எனப்படும் விலங்கு, நீளமான முறுக்கிய கொம்புகளைப் பெற்றுள்ள மான் வகையாகும். இது நீரைப்பருகாது மாறாக தனக்கு தேவையான நீரை, தான் உண்ணும் புல்லிருந்தும் தாவரங்களிலிருந்தும் பெற்றுக் கொள்கிறது.

- ஆப்பிரிக்காவில் பெயொபாப் என்ற மரம் உள்ளது. இது பாட்டில் வடிவத்தில் உள்ளது. இதனுடைய தண்டுப்பகுதி நீரைப் சேமித்து வைத்துக் கொள்வதற்கு ஏற்ப பருமனமாக உள்ளது. இது 1000 லிருந்து 12,000 லீட்டர் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ள முடிகிறது. சில நேரங்களில் தண்ணீர் தேவேப்படும் பயணிகள் இந்த மரத்தின் நீரை பயன்படுத்தி கொள்வர்.

- உலகத்தின் 24% காபி, ஆப்பிரிக்காவில் உற்பத்தியாகிறது.

- பிக்மிக்கள், உலகிலேயே குட்டையான மனிதர்களாவர். அவர்கள் காங்கோ பள்ளத்தாக்கில் வசிக்கின்றனர்.

- உலகத்தில் 50 சதவீதத்தை விட அதிகளவு கொக்கோவை ஆப்பிரிக்கா மட்டுமே உற்பத்தி செய்கிறது.

- ஆப்பிரிக்கா மக்கள் அதிக பலசாலிகள், ஆயினும் அவர்களுடைய வாழ்நாட்கள் குறைவு.

- ஆப்பிரிக்கா கண்டத்தில், 800க்கும் அதிகமான மொழிகளைப் பேசுபவர்கள் உள்ளனர்.

- ஆப்பிரிக்காவின் கிராமங்களில் மக்கள் தொகை அதிகம், இது குறைவான நகரங்கள் உள்ள கண்டமாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களைக் கொண்டு விடுப்பட்ட இடங்களை நிரப்புக :

1. ஆப்பிரிக்காவை ______________ கண்டம் என்று அழைப்பர்.
2. ஆப்பிரிக்காவின் நீளமான நதி ______________
3. ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம் ______________
4. ஆப்பிரிக்காவின் பெரிய பறவை ______________
5. சவன்னா போன்ற தட்ப வெப்பநிலை பகுதியை ______________ போன்ற தட்பவெப்ப நிலை என்பர்.

II. கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும் :

6. ஆப்பிரிக்காவை மத்திய கண்டம் என்றழைப்பர் ஏன்?
7. வளைக்குடா என்றால் என்ன? ஆப்பிரிக்காவின் வளைக்குடா எது?
8. ஆப்பிரிக்காவின் தாழ்நிலப் பகுதிகளைக் குறிப்பிடுக.
9. ஆப்பிரிக்கா கண்டத்தின் வெவ்வேறு தாவர வகைகளைக் குறிப்பிடவும்.
10. ஆப்பிரிக்காவின் முக்கிய உணவுப் பயிர்கள் யாவை?
11. வைரப் புதையல்கள் உள்ள ஆப்பிரிக்கா நாடுகள் யாவை?

செயல்பாடுகள் :

1. ஆப்பிரிக்கா கண்டத்தின் பிளவு பள்ளத்தாக்கில் காணப்படும் முக்கிய ஏரிகளை உலக வரைப்படத்தில் குறிப்பிடவும்.
2. ஆப்பிரிக்காவின் முக்கிய நதிகள் மற்றும் மலைகளைக் குறிப்பிடவும்.
3. கர்நாடகத்தில் காணப்படும் பயோபாப் (பாட்டில் வடிவ) மரத்தை ஒத்த படத்தை சேகரிக்கவும்.
4. ஆப்பிரிக்காவின் அட்டாக்ஷ் (ஆப்பிரிக்கா மான்) மற்றும் நமது நாட்டின் மான்களை ஒப்பிட்டு எழுதுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

Note

@KTBS
NOT TO BE REPUBLISHED